




பன்முகப் பார்வையில்

தமிழ்த்தாத்தா உ.வே.சா.

ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு



தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை 600 095.





1926ல், இரவீந்திரநாத தாகூர் தமிழ்த்தாத்தாவை சந்தித்து அளவளாவிய இல்லம்



‘தியாகராச விலாசம்’

தமிழ்த்தாத்தா 1909ல் சென்னையில் வாங்கிய இல்லம்

FROM THE PALM LEAF MANUSCRIPT YOU BROUGHT OUT THE GLORY OF DRAVIDIAN LIFE — THAT GLORY WAS BROUGHT OUT BY YOU (EXTRACT FROM TAGORE'S BENGALI POEM ON U V SWAMINATHA IYER)



2012ல் இடிக்கப்பெற்றது



தமிழ்த்துறை


டாக்டர்.எம்.ஜி.ஆர்.
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு), சென்னை - 600 095.

தமிழ்த்துறை வெளியீடு எண் : 3

‘பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா’

(தமிழ்த்துறையின் இரண்டாவது தேசியக் கருத்தரங்கிற்காக
வரப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு)

‘பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா’



(தமிழ்த்துறையின் இரண்டாம் தேசியக் கருத்தரங்கிற்காக வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு)

பதிப்பாசிரியர்

திரு. இராசுமைனர்
முன்னாள் உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்

தமிழ்த்துறை

டாக்டர்.எம்.ஜி.ஆர்
கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
(உலகத்தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்)
மதுரவாயல், (அடையாளம்பட்டு), சென்னை - 600 095

பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா

ஏப்ரல் 2022
(பெருந்தொற்று காரணமாக கருத்தரங்கு 2020ல் நடைபெற இயலாமையால், இந்நூல் 2022-ல் வெளியிடப் பெறுகின்றது)

பதிப்புரிமை
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
மதுரவாயல் (அடையாளம்பட்டு)
சென்னை - 600 095

ISBN: 978-93-88568-16-6

நூலாக்கம்:

- M.Ganesh Babu
- P.Ponmalar

Printed at: DJ Printers. Chennai-95.



டாக்டர். A.C.சண்முகம் FRCPS
நிறுவன வேந்தர்
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை-600 095.

வாழ்த்துரை

“இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்”

என்று தமிழின் தொன்மையையும், பழமையையும் பறைசாற்றி, பண்டைய மக்களின் வாழ்வையும், வளத்தையும் நமக்குத் தெரிய செய்த அரும்பெரும் சாதனையாளர் உ.வே.சா. மகாமகோபாத்யாய என்ற பட்டம் இவருக்காகவே பிறந்ததோ என்று எண்ணத்தூண்டும் வகையில் நல்லாசிரியராய், பதிப்பாளராய், உரையாளராய், கட்டுரையாளராய் வாழ்ந்து மறைந்தவர். ஓலைச்சுவடியை நூலாக்கிய உத்தமர். உத்தமதானபுரத்து மைந்தர். ஞாயிறும் ஓய்வறியும், ஓய்வறியா உழைப்பாளர். தமிழன்னைக்குத் தன்னால் இயன்ற தொண்டு என்று இலக்கிய அணிகலன் பூட்டியவர். இவரோ ஓலைச்சுவடியைத் தேடி அலைந்து கறையானிடம் இருந்து காப்பாற்றி நூலாக்கினார். இப்பெரும் பணி தமிழுக்கு இவர் செய்த அரும்பணி. தமிழன்னையே அகமகிழ்ந்து இவருடைய இல்லம் சென்று அமர்ந்து விட்டாள். தமிழ் மேல்கொண்ட காதலும், தமிழன்னையின் அன்பும் ஒரு சேர கிடைக்கப்பெற்றதால் உ.வே.சா “தமிழ்த்தாத்தா” ஆனார். படைப்புகளும் பதிப்புகளும் விண்ணைத் தொட்டு வீணை மீட்டியது. தமிழ் மகளின் அவா செம்மையுற திருமகளும், கலைமகளும் வழங்கிய ஆசிகள் இன்று நாம் படித்து இன்பம் துய்க்கும் சங்க இலக்கிய நூல்களாய் மலர வழிவகுத்தது.

இச்சீரிய பணியைச் செவ்வனே செய்த இம்மகானை நினைவுகூறும் வகையில் எமது பல்கலைக்கழகத்தில் சிறப்பாக செயல்படும் தமிழ்த்துறை, **“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா *உ.வே.சா”*** என்னும் தலைப்பில் இரண்டாம் தேசியக் கருத்தரங்கை நிகழ்த்த முடிவு செய்துள்ளது. இக்கருத்தரங்கம் நன்முறையில் நிகழ என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் இக்கருத்தரங்கம் செம்மையுற தமிழ்த்தாத்தாவையும் அவர்தம் செயல்களையும் ஆராய்ந்து கட்டுரைகளாய்ப் படைத்திட்ட பேராசிரியப் பெருமக்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் உளம்கனிந்த வாழ்த்துகள்.



பொறியாளர் A.C.S. அருண்குமார்

தலைவர்

டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

மதுரவாயல், சென்னை-600095.

வாழ்த்துரை

காலத்தால் அழியாதவர்! கல்வெட்டாய் நினைத்திருப்பவர் உ.வே.சா. இவரின் பன்முக ஆற்றலை ஆய்வுச் செய்து கட்டுரை மலரை மொழிப் பூங்காவாக வடிவமைத்துத் தேசியக்கருத்தரங்காக நடத்துவது எனக்கு மன மகிழ்வைத் தருகிறது.

நெருப்புக்கும், நீருக்கும் கறையானுக்கும் இரையாகிக் கொண்டிருந்த ஓலைச் சுவடிகளை எடுத்துச் செப்பம் செய்து நூல்களாக வெளியிட்ட பெருமை தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத அய்யரைச் சாரும். தமிழ்த்துறையின் சார்பாக வெளிவரும் **“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா”** எனும் இவ்வாய்வுக் கோவை மிகச்சிறப்பாக அமைந்தமைக்கு, தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும், ஆய்வுக் கட்டுரையை வழங்கிய பேராசிரியர்களுக்கும், பல்துறையைச் சேர்ந்த தமிழ் ஆர்வலர்களுக்கும் வாழ்த்துரை வழங்குவதில் மனமகிழ்வு கொள்கிறேன்!

இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தை அடையாளங்காட்டும் ஆவணமாகும். ஒவ்வொரு இலக்கியமும் தனக்கெனத் தனிமையைப் பெற்று விளங்குகிறது. இலக்கியம் பழமையானதாக இருந்தாலும் பல தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளும்போது புதிய புதிய தகவல்கள் வெளிப்படுவதை ஆய்வாளர்கள் நன்கறிவர்.

தன்னிகரில்லாத் தமிழ்மொழி தரணியெங்கும் பரவி வாழ்ந்து வரும் ஒவ்வொரு தமிழனின் உயிர்மூச்சாகத் திகழ்வதுடன், தமிழனின் தனிப்பட்ட சீரிய பண்பாட்டைப் பறைசாற்றும் ஒளிப்பிழம்பாகவும் உயர்ந்தோங்கி விளங்கி வருகின்றது. பல்வேறு அறிவுப்புலங்களில் ஆழங்கால்பட்ட அறிஞர் பெருமக்கள் பலராவர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவர் அய்யர். மேலும் உலகளாவிய அளவில் தமிழன் தலை நிமிர்ந்து நிற்கிறான் என்றால் அதற்குக் காரணம் உ.வே.சாமிநாதய்யர் என்றால் அது மிகையில்லை. இதேபோல் தமிழ்த்துறைச் சார்பாக பல கருத்தரங்குகள் நடத்த மேலும் வாழ்த்தி மகிழ்கிறேன்.



பேராசிரியர் டாக்டர் S. கீதாலஷ்மி
துணைவேந்தர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை-600 095.

வாழ்த்துரை

"கற்க கசடற" என்னும் வள்ளுவர் வாக்கினை ஏற்றுக் கல்வியைக் கசடற வழங்கி மாணவர்களின் நலனைத் தன் நலனாய்க் கருதி சீரும் சிறப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கிறது எமது டாக்டர்.எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம். இப்பெரும் நிறுவனத்தில், தமிழையே தாரக மந்திரமாய்க் கொண்டு நன்முறையில் இயங்கி வரும் எம் தமிழ்த்துறையின் இரண்டாம் தேசியக் கருத்தரங்கம் தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களைப் போற்றும் வகையில் **"பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா"** என்ற தலைப்பில் அமையப் பெற்றுள்ளது. நாம் பயிலும் தமிழ் நூல்கள் பலவற்றை ஓலைச்சுவடியில் இருந்து நூலாய் மாற்றி அதற்கும் உரை கண்டு நம்முடன் உலவ விட்டவர் உ.வே.சா. அப்பெருந்தகையின் சிறப்புகளைக் கட்டுரைகளாய்ப் படைத்து அதைக் ஆய்வுக் கோவையாய் மாற்றி அவரின் சாதனைகளைப் பல்வேறு நோக்கில் நாம் காண முயன்றுள்ளோம். எம் தமிழ்த்துறைக்குக் கட்டுரைகளை வழங்கிய பல்துறையைச் சார்ந்த கட்டுரையாளர்க்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகள். மேலும் இப்பணிகள் மேன்மேலும் தொடர்ந்து தழைத்தோங்க வாழ்த்துகிறேன்.



டாக்டர்.சி.பா.பழனிவேலு
பதிவாளர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை-600 095.

வாழ்த்துரை

டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இயங்கும் தமிழ்த்துறையின் தொடர் முயற்சியில் இவ்வாண்டும் **'பன்முகப் பார்வையில் உ.வே.சா'** என்ற பொருண்மையில் தேசியக்கருத்தரங்கு நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது. இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தை அடையாளம்காட்டும் காலக்கண்ணாடியாகும். அத்தகைய சிறப்புமிக்க இலக்கியத்திற்கு இனிமை சேர்க்கும் விதமாக கறையான் அரித்து அழிந்து போக கிடந்த பல்வேறு சுவடிகளைத் தூசித்தட்டி, மெருகூட்டி நூலாக் கோர்த்து மொழிக்கும், இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்தவர் உ.வே.சாமிநாதையர் ஒருவரே ஆவார்.

அத்தகு அரிய பணியைச் செய்தமையால் 'தமிழ்த்தாத்தா' என்றழைக்கப்படுவது சாலப் பொருத்தமே. தமிழின் தமிழனின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உலகறிய செய்ததோடு மட்டுமின்றி, இக்கால மக்களும் படித்துப் பயன்படும் வகையில் நூலாக வடித்தும் தந்துள்ளார். இத்தகு மாபெரும் தொண்டாற்றிய தமிழ்த் தாத்தாவின் உயரிய பணியை வையகம் அறிந்திடச் செய்யும் உன்னத செயலைப் பல்வேறு நோக்கில் ஆய்வு செய்த ஆய்வு மாணாக்கர்கள், ஆர்வலர்கள், பேராசிரியர்கள், சான்றோர்கள் மற்றும் இப்பணியினைச் சிறந்த முறையில் ஆய்வு நூலாக வெளியிடும் தமிழ்த்துறைக்கும் மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



டாக்டர்.ச.மணிவண்ணன்
முன்னாள் புலத்தலைவர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

வாழ்த்துரை

தன்னிகரில்லாத் தமிழைத் தரணியெங்கும் நூலாய், நுட்பமாய், நுணுக்கமாய் மக்களின் கைகளில் உலவ முழுமுதற் காரணமான நம் தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களின் பணியானது அளப்பரியது. கறையான் அரித்துக் காத்த ஓலைச்சுவடியை நம் கண்களுக்கு விருந்தாக்கியவர் உ.வே.சா. இன்று நாம் காணும் தமிழரின் பண்பாடும் நாகரிகமும் வாழ்வும் வளமும் உ.வே.சாவின் ஏட்டுச்சுவடியை மீட்கும் பெரும் பணியின் சாதனையாகும். உ.வே.சா இல்லையெனில் இன்று பழந்தமிழரின் வாழ்வு நம் கண்முன்னால் இழையோடாமலேயே சென்றிருக்கும் அப்பெருமகனாரின் சிறப்புகளை நமக்கு மீண்டும் ஒருமுறை நினைவுக்கூரும் வகையில் சீரிய சிந்தனையுடன் இயங்கி வரும் நமது நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ***“பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா*”** என்னும் தலைப்பில் இரண்டாம் தேசியக் கருத்தரங்கை நடத்த முடிவு செய்துள்ளது. நமது தமிழ்த்துறையின் இத்தேசியக் கருத்தரங்கம் செவ்வனே நடக்கவும், துறைச் சிறப்பாய் உயரவும், ஆய்வுக்கோவை செம்மையுடன் அமையவும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஏ.ஆர்.அருணாச்சலம்
புலத்தலைவர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

வாழ்த்துரை

*தமிழ்த் தாத்தா என்று அனைவராலும் அறியப்பெறுபவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள். எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது நம் தமிழ்மொழி. தமிழ்த் தாத்தாவின் ஃடில்லா தொண்டே தமிழ்மொழியின் பெருமை வாய்ந்த உயர்வுக்கு மூலகாரணம் எனில் அது மிகையாகாது. அத்தகைய அறிஞரை இத்தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் 2020ல் "**பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா**" எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தும் பொருட்டு நம் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெகு சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தது. பெருந்தொற்று காரணத்தால் கருத்தரங்கம் நடைபெறவில்லை. தமிழ்த் தாத்தாவின் ஆசியாலும், துறையின் சீரிய முயற்சியாலும் கருத்தரங்கம் விரைவில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கிற்கு வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளும் தொகுக்கப்பெற்று நூலாக வெளியிடப்பெறவுள்ளது. கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறவும் ஆய்வுக்கோவை அழகுற அமைந்திடவும் என் உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.*



திரு சி வெற்றிவேல்
உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் (பொறுப்பு)
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

வாழ்த்துரை

தமிழ்த் தாத்தா என்று அனைவராலும் போற்றப்பெறும் உ.வே. சாமிநாதையரவர்களின் சிறப்பியல்புகளையும், அவரது வரலாற்று சிறப்புமிக்க பதிப்புத்துறை சாதனைகளையும் இந்நூற்றாண்டு இளைய சமுதாயத்தினர்க்கு கொண்டுசேர்க்கும் வகையில், நம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 2020ல் **"பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா**" என்ற தலைப்பில் தேசியக்கருத்தரங்கினை நடத்த திட்டமிட்டது. 2020ல் வந்த பெருந்தொற்று காரணத்தால் கருத்தரங்கம் நடைபெறவில்லை. அக்கருத்தரங்கினை 2022ல் நடத்துவதென முடிவு செய்து நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. இரண்டாண்டு காலமாக நிலைமையினை நன்குணர்ந்து பொறுமை காத்து வந்த அனைவருக்கும் தமிழ்த்துறை நன்றியை காணிக்கையாக்குகின்றது. விரைவில் ஆய்வுக்கோவைகள் தொகுக்கப்பெற்று நூலாக வெளிவருகின்றது. அத்தொகுப்பு அனைவரையும் வந்தடையும் என தெரிவித்து மகிழ்கின்றோம்.



திரு இராசுமைனர்
முன்னாள் உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல்,
சென்னை-600 095.

பதிப்புரை

**"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"**

என்ற பாரதிகண்ட கனவைப் புகழ்சால் டாக்டர் எம்.ஜி.ஆர் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் நனவாக்கிக் கொண்டிருக்கிறது. தமிழின் வளர்ச்சிக்காகவும் தமிழ்மொழியின் பெருமையை வெளிப்படுத்தும் விதமாகவும் 2019ஆம் ஆண்டு, முதல் தேசியக் கருத்தரங்கு தமிழ்த்துறையின் சார்பாக செம்மையான முறையில் நடந்தேறியது. இவ்வாண்டு **"பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா"** என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கினை நடத்த இருக்கிறது. உ.வே.சா தமிழின் மீது கொண்ட அளப்பரிய பற்றின் விளைவாக தமிழ்த்தாயின் அணிகலன்களாக விளங்கக்கூடிய இலக்கியங்களை மெருகூட்டி தமிழன்னைக்கு அணிவித்து அழகுபார்த்துள்ளார். அவர் தம் தொண்டுகளை நூல்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டமையை ஆராயப்படும் முயற்சியை இவ்வாய்வேட்டில் அறியலாம்.

"அறிவற்றம் காக்கும் கருவி" என்ற குறளுக்கேற்ப வாழ்ந்துகொண்டிருப்பவர் நம் பல்கலைக்கழகத்தின் நிறுவனவேந்தர் உயர்திரு.ஏ.சி.சண்முகம் அவர்கள். தேனீயைப் போன்று அயராது உழைத்துக்கொண்டிருக்கும் நம் பல்கலைக்கழகத்தின் தலைவர் பொறியாளர் உயர்திரு.ஏ.சி.எஸ்.அருண்குமார் அவர்கள் இருவரும் இரட்டைக்குழல் துப்பாக்கியாய் மாணவர்களின் நலனுக்காகச் செயல்படுகின்றார்கள். அவர்களுக்குத் தமிழ்த்துறையின் சார்பாக என் உள்ளார்ந்த நன்றியினை உரிதாக்குகின்றேன். மேலும் இப்பல்கலைகக்கழகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் துணைவேந்தர், பதிவாளர், புலத்தலைவர், துணைப்புலத்தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உ.வே.சா. அவர்கள் இல்லையேல் தமிழ்நூல்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு அவரது பதிப்புப்பணிச் சிறப்பு பெற்றிருக்கிறது. இவ்வாய்வுக் களத்தில் பல்வேறு தலைப்பில் வந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல்கள் தமிழறிஞர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயனுடையதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. உ.வே.சா அவர்களின் தமிழ் நுட்ப கூறுகளைத் துறைதோறும் அலசி ஆராய்ந்து இதேபோன்று கருத்தரங்குகளைத் தொடர்ந்து எம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்த வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அன்புப் படையல்



மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
(1815 – 1876)

உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் ஆசான்

உள்ளடக்கம்

பின்னிணைப்புகள்

குறிப்பு:

மேற்கண்ட ஆய்வுக்கட்டுரைகள் 2020ல் வரப்பெற்றன. பெருந்தொற்று காரணத்தால் கருத்தரங்கம் நடைபெறவில்லை. 2022ல் விரைவில் நடைபெறவுள்ளது. எனவே, 2020ல் வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளில் உள்ள விவரங்கள் மாற்றப்பெறாமல், அவையே ஈண்டு தரப்பெற்றுள்ளன.

1. உ.வே. சாமிநாதையரின் நடைத்திறம்

முனைவர் ச. ஈஸ்வரன்,
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்,
தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி
(தன்னாட்சி) , திருச்சிராப்பள்ளி – 1.

முன்னுரை

தஞ்சாவூர் மாவட்டம் சூரியசூலை (உத்தமதானபுரம்) எனும் சிற்றூரில் கி.பி. 1855 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் பிறந்தவர் உத்தமதானபுரம் வே. சாமிநாதையர். உ.வே.சா. அவர்கள் தம் பதினான்காம் வயதில் (16.06.1868) திருமதி மதுராம்பிகை என்ற அம்மையாரை மணந்தார். எழுபத்திநான்கு நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவைகளுள் நான்கு மட்டுமே இலக்கண நூல்கள். அப்போதைய ஆங்கில அரசு 1906 ஆம் ஆண்டு, "மகா மகோபாத்தியாய" என்ற பட்டம் அளித்துப் பெருமை செய்தது. தமிழாசிரியர் ஒருவர் முதன் முறையாக விருது பெற்றது இதுவே. 28.4. 1942இல், தம் 87 ஆம் வயதில் இவ்வுலகைத் துறந்து அமரரானார்.

இக்கட்டுரையில் உ.வே. சாமிநாதையரின் உரைநடை நூல்களுள் (27 நூல்கள்) காணப்பெறும் நடைத்திறம் குறித்து ஆராயப்பட உள்ளது. நல்லுரைக்கோவை, நினைவுமஞ்சரி, என் சரித்திரம், நான் கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும், சங்கத் தமிழும் பிற்காலத்தமிழும் ஆகியவை உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்களுள் சிலவாகும்.

நடைநலம்

எந்த நிகழ்ச்சியைக் கூறினாலும் படிப்பவர் மனம் கொள்ளும்படி சுவையுடன் எடுத்துரைப்பது உ.வே.சாமிநாதையரின் இயல்பு. இதனை அவரின் உரைநடை நூல்களுள் காணலாம். உ.வே.சாமிநாதையரின் நூல்கள் அனைத்தும் கட்டுரை வடிவிலேயே அமைந்துள்ளன. கூற வந்த பொருளுக்கு ஏற்ப அழகிய தலைப்பிட்டுச் சிறுசிறு கட்டுரைகளாகவே எழுதியுள்ளார்.

கட்டுரை நடை

உவமைகள் இலாது, நேரிடையாக எளிமையாகக் கட்டுரைகள் எழுதியுள்ளார் உ.வே.சாமிநாதையர். சான்றாகப் பின்வரும் பகுதியினைப் பார்க்கலாம். கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரியின் பெயர்க்காரணத்தைப் பின்வருமாறு எழுதியுள்ளார் உ.வே. சாமிநாதையர்.

"பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டில் கடையெழு வள்ளல்கள் என்று சிறப்பிக்கப்பெற்ற ஏழு பேர்களில் வல்வில் ஓரியும் ஒருவன். அவன் கொல்லிமலைக்கும் அதனைச்சார்ந்த நாட்டிற்கும் தலைவனாகிய ஒரு சிற்றரசன். வீரத்திலும் கொடையிலும் சிறந்தவன். ஒரு முறை வில்லை வளைத்து அம்பை எய்தால், அந்த அம்பு பல பொருள்களை ஒருங்கே துளைத்துச் செல்லும்படி செலுத்தும் வன்மையை அவ்வீரன் பெற்றிருந்தான். அவ்வாறு எய்யும் வில்லுக்கு 'வல்வில்' என்ற பெயர் வழங்கும். ஓரி என்னும் இயற்பெயருடைய அவன் அத்தகைய

வன்மையை உடையவனாக இருந்ததனால் 'வல்வில் ஓரி' என வழங்கப்பெறுகிறான். இராமபிரானுக்கு அத்தகைய வன்மை இருந்தமையின் அவரை 'வல்விலிராமன்' என்று பெரியோர் வழங்குவர்." (நான் கண்டதும் கேட்டதும், ப. 63) என்பார் உ.வே.சா.

நீண்ட தொடர் யாதுமின்றி எடுத்துக் கொண்ட பொருளை எளிய வடிவில் தந்துள்ள உ.வே. சாமிநாதயரின் கட்டுரை நடைநலம் அறியத்தக்கதே.

எடுத்துரை நடை

ஒரு செயல், வாழ்வின் நிகழ்வு குறித்து எடுத்துரைப்பது எடுத்துரை நடையாம். வரலாற்று நிகழ்வுகளை எழுதுவதற்கு எடுத்துரைநடையே துணை புரியும்.

> ***"அவர் முகத்தில் ஒருநாளும் சந்தோஷத்தைக் காண முடியாது. எப்பொழுதும் கடுகடுத்த முகத்தோடே இருப்பார். அவருடைய உடம்போ மிகவும் மெலிந்திருக்கும் அவருக்கு எப்பொழுதும் உள்ள வயிற்று வலியினால் அது பின்னும் மெலிந்து வந்தது. அவருக்கு யாருடனும் பேச விருப்பம் இருப்பதில்லை. பேசினாற் கடுமையாகவே இருக்கும்."***
>
> (புதியதும் பழையதும், ப. 58)

என்று ஒருவரை அறிமுகம் செய்துள்ளார் உ.வே.சா. இதன்வழி உ.வே.சா.வின் எடுத்துரை நடைநலனை உணரமுடிகிறது.

விளக்க நடை

ஒரு கருத்தை விளக்கிக்கூறப் பயன்படுத்தப்பெறுவது விளக்கநடையாம். எந்தப்பொருள் அல்லது நிகழ்வாக இருப்பினும் முழுமையாக விளக்குவதே உ.வே. சாமிநாதையரின் இயல்பு. 'தூக்குப்பலகை' என்பதற்குரிய விளக்கத்தைப் பின்வருமாறு தருகிறார் உ.வே.சா.

> ***"சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச்செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர். சுவடித் தூக்குகளைத் தூக்கியதால் அப்பெயர் பெற்றன. அதனை அசையென்றும் சொல்வதுண்டு. தமிழ் விடுதூதின் ஆசிரியர் அத்தூக்குப் பலகையைத் தமிழ்க் குழந்தையின் தொட்டிலென்று வருணிக்கின்றார்."***
>
> (நான் கண்டதும் கேட்டதும், ப. 34)

என்றுரைத்துள்ளார.உ.வே.சா இதன்வழிஉ.வே.சா.வின்விளக்க நடைப்பான்மையை எண்ணமுடிகிறது.

நாடக நடை

இருவர் பேசிக் கொள்வது போல் உரைநடைப் பாணியில் எழுதப்பெறுவது நாடக நடை எனப்படும். **சான்று** 'மானங்காத்த மைந்தர்' என்ற கட்டுரையில், ஒரு தாயாருக்கும், மகனுக்கும் இடையே நடைபெறும் உரையாடல்.

குமாரர் : அம்மா அப்பா இயற்றிய நூல் ஏதாவது உண்டோ?

தாயார் : ஒரு புஸ்தகம் எழுதினார். அதை எழுதியது முதல் அவருக்குச் சந்தோஷமே இல்லாமற் போயிற்று.

குமாரர் : அந்தப் புஸ்தகந்தானா இது. குமாரர் தாயாருக்குக் கையிலிருந்த சுவடியைக் காட்டினார்.

தாயார் : ஐயோ? அந்தச் சுவடியை நீ ஏனப்பா எடுத்தாய். உன்னுடையதகப்பனார் அதனால் அடைந்த வருத்தம் போதாதா? அதை ஆற்றிலாவது, கிணற்றிலாவது போட்டுவிடு. அதுதான் உன் தகப்பனாரைக் கெடுக்க வந்த சனியன்.

(நான் கண்டதும் கேட்டதும், ப. 45)

என்று கூறுவார் உ.வே.சா. இதன்வழி உ.வே.சா.வின் நாடகக் கூறுடன் கூடிய நடைப் பாங்கினை அறியமுடிகிறது.

வருணனை நடை

செய்யுளுள் வருணனை அமைவது போல உரைநடையிலும் வருணனைக்கு இடம் உண்டு. உரைநடையில், ஆசிரியரின் விருப்பப்படி வருணித்து எழுதலாம்."திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வண்டானம் என்னும் ஓர் ஊரில் முத்துசாமி ஐயர் என்ற ஒரு ஸ்மார்ந்த பிராமணர் இருந்தார். இவர் வடமவகுப்பைச் சேர்ந்தவர். குறிய வடிவினர். சிவந்த மேனியர். எப்போதும் குனிந்து கொண்டே இருப்பார் அகன்ற நெற்றியையும் விசாலமான கண்களையும் உடையவர். எதிலும் உவப்பையாவது வெறுப்பையாவது காட்டமாட்டார். இவர் பிறரோடு அதிகமாகப் பேசுவதில்லை பாடங்கேட்பதிலும் கேட்டவற்றைச் சிந்திப்பதிலுமே காலம் போக்குவார். எப்போதும் தனித்தே இருப்பார். பாடங்கேளாத சமயங்களில் தோட்டங்களிலுள்ள மரத்தடியிலும் நீர்த்துறைகளிலும் ஆற்றுமணலிலும் தனியே அமர்ந்து மண்ணிலும் மணலிலும் எதையேனும் எழுதிக் கொண்டேயிருப்பார்."

(நல்லுரைக்கோவை, பாகம் 4, ப. 110)

என்று வருணித்து அவரை நம் கண்முன்னே காட்டியுள்ளார் உ.வே.சாமிநாதையர்.

நகைச்சுவை உணர்வு வெளிப்பாடு

உ.வே. சாமிநாதையரின் நகைச்சுவை உணர்வினை, 'நான் கண்டதும், கேட்டதும்' நூலினுள் உள்ள பன்னிரண்டாம் கட்டுரையாகிய, "டிங்கினானே" வழி உணரலாம். உ.வே. சாமிநாதையருடன் உடனிருந்து பாடம் கேட்டவர் சவேரிநாதபிள்ளை என்ற கிறித்தவர். ஒரு நாள்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் முன்சீப்பாக இருந்த வேதநாயகம் பிள்ளையிடம் சவேரிநாதப்பிள்ளையை அனுப்பினார். இரவு 2 மணிக்குத் தான் வந்தார் சவேரிநாதப்பிள்ளை. ஏன் இந்த காலதாமதம் என்று மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை வினவ, அதற்குப் பின்வருமாறு சவேரிநாதர் பதில் கூறினாராம்.

"நான் இரண்டு மணிக்கு வந்ததே பெரும் பிரயாசையாகிவிட்டது முனிசீப், வீட்டிற்கு வருகையில் இரவு 9 மணியாகிவிட்டது. அவர்களோடு பேச வேண்டிய காரியத்தைப் பேசிவிட்டுத் திரும்பும் போது இரவு மணி பதினொன்று. எங்கும் மையிருட்டாய் இருந்தது. "அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் வந்தேன். பெரிய மைதானத்துக்கு அருகில் வந்தபோது. திடீரென்று காலில் ஏதோதட்டியது ...."

"...என்ன ஆச்சரியம், அங்கே வழிநெடுக அதிக ஜனங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் அவர்கள் சிறிதேனும் சத்தம் செய்யவில்லை. அங்கே பாரதம் நடக்கிறது என்று கவனித்தேன் ..."

"பீமசேன மவாராசா, மவாராசா, மவாராசா, என்றார் முதல்வர். ஆமாமா, என்றார் பின்பாட்டுக்காரர் மரத்தேப்பூ, மரத்தேப்பூ என்று உற்சாகத்தோடு கைகளைக் கீழும் மேலும் அசைத்துக் கொண்டு கர்ச்சனை செய்தார். பிரசங்கியார். பின்பாட்டுக்காரர் 'ஆமாமா' என்று மூன்று முறை முழங்கினார், அப்பால் உடுக்கையின் ஓசையும் பம்பையின் முழக்கமும் எழுந்தன இப்படிச் சில நிமிஷம் முழங்கியபின் உடுக்கைக்காரர் "டிங்கினானே, டிங்கினானே, டிங்கினானே" என்று சொல்லி ஆலாபனம் செய்யத் தொடங்கி விட்டார், ஜனங்கள் எல்லோரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் மட்டும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை."

மேடையில் நடந்த கதை 'பாரதம்' என்பதை 'பீமசேன மவாராசா' என்ற சத்தத்தால் அறிந்தேன் அதற்கு மேல் நான் கேட்ட முழக்கங்களின் பொருள் எனக்கு விளங்கவில்லை... இந்த 'டிங்கினானே' வரலாற்றைப் பிள்ளையவர்கள் அங்கே வருபவர்களுக்கெல்லாம் சவேரிநாத பிள்ளையைக் கொண்டு சொல்லிக் காட்டி வந்தார்கள்."

(நான் கண்டதும் கேட்டதும், பக். 56-59)

என்று, "டிங்கினானே" கட்டுரையில் உ.வே.சா. அவர்கள் பதிவு செய்துள்ளார்.

இதன் வழி, உ.வே. சாமிநாதையர் பல்வேறு வகையான நடை உத்திகளைப் பயன்படுத்தி சுவைபடுமாறு எழுதுவதில் கைதேர்ந்தவர் என்பதை இக்கட்டுரையின் வழி உணரலாம்.


முடிவுரை

பிற சமய இலக்கியங்களைப் பதிப்பித்ததன் வழி உ.வே. சாமிநாதையர் எவ்வித சமயக் காழ்ப்புணர்ச்சியும் இன்றி தமிழ்ப்பணி செய்துள்ளார். எந்நிகழ்வாயினும் சுவைபட விளக்குவதில் சிறந்து விளங்கியுள்ளார். பல்வகை நடைத்திறன்கள் வாய்க்கப் பெற்றுள்ளார் என்பதை இக்கட்டுரை வழி அறியலாம்.

துணைநின்ற நூல்கள்

1. உ.வே. சாமிநாதையர், நான் கண்டதும், கேட்டதும்
2. நல்லுரைக் கோவை, பாகம் - 4
3. புதியதும், பழையதும் - வெளியீடு -டாக்டர் உ.வே.சாமிநாதையர்நூல்நிலையம்,சென்னை-90

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



2 .பன்முக ஆற்றல் உ.வே.சா.

உதவிப் பேராசிரியர் இராசுமைனர்,
தமிழ்த்துறைத்தலைவர்,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095

முன்னுரை

தோன்றின் புகழுடன் தோன்றுக என்ற குறளுக்கேற்ப இம்மண்ணுலகில் பிறந்தார். உ.வே.சா. எல்லோராலும் தமிழ்த்தாத்தா என அன்புடன் புகழும்படி பெருமைக்குரியவர். திரு.வி.க. அவர்கள் தமிழைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் மூவரை குறிப்பிடுகிறார்.

1. ஆறுமுக நாவலர் 3. சி.வை. தாமோதரம்பிள்ளை
2. டாக்டர் உ.வே.சா. அவர்கள்.

   உ.வே.சா பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டும் தம் வாழ்நாளைத் தியாகம் செய்தவர். அவர் ஆற்றிய தமிழ்ப்பணிகள் இக்கட்டுரையின் வாயிலாகக் கூறப்படுகிறது.

பிறப்பு

தஞ்சை மாவட்டத்திலுள்ள உத்தமதானபுரம் வேங்கட சுப்பையருக்கும் சரசுவதியம்மாளுக்கும் 19.02.1855 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். அவரின் தந்தை பல ஊர்களுக்குச் சென்று தன் இசைத் திறமையால் ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தார். குறிப்பிட்ட வேலையும் குறிப்பிட்ட சம்பளமும் இல்லாவிட்டாலும் மக்களின் அன்பு அவரைப் பாதுகாத்து வந்தது. உ.வே.சா. அவர்கள் தந்தையாரிடமும், பிற ஆசிரியர்களிடமும் இளமையில் கல்வி பயின்றார்.

தமிழ்மொழியின் பெருமை

தமிழ்மொழி இலக்கண இலக்கிய வளம் கொண்டது. சங்ககாலத் தமிழர்களின் பெருமை பற்றிப் பல நூல்கள் வந்துள்ளன. பல ஆராய்ச்சி நூல்களும் வெளிவந்தன. தமிழர் பண்பாடு, வீரம், காதல், கொடை, தமிழர் நாகரிகம் எனத் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றன. உ.வே.சா. அவர்களின் தந்தையின் ஆசை பெரிய சங்கீத வித்துவானாக ஆக்க வேண்டுமென்று என நினைத்தார். ஆனால் உ.வே.சா. அவர்கள் தமிழ்மீது கொண்ட ஆசையை உணர்ந்தார். அதில் அவரை ஈடுபடுத்துவதே தன் கடமையாக எண்ணினார்.

தமிழ்ப்பணி

தமிழ்த்தாத்தாவின் அரும்பெருந்தொண்டே இத்தனை உயர்வுக்கும் காரணமாகும். அரியலூர் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் ஆகியோரிடம் கசடற சில நூல்களைக் கற்றார். திருவாவடுதுறை ஆதினத்தில் இருக்கும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் மாணவனாகச் சேர்ந்தார். ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தன் மாணவனுக்குச் சாமிநாதன் என பெயரிட்டார். தன் ஆசிரியரிடமிருந்து பல நூல்களைக் கற்றுப் புலமை பெற்றார். உ.வே.சா. அவர்கள் எதையும் சுவையாக எடுத்து விளக்கும் ஆற்றல் பெற்றமையால் மாணவர்கள்

உள்ளத்தை எளிதாகக் கவர்ந்தார். இனிய எளிய உரைநடை எழுதுவதிலும் தமிழ்த்தொண்டு புரிவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

ஆசிரியப் பணி

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இறந்த பிறகு திருவாவடுதுறை மடத்தில் உ.வே.சா ஆசிரியராகப் பணியில் இருந்தார். ஆதினத்தாரின் பேரன்பிற்கும் பேராதரவிற்கும் உள்ளாகி இருந்தார். வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் முயற்சியால் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிப்புரிந்தார். ஒரு சில ஆண்டுகள் கழித்து கும்பகோணத்திலிருந்து மாற்றலாகி சென்னை மாநிலக் கல்லூரியில் பணியில் அமர்ந்தார். சென்னைக் கல்லூரியிலிருந்து பணி நிறைவு பெற்றார். சிதம்பரம் ராஜா அண்ணாமலை செட்டியார் அவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க்கல்லூரியின் தலைவராக பொறுப்பேற்றார்.

பெற்ற பட்டங்கள்

1. இவரது பெருமையைப் பாராட்டி ஆங்கில அரசினால் 1906 ஆம் ஆண்டு “மகாமகோபாத்தியாய” என்ற பட்டத்தைப் பெற்றார்.
2. 1917 ஆம் ஆண்டு பாரத தர்ம மண்டலத்தார். “திராவிட வித்தியா பூஷணம்” என்ற பட்டத்தை வழங்கினார்கள்.
3. 1917 ஆம் ஆண்டு காமகோடி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் “தாஷிணத்தில் கலா நிதி” என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தார்.
4. 1932 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தார் டாக்டர் பட்டம் அளித்தார்கள்.
5. 1935 ஆம் ஆண்டு உ.வே.சா. அவர்கள் 80 ஆண்டு நிறைவு அடைந்ததால் சதாபிஷேக விழாவைத் தமிழுலகம் கொண்டாடி மகிழ்ந்தது. அவருக்குச் சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் இவ்விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.
6. 1942 ஆம் ஆண்டு சென்னை பெசன்ட் நகரில் டாக்டர் உ.வே.சா நூல் நிலையம் நிறுவப்பட்டது.
7. 1948 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் உ.வே.சா. அவர்களுடைய முழு திரு உருவச்சிலையொன்று நிறுவி பெருமிதம் கொண்டது.
8. 2006 இல் நடுவண் அரசு தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் அஞ்சல் தலை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

பதிப்புத்துறை

உ.வே.சா. பணி நிறைவு பெற்ற பின்பு தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். இவர் இல்லையென்றால் இன்று பல தமிழ் நூல்கள் அறியப்படாமலே அழிந்து போயிருக்கும். இவர் ஊர் ஊராகச் சென்று காணாமல் போனதும் சிதிலமானதுமான ஓலைச் சுவடிகளைத் தேடிக் கண்டு பிடித்துக் கரையான் அரித்துத் தின்றது போக எஞ்சியதைத் திருத்தமுற பதிப்பித்துத் தந்தார். ஏட்டில் இருப்பதை அப்படியே பெயர்த்துத் தராமல் தம் அறிவினாலும் திறமையாலும் விடா முயற்சியினாலும் ஆராய்ந்து செப்பம் செய்தார். தாம் கற்ற நூலை எளிமைப்படுத்திக் கற்போர்க்கு இனிமை சேர்ப்பது இவரது தனிச்சிறப்பாகும்.

ஒவ்வொரு நூலிலும் முன்னோர் உள்ள முகவுரையும் ஆசிரியர் வரலாறும் நூலைப் பற்றிக் குறிப்புகளும் பிற செய்திகளும் மேற்கோள் காட்டிச் சில குறிப்புகள் தருவது இவரது மரபாகும்.

தமிழ்ச் சங்கத்தில் அனைத்துப் புலவர்களும் சேர்ந்து செய்ய வேண்டிய பதிப்புப்பணி அனைத்தையும் உ.வே.சா. அவர்கள் ஒருவரே செய்து முடித்தார் என்பதில் மிகையாகாது.

பதிப்பித்த நூல்கள்

எட்டுத்தொகை – 5	பத்துப்பாட்டு – 10
சீவகசிந்தாமணி	சிலப்பதிகாரம் – 1
மணிமேகலை	புராணங்கள் – 12
உலா – 9	கோவை – 6
தூது – 6	வெண்பா பாடல்கள் – 13
அந்தாதி – 3	பரணி – 2
மும்மணிக்கோவை – 2	இரட்டைமணிமாலை – 2
பிற பிரபந்தங்கள் – 4	

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியில் தம் வாழ்நாள்களையே தியாகம் செய்தார் உ.வே.சா.

நன்றி மறவாச் செம்மல்

தம்முடைய ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றை வெளியிட வேண்டும் என விருப்பம் கொண்டார். உ.வே.சா. பல செய்திகளைத் தொகுத்து மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம் என இரு பாகங்களாக எழுதி வெளியிட்டார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பணம் வாங்காமல் ஏழை மாணவர்களுக்கு உணவும் இடமும் அளித்துக் கல்வி புகட்டினார். தமிழ்க்கல்வியை தழைக்கச் செய்தார். தாயைவிட என்மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான் என்று இவரை உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். தம் வாழ்க்கையில் எந்தப் பெரியார்களோடு பழக நேர்ந்தாலும் அவர்களைப் பற்றி வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் சுவைபட எழுதினார். தியாகராச செட்டியார் சரித்திரம், கோபால கிருஷ்ண பாரதியார் சரித்திரம், வைத்தியநாதையர் சரித்திரம். கனம் கிருஷ்ணையயர் வரலாறு என்பன இவர்களுடைய அன்பையும் ஆற்றலையும் நன்றியறிவையும் விளக்குகின்றன. சிலருடைய வரலாற்றைச் சுருக்கமாக எழுதிக் கட்டுரைகளாக வெளியிட்டார். இந்த வகையில் பூண்டி அரங்கநாத முதலியார், மணி ஐயர், வி.கிருஷ்ணசாமி ஐயர், திவான் சேஷையா சாஸ்திரிகள் முதலியவர்களைப் பற்றிக் கட்டுரைகளும் வெளியாயின.

மயக்கம் தந்த செய்திகள்

சேலத்தில் வாழ்ந்த இராமசாமி முதலியார் தமிழிலும் சங்கீதத்திலும் வடமொழியிலும் திறமையானவர். உ.வே.சா கும்பகோணம் கல்லூரிப் பணியில் இருக்கும்போது அவரைக் காணச் சென்றார். இருவரும் உரையாடும்போது முதலியார் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை படித்தீர்களா? என்று வினாவினார். புத்தகம் கிடைக்காததால் படிக்கவில்லை என்றார் உ.வே.சா. முதலியார் சீவகசிந்தாமணியைக் கொடுத்துப் படித்துப் பாருங்கள் என்றும் அவர் பெற்ற வரலாற்றையும் சொன்னார். சிந்தாமணிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரின் மேற்கோள்

உ.வே.சாவுக்கு விளங்கவில்லை. சத்திரநாத செட்டியாரின் உதவியால் விளங்கியதாக என் சரித்திரம் நூலில் குறிப்பிட்டுள்ளார். பல வகையில் முயன்று தேடியதில் சிந்தாமணி பிரதிகள் 23 கிடைத்தன. அதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது யானை நாகத்திற் தோற்றுதலின் என்று ஓரிடத்தில் இருந்தது. யோசித்து யோசித்துப் பார்த்ததில் யானை நரகத்தில் தோற்றுதலின் அதற்கு வணங்குதல் இயல்பு என்று நச்சர் எழுதியிருந்தார். காந்தருவதத்தையோடு இசை பாடித் தோல்வியுற்றவர்களை நோக்கி யோசிக்கையில் யானை நாதத்தில் தோற்றுதலின் என்று இருக்க வேண்டுமென உறுதி செய்தார். இதேபோல் குருதி என்பதை குந்தி என்றும் தடுமாற்றம் இருந்தது.

இப்படித் தடுமாறித் தடுமாறிச் சிரமப்பட்டதால் அலுப்புத் தோன்றவில்லை. மேன்மேலும் ஊக்கம் ஏற்பட்டதாகக் கூறியுள்ளார். இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் வேறுபாடு தெரியாமல் மயங்கிய சமயங்கள் பல. ஓர் ஏட்டுக்கும் மற்றோர் ஏட்டுக்கும் இடையே உள்ள பாட பேதங்களால் அடைந்த நிகழ்ச்சிகள் பல. உரைக்கு மூலமும் மூலத்துக்கு உரையும் கிடைக்காமல் பலமுறை இடர்பட்டார். மேலும் சிந்தாமணி எழுத முற்படும்போது நேர்ந்த கலக்கங்களிலும் இடர்பாடுகளும் தடைகளும் மயக்கங்களும் நாளடைவில் இறைவன் அருளால் விலகியது. இறைவன் திருவருளால் 1889 ஆம் வருடம் பத்துப்பாட்டு அச்சிட்டு நிறைவேறியது என்றார்.

சிந்தாமணி, பத்துப்பாட்டு என்னும் நூல் உரைகளால் நச்சர் அவர்களின் நூற் பயிற்சி உ.வே.சா அவர்களுக்கு தெரிய வந்தது. பல அரிய செய்திகள் புலப்பட்டன. கலித்தொகை உரையும் தொல்காப்பிய உரையும் நச்சரின் பெருமையை விளக்கின. பத்துப்பாட்டில் பல சரித்திர செய்திகளும் பழங்கால தமிழ் மக்களின் பண்பாடும் தெரிய வந்தன. பத்துப்பாட்டினைக் கொண்டு பல ஆராய்ச்சிகளைச் செய்யலாம் என்று அறிஞர்கள் பாராட்டினார்கள். பத்துப்பாட்டைப் பற்றிப் பாலைக்காட்டு முனிசிபல் சேர்மன் ராவ்பகதூர் பா.ஐ.சின்னசாமி பிள்ளை ஹிந்து பத்திரிக்கையில் ஒரு மதிப்புரை எழுதினார்.

சிலப்பதிகார ஆராய்ச்சி

திருநெல்வேலிக்குச் சில சைவர்களின் குரு வீட்டுக்குச் சென்றார். சிலப்பதிகாரம் வேண்டும் என்றார். சிறப்பதிகாரமா? இருக்கும் என்று அழுத்தமாகச் சொன்னார். சில சுவடிகளைத் தந்தன. அனைத்து சுவடிகளும் ஆராயப்பட்டன. அதன் மூலம், அடியார்க்கு நல்லார் உரை, அரும்பதவுரை இருந்தது. சிலப்பதிகாரத்தில் இசை. நாடக சம்பந்தமான பல செய்திகள் இருந்தன. அவற்றை ஒழுங்குபடுத்த முயலும்போது அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டிய செய்யுட்களும் சூத்திரங்களும் மிக வியப்பை உண்டாக்கின. சிலப்பதிகாரம் மிக அரிய வரலாற்றுச் செய்திகளை உடையது. சங்ககாலத்தை நிர்ணயிப்பதற்குச் சிலப்பதிகாரம் முக்கிய ஆதாரமாக இருந்தது. தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியில் பலருடைய கவனத்தை அந்நூல் கவர்ந்தது. அடியார்க்கு நல்லார் உரையால் வேறு நூல்கள் அறிய முடிந்தது. அவ்வுரையால் அறிந்த பல செய்திகளுடன் முக்கியமானது பெருங்கதை என்னும் நூலாகும். உ.வே.சா தேடித்தொகுத்த கொங்குவேள் மாக்கதை ஒன்றாகும். கொங்குவேள் என்பது ஒருவரைப் பற்றிய கதையாக இருக்கலாம் என

நினைத்தார். உதயணன் கதையென்று அடியார்க்கு நல்லார் உரையால் உறுதிப்படுத்திக் கொண்டார். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டையும் புத்தக வடிவத்தில் பார்க்க வேண்டுமென சேலம் இராமசுவாமி முதலியார் ஆவலோடு இருந்தார். இருப்பினும் அவர் காலத்தில் நிறைவேற்றும் பேறு இல்லாமல் போயிற்று என்று கூறி உ.வே.சா கண்கலங்கினார். ஓய்வு பெற்ற பிறகு தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதோடு தம்முடைய அனுபவங்களை எளிய உரைநடையில் எழுதினார். உ.வே.சா அவர்கள் தாம் பிறந்த காலத்தில் கண்ட நிலையை மாற்றித் தமிழ் மக்களைப் பழந்தமிழ்ச் செல்வத்துக்கு உரிமையுடையவர்களாக ஆக்கி 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் இறைவன் திருவடியை அடைந்தார். பாரதியார் தாம் பாடிய பாட்டில்...

"பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவர் வாயில்
துதியறிவாய் எவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
சிறப்பின்றித் துலங்குவாயே"

என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

நிறைவுரை

உ.வே.சா அவர்கள் சிறந்த பண்பாளர், இணையற்ற ஆசிரியர், மாணவர்களுக்குப் பாடம் சொல்வதில் வல்லவர், புலமைப் பெருங்கடல், கவிஞர், சிறந்த எழுத்தாளர், பதிப்பாசிரியர், தனது வாழ்க்கை வரலாற்றை என் சரித்திரம் என்ற நூலாக எழுதியுள்ளார். தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணிக்காகச் செலவிட்ட செம்மல் ஆவார். தமிழ்த் தாத்தாவின் தமிழ்த்தொண்டே தமிழின் உயர்வுக்குக் காரணமாகும்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

3. உ.வே.சா அவர்களின் "என் சரித்திரம்" காட்டும் அக்காலத்திய கல்விமுறை - இளமைக்கால கல்வி

முனைவர் பெ. புருஷோத்தமன்,
பேராசிரியர் – சிவில் பொறியியல் துறை,
அக்னி காலேஜ் ஆப் டெக்னாலஜி,
தாழம்பூர், சென்னை – 600 130.

பொறியாளராக மாநில, மத்திய அரசாங்க துறைகளிலும், தனியார் துறைகளிலும், அண்ணாமலை பல்கலைக்கழகம், காந்தி கிராமம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் - இங்கெல்லாம் பணியாற்றி மற்றும் பேராசிரியராகவும் பணிபுரிந்து ஓய்வுபெற்று, தொடர்ந்து ஆசிரியர் பணியிலும் தமிழில் ஆர்வமாக, ஆரம்பகால சுமேரியர் பேசியது தமிழே என்ற ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளேன்.

உ.வே.சா அவர்களின் என் சரித்திரத்தின் பதிப்புரையில் காணப்படும், "ஏடு தேடி அலைந்த ஊர் எத்தனை" என்னும் கூற்றும், "என் சரித்திரம் கற்றால் தமிழ் ஆர்வம் வரும், வந்த தமிழ் ஆர்வம் வளரும்" என்பதுவும் நமக்கு ஊக்கத்தை அளிப்பதாகும். உவேசா அவர்கள் செய்தது போலவே ஏதாவது ஒரு சிறு வகையில் தமிழுக்கு தொண்டாற்ற முடியுமா? என்பது நம் ஆசை! அவர் காலத்தில் ஆரம்பக்கல்வி எப்படித்தான் இருந்தது, அவருக்கு முந்திய காலத்தில் கல்வி எப்படி இருந்தது எனவும் ஒப்பிட்டு காணவும் விழையலாம்! நாம் முன்பே சுமேரிய காலத்து கல்வி முறையும் (கிமு 3000) இக்காலத்து கல்விமுறையும் சார்ந்து சிலவற்றை ஒப்பிட்டுப் பார்த்துள்ளோம் (புருஷோத்தமன் ரூ சுரேஷ் 2014). உவேசா அவர்கள் பிறந்த வருடம் 1855. சுமேரியன் காலத்தில், உவேசா அவர்கள் காலத்தில், நம் காலத்தில் ஆரம்ப கல்வி எப்படி இருந்தது என ஒப்பிடவும் ஆர்வம் எழுகிறது. உவேசா அவர்களின் என் சரித்திரத்தில் காணும் சில குறிப்புகளைக் கொண்டே அங்கு இங்கு என்று தொட்டு இக்கட்டுரை அளித்துள்ளோம். இது குற்றம் குறை எனக் கருதாது, ஒரு முதல் முயற்சி என்று கருதுதல் வேண்டும் அதன் வாசிப்பு மேலும் தொடரும் என கருதலாம்.

கி.வ.ஜகந்நாதன்(கி.வ.ஜ) அவர்கள் அளித்த உவேசா அவர்களின் என் சரித்திரத்தின் சுருக்கத்தில் நாம் அறிந்து கொள்வது, "அன்று தமிழ் ஆசிரியர் நிலை சேவகனுக்கு அடுத்தபடியாக சம்பளம் வாங்கியவர் தமிழ் ஆசிரியரே" எனும்பொழுது வருத்தமாக உள்ளது. அத்துடன் உவேசா அவர்களின் தந்தை மகற்காற்றும் பணியாகத் தெரிவிப்பது, "எங்கெங்கே தமிழ் நூல்களைப் பாடம் சொல்லுகிறவர்கள் இருக்கிறார்களோ அந்த அந்த ஊர்களுக்கெல்லாம் குடியேறி தம்முடைய குமாரர் தமிழ் கல்வி பெறும்படி செய்துவந்தார்" உ.வே.சா என்று அறியும் பொழுது நாம் அவர் தந்தையை வியந்து வணங்கி போற்றுதல் வேண்டும். உவேசா அவர்கள் மகாவித்துவான் சுந்தரம் பிள்ளை அவர்களின் தொடர்பால், உடன் இருந்து பலவகையான தமிழ் நூல்களைக் கற்றார் அத்துடன் பிள்ளைகள் இயற்றிய நூல்களை எழுதுவதிலும் ஈடுபட்டார்

என்றும் தெரிகிறது. பல நூல்களில் அறிவு உண்டாயிற்று என்றும் பலதுறைகளில் அறிவு சிறந்தது என்றும் அறிகிறோம்.

உவேசா அவர்கள் தன் ஆர்வத்தால் தமிழ் ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், பதிப்பில் இல்லாத பல பழைய தமிழ் நூல்களைப் பதிப்பித்தும் தமிழுக்கு ஆற்றிய பெரும் தொண்டு பெரும் முயற்சி என அறிகிறோம்.

இக்கட்டுரைக்காக நான் எடுத்துக்கொண்ட கரு இளமைக் கல்வி என்று சுருக்கமாகக் கொண்டாலும், நாம் படித்த அளவு போதுமானது அன்று எனத் தெரிகிறது. இங்கு குறிப்பிடபோவதும் போதுமானது அன்று. நான் உவேசா அவர்களின் "என் சரித்திரம்" என்னும் கடலில் நீந்தும் ஒரு சிறிய மீன் என்று தோன்றுகிறது, ஆக இந்தக் கட்டுரை ஒரு ஆரம்பமே!

என் கிராமம்

அன்று இசை என்றாலே தெலுங்குக்கும் சமஸ்கிருதத்திற்கும் முதலிடம் கொடுக்கப் பட்டிருந்தது. மற்றும் ஆங்கில மோகம் சூழ்ந்த அந்த நிலையில் தமிழ்த்தாத்தாவுக்கு தமிழில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது என்ற எண்ணம் நமக்குத் தோன்றும்! அதற்கு அவரின் ஆசிரியர், பெற்றோர் நண்பர் உறவினர் ஏனையோர் பங்கு பற்றி நாம் அறிந்துகொள்ள வியப்பு மேலிடுகிறது! அவர் தனக்குத் தமிழ்மேல் உள்ள ஆர்வத்திற்கு வித்திட்டவர் என்று கூறுவது: "அரியலூர் சடகோபஐயங்காரிடம் என்று நான் மாணாக்கனாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த்தாயின் அருட் பரப்பில் புகுந்தவனானேன்" என்கிறார். அத்துடன், "பொம்மைகளைக் காட்டி குழந்தைகளைக் கவர்வது போல தமிழ்ச் செய்யுட்களில் நயத்தை எடுத்துக்காட்டி என் உள்ளத்துள் அந்த இளம் பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே" என்கிறார். அவருக்கு அமைந்த ஆசிரியர் ஒருவர் இருவர் அல்லர் அவர் தன் தந்தை முதல், பலரிடம் கல்வி பயின்றுள்ளார். அவரின் தந்தையின் குருகுலவாசம் பற்றியும் அவரின் இளமைக்கால கல்வியும் நாம் காண்கையில் அவருக்குச் சரியான அடித்தளமும் ஊக்கமும் கிடைத்துள்ளது என்று தெரிகிறது. ஆசிரியர்களான நாம் அவ்வகையில் இளம் தலைமுறையினருக்கு தமிழ்மேல் ஆர்வமும் திறமையையும் வளர்ப்பது கடமையாகிறது.

இளமைக் கல்வி

நாம் கண்ட "ஏடு தேடி அலைந்த ஊர் எத்தனை" என்ற அடிகளுக்கு இணையாக, இளமைக்கல்வி அத்தியாயத்தைப் படிக்கும்போது, உவேசா அவர்கள் தேடி அலைந்து படித்த பள்ளிகள் எத்தனை என்று வியக்கத் தோன்றுகிறது. பள்ளிகளும் பலவிதம்,பள்ளி ஆசிரியர்களும் பலவிதம் பாடங்கள் பயிலும் முறையும் பலவிதம் ஆனால் மாறாதது கண்டிப்பும் பிரம்படியும் என அறிகிறோம்.

தம் ஊரிலேயே உத்தமதானபுரம் நாராயண அய்யர் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடியும் எண் சுவடியும் கற்றார். குடியானத் தெரு பிள்ளைகளும் அக்ரஹாரத்துப் பிள்ளைகளும் சேர்ந்து

படித்தனர்.அக்காலத்தில் காணப்பட்ட கல்விமுறையில் உள்ள குறையை, முரட்டுத்தனத்தால் குழந்தைகளை அடக்கி ஆள்வது கஷ்டம் என்பதை அந்த உபாத்தியாயர் தெரிந்து கொள்ளவில்லை என்கிறார். இன்று நம் ஆரம்பப் பள்ளிகளில் அன்பும் விளையாட்டும் தான் முன்னிலைப் படுத்தப்படுகிறது, இது நல்ல அறிகுறியே.

பின்பு சாமிநாதய்யர் பள்ளி பற்றி உவேசா குறிப்பிடுகிறார். அங்குதான் ஏட்டில் எழுதி கற்றுக் கொண்டேன் என்கிறார் முதலில் மாணவர் மணலில் எழுதிப் பழக வேண்டும் பின் எழுத்தாணியால் ஓலைச் சுவடியில் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். ஆசிரியர் சாமிநாதையர் சங்கீதம் சமஸ்கிருதம் தெரிந்தவர் என்றும் பிரம்பு வைத்திருப்பார் ஆனால் கண்டிப்பு அவ்வளவு இல்லை என்றும் கூறுகிறார். அங்கு மனப்பாடமாக சம்ஷேப ராமாயணம், விஷ்ணு சஹஸ்ரநாமம், நீதிசாரம், அமரம் மூன்று கண்டங்கள் மற்றும் தமிழும் கணக்கும் கற்றுக்கொண்டார்.

அதன்பின்பு அவர் படித்த அரியலூர் கிருஷ்ண வாத்தியார் பள்ளி சிறிது வித்தியாசமானது. அங்கு ஆத்திசூடி, மூதுரை, நாலடியார், குறள், மணவாள நாராயண சதகம், இரத்தினசபாபதி மாலை மற்றும் கணக்கு இவற்றை மனப்பாடம் செய்தல் எழுத்தாணியால் ஏடுகளில் எழுதியும் காகிதத்தில் கொறுக்காந்தட்டை பேனாவால் எழுதியும் திருத்தமாக எழுதி கற்றுக் கொண்டோம் என்றும் அப்பள்ளியில் படித்தவர் யாவரும் எழுதுவதில் நல்ல பழக்கத்தை பெற்றனர் என்றும் கூறுகிறார்.

பயிலும் முறை

கிராமத்துப் பள்ளிக்கூடங்களை எல்லாம் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்வார்கள் பயிலும் முறையும் வேறு அவ்வகை பள்ளிகள் தற்பொழுது காணமுடியாது என்கிறார். பயிலும் முறையை விரிவாகவே தெரிவித்துள்ளார்: குறிப்பாக, பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டு. பனையேடுதான் புத்தகம். எழுத்தாணிதான் பேனா. ஓலை வரவும் சுவடி சேர்க்கவும் நன்றாக எழுதவும் தெரிந்து கொள்வதற்குப் பல நாள் ஆகும் என்கிறார். சுவடியைப் பிரித்து ஒழுங்காக கட்டுவதற்குக் கூட பழக்கம் வேண்டும் என்கிறார். அக்காலத்தில் மாணாக்கனுக்கு ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்வதற்கு உபாத்தியாயர்கள் சிரமப்படுவார்கள் எனத் தெரிவிக்கிறார்.

வாழ்க்கைக்கு அடிப்படையான விஷயங்களை இளமையில் மனப்பாடமாக தெரிந்துகொள்ளுதல் எண்சுவடி, கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் என் இவற்றை மனக் கணக்காகவே கற்க வேண்டும் என்றும், வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை நடத்தவும் பெரிய உத்தியோகஸ்தர்கள் பதவி வகிப்பதற்கும் வழிவகுத்தன என்கிறார்.

மேலும், மக்கள் உபாத்தியாயரோடு மரியாதையுடன் பழகுவர். ஆசிரியர் பிள்ளைகளை என்ன செய்தாலும் அது குறித்து வருத்தம் அடையமாட்டார்கள் கேட்கவும் மாட்டார்கள். மற்றும் வீட்டில் விஷமம் செய்யும் பிள்ளைகளை உபாத்தியாயரிடம் சொல்லி அடங்குவார்கள் என்கிறார். ஆசிரியர் அளிக்கும் தண்டனைகளும் மிகவும் கடுமையானவை. அடிக்கு பயந்து பையன் படித்து

வந்தான் என்றும் பல விஷயங்கள் மனனம் ஆகும் என்கிறார். மாணவர்கள் ஆசிரியரைத் தெய்வமாக மதிப்பதும், இன்றியமையாத வேலைகளில் அவர் வீட்டு வேலைகளைச் செய்வதும் இயல்பு எனக் குறிப்பிடுகிறார்.

அந்தக்காலத்தில் மாணவர் ஒவ்வொருவரும் மாதம் கால் ரூபாய் சம்பளமாக ஆசிரியருக்கு அளித்தனர். அத்துடன் விறகு, வரட்டி, காய்கறி, பழம் விசேஷ நாட்களில் விசேஷ பொருட்களையும் அளித்தனர் மாணவர். நாம் உவேசா அவர்களின் இளம் கல்வி என்ற அத்தியாயம் என்று இல்லாமல் எந்த அத்தியாயம் படித்தாலும், தங்கசுரங்கம் போலவே தகவல்கள் அள்ளிக் கொடுக்கிறார். அவற்றை முழுவதும் இங்கு சொல்வது கடினம், மீண்டும் மீண்டும் படித்து சிந்திக்கவும் வேண்டியுள்ளது.

சில ஒப்பீடுகள்

உவேசா அவர்களின் அந்த கால இளம் வயது கல்வி முறையை நாம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சுமேரிய துப்பில்லம் பயிலகத்தின் கல்விமுறையோடு சிறிது ஒப்பிட்டுக் காணலாம். சுமேரிய அரசன் சூல்கி என்பவன், தான் பள்ளியில் - துப்பில்லத்தில் படிக்கும் போது சக மாணவர்களைக் காட்டிலும் திறமை தனக்கு அதிகமாக இருந்தது என்றான். அத்துடன் அன்று இருந்த கல்வி முறை என்றும் அழியாது, நிலைத்திருக்கும் என்றான். அவன் தன் துப்பு நூலகத்தை கிறுக்கின என்றான். அத்துடன் உவேசா இளம் கல்வி அத்தியாயத்தில் குறிப்பிடும் திண்ணைப்பள்ளி பற்றி படிக்கும்போது சுமேரிய பள்ளி - துப்பில்லம் பயிலகத்தில் உள்ள நிலையை நினைவுபடுத்துகிறது. இரண்டு இடங்களிலும் தமிழ் மொழி கற்றுக் கொடுக்கப் பட்டுள்ளது (இது என் ஆராய்ச்சி கருத்து). அத்துடன் எழுத படிக்க கணிதம் இசை பாடல் என்று சொல்லி கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு இடங்களிலும் மாணவர்களுக்கு தக்க வழிகாட்ட தண்டனை முறை இருந்துள்ளது. முக்கியமாக துப்பில்லத்தில் களிமண்ணை பதப்படுத்துவது போலவும் வெள்ளி போன்ற உலோகங்களைச் சுத்தப்படுத்த வேண்டியது போலவும், தண்டனை பயன்பட்டது என்று அறிகிறோம். அத்துடன் வியாபாரம் மற்ற அலுவல் தொடர்பான கல்வி தேவையைக் கருத்தில் கொண்டு இரண்டு இடங்களிலும் பாடம் போதிக்கப்பட்டுள்ளது என அறிகிறோம். சங்கம் போன்ற பேரவை வளர்க்க துப்பில்லம் போன்ற பள்ளிகள் அன்று தேவைப்பட்டது என நாம் ஊகிக்கலாம். அன்றைய திண்ணைப் பள்ளிகள் சங்ககாலப் புலவர்கள் அறிஞர்கள் அரசர்களைத் தந்திருக்கக் கூடும் என நாம் ஊகிக்கலாம். உவேசா அவர்கள் அதன் வழி வந்தவர்கள் என்றும் தெரிகிறது.


இன்றைய கல்வி முறையில் பல மாற்றங்கள் வந்திருந்தாலும், மனப்பாடம் செய்தல், மொழி அறிவு விருத்தி செய்தல், தொடர்ந்து கற்றல், வளர்ந்தபின் ஆக்கப் பணியில் ஈடுபடுதல் எனப் பலவாறாக மாற்றமடையாமல் சில கல்வி சார்ந்த காரணிகள் உள்ளன. “என் சரித்திரம்” கற்றால் தமிழார்வம் வரும் வந்த தமிழ் வளரும் என்ற பதிப்பகத்தாரின் வரிகள் நம் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கும். உவேசா அவர்களுக்குத் தமிழ்மேல் பெற்ற ஆர்வம் அளவிட முடியாதது, அது சிறந்த கல்வி மூலமே கிடைத்தது எனலாம். அவ்வகையான கல்வி நம்

நாட்டில் அனைத்து குழந்தைகளுக்கும் கிடைக்க அடித்தளம் நன்கு அமைய ஆவண செய்தல் வேண்டும், மொழியும் வளரும், நம் திறமையும் வளரும் என்பது திண்ணமே.

காண்க

- என் சரித்திரம், உ வே சாமிநாதையர் அவர்கள்

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



4. உ.வே.சா அவர்களின் சீவகசிந்தாமணி பதிப்பு

முனைவர் ஆ. அரிகிருஷ்ணன், எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
இரா.வே. அரசு கலைக்கல்லூரி,
செங்கல்பட்டு – 603 001.

முன்னுரை

பல்வேறு இலக்கண இலக்கிய நூல்களைப் பதிப்பித்த உ.வே.சா அவர்களின் முதற்பதிப்பு சீவகசிந்தாமணி என்னும் சமணக்காப்பியம். இந்தக்கட்டுரை சீவகசிந்தாமணி பதிப்பு தொடர்பான செய்திகளைத் தொகுத்தும் அதற்கு அன்றைய நாளில் வெளியான நூல்கள், விமர்சனங்களைச் சுட்டிக்காட்டியும் உ.வே.சா அவர்களின் தனித்திறத்தை நிறுவ முயலுகிறது.

.

பத்தொன்பதாம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டு, அறிவுத் துறைகளின் ஒருங்கிணைவுக் காலகட்டம். தொழிற்புரட்சியின் தொடர் விளைவாய்ப் பிரித்தானிய, போர்த்துகீசிய வரவுகள் இந்தியாவிற்குள் காலனிய வரலாற்றைத் தொடங்கி வைக்கின்றன. அச்சு ஊடகம் தமிழை அதன் சகல பரிமாணங்களிலும் நவீன படுத்திற்று தொடர்வண்டி என்ற நவீன போக்குவரத்து ஒருங்கிணைப்புடன் உ.வே.சா அவர்களின் பதிப்பும் தேடலும் தொடங்குகிறது. குடந்தையில் ஆசிரியர் பணியும் சென்னையில் சீவகசிந்தாமணி பதிப்பும் என்பது ரயில்வண்டியின் வரவு இல்லையேல் சாத்தியமன்று. 1909இல் தான் உ.வே.சா சென்னை மாநிலக் கல்லூரிக்கு மாற்றலாகி வருகிறார். இந்த ஆண்டுகளில் சீவகசிந்தாமணி இரண்டாம் பதிப்பிற்கான முயற்சியில் இருந்தது.

சீவகசிந்தாமணி ஏடு

சேலம் இராமசாமி முதலியாரிடமிருந்து 1880 இல் சீவகசிந்தாமணி சுவடிகளைப் பெற்ற பின்னர் அவைகளை ஒப்பிட்டு பதிப்பினைத் தொடங்கி 1887 இல் அக்டோபர் மாதம் சீவக சிந்தாமணி முதன்முதலாக கும்பக்கோணத்திலிருந்த திராவிட ரத்னாகரம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியானது. இந்தப்பதிப்பு அனுபவத்தைப் பற்றி உ.வே.சா அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்

சிந்தாமணியே என்னுடைய தமிழ் நூல்பதிப்பின் முதல் அரும்பு. தமிழ்த்தொண்டில் இன்பம் உண்டென்னும் உண்மையை எனக்கு முதன்முதலில் வெளிப்படுத்தியது அந்நூலே. (உ.வே.சா அவர்களின் உரைநடைத்தொகுதி, ப229) என்கிறார்.

சீவகசிந்தாமணியில் ஐயங்கள்

1887 இல் முதல் பதிப்பும் 1907 இல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்தது. முதல் பதிப்பில் அச்சிடப்பட்ட ஐநூறு பிரதிகள் அச்சுக்கூடத்திலேயே வீணாயின என்பது அன்றைய தொழில் நுட்ப பலவீனத்தைக் குறிக்கிறது.உ.வே.சா சிந்தாமணிப்பதிப்பைச் செய்து வருகையில் சமண சமய விளக்கங்கள் வேண்டி சமண நண்பர்களை நாடிச் சென்றார். குறிப்பாக சைவப் மடங்களின் பின்புலத்தில் வளர்ந்த பயின்ற உ.வே.சா அவர்களுக்குச் சமண மெய்யியலின் பிழிவாக உருத்திரண்டிருந்த சீவசிந்தாமணி பல ஐயங்களை உருவாக்கியது. குறிப்பாக மூவா முதலா உலகம் என்று முதற் செய்யுள் தொடங்குகிறது. அதாவது மூப்பும் பிறப்பும் இல்லாத உலகம் என்கிறது. உலகம் தோன்றும் அழியும் என்ற சைவ சமய மெய்யியலை அறிந்திருந்த உ.வே.சா இது போன்ற இடங்களில் தத்துவார்த்த தடுமாற்றத்தைச் சந்தித்ததாகக் குறிப்பிடுகிறார். ஆகவே தான் அன்றைய சமண அறிஞர்களை நாடி விளக்கம் கேட்கலானார்.

அதில் சந்திரநாத செட்டியாரின் உதவியுடன் திண்டிவனம் வீடூர் கிராமத்தில் அப்பசாமி நயினார் என்பவரை அணுகி பல விளக்கங்களைப் பெற்றுள்ளார். இவர், குடந்தை அரசுக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய, இந்திய அளவில் அறியப்பட்ட புகழ்பூத்த சமண அறிஞர் அ.சக்கரவர்த்தி நயினாரின் தந்தை ஆவார்.அ.சக்கரவர்த்தி நயினாரின் நீலகேசி பதிப்பு சமய - திவாகர வாமன முனிவரின் உரையுடன் 1936 இல் வெளியாயிற்று.இதில் சக்கரவர்த்தி நயினாரின் சமண சமயம் குறித்த முன்னுரை ஆங்கிலத்தில் ஏறத்தாழ 300 பக்கங்களுக்கும் மேலாக விரிந்து செல்கிறது, தமிழ்ச் சமண மரபை சைவ நூல்வழியே அறிந்து வரும் ஒரு தமிழ் மாணவன் இத்தகைய மாற்று மரபை அதன் சொந்த களத்தில் எதிர் நோக்குதல் ஒரு புதிய புரிதலை வழங்கக் கூடியதாகும்.

இத்தகைய சமண நண்பர்களின் வழிகாட்டுதலை உ.வே.சா வுக்கு குடந்தை அரசுக் கல்லூரி சூழல் வழங்கியது.

சீவகசிந்தாமணியை முன்னிட்டு உ.வே.சாவும் சி.வை.தாவும்

குடந்தையில் உ.வே.சா தங்கியிருந்தபோதே சி.வை.தாமோதரம் பிள்ளை அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்று 1887இல் புதுக்கோட்டை சமஸ்த்தான நீதிபதிகளில் ஒருவராக இருந்து, பின்னர் 1885 இல், குடந்தை கருப்பூரில் வாழத் தொடங்கினார். இங்குதான் சி.வை.தாவும் உ.வே.சாவும் கலந்து பழகினர். சீவகசிந்தாமணி பதிப்பு குறித்த மனஸ்த்தாபமும் சிறு பிரிவும் இருவருக்கும் இவ்விடத்தே உண்டானதை உ.வே.சா. வின் 'என் சரித்திரம்' பகிர்ந்து கொள்ளும் செய்தி. சி.வை .தா. தம்மிடமிருந்து வஞ்சகமாக, சிந்தாமணி ஏடுகளை வாங்கிச் சென்றதாக உ.வே.சா குறிப்பிடுகிறார். ஆனால் இந்நிகழ்வு 'என் சரித்திரத்தில்' மட்டும்தான், அதாவது சி,வை.தா வுக்கு எதிரான பதிவாக இடம்பெறுகிறது. மற்றைய, அவரின் உரைநடை நூல்கள் மற்றும் முன்னுரைகள் ஆகியவற்றில் சி.வை.தா வுக்கு எதிரான பதிவைக் காண்பது அரிது. இதனால் என் சரித்திரத்தில் சில பகுதிகள் உ.வே.சா வின் ஆத்ம சீடரான கி.வ.ஜா எழுதியிருக்கலாமோ என்ற ஐயத்தை கைலாசபதி, சிவத்தம்பி , ராஜ்கௌதமன் ஆகியோர்

எழுப்புகின்றனர். வையாபுரிப்பிள்ளையும் இதனை முன்பு குறிப்பிட்டுள்ளார்.இந்த ஐயத்தை என் சரித்திரத்தின் பிற்பகுதியிலுள்ள நடை வேறுபாடுகள் வலுப்படுத்துகின்றன. எனினும் இதனை முற்றான முடிவாக எடுத்துக் கொள்வதற்கில்லை.பல பெரும் ஆளுமைகள் மீது இவ்வாறான சாடல்கள் ஐயங்கள் உண்டு.

சீவகசிந்தாமணி - விமர்சனம்

உ.வே.சா வின் சீவக சிந்தாமணிப் பதிப்பு நடந்தேறியவுடன் அதிலுள்ள பிழைகளைக் கண்டறிந்த வித்வான்களில் வையாபுரிப் பிள்ளை முதன்மையானவர்.. இவரின் சிந்தாமணிப் பதிப்பு, - சைவ சமாஜப் பதிப்பாக- 1941- இல் வெளியானது.அதில் உ.வே.சா வின் பதிப்பில் காணப்பட்ட பிழைகளைத் தொகுத்து அதன் முன்னுரையில் விரிவாகப் பேசியுள்ளார். குறிப்பாக வையாபுரிப்பிள்ளையின் விமர்சனம் இவ்வாறாக அமைகிறது.

எவ்வளவோ நுணுகி ஆராய்ந்து,எவ்வளவோ விசாரித்துணர்ந்து, எத்தனையோ பிரதிகளை ஒப்பு நோக்கி, எவ்வளவோ காலம் முயன்று நன்கு உழைத்து சீவக சிந்தாமணியை ஐயர் பதிப்பித்திருந்தனர். என்றாலும் அதில் பல பிழைகள் உள்ளன என்று யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் உள்ள அறிஞர்கள் ஆராய்ந்து சிறு கண்டன நூல்கள் வெளியிட்டனர். (ச.வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர்மணிகள், ப.244)

உ.வே.சா வின் சிந்தாமணிப் பதிப்புக்கு எதிராக வெளியான மற்றொரு கண்டன நூல் இலங்கையில் இருந்து வந்தது.பொன்னம்பல தேசிகர் என்னும் தமிழ்ப் புலவர் வெளியிட்ட ‘ஸீமத். வே. சாமிநாதைய் யரவர்கள் பதிப்பித்த சீவகசிந்தாமணி உரைப் பிழைகள்’ என்பதே அந்நூலாகும்.

இவ்வாறு காட்டப்பட்ட பிழைகள் சிலவற்றை இரண்டாம் பதிப்பில் உ.வே.சா அவர்கள் களைந்துள்ளார்கள் என்பது அவரது பதிப்பின் திறத்தை எடுத்துக்காட்டுகிறது.

தம்முடைய இரண்டாம் மூன்றாம் பதிப்புகளில் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட பிழைகளை உ.வே.சா அவர்கள் களைந்து இயன்றவரையில் தெளிவான பிழை நீங்கிய பதிப்பினை வெளிப்படுத்தியுள்ள பாங்கை பதிப்பியல் கோணத்தில் இருந்து மா.சு சம்பந்தம் பின்வருமாறு குறிக்கிறார்.

ஐயர் வெளியிட்ட சிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் பதிப்புகளில் காணப்பட்ட குறைகளை அவர்தம் அடுத்த பதிப்பிலே களைந்து தெளிவு படுத்தினார் (மா.சு. சம்பந்தம், அச்சும் பதிப்பும்.ப.252)


முடிவுரை

நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ள உ.வே.சா.வின் கன்னி முயற்சியான சீவக சிந்தாமணியின் பதிப்பு,அதற்கு வெளியான எதிர்வினைகள், அதனை உ.வே.சா களைந்து

பிழை நீங்கிய பதிப்பைக் கொண்டு வந்த முறைமையை இக்கட்டுரை ஒருவாறு தொட்டுக்காட்டியுள்ளது.

<u>குறிப்புதவிய நூல்கள்</u>

1. உ.வே.சா அவர்களின் உரைநடை நூல்கள் (4 தொகுதிகள்) உ.வே.சா நூலகம்.
2. மா.சு. சம்பந்தன், அச்சும் பதிப்பும், மணிவாசகர் பதிப்பகம்
3. ச.வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள்
4. உ.வே.சா என்சரித்திரம், உ.வே.சா நூலகம்



5. பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா.

கவிமாமணி திருவைபாபு,
நிறுவனத்தலைவர்,
பாரதி, பாரதிதாசனகவிதை அமைப்பு, சென்னை– 600 061.

முன்னுரை

‘தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா’ என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் சொல்லியதை நாமும் சொல்லி பெருமையடைகிறோம். தமிழனின் பெருமை காதல், வீரம், பண்பாடு என்றளவில் இருந்தாலும் தமிழன் தலைநிமிர்ந்து நிற்பதற்கு உயிராக விளங்கக்கூடிய செம்மொழியான தமிழ்மொழியே, தொல்காப்பியம் தொடங்கி, சங்க இலக்கியம் வரை தமிழனின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகிறது. சங்க இலக்கியம் இல்லையெனில் தமிழனின் அடையாளம் என்றோ சிதைந்து போயிருக்கும். தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமான சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, மணிமேகலை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, சீவகசிந்தாமணி வேறுபல பிரபந்தங்கள் ஆகியவற்றைப் பதிப்பித்து தமிழ்நாட்டுக்கு, உ.வே.சா. வழங்கியதைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். இவர் ஆற்றிய தமிழ்த்தொண்டு, தமிழுக்குத் தலையாயத் தொண்டு எனலாம்.

தொன்மையான இலக்கிய நூல்கள் கடல்கோள்களாலும், பல ஏடுகளை ஆற்றில்போடும் தவறான மூடப் பழக்கங்களாலும், மேலும் ஏட்டுச்சுவடிகள் பழையதாகிவிட்டால் புலவர்கள் அதைப் பிரதிப் பண்ணி வைத்துக்கொண்டு மூலஏட்டை ஆற்றில் போடுவதும் பல போர்களில் வெற்றி பெற்ற மன்னன் அந்நாட்டை சூறையாடும் போதும் பல ஏடுகள் அழிக்கப்பட்டன. எஞ்சியிருக்கின்ற ஏடுகள் கறையான்கள் தின்றும், மீதமிருக்கின்ற ஏடுகள் எங்கெங்கோ மூலைமுடுக்குகளிலும் யாரும் அறியாவண்ணம் கிடந்தன. இவற்றில் பழந்தமிழான சங்க இலக்கியமும் அடங்கும். இதுபோன்று கிடக்கின்ற சங்கநூல்களைத் தேடுவதற்கு யாரும் முற்படவில்லை. அந்தக் காலக்கட்டத்தில் தமிழ்த்தாத்தா மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சா. அவர்கள் ஏடுகளைத் தேடித் தேடி ஊர் ஊராக அலைந்து திரிந்தார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தாரின் பரிந்துரையால் புலவர்கள் வீடுகளிலும் ஏடு தேடும் முயற்சியில் முனைந்து பல ஏடுகளைச் சேகரித்து வெற்றியும் கண்டார். இன்றைக்கு நாம் சங்க இலக்கியங்களைப் படிக்கிறோம் என்றால் அது தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏடுகளைத் தேடித் தேடிப் பதிப்பித்த நூல்கள்

எந்தத்தமிழ் ஏடாக இருந்தாலும் உ.வே.சா. அவர்கள் அதை பொறுமையாக ஆராய்ந்து நூல்களைப் பதிப்பித்தார்கள். பதிப்பித்த நூல்களில் பார்த்தாலே உ.வே.சா.வின் பன்முகப் பார்வை நமக்குப் புரியும். எழுதியுள்ள கட்டுரைகள் காலத்தால் அழியாதவை. ஐம்பதுக்கும் மேலான நூல்களைச் சுவடியிலிருந்து பதிப்பித்திருக்கிறார். இது எவ்வளவு கடினம். குழந்தைகள் இனிப்பு மிட்டாய் விரும்பி சாப்பிடுவதுபோல் உ.வே.சா. அவர்கள் ஏடுகளைத் தேடி அலைந்தார்.

தமிழின் சிறப்பையும் வரலாற்று உண்மைகளையும் வெளிக்கொணர அவர் தம் வாழ்நாள் முழுதையும் செலவிட்ட தமிழ்த்துறவி என்றால் மிகையாகாது. தமிழ் வரலாற்றை எழுத உ.வே.சாவின் தமிழ்த்தொண்டு நமக்குப் பயன்பட்டது. அவர்கள் பதிப்பித்த நூல்கள், அழகர் கிள்ளைவிடுதூது, ஆற்றுப்புராணம், உதயணகுமாரகாவியம், உதயணன் சரித்திரச் சருக்கம், ஐங்குறுநூறு, கச்சிஆனந்தருத்திரேசர், வண்டுவிடுதூது, கலைசைக்கோவை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, தக்கையாப்பரணி, தமிழ்விடுதூது, பத்துப்பாட்டு மூலம், பதிற்றுப்பத்து, பரிபாடல், பழமலைக்கோவை, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெருங்கதை, மணிமேகலை மான்விடுதூது, திருக்காளத்திப் புராணம், திருமலையாண்டவர் குறவஞ்சி போன்ற பல நூல்களைப் பதிப்பித்துத் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களைப் பாராட்டி ஜி.யு.போப் அவர்கள் கடிதம் எழுதினார். ராயல் ஏரியாடிக் ஜர்னலில் மேலும் கூறுகையில் இனித் தமிழ் நூல்களைப் பதிப்பிக்க விரும்புகிறவர்கள் எல்லோரும் அவரது பதிப்பு முறையைப் பின்பற்ற வேண்டும். தமிழ்மொழியானது எந்த மொழிக்கும் தாழ்ந்ததல்ல என்பது உ.வே.சா.வின் பதிப்புகளால் நிருபிக்கப்படுகிறது.

உ.வே.சா. சொல்லும் நூல்களின் நுட்பம்

ஜெய்சிங் என்னும் போலிஸ் அதிகாரி நூல்களின் மேல் நாட்டம் உடையவர். இலக்கியங்களில் சில நூல்களை எல்லாம் கொளுத்திவிட வேண்டும். ஆபாசமான பெண் வருணனைகள் உள்ளன. அதுவும் காவடிச்சிந்து, திருப்புகழ் ஆகியவற்றில் பெண்களின் வருணனைகள் ஆபாசமாக இருக்கிறது என்று கோபப்பட்டு அப்படிப்பட்ட நூல்களை வெறுக்கலானார். இதைக் கேள்விப்பட்ட தமிழ்த்தாத்தா உ.வே.சா. ஜெய்சிங்கைச் சந்தித்து இலக்கிய ரசனையை விளக்கியுள்ளார். காவடிச்சிந்து, திருப்புகழ் ஆகியவற்றில் பெண்களின் வருணனைகள் இருப்பது உண்மைதான். அவற்றையெல்லாம் படித்து நிறுத்திவிடக்கூடாது. இப்படிப்பட்ட வருணனைகள் இலக்கியத்தில் சிருங்கார ரசம் என்று சொல்லுவார்கள். அதாவது, ஒன்பது ரசங்களில் சிருங்கார ரசம் ஒன்று. அதைப் பற்றிய நூல்களை வெளியிட்டிருக்கிறேன். அதனால் தமிழ்நாடு எனக்குக் கொஞ்சம் மதிப்பு வைத்திருக்கிறது. அந்த நூல்களிலும்கூட பெண்களின் வருணனை இருக்கிறது. ஆனால் படிக்கின்றபோது ஆபாச உணர்ச்சி தோன்றாது. இலக்கியச்சுவைதான் தெரியும். இப்படிப்பட்ட நூல்களைப் பொசுக்குவது என்று நினைப்பது தவறு. அப்படியானால் சங்க நூல்களை எல்லாம் கடலில்போட வேண்டியதுதான்.

கோவில் சிற்பங்களில் பெண்மையைக் காட்டுகின்ற அங்கங்கள் பெரியனவாக இருந்தாலும் அவற்றைக் கண்டு பக்தர்கள் விகார உணர்ச்சி கொள்வதில்லை. படுத்திருக்கும் தாயின் மார்பில் விளையாடுகிற குழந்தைக்குத் தவறான உணர்ச்சி உண்டாவதில்லை. இது இன்று நேற்று வந்தது அன்று. பெண் வருணனை இருப்பதாகத் தோன்றினால் தமிழ் நூல்கள் இருக்காது என்று அந்த போலீஸ் அதிகாரிக்கு நூல்களைப் பற்றிய பன்முகத் தன்மையை எடுத்துக்காட்டினார்.

உ.வே.சாவின் கருத்து இந்தியைக் கட்டாயமாக்கக் கூடாது

உ.வே.சாவின் தமிழ்த்தொண்டு உலகமே அறியும். தமிழ்நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க முயற்சி எடுத்த நேரம். மேலும் இந்தியைக் கட்டாயப்பாடமாக்க எடுத்த முயற்சிக்கு

எதிர்ப்பு அதிகமாக இருந்தது. இருந்தாலும் 1938ல் கல்வி மந்திரியாக இருந்த சுப்பராயன் இந்தியைப் பொறுத்தளவில் ஆசிரியப் பெருமானுடைய (உ.வே.சா.) கருத்து என்னவாக இருக்கும் என்று தெரிந்துகொள்வதற்காக உ.வே.சா.விடம் கேட்டபோது,"இந்தியைப் படிப்பதில் தவறு இல்லை, ஆனால் அதைக் கட்டாயப்பாடமாக்கக் கூடாது" என்று கருத்தைத் தெரிவித்தார். பன்முகச் சிந்தனையில் உ.வே.சா. சிறந்து விளங்கினாலும், தாய்மொழியின் சிறப்பைத் தன் இறுதிக்காலம் வரையிலும் பதிப்பித்துக்கொண்டே இருந்தார்.

தமிழுக்குச் சாதி, மத பேதமில்லை

தமிழில் பல காப்பியங்கள் உண்டு. அதிலும், பௌத்த, சமண காப்பியங்கள் மிகப்பெரும் சமுதாயப் புரட்சியை உருவாக்கி வெற்றி கண்டன. அதுவும் சீவகசிந்தாமணி தமிழில் உள்ள சிறந்த காப்பியங்களில் ஒன்று என்றால் மிகையாகாது. சொல்லப்போனால் சமணர்கள் அந்நூலைப் பாராயண நூலாகப் போற்றி வருகின்றனர். திருத்தக்கத்தேவரின் மொழிநடையும், உவமைகளும் தமிழுக்கு மணிமகுடமாகத் திகழ்கின்றன.

அந்நூலைத் தான் உ.வே.சா. அவர்கள் முதன்முதலில் ஆராய்ந்து வெளியிட்டார்கள். அதுவும் பழந்தமிழ் நூல்களை அறியாத காலத்தில் சீவகசிந்தாமணியை முதல் பதிப்பில் கொண்டு வந்தார்கள். மேலும் அவர் கூறுகையில் "எனக்குத் தமிழின்பம் உண்டாவதற்குக் காரணமே சமண நூலான சீவகசிந்தாமணியே" என்று குறிப்பிடுகிறார்.

எந்த ஒரு ஏடும் உ.வே.சா.வுக்கு எளிதில் கிடைத்துவிடவில்லை. கால்கள் சோர்ந்து விழுமளவிற்கு நடைநடையாய் நடந்து சேகரித்தார்கள். சீவகசிந்தாமணி பதிப்பில் உ.வே.சா.வுக்கு கிடைத்த வாய்ப்புகள், அதைச் சரியாகப் பயன்படுத்திய விதமே சீவகசிந்தாமணி எனும் நூல் தமிழுக்குக் கிடைத்தது. உ.வே.சா. கும்பகோணம் கல்லூரில் பணிபுரிந்தபோது ஏட்டுப் பிரதியைக் கொடுத்துப் படிக்கச் சொன்னவர் சேலம் இராமசாமி முதலியார். உ.வே.சா. அவர்கள் படித்துப் பாடம் நடத்தி வந்jhYk, அதிலுள்ள ஜைன மதக் கோட்பாடுகளை அறிந்துகொள்ள மிகவும் கஷ்ட்டப்பட்டார். இவர் கஷ்ட்டபட்டதை அறிந்த இராமலிங்க பண்டாரமென்பவர் தமக்குத் தெரிந்த ஜைன நண்பரான சந்திரநாத செட்டியாரை அறிமுகம் செய்தார்.

உ.வே.சா.சந்திரநாத செட்டியார் அழைப்பை ஏற்று அவர் வீட்டிற்குச் சென்று திண்ணையில் அமர்ந்தார்.தன்னுடைய ஜைனமத சந்தேகங்களுக்குச் செட்டியார் விடை தருவார் என்று ஆவலோடு காத்திருந்தார். ஆனால் செட்டியாரோ எந்தவித குறிப்பும், புத்தகமும் இல்லாமல் வெறுங்கையோடு வருவதைப் பார்த்த உ.வே.சா.வுக்கு ஒரே திகைப்பு. செட்டியார் உ.வே.சாவைப் பார்த்து தங்களுக்குள்ள சந்தேகங்களைச் சொல்லுங்கள் என்றவுடன் உ.வே.சா. சந்தேகங்களை ஒன்றுவிடாமல் கேட்க, அதற்குச் செட்டியார் ஜன்னல் வழியாக யாரோ ஒருவரிடம் அப்படியே சொல்ல, அதற்கு சரியான விடையை ஒரு பெண்குரல் சொல்லுவதுபோல் இருந்தது. உ.வே.சா. பதில் சொல்லுபவர்கள் பெண் குரல்போல் உள்ளது என்றவுடன், அது என் மனைவி என்று

செட்டியார் சொல்ல, பிறகு அந்தப் பெண், உ.வே.சா.வின். கேள்வி ஞானத்தை கருதி சிறந்த பட்டமான 'பவ்யஜீவன்' என்ற பட்டத்துடன் அழைத்தார் அந்தப் பெண்மணி.(இதெல்லாம் ஜன்னல் வழியாகக் கேட்பதும், விடை தருவதுமாக நடந்த நிகழ்வு.அப்பெண்மணி உ.வே.சா.வைப் பார்க்கவில்லை என்பது முக்கியமானச் செய்தி)

மற்றவர்களாக இருந்தால் வீடு தேடி வந்தவர்களை மதிக்கவில்லை என்று சென்றிருப்பார்கள். ஆனால் உ.வே.சா. அவர்கள் மற்ற மதங்களை மதித்து, தான்வந்தது தமிழ்த் தொண்டிற்காக என்பதை உணர்ந்து நடந்ததால் தமிழுக்கு அரும்பெரும் காப்பியமான சீவகசிந்தாமணி கிடைத்தது.

பத்துப்பாட்டில் உ.வே.சா. பட்ட பாடு

தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் பத்துப்பாட்டைப் பதிப்பிக்க தொடங்குமுன், மூல நூல் கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டார். பல இடங்களுக்கும் சென்று அலைந்து தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. ஆனால் பதவுரை அடங்கிய சில பிரதிகளே கிடைத்தன. உரையிலிருந்து சில மூலத்தையே வெளியிட்டார். உரையில் நச்சினார்க்கினியர் கொடுத்துள்ள மூலப்பகுதிகளை இணைத்து பொருட்தொடர்பு, மோனை, எதுகை போன்றவற்றை ஆராய்ந்து ஒருவகையாக அமைத்துக் கொண்டாலும் அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டன.

தொடர் ஆராய்ச்சியில் எட்டாவது பாட்டாக வருவது குறிஞ்சிப்பாட்டென்பது. குறிஞ்சிக்கு கபிலர் என்பர். சங்கப்புலவர்களில் தலைசிறந்தவராகிய கபிலரால் ஆரிய அரசனாகிய பிரகதத்தனுக்கு தமிழின் நயத்தைத் தெரிவிக்கும் பொருட்டுப் பாடப்பெற்றது.

உ.வே.சா. அவர்கள் ஒவ்வொருவரியாய் ஆராய்ந்து வருகின்றபோது அதிலே சில வரிகள் விட்டுப் போயிருந்தன. அதைக் கண்ணுற்ற உ.வே.சா. அழகாகத் தொடுத்த அம்மலர் வரிசையிலே சில மலர்கள் காணப்படவில்லை. அதனால் அவ்வரிசையின் அழகு சிதைவுற்றிருந்தது. விடுபட்டிருந்த மலர்களை வைத்தால்தான் வரிகள் நிறைவடையும், குறிஞ்சிப்பாட்டும் நிறைவடையும். செங்காந்தட்பூ முதல் செம்பூ வரையிற் பல மலர்கள் சொல்லப்படுகின்றன. செங்கோடு வரி என்னும் பூவுக்கும் கூவிளம் பூவுக்கும் இடையிலே சிதை காணப்பட்டது. ஏட்டுச் சுவடியில் அடி வரையறையோ அடிகளின் எண்ணோ இராது. எத்தனை அடிகள் விடுபட்டனவோ அதில் எத்தனை மலர்கள் உதிர்ந்துவிட்டனவோ அவற்றை எங்கே எடுத்து கோர்த்து நிரப்புவோம் என்ற கவலையோடு இருந்த உ.வே.சா., சைவம் வளர்க்கும் தருமபுர ஆதீன மடத்தில் அதுகாறும் ஏடுகளைத் தேடாதது அவர் ஞாபகத்திற்கு வந்தது. எப்படியோ மடத்திலிருந்து சில ஏடுகளை வாங்கி கட்டிக்கொண்டு உ.வே.சா. அவர்கள் சென்றார்கள்.

ஒவ்வொரு ஏடாக அவிழ்த்துப் பார்த்து, தான் எதற்காக ஏடுகளைத் தேடினோமோ அதுவும் குறிஞ்சிப்பாட்டில் விடுபட்ட மலர்கள் வரிசை கிடைத்ததும் உ.வே.சா. அவர்கள் அடைந்த மகிழச்சிக்கு அளவே இல்லை. தான் கொண்டு வந்த ஐம்பது அறுபது ஒற்றையேடுகள், உழைத்த உழைப்பும் வீண் போகவில்லை என்பதில் மகிழ்ச்சியுற்றார்.

ஒரு தடவைக்குப் பல தடவை நன்கு ஆராய்ந்து குறிஞ்சிப்பாட்டில் விடுபட்ட மலர்கள் என்பதைக் கண்டு தெளிவுற்றார். பின் பத்துப்பாட்டைப் பதிப்புச் செய்தார். உ.வே.சா. பட்டபாட்டிற்கு பலன் கிடைத்துவிட்டது. பத்துப்பாட்டு ஏடுகளைத் தவிர மற்ற ஏடுகளைத் தருமபுர மடத்திற்கு அனுப்பி வைத்தார் என்பதை நல்லுரைக்கோவையில் பதிவு செய்துள்ளார்.

உ.வே.சா.வின் பெருந்தன்மை

உ.வே.சா. அவர்கள் ஊர்ஊராகச் சென்று அலைந்து திரிந்து பல ஏடுகளைச் சேகரிப்பது மட்டுமல்ல, தன்னைப் போல் யார் தமிழுக்குத் தொண்டு செய்கிறார்களோ, அவர்களுக்கும் தான் சேகரித்த ஏடுகளை அனுப்பி உதவி செய்வது அவரின் இயல்பாகவே இருந்தது. தமிழ் ஆராய்ச்சி செய்த வை.தாமோதரம்பிள்ளை அவர்களுக்குப் பல ஏடுகளை உ.வே.சா. அவர்கள் அனுப்பியிருந்தார்கள். பல ஏடுகளைச் சேகரிப்பதில் ஊர் ஊராகச் சென்று தங்குவார் உ.வே.சா. அப்படி தங்கியதில் என் சொந்த ஊரான ஸ்ரீவைகுண்டத்திலும் தங்கியிருக்கிறார் என்பதை (ஸ்ரீவைகுண்டம் பள்ளிக்கூட பரிசோதகரான உ.வே.சா.வின் நெருங்கிய நண்பர் சிவராமையர்) உ.வே.சா. நல்லுரைக் கோவையில் பதிவு செய்துள்ளார்.

தமிழ்த்தாத்தாவைப் பாராட்டிய தாகூர்

உ.வே.சா. அவர்கள் 1919ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதியன்று மாநிலக் கல்லூரியிலிருந்து ஓய்வுப் பெற்றார். மறுநாளே ஏப்ரல் 1ஆம் தேதியன்று மகாகவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களைச் சந்திக்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றைய காலகட்டத்தில் உலகப் புகழ் பெற்றவராக இருந்தார் தாகூர். மயிலாப்பூர் லஸ்ஸில் இருந்த டி.எஸ்.இராமராசி ஐயர் இல்லத்தில் தங்கியிருந்த தாகூரைச் சந்தித்தார். அங்குள்ளவர்கள் உ.வே.சா.வை அறிமுகப்படுத்த, தாகூர் உ.வே.சா.வின் பணிகளைப் பாராட்டி எப்படி இந்நூல்களை எல்லாம் பதிப்பித்தீர்கள் என்று கேட்டு வியந்துள்ளார். தாகூர் உ.வே.சா.விடம் இன்று மாலை 3 மணியளவில் தங்கள் இல்லம் வருகிறேன் என்று சொல்லி சரியாக உ.வே.சா.வின் இல்லத்திற்குச் சென்று உ.வே.சா. பதிப்பித்த நூல்களை எல்லாம் பார்வையிட்டு பாராட்டியிருக்கிறார்கள்.

உ.வே.சா. தாகூரைப் பார்த்து,"தாங்கள் புதிய கவிதைகளை இயற்றி மக்களை மகிழ்விக்கிறீர்கள். நான் பழைய புலவர்களின் கவிதைகளுக்கு உயிர்கொடுக்கிறேன். இறைவன் திருவருள் எனக்குத் துணையாக இருக்கிறது" என்றார். அதற்கு தாகூர் இந்நாட்டில் கவிஞர் பரம்பரை என்றும் போகாது, தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் என்றார். உ.வே.சா.வின் பன்முகத் திறனைத் தாகூர் மட்டுமல்ல பல அறிஞர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

முடிவுரை

தமிழ் இலக்கியத்தில் உரைநடைக்கும், ஆராய்ச்சிக்கும் மணிமகுடமாகத் திகழ்ந்தவர். கவிதையிலும் குறிப்பாக வெண்பா எழுதுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழ்விடு தூதில் ஆராயும்போது அதிலுள்ள கண்ணி இவருக்கு மிகவும் பிடித்துவிட்டதால் தமிழ்விடு தூது ஆராய்வதில் மிகவும் ஈடுபாடு வந்தது.

" இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தமென்றாலும் வேண்டேன்"

என்ற கண்ணியில் அவர் உள்ளம் சிக்கிக் கொண்டது. அவ்வரியை அவர் சொல்லிக்கொண்டே இருப்பார். இந்த வரிகளோடு இரண்டு அடிகள் சேர்த்து தன் கருத்தை ஒரு வெண்பாவாக வெளியிட்டார்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்"

தமிழ்த்தாய் தவமிருந்து பெற்றெடுத்த தமிழ்மகன் உ.வே.சா. என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதனால்தான் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை உ.வே.சா.வைக் குறிப்பிடும்போது

"அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந் தலைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடித் தேடிச்
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
செல்லரிய துன்பங்கள் பலவும் தாங்கிச்
சோர்வறியா துழைத்தஒரு சாமிநாதன்
இல்லையெனில் அவன் பதிந்த தமிழ்நூலெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்திடாதே "

என்று சிறப்பாகப் பாராட்டினார்.

வாழ்நாள் முழுவதும் தமிழுக்காக வாழ்வதும்,வாழ்ந்த பின்பு தமிழே பாராட்டிக்கொண்டிருப்பதும் தமிழ்கூறும் நல்லுலகம் 166வது பிறந்த நாளை தமிழகம் நினைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு, தமிழ்மக்கள் உ.வே.சா. வழியில் பயணத்தைத் தொடர, கல்லூரி எடுத்த முயற்சி (டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்) போற்றத்தக்கது.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

6. தன்னிகரற்ற தமிழ்த்தாத்தா உ.வே.சா.

வ. வயோலா, எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,
உதவிப்பேராசிரியர் – கணிதத்துறை,
டாக்டர். எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

உ.வே.சுவாமிநாதையர் அவர்களின் இயற்பெயர் வேங்கடராமன். ஊர் உத்தமதானபுரம் (1855-1942). ஆசிரியர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை.இவருக்கு சங்க இலக்கியத்தை அறிமுகம் செய்தவர் சேலம் இராமசாமி முதலியார் ஆவார். கும்பகோணம், சென்னை, சிதம்பரம் கல்லூரிகளில் தமிழாசிரியராகவும், பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணிபுரிந்துள்ளார். பதிப்புத்துறையின் வேந்தராக இருந்தபோது வேணுவனலிங்க விலாசச் சிறப்பு நூலையும், சீவக சிந்தாமணி காப்பியத்தையும் முதன்முதலாகப் பதிப்பித்தவர். மொத்தம் 87நூல்களைப் பதிப்பித்துள்ளார். மேலும் உரைநடைகளையும், கவிதை நூல்களையும் எழுதியுள்ளார்.

தமிழ்ப் பண்டிதரும், ஐயா சாமிப்பிள்ளையும்

தஞ்சை மார்ஷல் காலேஜ் தமிழ்ப் பண்டிதரும், ஐயா சாமிப்பிள்ளை என்பவரும் இலக்கணம் இராமசாமி பிள்ளையும் தமிழ் மீது மிகுந்த பற்றுதல் கொண்டவர்கள். ஆதலால் எனக்கு (உ.வே.சா.) அவர்களின் மீது பற்றுகள் அதிகம் எனவே அவர்களின் அறிவுரையின்படி உத்தமதானபுரம் சென்றேன். என் குடும்ப சூழ்நிலையும் கண்டு உணர்ந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டன.

உ.வே.சா.வின் ஆசிரியப் பணியும், வகித்த பதவியும்

உத்தமதானபுரம் சென்று தன் தாய் தந்தையரோடு இருந்து வரலானார். அப்போது குடும்பம் மிக்க சிரமத்தோடு இருப்பதை கண்டு தனக்கு உத்யோகம் மற்றும் வேறு வகையில் வருமானத்திற்காக தியாகராச செட்டியார் அவர்களின் விடாமுயற்சியால் கும்பகோணத்தில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்தார். 1903ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரிக்கு குடந்தையிலிருந்து மாற்றலாகி பணியில் அமர்ந்தார். உ.வே.சா. அவர்களின் நிறைந்த தமிழ்ப்புலமை, எதையும் சுவையாக எடுத்து விளக்கும் ஆற்றல், இசைப்பயிற்சி, அன்பு முதலியன இயல்புகளை இவர்கள் சிறப்பாகப் பெற்றிருந்தமையால் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளத்தை எளிதில் கவரும் வகையில் இருந்தார். சென்னை கல்லூரியிலிருந்து 1919ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் தம் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையும், புத்தகம் பதிப்பிக்கும் பணியையும் தொடர்ந்து கொண்டே இருந்தார். தன் தமிழ்ப்பணியில் இறுதி காலம் வரை ஓய்வு பெறவில்லை. உ.வே.சா. அவர்களுக்கு “திராவிட வித்தியா பூஷணம்” என்ற பட்டத்தையும், “தாக்ஷிணாத்திய கலாநிதி” என்ற பட்டத்தையும் பாரத் தர்ம மண்டலத்தார் மற்றும் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவரி போன்றோர் வழங்கினார்கள். மேலும்

சென்னை, மைசூர், ஆந்திரா, காசி முதலிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல வகையில் கலந்து தொண்டாற்றினார்கள். மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் தலைவராக இருந்தார். 1932ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தார் "டாக்டர்" பட்டம் அளித்தார்கள். இவ்வாறு பல பதவிகளில் இருந்தும் தமிழின் மீது உள்ள தீராக் காதலால் தொண்டுகள் பல புரிந்தும் பட்டங்கள் பல பெற்றாலும் என்றும் உ.வே.சா. அவர்கள் மனதளவில் இளைஞனாகவே தோன்றினார் என்பதில் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

உ.வே.சா. பதிப்பித்த நூல்கள்

1878ல் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு, 1887ம் ஆண்டு சீவக சிந்தாமணியும், 1888ல் கச்சி ஆனந்தருத்திரேசர், வண்டு விடுதூது, திருமயிலைத் திரபந்தாதி, 1892ல் சிலப்பதிகாரமும், திருப்பெருந்துறைப்புலவர், 1874ல் நீலி இரட்டை மணிமாலை, 1889ல் பத்துப்பாட்டு மூலமும், உரையும், 1894ல் புறநானூறு, 1895ல் புறப்பொருள் வெண்பா மாலை, 1898ல் மணிமேகலை, மணிமேகலை கதைச் சுருக்கம், 1903ல் ஐங்குறுநூறு, சீகாழிக்கோவை, திருவாவடுதுறைக்கோவை, வீரவனப் புராணம், 1904ல் திருப்பூவண நாதருலா, 1905ல் திருவாரூர் தியாகராச லீலை, திருவாரூருலா, 1906ல் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 1907ல் மண்ணிப் படிக்கரைப் புராணம், 1908ல் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், 1935ல் ஆற்றூர்ப் புராணம், உதயண குமார காவியம், கலைசைக் கோவை, திருஇலஞ்சி முருகன் உலா, 1933ல் சங்கரலிங்க உலா, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, பாசவதைப் பரணி, 1941ல், தக்கயாகப் பரணி, 1942ல் வித்துவான் தியாகராச செட்டியார் போன்ற பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவை இன்றளவும் தமிழில் பல்வேறு வகைகளில் உறுதுணையாக விளங்குகிறது. மொத்தம் 87 நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

பிற நூல்கள் பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, சிலப்பதிகாரம், பெருங்கதை, புறப்பொருள் வெண்பா மாலை, நன்னூல், சங்கர நமச்சிவாயர் உரை, திருக்காளத்துப் புராணம், திரு ஆலவாய் உடையார், திருவிளையாடற் புராணம், குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு எனப் பிற நூல்களும் பதிப்பித்துள்ளார்.

உ.வே.சா. உரைநடை மற்றும் கவிதை நூல்கள்

நான் கண்டதும்-கேட்டதும், புதியதும்-பழையதும், நினைவு மஞ்சரி, மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம், உதயணன் கதைச் சுருக்கம், புத்த சரிதம், திருக்குறளும் என உரைநடை மற்றும் கவிதை நூல்களையும் தமிழில் படைத்து எழுதியும் தமிழின் அருமையை சான்றோர்க்கு உணர்த்தினார்.

பழந்தமிழ் நூலும், ஓலைச்சுவடியும்

பழந்தமிழ் நூல்களை ஓலைச்சுவடியில் இருந்து எடுத்து அப்பிரதிகளை அச்சிட்டு அவற்றிற்கு ஒரு முழு உருவத்தையும் ஒரு சேர அமைப்பதைப் போல் அவற்றை முழு நூலாக எங்கும் எவ்விடங்களிலும் தமிழைப் பரப்பும் எண்ணத்தோடும் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் பதிப்பித்தார். நூலாகவும் வெளியிட்டார். இவர் பழைய ஓலைச் சுவடிகளை “ஈரோடு கொடு முடி” என்னும் இடத்தில் கண்டு எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓலைச்சுவடி பாதுகாக்கப்படும் இடங்கள்

கீழ்த்திசைச்சுவடி நூலகம், அரசு ஆவணக் காப்பகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என சென்னையிலும், சரசுவதி நூலகம் என தஞ்சையிலும் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழ்ப்பணி

உ.வே.சா. அவர்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள் ஜி.யு.போப், சூலியல் வின்சோன் போன்றவர்களும் மற்றும் நடுவணரசு உ.வே.சா. அவர்களின் தமிழ்ப்பணிகளைப் பாராட்டி அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு 2006 ஆகும். முதன் முறையாக உ.வே.சா. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை சென்னை தொலைக்காட்சி நிலையம் “தூர்தர்சனில்” வெளியிட்டது. 20ம் நூற்றாண்டில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர். ஓலைச்சுவடி என்பதில் புள்ளி வைத்த எழுத்துக்களும் எழுத முடியாது. மேலும் அவை வாழ்நாள்களும் குறைவாக இருக்கும் என எண்ணி தமிழுக்கு நூல்களை உருவாக்கினார். இவை இவரின் தமிழ்ப்பணிகளில் குறிப்பிடத்தக்கது. 1906ம் ஆண்டு இவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி “மகாமகோபாத்தியாய” என்ற பட்டம் வழங்கப்பட்டது.

தமிழ் முனிவர் என்றும் தமிழ்த்தாத்தா என்றும் சிறப்பாக அழைக்கப்பட்டார். தம் 25ம் வயதிலே தமிழ்ப்பணி புரிந்தவர். மாணவர்களுக்கு இவர் கற்பிக்கும் விதத்தைக் கண்டு அவர்கள் தமிழை மருந்தாக நினைக்காமல் ஒவ்வொருவரும் விருந்தாகவே எண்ணினார்கள். ஆனால் இந்நிலையை அடைய மக்களிடையே தமிழ் ஆர்வத்தை தூண்ட பல இன்னல்களுக்குப் பிறகே அப்பணியைச் செய்து முடித்தார்.

உ.வே.சா.வின் பெருமை

தன் வாழ்க்கை வரலாற்றை ஆனந்த விகடன் இதழியலில் “என் சரித்திரம்” என்ற பெயரில் வெளியிட்டார். 28 தலைப்புகள் உள்ளடக்கி எழுதினார். 1924ல் நிறுவப்பட்ட டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம் சென்னையில் உள்ளது. மலைக்கும், மகடுக்கும் இடையே உள்ள வித்தியாசம் தான் தமிழுக்கு உ.வே.சா. அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்தன. தமிழினை வளர்த்தவர் இவரே அதற்கு ஊக்குவித்தவர் முதல் ஆசான் இவரின் தாய், தந்தையரே ஆவர். தமிழை வளர்த்த கடவுள் உ. வே.சா ஒருவரே எனவும் கூறலாம். இவரது காலம் 1942ல் ஏப்ரல் 28ல் 87வது வயதில் நின்றது. அப்போது தமிழ் அன்னையே இனி மேல் நமக்கு பெருமை சேர்க்க யார் உள்ளார் என்று எண்ணி அக்கணமே பெருமூச்சு விட்டிருக்க வேண்டும்.

தமிழ் அன்னைக்கு அணி சேர்த்தவர்களின் எண்ணிக்கையில் உ.வே.சாவுக்கு தனி ஓர் இடம் உண்டு. தமிழ் செம்மொழி ஆவதற்கு அவரைப் போன்றவர்களைதான் நாம் மனதில் கொள்ள வேண்டும். நமது தமிழ்மொழி சிதைந்து போகாமல் இருக்க முக்கிய கூறுகளில் அவரின் சிந்தை தெளிவும் தன்னிகரற்ற தமிழின் ஆர்வமுமே மூலாதாரம் ஆகும்.

முடிவுரை

இவ்வாறு தமிழ்த்தாத்தா அவர்கள் தமிழுக்காகவே தன் வாழ்நாளையும் தம் சிந்தனைகளையும், எண்ணங்களையும் அர்ப்பணித்தார். வேறு மொழியினை கற்பிக்கும் வாய்ப்புகள் அமைந்தாலும் தன் தமிழ் மொழியை உலகம் முழுவதும் வருங்கால ஆன்றோர் சான்றோர்களும் போற்றப்பட வேண்டும் என்பதற்காகவும் பல திசைகளில் அலைந்தும் தேடியும் கேட்டும் நூல்களாக மாற்றியும் இன்றும் தமிழ்த்தாத்தா என்றாலே அது உ.வே.சா.தான் என்று ஒவ்வொரு இளைஞர்கள், மாணவர்கள் ஏன் பாமர மக்களிடையும், துளிர் விட்டு பிரகாசமாக எரிந்தும் மனதளவில் தெளிந்தும் காணப்படுபவர். இவரே “தன்னிகரற்ற தமிழ்த்தாத்தா” ஆவார்.



~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

7. ஏட்டுச்சுவடிகளை ஏற்றம் பெறச் செய்த உ.வே.சா.

டாக்டர் அ. இளவரசி,
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்டி., பி.ஏ (ஆங்கிலம்), யுஜிசி (நெட்),
முதுகலைத்தமிழாசிரியர்,
அறிஞர் அண்ணா அரசினர் மேல்நிலைப்பள்ளி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

முன்னுரை

ஏட்டுச்சுவடிகளாக இருந்த நூல்கள் பலவற்றை நமக்கு எட்டும்படி செய்ததற்கான காரணகர்த்தா மூலகர்த்தா தமிழ்த்தாத்தா உ.வே.சா உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன் என்பதன் சுருக்கமே உ.வே.சா ஆகும். இவர் இல்லையெனில் எட்டுத்தொகை இலக்கியங்கள் ஏட்டுத்தொகை இலக்கியங்களாகவே காணாமல் ஒழிந்திருக்கும். அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தன் தமிழ்யாத்திரை மூலம் தேடித்தொகுத்து அச்சிட்டுப் பதிப்பித்தவர். இவரது 'என் சரித்திம்' என்ற நூல் முழுக்க அவரது 'தன் சரித்திரத்தையே' கூறுகிறது என்றால் மிகையாது. புலமையும் வறுமையும் சேர்ந்தே இருப்பது இந்நாட்டின் சாபம் என்பது உ.வே.சா வின் கூற்று. தமிழ்த்தாய்க்கு உ.வே.சாவின் தொண்டுகள் குறித்து இங்கு காண்போம்.

வாழ்க்கையும் வரலாறும்

சாமிநாதன் பிப்ரவரி 19, 1855ல் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் உத்தமதானபுரத்தில் வேங்கடசுப்பையர் - சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். தொடக்கக் கல்வியையும், இசையையும், சொந்த ஊரிலேயே கற்றார். 17-ம் வயதில் நாகப்பட்டினம் மாவட்டம் திருவாடுதுறை சைவ ஆதினத்தில் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றுத் தமிழறிஞர் ஆனார். கும்பகோணம் கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியப் பணியாற்றினார்.

ஏட்டுச் சுவடிகளை எட்டும் சுவடிகளாக்கியவர்

உ.வே.சா உழைத்திராவிட்டால் தமிழுலகத்திற்குச் சிலப்பதிகாரம் பற்றித் தெரியாமலே போயிருக்கும். அகம் புறம் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு மறைந்திருக்கும். இவ்வாறு நூற்றுக்கணக்கான நூல்களை ஏடுகளாகக் கண்டெடுத்து மீட்டுருவாக்கம் செய்து பதிப்பித்தவர் உ.வே.சா சங்க இலக்கிய நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் அப்படியே பதிப்பிக்காமல் சிதைந்த அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும்படி செய்தார். முதன்முதலில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்றவற்றை தொகுத்து வழங்கினார். சிந்தாமணியைச் சீராக்கி வழங்கினார்.

தனியாத தமிழ்ப்பற்று

சிறுவயதில் ஆங்கிலம் இவ்வுலக வாழ்விற்கும், வடமொழி அவ்வுலக (ஆன்மிக) வாழ்விற்கும் பயன்படும் என யாராவது கூறினால் இவரோ

‘‘என் அன்னை மொழியானது இவ்வுலக, அவ்வுலக இருவாழ்வுக்கும் உதவும் என்பாராம்’’

திருமணத்திற்கு முன்னும் பின்னும் உ.வே.சாவின் சிந்தனை எல்லாம் ‘‘தமிழ்தான் எனக்குச் செல்வம் அதுதான் என் அறிவுப்பசிக்கு உணவு.. அன்றும் சரி இன்றும் சரி இந்த நிலைமை மாறவே இல்லை’’ என்னும் அவருடைய சொற்கள் தமிழ் மீது அவர் கொண்ட பற்றைக் குறிக்கும். இசையுடன் தமிழ்ப்பாடல்களைப் பாடி விளக்கினார்.

இயற்றிய நூல்கள்

உ.வே.சா பல செய்யுள்களையும் நூல்களையும் இயற்றியுள்ளார். தந்தையாரின் வறுமையைக் கண்டு ஒரு பெரிய மனிதரிடம் சென்று நெல் வேண்டுமென அவர் இயற்றிய செய்யுளே அவரது முதல் செய்யுளாகும்.கலைமகள்துதி, திருலோகமாலை, ஆனந்தவல்லியம்மை, பஞ்சரத்தினம் முதலியன மற்ற நூல்களாகும்.

உ.வே.சாவின் முதல் பதிப்பு

பாண்டி நாடு செவந்திபுரத்தில் வேணுவனலிங்கத்தம்பிரான் கட்டிய மடாலயத்திற்கு சுப்பிரமணிய தேசிக விலாசம் என்று பெயர்.இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்து 86 பாடல்கள் புலவர்கள் பலரால் இயற்றப்பட்டன. 8 பாடல்களை உ.வே.சா இயற்றினார். வேறு சில பாடல்களும் சேர்த்து திருநெல்வேலி முத்தமிழாகரம் என்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன் முதலாகப் பதிப்பித்தார்.

சிந்தாமணியும் சிந்தனைத் தூண்டலும்

சேலம் இராமசாமி என்பவர் கும்பகோணத்திற்கு முன்சீப்-ஆக மாற்றம் பெற்று வந்தார். அவரைச் சந்தித்த உ.வே.சா தான் மீனாட்சிசுந்தரப் பிள்ளையவர்களிடம் கற்ற நூல்களின் பெயர்களையெல்லாம் கூற ‘‘இதெல்லாம் படித்தென்ன பிரயோசனம் இதற்கெல்லாம் மூலமான சீவகசிந்தாமணி கற்றுள்ளீர்களா என்றார்’’. சிந்தாமணி சமணக் காப்பியமேயாகினும் பல சமணர்களுடன் கலந்துரையாடி நூலாய்வில் புரியாத பல செய்திகளைப் புரிந்துகொண்டு பின்னும் ஒரு சொல் தெரியாவிட்டாலும் விடமாட்டேன் என்று கூறி அழகாக பதிப்பித்தாராம் உ.வே.சா.

சமய சகிப்புத்தன்மை

சிந்தாமணி சமண காப்பியம் என்று சைவர்கள் குறை கூறிய போதும்

‘‘பொய்யே கட்டி நடத்திய
சிந்தாமணியானால் நமக்கு என்ன
நாம் வேண்டுவன சொற்சுவையும்

> ***பொருட்சுவையும் தமிழ் நயமுமே சுவை***
> ***நிரம்பிக்கிடக்கும் காவியமாக இருக்கும்***
> ***போது அதைப்படித்து இன்புறுவதில்***
> ***என்ன தடை”***

என தெளிவாக்கித் தமிழ்த்தொண்டின் நடுவே மதம் குறுக்கிடுவதைக் கண்டிக்கிறார்.சிந்தாமணி பதிப்பில் முதன் முதலில் முகவுரையும், நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு போன்றவற்றைச் சேர்த்து நூலிற்கு மதிப்பைக் கூட்டினார்.

தமிழ் யாத்திரை

அக்காலத்தில் பிரதிகளை அச்சில் பதிப்பிப்பதற்கு முன் ஊர் ஊராகத் தேடி கிடைக்கும் நகல்களையெல்லாம் பெற்று நன்கு படித்து ஒப்பு நோக்கி வேறுபாடு நீக்கி சிதைந்த பகுதிகளைச் சீர்படுத்தி சொல்லின் பொருள் விளங்கப் பதிப்பிக்கவேண்டும். இவர் பிரதிகளைத் தேடி தமிழகம் முழுவதும் அலைந்து திரிந்தார். மோட்டார் வாகனப் போக்குவரத்து வசதியில்லாத போதும் கூட நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்தார். தங்குவதற்கு இடமும் உண்பதற்கு உணவும் இல்லாதபோதும் ஊர்ஊராக கிராமம் கிராமமாக சென்றுதெரிந்தவர்கள் வீட்டில்தங்கி கிடைத்ததை உண்டு கருமமே கண்ணாக பண்டைய தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுப்பட்டார். உ.வே.சா இதனை,

> ***“பழந்தமிழ் இலக்கண***
> ***இலக்கியச் சுவடிகளைத்தேடி***
> ***நள்ளிருளோ, கொன்று பகலோ,***
> ***குறிக்கும் கடுமழையோ, அள்ளு***
> ***பிணியோ, அவதியோ- உள்ளம்***
> ***தடுக்கும் பகைகள் எது வரினும்***
> ***தள்ளி அடுக்கும் தமிழ்ச்சுவடி***
> ***தேடிக் கொடுக்கும் தமிழ்த்தாத்தா என்று***
> ***தரணி புகழ்”***

என்று ஒருதமிழ்ப்புலவர் இவரை வருணிக்கிறார்.இப்பணியில் ஏராளமான பொருட்செலவு,மன உளைச்சல், உடல் அசதி அன்றி கடின உழைப்பை நல்கினாலும் மெத்தஉற்சாகத்துடன் செய்து வந்தார். தேனைத்தேடிச் சேகரிக்கும் தேனீயாயத் தமிழ்த்தேனைத் தேடிச் சேர்த்தார்.

பத்துப்பாட்டு

சென்னையிலேயே தங்கி பத்துப்பாட்டை பதிப்பித்ததோடு அதற்கு முகவுரை, நூலின்மூலம், நச்சினார்க்கினியர் உரை, உரைசிறப்பு, பாயிரம், அரும்பத விளக்கம், பிழைத்திருத்தம், என்பனவற்றையும் சேர்த்திருந்தார்.இதன் தொடச்சியாக திருக்கச்சியப்ப முனிவர் இயற்றிய ஆனந்த ருத்ரேஸ்வரர் வண்டுவிடுதூது, மேலும் மாயூரம் ராமையர் இயற்றிய மயிலையந்தாதி முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.

புறநானூறு

கும்பகோணம் கல்லூரியில் சரித்திர ஆசிரியர் வைத்திருந்த பைபிளை ஆராய்ந்து ஒரே மாதிரியான கருத்துள்ள பகுதிகள் ஆங்காங்கே காட்டி பதிப்பித்திருந்ததைக் கண்டு புறநானூறையும் இதேபோல் பதிப்பிக்கவேண்டும் என்று விரும்பினார். 1884-ல் புறநானூறு நூல் பதிப்பிக்கப்பட்டது. எட்டுத்தொகை நூல்களில் இதுவே முதல் நூலாகும் 1898-ல் மணிமேகலை பதிப்பிக்கப்பட்டது.

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே

இராமநாதபுரம் மன்னராக இருந்த பாஸ்கர சேதுபதி உலக சமய மாநாட்டினை முடித்து திரும்பிய விவேகானந்தரைக் கப்பலில் இருந்து இறங்கியதும் அவர் பாதங்களைத் தன் சிரசில் வைக்கும்படி வேண்டியவர். அவர் சாமிநாதஐயரின் பணிகளுக்காக ஒரு கிராமத்தைப் பரிசளிக்க எண்ணினார்.அவரின் எண்ணத்திற்கு மறுப்பு தெரிவித்தார் உ.வே.சா. சமஸ்தானமே கடனில் மூழ்கியிருக்கும்போது எனக்கு உதவ வந்த எண்ணத்திற்கு நன்றி என்று கூறி உதவியை மறுத்தார் உ.வே.சா. இந்நிகழ்ச்சி கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்ற எண்ணத்தையே பிரதிப்பலிக்கிறது. அதனை மறுத்த உ.வே.சா.வின் எண்ணம் அதை விடச் சிறப்பானது என்றால் அது மிகையாது.

முடிவுரை

இவ்வாறு இரவுபகல், ஊன் உறக்கம் காணாது தேன் தேடிச் சேகரித்துக் கூட்டில் சேர்க்கும் தேனீ போல தமிழ் ஏடுகளைத் தேடிச் சேகரித்து நாம் நுகர நல் தேன்தமிழ்க் கூட்டைக்கட்டி நமக்களித்தார் உ.வே.சா. தமிழ்த்தாத்தா என்ற சொலவடை இவருக்கும் மிகப்பொருத்தமானதே என்றால் மிகையாகாது. தம் அச்சுப்பணியால் தமிழ் இலக்கியத்தில் தொன்மையையும் செழுமையையும் உலகறியச் செய்தவர்.இவர் 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப்பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்து ஏடுகளையும் தேடிச் சேகரித்து வழங்கிய தமிழ்த்தேனீ ஆவார். தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டுகளை மதித்து இவரது படைப்புகளையும், பதிப்புகளையும், தமிழ்ப்பணிகளையும் பள்ளிப் பாடத்திட்டத்திலும் இணைத்து மாணவர்களிடையே இவரது பெருமைகளை அறியச் செய்வதே அவருக்கு தமிழகம் செய்யும் தொண்டாகும்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

8. உ.வே.சா. வின் பல்துறைப்பாங்கு

டாக்டர் வீ.ந. இராஜவர்மன், எம்.இ., பிஎச்.டி.,
புலத்தலைவர்,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சிநிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவரும் தமிழ் இலக்கியங்களை மீட்டுக்கொடுத்தவரும் உ.வே.சா. இவர் அனைவராலும் தமிழ்த்தாத்தா என்று போற்றப்படுபவராவார். இவர் இல்லையென்றால் பல தமிழ் நூல்கள் அறியப்படாமல் அழிந்திருக்கும். இவர் பல ஊர்களுக்குச் சென்று காணாமல் போனதும் சிதிலமானதுமான ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் புத்தகங்களாக அச்சில் கொண்டுவந்தார். பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தலே அவரது வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். உ.வே.சா.அவர்கள் ஆற்றிய பதிப்புப்பணிகள் இக்கட்டுகரையின் வாயிலாக விளக்கப்படுகின்றன.

இளமைக்காலக்கல்வி

தஞ்சை மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் - சரசுவதி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இளமைக்காலக் கல்வியைச் சடகோப ஐயங்காரிடமும் செங்கணம் விருத்தாசலம் ரெட்டியாரிடமும் பாடம் படித்தார். தன்னுடைய வாழ்நாளில் இந்த ஆசிரியர்களிடம் கல்வி பயில்வதே பிறவிப்பயன் என்று நினைத்தார். இதுவே தமிழின் மீது பேரன்பை அதிகப்படுத்தவும் ஆழ்ந்தும் தெளிந்தும் தமிழைக் கற்றுக்கொள்ளவும் உதவியது. திருவாவடுதுறை ஆதீன வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களே சாமிநாதன் எனப் பெயர்சூட்டித் தன் மாணவனாகச் சேர்த்துக்கொண்டார். தன் ஆசிரியரிடமிருந்து பலவகையான தமிழ்நூல்களைக் கற்று அறிவில் சிறந்து விளங்கினார். அவர் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழுக்கும் அவர் மறைந்த காலத்தில் இருந்த தமிழுக்கும் வேற்றுமை உண்டு. பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலமாக டாக்டர் உ.வே.சா. அவர்கள் அமைந்தார். இவருடைய புலமையின் சாதனைகளையோ நூல் தேடி அலைந்த அலைச்சல்களையோ சுவடிகளை அச்சிடப்பட்ட துன்பங்களையோ அளவிடமுடியாது.

மனதில் பதிந்த துறை

உ.வே.சா. வாழ்ந்த காலத்தில் இருந்த புலவர்களும் சங்க நூல்களை அறிந்தார்களே-யன்றி அவை இன்னவை என்பது அவர்களுக்குத் தெரியாது. இன்று சங்ககாலத் தமிழர்களைப் பற்றியும் பல நூல்கள் வந்திருக்கின்றன. பல ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று சங்க காலத்தைக் குறிப்பிடுகிறோம். தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் மரபு என்று நமக்குரிய தனிச்சிறப்புகளைப் பேசுகிறோம். உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டே இத்தனை உயர்வுக்கும் மூலகாரணம் என்று தமிழறிஞர்கள் அறிவார்கள். சேலம் இராமசாமி முதலியாரிடம் பழக்கம் ஏற்பட்டதால் பதிப்புத்துறை மீது ஆர்வம் ஏற்பட்டது.

ஓலைச்சுவடிகளைக் கறையான் தின்றது போக எஞ்சியதைத் திருத்தமுறப் பதிப்பித்துத் தந்தார். தாம் கற்றதை எளிமையாகப் பொருள்தந்து கற்போருக்கு இனிமை சேர்ப்பது இவரது தனிச்சிறப்பு. உ.வே.சா. தமது பதிப்பு நூல்களில் நூல் சுருக்கம், பாடியவர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, மேற்கோள் ஆகியன தருவது இவரது உரை மரபாகும். இனிய எளிய உரைநடை எழுதுவதிலும் விடாமுயற்சியோடு பதிப்புப் பணியிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பத்துப்பாட்டு, பல சிற்றிலக்கியங்கள், புராணங்கள் ஆகியவற்றைப் பதிப்பித்துப் புகழின் உச்சிக்குச் சென்றவர். உ.வே.சா. அவர்களுக்கு முன்பும் பின்பும் அவரளவுக்கு ஓலைச்சுவடிகளைச் சேகரித்து ஒருவரும் பதிப்பிக்கவில்லை. அவர் தேர்ந்தெடுத்த நூலைப் பிறர் பதிப்பிக்கிறார்கள் எனத் தகவல் அறிந்தால் அந்நூலைத் தவிர்த்துவிடுவது அவர் வழக்கம்.

பதிப்பாசிரியர்க்கு இருக்கவேண்டிய பொறுமையும் பொறுப்பும் அவரிடம் இருந்தன. உ.வே.சா. பதிப்பு நூல்களில் தமது அனுபவ அறிவைப் பயன்படுத்தினார். பதிப்புகள் வரும்போது பல பகுதிகளை நீக்கியும் சேர்த்தும் விரிவுபடுத்தியும் திருத்தியும் வெளியிடப்பட்டன. உ.வே.சா. அவர்கள் முயற்சி எடுத்துத் தொகுத்து வைக்காமல் போய் இருந்தால் பல பழந்தமிழ் நூல்களை இழக்க நேரிட்டிருக்கும். ஏட்டில் இருப்பதை அப்படியே தராமல் தம் அறிவினாலும் திறமையாலும் ஆராய்ந்து பதிப்பித்தார்.

புலவர்கள் பலர் செய்யவேண்டிய பதிப்புப்பணியை உ.வே.சா. அவர்கள் ஒருவரே திறம்படச் செய்தார். பணியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகும் பதிப்பித்து வெளியிடும் பணியில் தம் வாழ்நாள்களைக் கழித்தார்.

சிந்தாமணியும் மணிமேகலையும்

பழந்தமிழ் இலக்கியங்களின் மேல் பார்வையைத் திருப்பச் செய்தவர் சேலம் இராமசாமி முதலியார். அவரது விருப்பத்திற்கிணங்க சீவகசிந்தாமணியைப் பதிப்பித்தார். சீவக சிந்தாமணியைப் பதிப்பதற்குமுன் சமணப் புலவர்களைச் சந்தித்துச் சமண மதத்தின் கொள்கைகளை அறிந்தார். உ.வே.சா. காலத்தில் சீவகசிந்தாமணி 1887, 1907, 1922 ஆகிய ஆண்டுகளில் முறையே இப்பதிப்புகள் வெளிவந்தன. பதிப்புக்குப்பதிப்பு, பிழையான பாடங்களைக் கண்டறிந்து திருத்தியுள்ளார். தகவல் பிழைகளைச் சரிசெய்துள்ளார். திருத்தக்கதேவர் சரித்திரச் சுருக்கம் என்னும் பகுதியில் மதுரைக்குச் சென்று சங்கப் புலவர்களைத் தேவர் கண்டார் என எழுதியதை ஜைன சங்கம் என்று மாற்றியுள்ளார்.

உ.வே.சா. பதிப்புகளில் இடம்பெறும் மிகச்சிறப்பான பகுதி அரும்பத அகராதி ஆகும். அரும்பதங்கள் அகரவரிசையில் தரப்பட்டுச் சில சொற்களுக்குப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. அரும்பத அகராதியில் பக்க எண்களை நீக்கிவிட்டு செய்யுள் எண்களைத் தந்துள்ளார். ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் தம் பதிப்பை உயர்த்தியுள்ளார்.

மணிமேகலைப் பதிப்பு

உ.வே.சா. மணிமேகலையைப் பதிப்பிற்கு முன் பௌத்த தத்துவங்களை அறிந்துகொண்டு பதிப்பில் இறங்கினார். மணிமேகலை நூலுக்கு உரை எழுதியவர்கள் யாருமில்லை. பேராசிரியர் ரங்காச்சாரியார் பேருதவியாலும் பலவகை அனுபவங்களுடன் உ.வே.சா. வெளியிட்டார். சமயம் முதலிய கட்டுப்பாடுகளோடு தளையுண்டு கிடக்க மறுத்துவிட்டது. இருப்பினும் இவரைச் சிவபக்தியில் குறைந்தவர் என்று சொல்லமுடியாது. பரந்துபட்ட உள்ளத்தோடு சங்க இலக்கியங்களின் ஆராய்ச்சியிலும் பதிப்பிலும் பிரதிகள் சேகரித்த வரலாறும் அவற்றைப் பரிசோதித்த வரலாறும் பிறரால் இடையூறு விளைந்த வரலாறும் இவருடைய சுயசரிதையில் நன்கு புலப்படுகின்றன. இப்பதிப்புகளெல்லாம் இவரது சொந்த முயற்சியில் உருவானவையாகும். மணிமேகலையில்,

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றே றுறுவ தறிக"

என்று சுருக்கமாகக் கூறுகிறது. உ.வே.சா. அவர்கள் புத்த சரித்திரத்திலே ஈடுபட்டு உருகியும் பௌத்த மதத் தத்துவங்களை அறிந்தும் மகிழ்ந்தும் பெற்ற உணர்ச்சியிலே மணிமேகலை பதிப்பு வெளிவந்தது. அன்னதானத்தைச் சிறப்பிக்கும் வகையில்,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே " (மணிமேகலை)

என்ற அடிகள் உள்ளத்தைக் கவர்ந்ததாக உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

1898ஆம் ஆண்டு மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும் அச்சிடப்பெற்று வெளிவந்தன. 59 தமிழ் நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டியதை அறிந்து அறிஞர்கள் பாராட்டினார்கள்.

புறநானூற்றின் பதிப்பு

புறநானூறு 400 பாடல்களைக் கொண்டது. பொருளாலும் அளவாலும் புறநானூறு என்று பெயர் பெற்றது. இது புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும். உ.வே.சா. அவர்களுக்குக் கிடைத்த புறநானூற்றுப் பிரதிகளில் முதல் 260 பாடல்கள் மட்டுமே இருந்தன. 242 ஆம் பாடலுக்கு மேல் இருந்த உரைகள் இடையிடையே சிதைந்து மாறி இருந்தது. 267, 268 ஆகிய இருபாடல்கள் முற்றிலும் கிடைக்காமல் போய்விட்டன. பல பாடல்களுக்கு முதல் இல்லை. பலவற்றிற்கு இறுதிப்பகுதி இல்லை. ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் திணையும் துறையும் பாடினோர் பெயரும் பாடப்பட்டோர் பெயரும் இருந்தன. புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையுமுள்ள ஏட்டுச்சுவடியால் திணை துறைகளின் இலக்கணங்களை அறிந்ததாக உ.வே.சா. கூறுகிறார்.

ஒரு நூலைத் திருத்தமாகப் பதிப்பிக்க வேண்டுமென்றால் பல செய்திகளையறிந்து கொள்ளவேண்டும். புறநானூற்றை ஆய்வதற்குச் சங்க நூல்களை முழுவதும் ஆராய்ச்சி செய்வது அவசியமாகும். முதலில் நூலில் உள்ள கருத்துகளுக்கும் சொற்களுக்கும் அகராதி என்று

உ.வே.சா. எழுதி வைத்துக்கொண்டு புறநானூற்றை ஆராய்ந்தார். புறநானூற்றுச் செய்யுட்களையும் செய்யுட்பகுதிகளையும் இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் மேற்கோளையும் ஆராய்ந்து பாடல் திருத்துவதோடு கருத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துப் புறநானூற்றைச் செப்பம்செய்து வெளியிட்டார்.

உ.வே.சா. அவர்கள் நூல் பதிப்பிடுவதில் மட்டுமன்றி பேச்சிலும் வல்லவராக விளங்கினார். சில அன்பர்கள், தாங்கள் நீண்ட காலம் உயிர் வாழமுடிந்தது எப்படி? என்று கேட்டார்கள். அதற்கு உ.வே.சா. என் ஆயுள் முழுவதும் தமிழ் என்ற ஒரே ஒரு மருந்துதான் என் உயிருக்கும் உணர்வுக்கும் இருந்து வந்தது. அதன் துணைகொண்டுதான் நான் இவ்வளவு காலம் வாழ்ந்தேன் என்றார்.

தேடிவந்த புகழ்கள்

- 1906 ஆம் ஆண்டு உ.வே.சா. அவர்கள் பெருமையைப் பாராட்டி ஆங்கில அரசினால் ***மகாமகோபாத்தியாயர்*** என்ற பட்டத்தைப் பெற்றார்.
- 1917 ஆம் ஆண்டு பாரத தர்ம மண்டலத்தார் ***திராவிட வித்தியா பூசம்*** என்ற பட்டத்தை அளித்தார்கள்.
- 1917 ஆம் ஆண்டு காமகோடி ஸ்ரீசங்கராசாரியார் ***தட்சிணாத்திய கலாநிதி*** என்ற பட்டத்தை வழங்கினார்.
- 1932 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தார் ***டாக்டர் பட்டம்*** அளித்தார்கள்.
- 1935 ஆம் ஆண்டு உ.வே.சா. அவர்கள் 80 ஆண்டு நிறைவு அடைந்ததால் ***சதாபிஷேக விழா*** சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
- 1942 ஆம் ஆண்டு சென்னை பெசண்ட் நகரில் டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் நிறுவப்பட்டது.
- 1948 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் உ.வே.சா. அவர்களுடைய முழு திருவுருவச்சிலையொன்று நிறுவி பெருமிதம் கொண்டது.
- 2006 ஆம் ஆண்டு நடுவண் அரசு உ.வே.சா.வைப் பாராட்டும் வகையில் ***அஞ்சல்தலை*** வெளியிட்டது.


முடிவுரை

உ.வே.சா. அவர்கள் பதிப்பாசிரியராகவும் சொற்பொழிவாளராகவும் சிந்தனையாளராகவும் உரைநடை ஆசிரியராகவும் திகழ்ந்தார். இவர் எளியநடையைக் கையாண்டார். இவரின் தமிழ்த்தொண்டைக் கண்டு பாராட்டி பலரும் மகிழ்ந்தனர். இவர் 1942 ஆம் ஆண்டு தனது 86வது வயதில் இயற்கை எய்தினார். நூல் பதிப்பில் புது புரட்சி ஏற்படுத்தித் தமிழ் செம்மொழி தகுதி பெற உ.வே.சா. போன்றவர்களும் காரணமாவர். தன் வாழ்வில் 60 ஆண்டு காலத்தைத் தமிழ்ப்பணிக்காகத் தியாகம் செய்தார். சுப்பிரமணிய பாரதியார் தாம் பாடிய பாட்டில் ***"கும்பமுனி எனத்தோன்றும் சாமிநாதப் புலவன்"*** என்று உ.வே.சா. அவர்களைக் குறிப்பிடுகிறார். இவரது புகழ் எங்கும்பரவி இருக்கட்டும்.

பார்வை நூல்கள்

டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் பெசன்ட் நகர், சென்னை – 90.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



9. உ.வே.சா அவர்களின் தமிழிலக்கணப் பதிப்புகள் : அழகியலும் அரசியலும்

முனைவர் கா. இரவிச்சந்திரன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
இரா.வே. அரசுகலைக்கல்லூரி, செங்கல்பட்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தொழிற்புரட்சி விளைவுகளின் விவரங்களை சுருக்கமாக வரையறுக்கலாம். ஐரோப்பியர்கள் மூலமாக இந்தியாவிற்குள் நுழைந்த நவீனத்துவத்தின் (Modernity) குறிப்பிட்ட செயல்பாடாகவே அச்சுஇயந்திரத்தின் வருகையை இனங்காண வேண்டியுள்ளது. அச்சு என்ற தொழிற்நுட்பத்தை முதலாளியச் சமூகவளர்ச்சிப்போக்கின் ஒருதவிர்க்க இயலாபகுதியாகவே இனங்காண்பர். ஆகவே இதனை அச்சு முதலாளியம் (Printing Capitalism) என்று அழைப்பதுவழக்கம்.(எஸ்.வி.ராஜதுரை,இந்து- இந்தி- இந்தியா ப.12)

ஐரோப்பியர் மூலமாக வந்த அச்சுதொழிற்பாடு இந்தியாவில் மரபுபேணு கையை வளர்த்தெடுக்கும் செயல்பாடாகப் பரிணமித்தது, ஆங்கிலேயர்களுக்கு எதிரான வலிமையான போராட்டக் கருவியாக மாறியது என்பது ஒரு வரலாற்று முரண். பாரம்பரிய அறிவு மீட்பு, அதன் பரவலாக்கம் எனஅச்சுஊடகத்தை முன்னெடுத்த இந்திய அறிவாளிகளில் தமிழகத்தைச்சார்ந்த உ.வே.சாமிநாதையர் மிக முதன்மையானவர். உ.வே.சாவின் சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற நூல்கள் தமிழக, இந்திய வரலாற்றில் துணைமை, தேசியக் கருத்தாக்கம் (Nationalism) உருப்பெற பருண்மையான காரணமானது.

இத்தகைய பாரம்பரிய மீட்பிற்குத் துணைநின்ற இவ்வகைப்பட்டதான நூல்பதிப்பு அன்றைய அறிவாளிகளின் அறிவுச்செயற்பாட்டு சிக்கலைத் (IntellectualCrisis) தீர்த்து அவர்களை ரசியல்மயப்படுத்தியது எனலாம். இத்தகு போக்கில் முதன்மையான பங்குவகித்த உ.வே.சா அவர்களின் பதிப்புகள் குறித்த பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், அவர்களின் இலக்கணப்பதிப்பிற்குள் மறைநிழலாக ஊடாடும் அரசியலையும் அழகியலையும் வரலாற்று நிலைநின்று இக்கட்டுரை சில புள்ளிகளைத் காட்ட முனைகிறது. இலக்கணப்பதிப்புகளின் அழகியலையும் அரசியலையும் இக்கட்டுரை ஒருவாறு தொட்டுச் செல்லவிழைகிறது.

அழகியலும் அரசியலும்

அழகியலும் அரசியலும் பிரிக்க இயலாத உள்முரண் கொண்டவை. ஓர் அரசியல் சார்பை எடுக்கையில் அழகியல் தவறிப்போவது உண்டு அல்லது அழகியலை மட்டுமே வெளிப்படுத்தும் ஒருசெயல்பாடு அரசியல் வெறுமைபூணுவதும் உண்டு. ஆனால், உ.வே.சாஅவர்களின் பதிப்புபணியில் இவ்விரண்டும் இணையும் புள்ளிகளை அவருக்கென்று ஓர் அரசியல் உள்ளடக்கியுள்ளது. இது அவரது இலக்கணப்பதிலிருந்து பெறப்படவேண்டியுள்ளது; இதனைக் இக்கட்டுரை முயற்சித்துப் பார்க்கிறது.

உ.வே.சாவிற்கு முன்னான இலக்கணப்பதிப்புகள்

தமிழ் இலக்கண நூல்களைப் பதிப்பிக்க ஆங்கிலேயருக்கு தேவையும் ஒன்று இருந்தது. சென்னைக் கோட்டைக் கல்லூரியில் தமிழிலக்கணம் பயிற்றுவிக்கவேண்டியதால் இலக்கண நூல்களின் பதிப்பு வேகமெடுத்தது எனலாம். குறிப்பாக அன்று நன்னூல் பதிப்பிக்கப்பட அரசின் மானியங்கள் வழங்கப்பட்டன. தமிழில் முதன்முதலில் பதிப்பிக்கப்பட்ட இலக்கண நூல் நன்னூல்தான். தமிழ் இலக்கணப் பதிப்புகளை அச்சு இந்தியத்திற்கு உட்படுத்தியவர்களாக ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை என்ற ஒரு அணியினர் உண்டு. இவர்கள் தொல்காப்பியத்தையும் வீரசோழியத்தையும் பதிப்பித்து வெளிக்கொணர்ந்தனர். இவர்களின் காலத்திற்கு அடுத்தகண்ணியாக வந்த உ.வே.சா அவர்கள் இலக்கியங்களையே மிக அதிகமாக பதிப்பித்தார். 74 நான்கு நூல்களைப் பதிப்பித்த உ.வே.சாஅவர்கள் நான்கு இலக்கண நூல்களை மட்டுமே பதிப்பித்துள்ளார்.அவை

- நன்னூல் மயிலைநாதர்உரை
- நன்னூல் சங்கரநமச்சிவாயர்உரை
- புறப்பொருள் வெண்பாமாலை
- தமிழ் நெறிவிளக்கம்

இவற்றுள் உ.வே.சாஅவர்கள் வாழும் காலத்திலேயே புறப்பொருள் வெண்பாமாலைக்கு நான்கு பதிப்புகளும், நன்னூல் சங்கரநமச்சிவார் உரைக்கும், தமிழ் நெறிவிளக்கத்திற்கும் இரண்டுப் பதிப்புகளும் நன்னூல் மயிலைநாதர் உரைக்கு ஒருபதிப்பும் வெளியானது. இனி இவை குறித்த மதிப்பீடுகளைக் காண்போம்.

உ.வே.சாவின் நன்னூல் பதிப்புகள்

நன்னூலுக்கு முதல் உரையாசிரியர் மயிலைநாதர். இவருடைய உரையையும், சங்கரநமச்சிவாயர் உரையையும் என இரண்டு உரைகளையுமே உ.வே.சாஅவர்கள் பதிப்பித்துள்ளார். நன்னூல் மயிலைநாதர் உரை 1919 ஆம் ஆண்டு வெளியானது. இவ்வாண்டில் உ.வே.சாஅவர்கள் சென்னை மாநிலக்கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்றார் இந்நூலில் உ.வே.சாஅவர்கள் 15 சுவடிகளை ஆராய்ந்து, 1379 பாட வேறுபாடுகளைத் தொகுத்து மூலபாட ஆய்வுமூலம் பாடங்களை உறுதிசெய்துள்ளார்.இவற்றுள் மூலத்தில் அமைந்துள்ளபாடவேறுபாடுகள் 126 என்றும் உரையில் அமைந்துள்ள பாடவேறுபாடுகள் என்றும் பிரித்துக் காட்டுகிறார் உ.வே.சாவின் இலக்கணப் பதிப்புகளைப் பற்றி ஆராய்ந்த கி.நாச்சிமுத்து அவர்கள், (உ.வே.சாவின் இலக்கணப்பதிப்புகள்.ப129)

நன்னூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த சாமுவேல் பிள்ளைக்கும் பவானந்தம் பிள்ளைக்கும் உ.வே.சாஅவர்கள் பதிப்பிக்கும் வரை நன்னூலுக்கு மயிலைநாதர் உரையைப் பற்றிப் பெயரளவில் மட்டுமே தெரியும். நன்னூலின் மற்றொரு உரையாசிரியரான சங்கரநமச்சிவாயர் இருபது இடங்களில் மயிலைநாதர் உரையை மறுத்துள்ளதாக மட்டுமே

அறிவர். அந்தச்சமண உரையை அச்சுவாகனம் ஏற்றிய பெருமை உ.வே.சாவையேசாரும். இவ்வுரை குறித்து உ.வே.சாஅவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

நன்னூலுக்கு முதலில் செய்யப்பட்டதும், இலக்கண விளக்கவுரை, மேற்கூறிய விருத்தியுரை முதலியவற்றிற்கு ஆதாரமாகவுள்ளதுமான இந்தமயிலைநாதர் உரை சில நூற்றாண்டுகளாகப் படிப்பாரும், படிப்பிப்பாரும் இன்றி பெயர்வழக்கமும் அற்றுக் கிடந்தமையாலும், சிற்சிலபகுதிகள் பிற்காலத்தவர்களால் மறுக்கப்பட்டிருப்பினும் தமிழ் நாட்டின் பழைய நிலைமையையும் அக்காலத்துப் புலவர்களுடைய கோட்பாடுகளையும் இவை போன்ற அரியபலவற்றையும் தெரிவித்தலாலும் இதனைப் பதிப்பிக்கத் துணிந்தேன். (நன்னூல் மயிலைநாதருரை,முகவுரை,ப.1)

எந்த நூல் ஆனாலும் அதன் முழு வரலாற்றோடு உ.வே.சா அவர்கள் பதிப்பிப்பார்கள். வரலாற்றை ஒரு ஆசிரியனாக நின்று உ.வே.சா விளக்கும் இயல்பு எப்போதுமே அவரிடம் உண்டு. மணிமேகலை முழுமைக்கும் உரைநடையிலேயே சுருக்கவிளக்கம் எழுதியுள்ளார். நன்னூல் பின்வருமாறு பதிப்பிக்கப்பட்டுள்ளது.

முகவுரை
நூலாசிரியர்வரலாறு
நூல்
உரையாசிரியர்வரலாறு
சீயகங்கன் வரலாறு
பரிசோதனைக் குறிப்பு
நன்னூல் மயிலைநாதருரை
அரும்பதம் முதலியவற்றின் அகராதி
மேற்கோள் விளக்கவகராதி
விளங்காமேற்கோள் முதற்குறிப்பகராதி
நன்னூல் சூத்திரமுதற்குறிப்பகராதி
பிழையும் திருத்தமும்

இத்தனை அடுக்குகளில் ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டவைதான் நன்னூல் மயிலைநாதர்உரை. இவற்றுள் பொருள் விளங்காதவைகளைத் தொகுத்து அவற்றை விளங்கா மேற்கோள் முதற் குறிப்பகராதி என்ற பகுதி உ.வே.சா மட்டுமே மேற்கொண்ட பதிப்பு முறைமையாகும்.

நன்னூல் சங்கரநமச்சிவார்உரை

நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரை ஐயர் அவர்களுக்கு முன்பதாக வேவிசாகப்பெருமாள் ஐயர் 1839 இல் பதிப்பித்திருந்தார். ஆனாலும் அந்த உரை சிவஞானமுனிவர் திருத்திய உரையுடன் கூடியதாகவே அமைந்திருந்தது. ஆனால் ஐயரவர்கள் சிவஞானமுனிவரின் செய்திட்டதிருத்தத்தைப் புறமொதுக்கி சங்கரநமச்சிவாயரின் உரையை மட்டுமே பதிப்பித்துள்ளார். 1999 இல் நன்னூலுக்கு ஒருசெம்பதிப்பு கொண்டு வந்த அ.தாமோதரன் சங்கரநமச்சிவாயர் உரை எழுதி அதில் சிவஞானமுனிவர் திருத்தம் செய்துள்ள பகுதிகளைச் சேர்த்து புத்தம் புத்துரை என்று தலைப்பிட்டு அதனைப் பதிப்பித்துள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. ஐயரவர்களின் சங்கரநமச்சிவாயரின் ஈடுபாடு அலாதியானது. இந்நூல் உ.வே.சா அவர்களின் 38

ஆவது நூல் என்பது குறிக்கத்தக்கது. பதினான்காம் நூற்றாண்டளவில் வாழ்ந்த சங்கரநமச்சிவாயர் வரைந்த உரைக்கு பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞானமுனிவர் செய்துள்ள திருத்தங்கள் அன்றைய காலகட்ட திருவாவடுதுறை, தருமபுரமடங்களின் புலமை விவாதங்களின் பேரில் உருவானவை. பதினெட்டாம் நூற்றாண்டில் அதிகமான விவாதங்களில் கலந்து. கொண்டவராக ஆறுமுகநாவலரைக் குறிப்பிட்டால், பதினேழாம் நூற்றாண்டில் அதிகமான அளவு சண்டபிரசண்டங்களில் ஈடுபட்டவர் சிவஞானமுனிவர் என்பார்கள். கைலாசபதி (நாவலர்பற்றிக.கைலாசபதி,குமரன்பதிப்பகம்.ப.20) ஆகவே, அதில் உடன்பாடு கொள்ள உ.வே.சா விருப்பமில்லை என்பதையே அவருடைய இப்பதிப்புகாட்டும் செய்தியாகும். இத்தகைய அறிவுத் துணிச்சலை அவர் சார்ந்திருந்த திருவாவடுதுறை மடமே அவருக்கு வழங்கியது. சிவஞானமுனிவர் திருவாவடுதுறை மடத்திலேயே தங்கி தமிழ்ப்பணியும் இறைப்பணியும் புரிந்தவர்.

உ.வே.சா மட்டும் சங்கரநமச்சிவாயர்உரையைத் தனித்துப் பிரித்து அச்சிடவில்லையென்றால் நன்னூலுக்கு சங்கரநமச்சிவாயரின் உரை என்ன என்பது மறந்து சிவஞானமுனிவர் திருத்திய உரையை மட்டுமே பின்பற்ற வேண்டிய நிர்பந்தம் தமிழ்ச் சமூகத்திற்கு வாய்த்திருக்கும்.

தமிழ் நெறிவிளக்கம்

உ.வே.சாஅவர்கள் பதிப்பித்த அகப்பொருள்நூல். இதில் 25நூற்பாக்களே கிடைத்துள்ளன. இவற்றை ஒவ்வொரு பகுதியாக கலைமகள் இதழில் வெளியிட்டார் உ.வே.சா அவர்கள். மொத்தமாகத் தொகுத்து 1937 ஆம் ஆண்டு இந்நூல் வெளியானது. இந்த நூலில் அதிகப்படியான பாடவேறுபாடுகள் காட்டப்படாதிதன் காரணம் ஒரேயொரு ஏட்டுச் சுவடியைவைத்து நூலை வெளியிட்டதே ஆகும் என்பது உ.வே.சா அவர்களின் தற்கூற்று. 118 ஆராய்ச்சி அடிக்குறிப்புகளுடன் வெளிவந்துள்ள இந்த நூல், ஐயரவர்களின் 82 ஆம் வயதில் வெளியானது.

உ.வே.சாஅவர்கள் இடம் விளங்கா இடம் என்று 172 இடங்களைக் காட்டுகிறார். அந்த அளவிற்குச் சிதலமடைந்த பிரதியாக அவருக்குக் கிடைத்துள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலைப் பதிப்பு

புறப்பொருள் வெண்பாமாலை ஏட்டுச்சுவடி திருநெல்வேலி ஆழ்வார் திருநகரியில் இருந்த இலட்சுமணக் கவிராயரிடமிருந்து தனக்கு கிடைத்ததாக உ.வே.சா குறிக்கிறார். இந்த ஏட்டுச்சுவடி குறித்தும் பதிப்பினைக் குறித்தும் என் சரித்திரத்தில் உ.வே.சாமிகள் விரிவாக எழுதியுள்ளார். புறப்பொருள் வெண்பாமாலையை வெளியிடவேண்டும் என்ற ஆர்வத்தைப் பாண்டியதுரைத் தேவரிடம் கூறியதாகவும் அவர் கடிதத்திற்குப் பின்னர் பதிப்பைத் தொடங்கியதாகவும் ஐயரவர்கள் குறிக்கிறார். (என் சரித்திரம் ப. 740-743)

உ.வே.சா அவர்கள் தமக்குக் கிடைத்த ஒன்பது ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு153 பாடவேறுபாடுகளுடன் ஒரு மூலபாட ஆய்வையே (Textual Criticism) நிகழ்த்தி இந்

நூலைவெளியிட்டார். இதன் பிறகு இந்த நூல்பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்தது. அவற்றில் முதன்மையானதாக இலங்கையைச் சார்ந்த புலவர் நா.சிவபாதசுந்தரம் அவர்கள் புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி என்ற நூலை எழுதினார்.இந்நூலைத்தழுவி ஜி.யு.போப் சிலபாடல்களை மொழிபெயர்த்தார். இவை க.கைலாசபதி போன்ற ஆய்வறிஞர்கள் வீரயுகப்பாடல்கள், (சாட்விக், மார் போன்றோர் கிரேக்க இலக்கியங்களில் முன்வைத்த கருத்தியலை கைலாசபதி தமிழச் சங்க இலக்கியப்பாடல்களில் வைத்து நிறுவுகிறார்) என்ற உலகளாவியக் கருத்தாக்கத்தோடு தமிழ் செய்யுள் செந்நெறியை ஒப்பிட துணைநின்றன.

இடக்கரடக்கல்

இலக்கண இலக்கிய நூல்களில் மகளிரின் உடல் உறுப்புகளைப் பற்றிக் குறிக்கும் இடங்களைப் புள்ளி வைத்து எழுதுதல் என்பது சென்ற நூற்றாண்டின் பொதுபோக்கு. இதனை சி.வை.தாவும் கடைபிடித்துள்ளார். சி.வை.தாவின் கலித்தொகையில் 11 இடங்களில் அல்குல் என்ற பதத்தை சி.வை.தா தவிர்த்துள்ளார். இது அன்றையப் பொதுபோக்கு. இப்போக்கிற்கு உ.வே.சாவும் தப்பவில்லை, புறப்பொருள் வெண்பாமாலையில், இடக்கரடக்கர்களைத் தவிர்த்துள்ளமை பற்றி பின்வருமாறு அவரே குறித்துள்ளார்.

எட்டாவதும் ஒன்பதாவதுமாகிய இப்படலங்களில் இடக்கர் சொல்ல வந்துள்ள பாடல்கள் பதிப்பிக்கப்படவில்லை. உ.வே.சா பதிப்பில் விடுபட்ட இடக்கரடக்கல் சொற்கள்: முயக்கு, முலை, வனமுலை, விறலோன் மார்பும் புல்லோம், முக்கண்ணான் முயக்கம் (இலக்கணப் பதிப்புகள், கி. நாச்சிமுத்து,ப.34)

ஆக, உ.வே.சா பதிப்புகள் அன்றைய பதிப்புப் போக்கில் இருந்து விலகாத பொதுக் கூறுகளையும் சில புதிய கூறுகளையும் கொண்டுள்ளன. இவற்றை உ.வே.சாவின் பதிப்பு அழகியலாக முன்வைக்கலாம். ஒரு நூலின் முன்னாலும் பின்னாலும் ஒருகாரணமும் இல்லாமல் வெற்று ஏடாகவிடப்படும் பக்கங்கள், நூலின் மையத்தில் அச்சிடுதல் போன்றவை அவரின் ஏடு சேகரிப்பின் போது சிதிலமடைந்த ஏடுகள் கற்றுக் கொடுத்த பாடத்தின் விளைவுகள்.

பெரிதும் தன் காலத்திய போக்கிலிருந்து விலகாத அதேநேரம் தமிழ்ப்பாரம்பரிய மீட்பினைத் தம் இலக்கண நூல் பதிப்புகள் வாயிலாகச் செய்துகாட்டியமை அன்றைய இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்குப் புலமை ரீதியாக வலு சேர்த்தது. இதுஅவரது அரசியல் அடையாளமாகிறது. எந்த ஒரு போராட்டத்திற்கும் அறிவுரீதியான பங்களிப்பு முதன்மையாகிறது. அதனை சுதந்திரப் போராட்டத்திற்குத் தந்தவையாகவே உ.வேசாவின் பதிப்புகள் அமைகின்றன.

முடிவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த உ.வே.சா அவர்கள் தமிழ்ப் பதிப்புகளில் குறிப்பாக இலக்கண நூல்கள் சார்ந்த பதிப்புகளில் முன்னெடுத்த முயற்சிகள் அளப்பரியன.

நுண்ணோக்கு ஆய்வாக அவை அமையக்கூடியன. இது இழைந்துள்ள தமிழ் அறிவுத் தொகுப்பை(Epistemology) முன் வரைவோர்க்கு ஓர் ஆதர்சனக் குறிப்பாகும்.

துணைநின்ற நூல்கள்

1. உ.வே.சா. என்சரித்திரம், உ.வே.சாநூலகம்
2. உ.வே.சாஉ_ரைநடைநூல்கள்
3. கி. நாச்சிமுத்து,உ.வே.சா இலக்கணப்பதிப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
4. தொகுதிகள், உ.வே.சா நூலகம்
5. க.கைலாசபதி,நாவலர் பற்றி கைலாசபதி,குமரன் பதிப்பகம்.
6. அ.தாமோதரன் ,நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
7. எஸ்.வி.ராஜதுரை, இந்து-இந்தி-இந்தியா

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



10. புறநானூற்றுப் பதிப்பில் உ.வே.சா.

சி. ஃபினில் ஜோபிலா, எம்.எஸ்.ஸி., எம்.ஃபில்.,
உதவிப்பேராசிரியர் (கணிதத்துறை),
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095

“நிதியறியோம், இவ்வுலகத் தொருகோடி
இன்பவனக நித்தம் துய்க்கும்
கதறியோம் என்று மனம் வருந்தற்க;
குடந்தைநகர் கலைஞர் கோவே!
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய், அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே”

-பாரதியார்

செம்பரிதியின் ஒளியைப் பெற்றவன் என்றும் குறைவில்லா கீர்த்தியுடையான் என்றும் பாரதியின் பாட்டு பாடி நிற்கும் தமிழன்னையின் தன்னிகரற்ற தலைவன் குடந்தை நகர் மைந்தன் சாமிநாதய்யர்.

கல்லூரியில் தமிழாசிரியராய்ப் பணியைத் துவங்கிய காலம் சாமிநாதய்யரை உலகம் அறிய தமிழன்னை விழைந்த காலம் எனலாம். காரணம் கும்பகோணம் ஜில்லா முன்சிபலாக இருந்த சேலம் இராமசுவாமி முதலியார் அவர்களின் சிந்தாமணியினைப் பாடமாக கேட்க வேண்டும் என்ற தூண்டுதல் இதுவரை சரிவர படித்திடாத சிந்தாமணியினை ஆராய்ச்சியும் பதிப்பும் உ.வே.சா அவர்களின் வாழ்வையே மாற்றியமைத்தது. ஊர் ஊராக சென்று ஓலைச்சுவடிகளைத் தேடியும் பாடபேதம் அறிந்து அவற்றை சீர்செய்த அனுபவமும் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் அவரை மாற்றியது.188-ல் சிந்தாமணியின் வெளியீடு தமிழ் நாட்டு மக்களை ஆனந்த கூத்தாடச் செய்தது. அதன்பின், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை என்று தமிழ்மக்களுக்கு விருந்து படைத்தார் உ.வே.சா.

புறநானூறு கண்ட தமிழகம்

புறநானூற்றின் பதிப்பு கண்ட தமிழகம் ஏதோ ஒரு புதிய கண்டத்தையே கண்டுபிடித்தது போல மகிழ்ச்சி அடைந்தது. வரலாற்றாலர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பழந்தமிழ் மக்களின் வீரம், அறம், கொடை, புகழ் என்னும் புறம்சார் நிகழ்வுகளை ஆராயும் ஆர்வத்தையும் உண்டாக்கியது இது உ.வே.சா விற்கு ஆனந்தத்தை நல்கியது. தமிழன்னையின் புகழ் தரணியெங்கும் பரவும் நிலை அமைந்ததைக் கண்டு, எனலாம்.

ஆனால் இந்நிலை அடைய உ.வே.சாவின் உழைப்பு சிறிது அன்று எனலாம். சிலப்பதிகாரத்திற்குப் பின் மணிமேகலையும், புறநானூறும் சிந்தையில் உலா வந்து கொண்டிருந்த வேளையில், புறநானூற்றுக்குக் கிடைக்கப்பெற்ற உரையின் மிகுதி அவரைப் புறநானூற்றின் பக்கம் இழுத்தது. மணிமேகலையின் குறைந்த உரையும், பௌத்த சமயத்தின் நூற்

கருத்துகளை உணர்ந்து கொள்ள இயலா நிலமையும் அவரையும் "புறநானூறு" என்ற பொன்னை (தங்கம்) ஆராய அடித்தளமிட்டது.

புறநானூற்றுக்கு முன்

புறநானூற்றை ஆராயும் முயற்சியில் சிறு தோய்வு, உ.வே.சா விற்கு ஏற்பட காரணமானது ஸ்ரீசுப்பிரமணியத் தம்பிரான் பிள்ளையவர்கள் இயற்றிய திருப்பெருந்துறை ஸ்தல புராணத்தை வெளியிட வேண்டுமென்ற விருப்பமே. இதனால் புறநானூறு நின்றது-1892 ஆம் வருட இறுதியில் ஸ்தல புராணம் நூல் வெளிவந்தது. குறிப்புரையுடன் வெளியிட வேண்டுமென்ற ஆர்வம் இருப்பினும் "விரைவில்" என்ற தம்பிரானின் வற்புறுத்தலால் மூலத்தை மட்டும் வெளியிட்டார் உ.வே.சா. பின் மீண்டும் துவங்கியது புறநானூறு ஆராய்ச்சி.

புறநானூற்றில் "புதுமுறை" கண்டார் உ.வே.சா

புறநானூற்று ஆராய்ச்சியில் புதுமுறையைக் கையாளும் உத்தியில் திளைத்தார் உ.வே.சா. புதிய முறையில் புதிய செய்திகளைச் சேர்த்து புறநானூற்று நூலைப் பதிப்பிக்க எண்ணம் கொண்டார். ஆங்கிலம் தெரியாத நிலையில் அம்மொழியில் உள்ள நூல்களைப் பார்த்தோ, அவற்றைப் போல் பதிப்பிக்கவோ இயலவில்லை அவருக்கு சங்கத்தமிழே துணையின்றி ஆராய இயலுமோ என்பது அவரின் எண்ணம். அதனூடே நூல் புது முயற்சியாய் அமைய வேண்டும் என்பதில் உறுதி பூண்டார். **Concordance** இந்தச் சொல்லும், கும்பகோணம் கல்லூரியின் சரித்திர ஆசிரியர் கே.ஆர். துரைசாமி ஐயரின் கையில் இருந்து "பைபிளின் விஷேச பதிப்பும்" ஆங்கிலப் பதிப்பும் உ.வே.சா. அவர்களுக்குப் புறநானூற்று ஆராய்ச்சியால் புதிய உத்தியை வழங்கியது.

புறநானூற்றில் புதுமுறையைக் காண விழைந்த உ.வே.சா அவர்களை ஒருமுறை கே.ஆர்.துரைசாமி ஐயரின் கையிலிருந்த பெரிய ஆங்கில புத்தகத்தைக் கண்டு, என்ன புத்தகம் இது? என்று வினவினார்.

அவர் "பைபிள்" என்றார்.

பைபிள் சிறியதாக தானே இருக்கும் என்றார்.

இது "பைபிளின் விஷேச பதிப்பு" - என்றார். துரைசாமி ஐயர் பின்னர் விளக்கலானார்.

பைபிளில் உள்ள செய்திகளைத் தொகுத்து வகைப்படுத்தி ஒரே மாதிரியான சொல்லும் கருத்தும் உள்ள பகுதிகளை ஆங்காங்கே காட்டி பதிப்பித்துள்ளனர் என்றார். ஒவ்வொரு பக்கத்திலும் நடுவிலே தனியே இந்த ஒப்புமைப் பகுதி இருக்கிறது. இதை "கன்கார்டன்ஸ்" (Concordance) என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள் என்றார்.

பைபிளில் ஒரே செய்தி பல இடங்களில் வருகிறது. ஒரே விதமான சொற்றொடர்களும் வருகின்றன. அவற்றைத் தொகுத்து வைத்து ஆராய்ந்ததினால் சில உண்மைப் பொருளும்

திருத்தமான உருவமும் புலப்பட்டன. பைபிளில் இருந்த பிழையான பாடங்களும் நீக்கப்பட்டன. சோதனையில் திருத்தமடைந்தது என்பதையும் அவர் விளக்கினார்.

உ.வே.சா விற்குப் புறநானூற்று ஆராய்ச்சியில் புது எண்ணம் பூத்தது. புறநானூற்று ஆராய்ச்சியில் புதுமுறை புகுந்தது. புறநானூற்றுச் செய்திகளையும் சொற்களையும் முதலில் அகராதியாய் மாற்றினார். இந்த ஆராய்ச்சி உண்மை உருவத்தைக் கண்டுபிடிக்க சுலபமானதாய் இருக்கும் என்பதை அறிந்தார். அங்ஙனமே செய்து வைத்துக் கொண்டார்.

உ.வே.சாவின் உள்ளம்

புறநானூறு உ.வே.சா பதிப்பித்த முதல் சங்கநூல். மேலும் இந்நூலைப் பதிப்பிக்கவே மொத்த சங்கநூலையும் ஆராய்ச்சி செய்வது அவசியமாயிற்று சிரமும் பன்மடங்காய் மாறியது பலரின் உதவியாலும் கல்லூரி மாணாக்கரின் உதவியாலும் பணியானது தொடர்ந்தது.

பணி பெரும்பணி என்றாலும் அதற்கு உண்டான கர்வமானது அவரிடம் சிறிது காணப்பட்டதில்லை. உரைகளைப் படிக்கும் போது தனக்குத் தேவையான ஆதாரங்களைக் குறித்து வைத்துக் கொண்டும், தொல்காப்பிய உரை, திருக்குறள் உரை மற்றும் வேறு உரைகளில் கண்ட குறிப்புகளையும் கைப்புத்தகத்தில் குறித்துக் கொண்டும் அதில் காணப்படுகின்ற பிழைகள் மற்றும் பாடபேதங்களை எல்லாம் நீக்கினார். ஆனால் அதில் ஏற்படுகின்ற பிழைகளைச் சுட்டி காட்டியதில்லை. இது அவரின் உள்ளத்து உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இவ்வாறு புறநானூற்று ஆராய்ச்சியில் அவருக்கு ஏற்பட்ட கஷ்டம் பின்னர் சங்க நூல்களில் ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியது என்பதை உ.வே.சாவின் தன் சுய சரிதமான 'என் சரித்திரம்' நூலில் எழுதியுள்ளார்.

மேலும் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் பல இடங்களில் புறநானூற்று செய்யுட்களின் மேற்கோள்களையும். தன் கையிலிருந்த புறத்திரட்டில் இருந்த பல செய்யுட்களையும் கொண்டு புறநானூற்றுப் பிரதிகளில் கிடைக்காத பல குறையான பிரதிகளை நிரப்பிக் கொண்டார்.

ஆனால் 400 செய்யுள்களைக் கொண்ட புறநானூற்றில் 267, 268 ஆம் பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை. சில பாடல்களுக்கு முதல் இல்லை. சிலவற்றிற்கு இறுதி இல்லை. சில பாடல்களில் இடையிடையே சில பகுதிகளும் காணப்படவில்லை.

புறநானூற்றின் பழைய உரை

உ.வே.சா புறநானூற்றை ஆராயும் நிலையில் அவரிடம் பழைய உரை ஒன்று இருந்ததாகவும் அதில் முதல் 260 பாடல்களுக்கு மேல் உள்ள பாடல்களின் உரையானது இடையிடையே சிதைந்து மாறியும் இருந்ததாம். ஆனால் அந்த உரையாசிரியர் பதப்பொருளை

எல்லாம் இனிதாய் விளக்கியும் உரிய இடங்களில் சொற்களை முடித்துக் காட்டியும் இலக்கண குறிப்பையும் திணை குறிப்பையும், பழமொழிகளையும் அணியையும் சொல்நயம் பொருள் நயங்களையும் புலப்படுத்தியிருப்பதாக உ.வே.சா கூறியுள்ளார். மேலும் அவர் உரையில் சில இடங்களில் சில செய்திகளை மறுத்துள்ளார். எனவே புறநானூற்றுக்குப் பழைய உரை ஒன்று இருந்தது உறுதி என்ற எண்ணம் உண்டாயிற்று.

உ.வே.சா கண்ட சரித்திர ஆராய்ச்சி

பாடினோர் பாடப்பட்டோர் குறிப்பிடும் வாக்கியங்களில் சரித்திர செய்திகள் இருந்தன. சங்க கால சரித்திர ஆய்விற்கு இது பெரிதும் பயன்பட்டன என்கிறார் உ.வே.சா. கிடைக்கப்பட்ட பெயர்களையும், ஊர்களையும் கொண்டு பாடபேதங்களை நீக்கலானார். இருப்பினும் அரசாங்க சிலாசாசனப் பரிசோதகர் ராவ்பகதூர் வி.வெங்கையருக்கும், தபால் இலாகாவின் சூப்ரிண்டெண்ட் ஸ்ரீ.வி.கனகசபை பிள்ளை என்பவரும் இவருக்குப் பெரிதும் பயன்பட்டனர்.

நூலுக்கு அங்கமாய் அமைந்தன

புறநானூற்றில் கண்ட நாடுகள், கூற்றங்கள், ஊர்கள், மலைகள், ஆறுகள் என்பவற்றின் பெயர்களை அகராதி வரிசையில் தொகுத்தமைத்தேன். பாடினோர் பாடப்பட்டோர் வரலாறுகளைச் சுருக்கமாகத் தெரிவித்து அதிலுள்ள பாடபேதங்களையும் தனியே பதிப்பித்தார். “விஷய சூசிகை, துறைவிளக்கும், துறைக்குறிப்பு, அரும்பத அகராதி, பிரயோக விளக்கம் போன்றவை இவற்றிற்கு அங்கமாய் விளங்கின.

புத்தகம் முடிந்து பார்க்கும் போது, “நானோ இவ்வளவும் செய்தேன்“ என்று பிரமித்துப் போனாறாம் உ.வே.சா.

புறநானூறு பதிப்பு

புறநானூறு எட்டுத்தொகையில் உ.வே.சா பதிப்பித்த முதல் நூல் என்பதால் அந்நூலின் முகவுரையில் எட்டுத்தொகை நூல்களையும், அவற்றின் வரலாறுகளையும் எழுதியிருந்தார். அகம் முகம் என்னும் இருவகைப் பொருளின் இயல்பையும் விளக்கியிருந்தார்.

முடிவுரை

புறநானூற்று நூலில் பலவகைச் செய்திகளையும் தொகுத்து அதனை ஓர் அகவலாக அமைத்தார் உ.வேசா. உரையைப் பற்றிய செய்திகளையும் சுருக்கமாக தெரிவித்து விட்டு அவருக்கு கிடைத்த ஏட்டுச்சுவடிகளின் நிலையையும் முகவுரையில் விளக்கி 1894 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் புறநானூறுப் பதிப்பித்து நிறைவேறியது. உ.வே.சாவின் கனவும் அவர் அடைந்த இன்னல்களும் நிறைவடையவில்லை அயராது உழைத்த அம்மகன் தமிழன்னைக்கு அழகு சேர்க்க புறப்பொருள் வெண்பாமாலைப் பதிப்பைத் தொடங்கலானார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

11. உ.வே.சுவாமிநாத ஐயர் - ஒரு பார்வை

ஜெ. சிரிஷா, எம்.எஸ்.சி., பி.எட்.,எம்.ஃபில்.,
உதவிப்பேராசிரியர், கணிதத்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

உ.வே.சுவாமிநாத ஐயர் ஒரு தமிழறிஞர். தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர். அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர். சங்ககால மக்களின் வாழ்க்கை, வீரம், பண்பாடு போன்றவை நமக்கு இன்று தெரிவதற்கு முக்கிய காரணம் உ.வே.சா.தான்.

உ.வே.சாவின் பிறப்பு

1885ம் ஆண்டு பிப்ரவரி 19ம்தேதி பாபநாசத்தில் உள்ள உத்தமதானபுரம் என்னும் ஊரில் வேங்கடசுப்பையர், சரஸ்வதி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் வெங்கட்ராமன். இவர் தாயார் இவரை செல்லமாக சாமிநாதன் என்று அழைப்பது வழக்கம். பின்னர் அந்தப் பெயரே நிலைத்து விட்டது. இவர் தந்தை ஒரு இசைக்கலைஞர். உ.வே.சா. அவரது தொடக்கத் தமிழ்க்கல்வியையும், இசைக்கல்வியையும் சொந்த ஊரில் கற்றார். சிறுவயதில் இவர் விளையாட்டிலும், இசையிலும் மிகுந்த ஆர்வமுடையவராயிருந்தார். இவர் குடும்பம் தீராத வறுமையில் வாடிய போது குடும்பத்திற்காகவும் உ.வே.சா. கல்வி கற்பதற்கும் இவர் தந்தை மிகுந்த பாடுபட்டார். வாய்ப்புக்களைத் தேடி ஊர் ஊராக செல்ல நேரிட்டது. அந்த நிலையில் உ.வே.சா. அவர்கள் விடாது தமிழ் கற்றார்.

இவர் தந்தை இராமாயண விரிவுரை நடத்தி வந்தார். சில சமயங்களில் உ.வே.சா.வும் அவருடன் சென்று உதவி செய்து வந்தார். சடகோபஜயங்காரிடம் கற்றபோது அவருக்குத் தமிழ் மீது அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பின்னர் தன் 17வது வயதில் தஞ்சாவூரில் தமிழறிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு காலம் தமிழ் கற்று தமிழறிஞர் ஆனார். அப்பொழுதுதான் திருவாவடுதுறை ஆதினத்தின் தொடர்பும் கிடைத்தது.

உ.வே.சாவின் பணிகள்

1880 பிப்ரவரி 16ஆம்தேதி கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர் பணியை ஏற்ற உ.வே.சா. தொடர்ந்து 23 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1903ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் ஆசிரியராக பதவி ஏற்றார். அங்கு 16 ஆண்டுகள் பணியாற்றினார். இவர் ஆசிரியர் பணியாற்றிய காலப்பகுதியில் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருந்தார்.1924ஆம் ஆண்டு மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை உ.வே.சா. ஏற்றார்.

ஓலைச் சுவடியிலிருந்து நூலுக்கு மாற்றியவை

1878ஆம் ஆண்டு அவரது 23ஆம் வயதில் வேணுவனலிங்க சுவாமிகள் இயற்றியிருந்த சுப்பிரமணிய தேசிக விலாசச்சிறப்பு என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார். பல இடர்பாடுகளுக்கு இடையில் சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு உள்ளிட்ட பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இவர் ஏட்டுச் சுவடிகளை அப்படியே பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து மறைந்த அழகையும், சொற்களையும் கண்டறிந்து முழுப்பொருள் விளங்கும்படி செய்தார்.

ஆசிரியர்குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கினார். இவரது தனிச்சிறப்பு என்னவென்றால் இவர் ஒரு நூலைப் பதிப்பிக்கும்போது அந்த நூலைப்பற்றிச் சேகரித்த அனைத்தையும் பதிப்பித்தார். இவர் பிரதிகளைத் தேடித் தேடி தமிழகம் முழுவதும் அலைந்த விவரம் ஏராளமாக இவர் சரித்திரத்தில் காணலாம்.

பல நூற்றுக்கணக்கான மைல்களை உ.வே.சா. பயணம் செய்துள்ளார். உ.வே.சா.விடம் பாடம் கேட்கும் மாணவர், கல்லூரி மாணவர் என்று பலர் இவருக்கு உதவி செய்தனர். இவர் சொத்துக்களைக் கூட விற்றுப் பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். தமிழர்கள் பலர் அளித்த ஊக்கம்தான் அவர் இப்பணியைச் செய்து வெற்றியும் கண்டார். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளுக்கு நூல் வடிவம் தந்தார்.

உ.வே.சா. எழுதிய நூல்கள்

தந்தையாரின் வறுமைக்கண்டு, ஒரு செல்வந்தரிடம் சென்று நெல் வேண்டும் என்று இயற்றிய செய்யுள்தான் அவரின் முதல் செய்யுள். மேலும் பல செய்யுள்களையும், உரைநடைகளையும் இயற்றியுள்ளார்.

கலைமகள்துதி, திருலோகமாலை, ஆனந்த வல்லியம்மை, பஞ்சரத்தினம் போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார். சங்ககாலத்தமிழும், நல்லுரைக் கோவை போன்ற பல உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், மகாவைத்தியநாதையர், கன்னடகிருஷ்ணய்யர், கோபாலகிருஷ்ணபாரதியார் போன்ற நூல்களையும் புதுக்கோட்டை திவான் சேஷையா சாஸ்திரியார், பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார், சுப்ரமணிய பாரதியார், இசைப்புலவர் ஆனை ஐயா முதலியோர் பற்றியும் தனித்தனியே கட்டுரைகள் எழுதியிருக்கிறார். உ.வே.சா. அவரது வாழ்க்கை வரலாற்றை “என் சரித்திரம்” என்னும் தலைப்பில் ஆனந்த விகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக எழுதி வந்தார். பிறகு1950ஆம் ஆண்டில் தனிப்புத்தகம் வடிவம் பெற்றது.

அச்சுப் பதித்த நூல்களின் பெயர்கள்

சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பெருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு,

மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிபாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தாது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள்,2 மும்மணிக்கோவை நூல்கள், 2 இரட்டைமணிமாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இதர சிற்றிலக்கியங்கள்.

உ.வே.சா 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப்பதிப்பித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார்.

சிறப்புகள் மற்றும் பட்டங்கள்

உ.வே.சா அவர்களின் தமிழ்த் தொண்டினைத் தமிழ் பயின்ற வெளிநாட்டு அறிஞர்களான சூலியன்வின்சோன், ஜி.யு.போப் போன்றவர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

1937ஆம் ஆண்டு சென்னையில் மகாத்மாகாந்தி தலைமையில் நடைப்பெற்ற இலக்கிய மாநாட்டில் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்து உ.வே.சா உரை நிகழ்த்தினார். இந்த உரையை கேட்ட மகாத்மா “இவரிடம் நாம் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வமிகுதிதான் என்னிடம் எழுகிறது” என்றார். இந்த மாநாட்டில் தான் அவரை அனைவருமே “தமிழ்த்தாத்தா” என்று அழைத்தனர்.

இவர் தமிழுக்கு ஆற்றிய பணிக்கு மார்ச் 21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் அளித்தது. இது தவிர “தட்சிணாத்ய கலாநிதி” என்னும் பட்டமும் பெற்றுள்ளார்.

இவரின் தமிழ்த்தொண்டைப் பாராட்டி சென்னை அரசாங்கம் அவருக்கு “மகாமகோபாத்தயாயர்” என்ற பட்டத்தை வழங்கியது.

பிப்ரவரி 18, 2006ஆம் ஆண்டில் இவரது அஞ்சல் தலையை வெளியிட்டது இந்திய அரசு. இவர் உத்தமதானபுரத்தில் வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. 1942ல் இவர் பெயரால் சென்னை வசந்த நகரில் (பெசன்ட் நகரில்) டாக்டர்.உ.வே.சா. நூல் நிலையம் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.


உ.வே.சா அவர்களின் உழைப்பும், தியாகமும், அர்ப்பணிப்பும் இல்லையென்றால் நமக்கு சங்க இலக்கியத்திலும், பிற்கால இலக்கியத்திலும் பல நூல்கள் கிடைத்திருக்காது.

மறைவு

மக்களால் அன்புடன் தமிழ்த்தாத்தா என அழைக்கப்பட்ட டாக்டர்.உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் ஏப்ரல் 28ஆம்தேதி 1942ஆம் ஆண்டு அவருடைய 87ஆம் வயதில் இயற்கை எய்தினார்.இவருடைய சாதனைகள்தான் இன்று நாம் பயிலும் புத்தககங்கள். இவர் இல்லையென்றால் தமிழ் நூல்கள் இல்லை. எண்ணற்ற நூல்கள் ஓலைச் சுவடியிலிருந்து ஏட்டுச்

சுவடிக்கு ஏற்றம் பெற்றிருக்காது. உ.வே.சா நம் தமிழ்நூல்களைத் தமிழர்களுக்கு அளித்து தமிழின் மேன்மையை உலகறியச் செய்ததை இன்றும் நாம் போற்றுதல் சிறப்பிற்குரியது.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



12. பன்முக நோக்கில் உ.வே.சாமிநாத ஐயர்

கி. விஜயலட்சுமி,
மாணவி,
டாக்டர். எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

உ.வே.சுவாமிநாதையர் பிப்ரவரி 19, 1855ல் உத்தமதானபுரத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தார். உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சுருக்கமாக உ.வே.சா என்றழைப்பர். இவரைச் சிறப்பாகத் தமிழ்த்தாத்தா என்று கூறுவர்.

தமிழ்பணி

அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர். இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குத் தொண்டாற்றியதில் இவரும் ஒருவர். தமது அச்சுப்பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறிய செய்தார். உ.வே.சா. 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப்பதித்து மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும், கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார்.

வாழ்க்கை

உ.வே.சாமிநாதர் தனது தொடக்க தமிழ்க்கல்வியையும், இசைக்கல்வியையும் சொந்த ஊரில் உள்ள ஆசிரியர்களிடத்தே கற்றார். பின்னர் தன் 17ஆம் வயதில் நாகப்பட்டினம் மாவட்டம் திருவாவடுதுறை சைவ ஆதினத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் 5 ஆண்டு காலம் தமிழினைப் பயின்று தமிழறிஞர் ஆனார்.

உ.வே.சாவின் சிறப்புகள்

உ.வே.சா. உழைத்திராவிட்டால் தமிழுலகிற்குச் சிலப்பதிகாரத்தைப் பற்றியும், மணிமேகலையைப் பற்றியும், அகநானூறு மற்றும் புறநானூறு பற்றியும் தெரியாமலே போயிருக்கும். இவ்வாறு நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றியவர் உ.வே.சா. சிதைந்து மறைந்துவிட்ட அடிகளையும், சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும்படி செய்தார்.

உ.வே.சா. பதிப்பித்த முதல் புத்தகம்

பாண்டிய நாட்டில் செவந்திபுரத்தில் வேணுவணலிங்கத்தம்பிரான் கட்டிய மடாலயத்திற்குச் சுப்பிரமணிய தேசிய விலாசம் என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்துப் பல தமிழ்ப்புலவர்கள் பாடலியற்றியிருந்தனர். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா. 8 பாடல்கள் இயற்றினார். வேறு சில பாடல்களும் சேர்த்துத் திருநெல்வேலி முத்தமிழாகரமென்றும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன் முதலாக ஐயரவர்கள் பதிப்பித்தார்.

பேச்சுத்திறன்

உ.வே.சா. கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடு பேசும் திறமை உடையவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா. ஆற்றிய சொற்பொழிவே "சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்" எனும் நூலாக வெளியிடப்பட்டது.

பட்டங்கள்

உ.வே.சா. தமிழுக்கும், இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் அளித்தது. இது தவிர மகாமகோபாத்தியாய மற்றும் தக்ஷிணகலாநிதி என்னும் பட்டமும் பெற்றுள்ளார். இந்திய அரசு பிப்ரவரி 18, 2006ல் இவரது நினைவு அஞ்சல் தலை வெளியிட்டது.

டாக்டர். உ.வே.சா. நூலகம்

சென்னை பெசன்ட்நகரில் உள்ள டாக்டர். உ.வே.சா. நூல் நிலையத்தில் பல்வேறு திருக்கோயில்களின் தல புராணங்கள் மட்டுமின்றி பக்தி இலக்கியங்களும், ஓலைச் சுவடிகளும் உள்ளன. டாக்டர். உ.வே.சா. நூல் நிலையத்தில் ஓலைச் சுவடியில் இருந்து இதுவரை அச்சுக்கு வராத நூல்களை அச்சுக்குக் கொண்டு வரும் திருப்பணியின் மூலம் 2002ஆம் ஆண்டு "அர்த்த நாரீசர் குறவஞ்சி" என்னும் திருச்செங்கோட்டுக் குறவஞ்சி நூல் வெளிவந்தது. 2003ஆம் ஆண்டு தேசிய ஆவணக் காப்பகத்தின் 80 பொருளுதவியுடன் கற்பகவல்லி நாயகி மாலை என்னும் நூல் வெளிவந்தது. உ.வே.சா. எழுதிய திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களின் சரித்திரம் என்ற நூலை டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம் 1986ஆம் ஆண்டில் மறுபதிப்பு செய்து வெளியிட்டது.

அச்சுப்பதித்த நூல்களின் பட்டியல்

சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள்,2 மும்மணிக்கோவை நூல்கள், 2 இரட்டைமணிமாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இதர சிற்றிலக்கியங்கள் போன்றவற்றை அச்சுப் பதித்த நூலாக வெளியிட்டுள்ளார்.

உ.வே.சா. விருது

உ.வே.சா. விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும். 2012ஆம் ஆண்டு முதல் இந்த விருது உ.வே.சாமிநாதையர் நினைவாக வழங்கப்படுகிறது. கல்வெட்டுகள், அகழ்வாய்வுகள், ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துப்படிகள், கிடைத்தற்கரிய நூல்கள் முதலியவற்றை அரும்பெரும் முயற்சியால் கண்டறிந்தும், வெளிக்கொணர்ந்தும் தமிழுக்கும் வளம் சேர்க்கும் பணிகளை மேற்கொள்ளும் தமிழறிஞர்களின் சேவைகளைப் பாராட்டும் விதமாக இந்த விருது

அளிக்கப்படுகிறது. உ.வே.சா. விருதுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையும், எட்டுகிராம் அளவிலான தங்கப்பதக்கமும், தகுதிச்சான்றும் அளித்துச் சிறப்பிக்கப்படுகினறனர்.

உ.வே.சாவின் தமிழ் வாழ்வு

உ.வே.சா. அவர்களின் தமிழ் வார்த்தையையும், அறிவையும் கண்ட விருத்தாசல ரெட்டி "நாங்களெல்லாம் மேட்டு நிலத்தில் மழையினால் ஊறுகின்ற கிணறுகள் என்றும் பொய்யாமல் ஓடுகின்ற காவிரி போன்ற அவர் அவரிடம் போய்ப்படிப்பது தான் சிறந்தது" என்றும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் இவரை ஆற்றுப்படுத்தினார்.

1870இல் உ.வே.சா. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் தமிழ் கற்கச் சேர்ந்தார். குருகுல முறையில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் 5 ஆண்டுகள் கற்றார். தம் ஆசிரியரின் அன்பும், திருவாவடுதுறை ஆதினத்தின் ஆதரவும் இவரது வாழ்வில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தின. 01.02.1876இல் உ.வே.சா அவர்களின் ஆசிரியர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மறைந்தபின் திருவாவடுதுறை ஆதினத்திற்குத் தலைவராக விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் 4 ஆண்டுக் காலம் இவருக்குத் தமிழ்க் கல்வி ஊட்டினார். பின்னர் தமிழறிஞர் சி.தியாகராசச் செட்டியாரின் உதவியால் 16.02.1880ல் கும்கோணம் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணி ஏற்றார். எழுத்துத் துறையிலும் தீவிரமாக ஈடுபட்ட உ.வே.சா. 964 கவிதைகளையும் எழுதியுள்ளார். அவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிப் பல பட்டங்கள் வழங்கப்பட்டன.

நல்லாசிரியர்

"இவர் பாடம் சொல்லும்போது கடின பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்வார். கற்பனைகளை இன்றியமையாத இடங்களில் விளக்கிக் காட்டுவார். இன்ன கருத்துகளை ஒழுங்காக மனத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுவார். பாடம் சொல்லும் நூல்களில் உரைகளில் மேற்கோளாக வரும் செய்யுள்களுக்குப் பொருள் கூறுவார். புலவர்களைப் பற்றிய வரலாறுகளை அடிக்கடி சொல்லுவார்". என்று தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணவர்களுக்குத் தமிழ் நூல்களைப் பாடம் சொல்லும் முறை பற்றித் தெளிவாய் இவர் கூறுவது மாநிலக் கல்லூரியிலும் மிகச்சிறந்த தமிழாசிரியராகத் திகழ்ந்தார். இக்காலத்தில் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் உணர வேண்டிய கருத்துகள் அதில் அடங்கியிருப்பதை அறியலாம்.

உரையாசிரியர்

உவே.சா. பதிப்பதித்தனவும், உரை எழுதி வெளியிட்டவனுமாகிய நூல்களில் தனித்தனிச் சொற்களை இவர் சுவைபெற எடுத்துக்கூறி விளக்கம் தந்திருக்கிறார். அவர் சில நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். மணிமேகலைக்கும், குறுந்தொகைக்கும் அவர் இயற்றிய உரைகள் அவரை ஒரு சிறந்த உரையாசிரியராக உலகுக்குக் காட்டுகின்றன. மணிமேகலைக்கும் பல இடங்களில் பதிவுரையும் இடையிடையே சில அடிகளின் பொருட்சுருக்கத்தையும் காதை இறுதியில் ஒரே சொற்றொடரில் பெரும்பாலும் மூலநூல் சொற்களைக் கொண்டே அக்காதையின் பொருட்சுருக்கத்தையும் தந்துள்ளார்.

உ.வே.சாமிநாத ஐயரின் என் சரித்திரம்

என் சரித்திரம் என்னும் தன் வரலாறு நூல் உ.வே.சாமிநாதையர் எழுதியது ஆகும். இதில் 1855ஆம் ஆண்டு முதல் 1898ஆம் ஆண்டு வரை அவருடைய வாழ்வில் நிகழ்ந்தவை பதியப்பட்டுள்ளன. இது ஆனந்த விகடன் இதழில் 06.01.1940 முதல் தொடர்ந்து 28.04.1942 ஆண்டு வரை வெளிவந்தது. தமிழ் நூல்களை பதிப்பித்த வரலாறும் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

உ.வே.சா. இயற்றிய நூல்கள்

எங்கள் ஊர், என் முன்னோர்கள், எனது பிறப்பு, குழந்தைப் பருவம், இளமைக் கல்வி, விளையாட்டும் விந்தையும், தமிழும் சங்கீதமும், விவாக முயற்சி, சிதம்பர உடையர், என் கல்யாணம், மாயூரப் பிரயாணம், தமிழே துணை, சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் அன்பு மயம், நான் கொடுத்த வரம் எனப் பல நூல்களை இயற்றியுள்ளார்.

உ.வே.சா. வின் நினைவு இல்லம்

உத்தமதானபுரத்தில் உ.வே.சா. வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. 1942ல் உ.வே.சா. பெயரால் சென்னை பெசண்ட் நகரில் டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம் அமைக்கப்பட்டு இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

முடிவுரை

எவ்வளவு தமிழ் ஆர்வத்தோடும், எவ்வளவு விடாமுயற்சியோடும் தமிழில் புலமை பெற்று விளங்கினார். புழைய நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்னும் குறிக்கோளைத் தவிர வேறெதனையும் தம் வாழ்நாளில் உ.வே.சா. சிந்தித்ததே இல்லை இவையே இவருக்கு மூச்சு. இளம்வயதில் அவர் கற்ற தமிழ் பெற்ற புலமையன்றி அவரால் இவ்வாறு தமிழ் நூல்களை திறம்பட பதிப்பித்திருக்க முடியாது. இவ்வாறு மொழியின் மீது ஆர்வம் கொண்ட உ.வே.சாமிநாத ஐயர் 28.04.1942ல் இயற்கை எய்தினார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

13. ஓலைச்சுவடிக்கு உயிர்கொடுத்த உ.வே.சா.

மா. அமுதா, எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

தமிழ்த்தாத்தா என நாம் வரலாற்றில் அறியப்படும் அறிஞர் உ.வே.சாமிநாத ஐயர். அவர் ஓலைச்சுவடிகளில் கறையான் தின்று அழித்துக்கொண்டிருந்த சங்க நூல்களையெல்லாம் கொண்டு கூட்டிப் பொருள் கண்டு அவற்றை நூல்களாகப் பதிப்பித்தவர். சிறந்த பதிப்பாசிரியராக விளங்கிய உ.வே.சாமிநாத ஐயர் தோன்றியிருக்காவிட்டால் சிலப்பதிகாரம் பற்றித் தெரியாமல் போயிருக்கும். அகநானூற்றிற்கும் புறநானூற்றிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு புதைந்திருக்கும். அவர் தோன்றிய காலத்தில் பள்ளத்தில் இருந்த தமிழின் நிலை அவர் மறைந்த காலத்தில் இமயமலைபோல் உயர்ந்து ஓங்கிய புகழை அடைந்தது என்றே கூறலாம். தமிழ்த்தாத்தா பதிப்பித்த நூல்களும் அவரின் உரைநூல்களும் ஆராய்ச்சிக் களஞ்சியமாக விளங்குகின்றன.

உ.வே.சா என்னும் தமிழ்க்கனலின் தோற்றம்

சோழநாடு சோறுடைத்து என்று சிறப்பித்துச் சொல்லக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் அருகிலுள்ள உத்தமதானபுரம் என்கிற கிராமத்தில் வேங்கட சுப்பையா – சரசுவதி தம்பதியரின் மகனாக 1855 பிப்ரவரி 19 ஆம் தேதி பிறந்தார். வேங்கடநாதன் என்னும் பெயர்கொண்ட அவரை பிற்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் பயிலும்போது சாமிநாதன் எனப்பெயர் மாற்றினார் அவரது ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. பின்னர் ஊர்ப் பெயரையும் தந்தை பெயரையும் முன்னெழுத்தாகக் கொண்டு உ.வே.சாமிநாதன் ஆனார். அதனைச் சுருக்கி உ.வே.சா என அழைத்தனர்.

ஓலைச்சுவடி

பழங்காலத்தில் தமிழ்ப்படித்த பெருமக்கள் தாங்கள் கண்ட காட்சிகள், தமக்குத் தோன்றிய கற்பனை, தம்மை ஆதரித்த அரசர், நாடு, சமுதாய நிலைமைகளைக் கல்வெட்டு, செப்புத்தகடு,துணி போன்றவற்றை சூழ்நிலைக்கேற்றாற்போல் பயன்படுத்தி செய்திகளாக்கினார்கள். இதற்கடுத்து மிகவும் எளிதாகக் கிடைக்கக்கூடியதும் சுலபமாக எழுதவும் உதவியாக இருந்த பனை ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இந்தப் பனை ஓலைச்சுவடிகளில்தான் மாபெரும் காவியங்களையும் கற்பனை ஓவியங்களையும் எழுதினார்கள். இந்தச் சுவடிகளில் சிலவற்றை எழுதியவர்களின் பரம்பரையே பாதுகாத்து வந்தது. வேறு சிலவற்றை அரசாங்கமே பாதுகாத்தது. சிறப்பான படைப்புகளை அடுத்தடுத்த புலவர்களும் தமிழன்பர்களும் நகல் எடுத்தும் பாடம் சொல்லியும் சுவடிகளாகக் காப்பாற்றி வந்தார்கள். அன்றைய சூழ்நிலையில் மன்னர்கள், செல்வந்தர்கள், கோயில், கடவுள்களைப் பற்றிப் பாடி, அதில் கிடைக்கின்ற பொருள் மூலமாகவே பெரும்பாலான புலவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்தி வந்தனர். பழந்தமிழ் இலக்கியங்களை அனைவரும் படிக்கும் நிலை இல்லை. தமிழ்த்தாத்தா காலத்திலும் இந்த நிலைதான் இருந்தது.

இந்நிலையை மாற்ற உ.வே.சா அவர்கள் எளிய முறையில் இலக்கியங்களைப் பதிப்பித்து மக்களிடையே அளிப்பதுதான் அவற்றைப் பரப்புவதற்குச் சிறந்த வழியாகும் என எண்ணினார். இதனால் அவர் ஓலைச்சுவடிக்கு உயிர்க்கொடுக்க ஆரம்பித்தார்.

மணிமேகலை

மணிமேகலை என்னும் பெருங்காப்பியம் முப்பது காதைகளுடன் 4,745 அடிகள் கொண்டதாகும். இதன் எட்டாவது காதையாகிய ***மணிபல்லவத்துத் துயருற்ற காதை*** அறுபது அடிகள் கொண்டதாகும். இதுவே மணிமேகலையின் சிறிய காதையாகும். 29 வது காதையாகிய ***தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை*** 472 அடிகளைக்கொண்டதாகும். இதுவே பெரிய காதையாகும். உ.வே.சா அவர்கள் 1898 ஆம் ஆண்டு முதன்முதலாக மணிமேகலை என்னும் இக்காப்பியத்தை வெளியிட்டார். பத்துச்சுவடிகளை ஒப்புநோக்கி ஆய்ந்து வெளியிட்டார். பிற பழந்தமிழ் நூல்களை வெளியிட எடுத்துக்கொண்ட சிரமத்தினும் கூடுதலான சிரமத்தை இந்நூற்பதிப்புக்கு அவர் எடுத்துக்கொண்டார்.

- ***பிழைகளைப் பிழைகளென்று நிச்சயித்துக் களைத்துதிருத்தமான பாடங்களைத் தெரிந்துகொள்ளுதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் கழிந்த காலமும் அடைந்த வருத்தமும் அளவுபடுவனவல்ல***

என்று உ.வே.சா அவர்கள் குறிப்பிடுவது இக்கருத்தை மெய்ப்பிக்கும். இது பௌத்த சமயநூல் என்பதும் பழைய குறிப்புரையேதும் இதற்கு இல்லை என்பதும் சிரமத்திற்கு முக்கியக் காரணங்களாகும்.புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் பற்றிய விரிவுரை கட்டுரையுடன் முதற்பதிப்பு வெளியான பல ஆண்டுகளுக்குப் பின்னர் 1921 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இப்பதிப்புக்கு மேலும் இரண்டு மூலப்பிரதிகள் உதவின. இவ்விரண்டாம் பதிப்புச் செம்பதிப்பாகும். மூன்றாம் பதிப்பு 1931 இல் மேலும் சில விளக்கங்களுடன் திருந்திய செம்பதிப்பாக வெளிவந்துள்ளது. புத்த சரித்திரம், பௌத்த சங்கம் பற்றிய விரிவுரைக் கட்டுரை 1898 ஆம் ஆண்டிலேயே தனிநூலாக வெளிவந்துள்ளது. 1921 ஆம் ஆண்டு வெளிவந்த மணிமேகலை பதிப்பிலிருந்து அப்பகுதி நூலுடன் வெளியிடப்பெறவில்லை. 2005 ஆம் ஆண்டு உ.வே.சா அவர்களின் நூலகப் பதிப்பாக அவரின் உரைநடை நூல்கள் நான்கு தொகுதிகளாக வெளியிடப்பெற்றுள்ளன. பௌத்த சமயத்தின் நுணுக்கமான செய்திகள் ***சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை*** (27) ***தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை*** (29) ***பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை***(30) ஆகிய காதைகளில் மிகுதியாக உள்ளன. இப்பகுதிகளுக்கு உ.வே.சா அவர்கள் குறிப்புரை செய்தமை அளவிடற்கரிய சாதனை என்றே கூறலாம்.

குறிஞ்சிப்பாட்டு

சிந்தாமணியைப் பதிப்பிக்க தமிழறிவு மட்டும் போதாது என்பதை உணர்ந்த உ.வே.சா சமணர்களிடம் கெஞ்சிக்கேட்டு பின்பு சமணப் பேரறிவைப் பெற்றார். சீவக சிந்தாமணியைப் பதிப்பித்த பிறகு பத்துப்பாட்டு நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கினார். ஒரு பிரதிக்கு 5 ரூபாய் வீதம் 50 ரூபாய் கொடுத்துப் பத்துப்பாட்டு நூல்கள் முழுவதையும் வாங்கினார். அவர் காலத்தில்

50 ரூபாய் என்பது தற்காலத்தில் 5 இலட்சத்திற்குச் சமமான தொகையாகும். பத்துப்பாட்டைத் தொகுப்பதற்கு அவர் பட்ட சிரமத்திற்கும் உற்ற துயரத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

பத்துப்பாட்டில் எட்டாம் பத்தாகிய குறிஞ்சிப்பாட்டு ஆரிய ***மன்னன் பிரகதத்தனுக்குத்*** தமிழ் அறிவிக்குமாறு கபிலர் பாடியது. தலைவியும் தோழியும் பூக்களைப் பறித்துப் பாறையில் குவிக்கின்றனர். குவிக்கப்பட்ட பாறைக்கும் கொள்ளை வாசனை தரும் அந்த தொண்ணூற்று ஒன்பது பூக்களை வரிசைப்படுத்துகிறார் புலவர். அப்பூக்களில் சில பூக்களின் பெயர்கள் மட்டும் இல்லை. விட்டுப்போன அந்தப் பூக்களின் பெயர்கள் எந்தப் பிரதியிலும் கிடைக்காததால் பூவிழந்த கைம்பெண்ணாய் புலம்புகிறார் உ.வே.சா.

261 அடிகள் கொண்ட குறிஞ்சிப்பாட்டில் 64, 65 அடிகளில் தொடுக்கப்பட்ட மூன்று பூக்கள் மட்டுமே விடுபட்டுள்ளன.

"ஒண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி ……
………. ……… கூவிளம்" (குறிஞ்சிப்பாட்டு 62-65)

இங்கே விடுபட்டுப்போன மலர்கள் எவை? எங்கேயும் கிட்டவில்லையே! என்னடா இது! குறிஞ்சிக்கு வந்த சோதனையா? அல்லது நமக்கு வந்த சோதனையா? என்று உ.வே.சா. தவிப்பதை, கண்ணனைக் காணாமல் தேவகி தவிப்பதற்கு ஒப்பாகக் கூறலாம். கண்ணனின் பிள்ளைத்தனக் குறும்புகளைக் காணாத தேவகி புலம்புகிறாள். இவற்றை,

மல்லை மாநகர்க் கிறையவன் தன்னை
வான்செ லுத்திவந் தீங்கணை மாயத்து
எல்லை யில்பிள்ளை செய்வன காணாத்
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் (பெருமாள் திருமொழி)

என்ற அடிகளில் காணலாம்.

சொன்மாலை தொடுத்தல்

உ.வே.சா அவர்களின் நினைவில் ஒரு மின்னல் பளிச்சென்று வெட்டியது. நாம் இம்மூன்று மலர்களைத் தேடாத இடம் தருமபுர ஆதீனம் மட்டும்தான். அங்கு சென்று பார்த்துவிடலாம் என்று முடிவு செய்தார். ஆனால் உ.வே.சா. ஐயரை ஆதரித்த ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம். அச்சமயத்தில் தருமபுர ஆதீனத்திற்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் மனஸ்தாபம். மனஸ்தாபம் என்பதைவிட இரண்டு ஆதீனங்களுக்கிடையே வழக்கு நடைபெற்ற காலம் என்றும் கூறலாம். ஐயர் துணிந்து ***தமிழ் மானம் காப்பவன் தன்மானம் பார்ப்பதில்லை*** என்ற வரிகளை மனதில் கொண்டு தம்மைப் பெரிதும் ஆதரிக்கும் திருவாவடுதுறை ஆதீனத்தின் அனுமதியுடன் தருமபுரம் செல்கின்றார். அங்கு உயரமான குத்துவிளக்கின் ஒளியில் இரவெல்லாம் தேடி இறுதியாக ஓர் ஏட்டிலே விடுபட்டிருந்த அந்த மூன்று மலர்களின் பெயர்களைக் கண்டார். அம்மலர்கள்

தேமா – தேமாம்பூ
மணிச்சிகை– செம்மணிப்பூ
உரிதிநாறு அவிழ் - தனக்கு உரித்தான மணத்துடன் விரிந்த கொத்தினையுடைய

தொத்து உந்தூழ் பெருமூங்கிற்பூ

இவற்றைக் கண்ட உ.வே.சா. வின் இன்பத்தை, யசோதை கண்ணனைக் கண்டு பெறும் எல்லையில்லா இன்பத்திற்கு இணையாகக் கூறலாம். இக்கூற்றை,

“வெண்தயிர் தோய்ந்த செவ் வாயும்
அழுதை யுமஞ்சி நோக்குமந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்
தொழுகை யுமிவை கண்ட அசோதை
தொல்லை இன்பத் திறுதிகண் டாளே ” (பெருமாள் திருமொழி)

என்ற அடிகளில் மெய்ப்பிக்கலாம்.

குறிஞ்சிப்பாட்டில் விடுபட்டிருந்தது சிறு பகுதியே என்றாலும் உ.வே.சா. இதற்கு மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். பின்பு அவர் தொண்ணூற்று ஒன்பது மலர்களைத் தொகுத்து சொன்மாலையாக்கினார்.

கண்டனக் கடிதம்

பத்துப்பாட்டில் எட்டாவதான குறிஞ்சிப்பாட்டுக்கு உ.வே.சா. அடைந்த இன்னல்களை அறிந்தாலே போதும்,மற்ற நூல்களுக்கு அவர் எவ்வளவு அலைந்திருப்பார் என்பதை அறிந்துகொள்ளலாம். பத்துப்பாட்டின் இயல்பை அறிந்துகொள்வதற்காக ஏட்டுச்சுவடிகளைத் தேடி பல இடங்களிலும் அலைந்தார். பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டிருக்கையில் அவரது வளர்ச்சி கண்டு பொறுக்காத சிலர், சீவகசிந்தாமணி குறித்து கண்டனக் கடிதங்களை எழுதினார்கள். உ.வே.சா. பதிப்பித்த சீவகசிந்தாமணியில் பிழை இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்ததோடு சைவ மடத்தில் இருந்து வளர்ந்த ஒருவர் எப்படி ஜைன நூலைப் பதிப்பிக்கலாம் என்று அந்தக் கண்டனக் கடிதத்தில் கேட்டிருந்தார்கள். உ.வே.சா. இதற்குப் பதில் கடிதம் எழுதி அதை அனுப்புவதற்கு முன் தம்முடன் பணியாற்றி வந்த கல்லூரிப் பேராசிரியரான **சாதுசேஷய்யரிடம்** காட்டினார். அதை வாங்கிப் படித்த அவர் அந்தக் கடிதத்தைக் கிழித்துத் தூக்கி எறிந்தார். பின் உ.வே.சா. விடம் அவர் இப்படிப்பட்ட கண்டனங்களுக்குப் பதில் எழுதி நேரத்தைச் செலவிடக்கூடாது. அப்படிச் செய்தால் உங்கள் வேலைகளில் தடங்கல்கள் அதிகரிக்கும் என்று கூறினார். குறை கூறுபவர்கள் கூறிக்கொண்டேதான் இருப்பார்கள். அதைப் பொருட்படுத்தாமல் நாம் நேர்மையான வழியில் நம் செயல்களைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். இவ்வாறு செய்ததால் உ.வே.சா. வால் நிலையான புகழை அடைய முடிந்தது.

குறுந்தொகை உரை

குறுந்தொகையுரையில் ***முளிதயிர் பிசைந்த*** என்னும் பாடலுக்கு உ.வே.சா. கூறிய பொருள் பொருத்தமானதாக இல்லை என்று எஸ். வையாபுரிப் பிள்ளை பின்வருமாறு உரைக்கின்றார்.

உ.வே.சா. அவர்களால் சுமார் 1930 வரைதான் தாமாக முழுப்பொறுப்பையும் ஏற்று நன்றாக உழைக்க முடிந்தது. அதற்குப் பின் தளர்ச்சி மேலீட்டினால் ஐயர் தமது சீடர்களையே நம்பிவிட வேண்டியதாயிற்று. இதனால் முன் பதிப்பித்த நூல்களின் செம்மைப்பாடு பின்வந்தவற்றுள் இல்லை. இதற்கு உதாரணமாகக் குறுந்தொகை பதிப்பைக் காணலாம்.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ (குறுந்தொகை - 127)

- **என்ற அடிகளுக்கு முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக்கொண்ட ஆடையைத் துவையாமல் உடுத்துக்கொண்டு** என்று பொருள் கூறுகின்றார் உ.வே.சா. மறைமலையடிகள் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையில் மேலே காட்டிய வரிகளுக்கு,
- **வற்றக் காய்ச்சின கட்டித்தயிரைப் பிசைந்த காந்தள் மலர்போல் சிவந்த மெல்லிய விரல்களால் நன்கு கழுவி வெண்மையான உயர்ந்த ஆடை, சமையல் செய்யும்போது இடுப்பினின்று அவிழ்ந்து கழல அதனைக் கை கழுவாமலே உடுத்துக்கொண்டு,**

என்று பொருள் உரைக்கின்றார். இப்பொருளே பொருத்தமாக உள்ளது என்று உரையாசிரியர்கள் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த நூல்கள் அனைத்திற்கும் முழுப்பொருள் விளங்கும்படி செய்பவர். அவரது சீடர்களாலேயே இவை நிகழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றன.

முடிவுரை

உ.வே.சாமிநாத ஐயர் என்ற அந்தணக் கிழவன் தமிழுக்குக் கிடைத்த சந்தனம். சந்தனம் எவ்வாறு தன்னை உரச உரச மணத்தை அதிகமாகப் பரப்புமோ அதனைப் போன்றே உ.வே.சா. அவர்களும் தன்னைத் தேய்த்து தேய்த்து தமிழ் மணத்தைப் பரப்பியிருக்கிறார். அதுமட்டுமின்றி மரபு வழிப்பட்ட தமிழ்ப் பெரும் புலமையாளர்களுக்குத் திகட்டாத தெள்ளமுதாகவும் தமிழார்வலர்களுக்கு அரும்பெருஞ் செல்வமாகவும் விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது. இவ்வுலகம் அழிந்தாலும் அவரது புகழ் அழியாமல் நிலைத்து நிற்கும்.

ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்

1. மணிமேகலை – டாக்டர் உ.வே.சா. பதிப்பு – டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்.
2. தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் வாழ்க்கை வரலாறு – சைதை முரளி – ஆரம் வெளியீடு –பிப்.2016

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

14. புறநானூற்றில் உ.வே.சா.வின் ஆராய்ச்சி பதிப்பு

திருமதி மு. புவனேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., டி.கோப்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

தமிழ்த்தாத்தா பதிப்பித்த எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு முதலாவதாகும். ஆதலால் முகவுரையில் எட்டுத்தொகைகளையும் பற்றிய வரலாற்றை எழுதியுள்ளார். அகம், புறம் என்னும் இருவகைப் பற்றிய இயல்பையும் விளக்கியுள்ளார். மேலும் புறநானூற்றால் தெரிய வந்த பலவகைச் செய்திகளையும் தொகுத்து ஓர் அகவலாக அமைத்துள்ளார்.

புறநானூற்றின் ஆராய்ச்சி

முதலில் ஆராய்ச்சி என்ற எண்ணத்திற்கு அடிப்படைக் காரணம் (பைபிள்) ஏனென்றால் பைபிளில் ஒரே விதமான சொற்றொடர்களும் வருகின்றன. அவற்றைத் தொகுத்து வைத்து ஆராய்ந்தமையால் சில விஷயங்களின் உண்மையான பொருளும் சில சொற்களின் திருத்தமான உருவமும் புலப்பட்டனவாம். பைபிளில் ஏறியிருந்த பிழையான பாடங்கள் இந்த சோதனையினால் திருத்தமடைந்தனவாம்" என அறிந்தவுடன் (உ.வே.சா) புறநானூற்று ஆராய்ச்சியில் புதுமுறை ஒன்று தோன்றியுள்ளது.அகராதியாகச் செய்து கொண்டு ஆராய்ச்சி செய்தால் உண்மையுருவத்தை கண்டுப் பிடிப்பது சுலபமாக இருக்கும் என்று அறிந்துகொண்டார். அங்ஙனமே செய்தும் வைத்துள்ளார்.

சங்ககால நூல்கள்

சங்க காலத்து நூல்களில் வழங்கிய மரபை அறிவதற்கு அவை அனைத்தையுமே ஆராய வேண்டும். சங்க நூல்கள் சேர்ந்த ஓர் உடம்பு போன்றவை. அவ்வுடம்பு முழுவதும் ஒரு வகையான நாடி ஓடும். ஆகையால் அவற்றை முற்றப் பயின்றால்தான் அந்த மரபு தெளிவாக விளங்கும். இதை உத்தேசித்து சங்க நூல் முழுவதையும் ஆராய்ச்சி செய்வதும் அவற்றின் சிறப்பை தெளிவாக அறிந்துகொள்ள சங்க நூல்களுக்கு அகராதி எழுதி வைத்து உள்ளார். ஆனால் அவருக்கு இவ்வகை ஆராய்ச்சிக்காக பலபேருடைய உதவியை நாட வேண்டியதும் இருந்தது.

இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள்

புறநானூற்றுச் செய்யுட்களையும் செய்யுட் பகுதிகளையும் இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். மேற்கோள் காட்ட வேண்டிய காரணத்தையும் ஆராய்ந்தால் பாடம் திருத்துவதோடு பாட்டின் கருத்தும் விளங்கும். உரைகளைப் படித்து வரும்போது அங்கங்கே வரும் மேற்கோள்களில் தனக்குத் தெரிந்தவற்றிற்கு ஆதாரம்

ஆங்காங்கே குறித்து வைப்பது அவர் வழக்கமாக இருந்தது. அச்சிடப்பட்ட தொல்காப்பிய உரைகளிலும், திருக்குறள் உரையிலும் வேறு உரைகளிலும் கண்ட மேற்கோள்கள் பலவற்றின் இடங்களை அவரின் கைப்புத்தகங்களில் குறித்துக் கொண்டிருக்கிறார்.

அஸ்திவாரம்

மேற்கோளாராய்ச்சிலே சென்ற காலம் மிக அதிகம் பிரயோகங்களைத் தொகுத்து வகைப்படுத்துவதிலே உண்டான சிரமம் எவ்வளவோ மிகுதியாக இருந்தாலும் ஒருமுறை பட்ட கஷ்டம் பல நூற்பதிப்புக்கு உபயோகமாக இருந்தது. அக்காலத்தில் அவர் செய்து வைத்துக் கொண்ட பலவகை அகராதிகளே இன்றும் மூல நிதியாக உதவுகின்றன. அவற்றைக் காணும் போது எவ்வளவு காலம் எவ்வளவு அன்பர்களோடு உழைப்பு என வியப்பாய் இருக்கிறது. தொல்காப்பியம் பொருளதிகார உரையில் பல இடங்களில் புறநானூற்றுச் செய்யுள்கள் மேற்கோளாக வந்துள்ளது காணலாம்.

திணையும் துறையும்

புறநானூற்றுப் பிரதிகளில் உள்ள பாடல்கள் சிதைந்தும் உரையில் உள்ள பாடங்களும் மாறி காணப்பட்டன. அவ்வுரையாசிரியர்கள் பதப்பொருளை இனிது விளக்கி உரிய இடங்களில் சொற்களை முடித்துக்காட்டி இலக்கணக் குறிப்பையும் திணை துறைகளையும் ஆங்காங்குள்ள பழமொழிகளையும் அணியையும் சொல்நயம் பொருள் நயங்களையும் புலப்படுத்துகின்றார். எனவே புறநானூற்றுக்குப் பழைய உரை ஒன்று இருந்திருக்கலாமென்ற எண்ணம் உண்டாகிறது. ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் திணையும் துறையும் பாடினோர் பெயரும், பாடப்பட்டோர் பெயரும் உள்ளன. நச்சினார்க்கினியார் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூல்களின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டும் என்று எழுதியிருக்கிறார்.

சரித்திரச் செய்திகள்

பலவகையான பாட பேதங்கள் இருந்தன தனியே தொகுத்து வைத்துக் கொண்டு பிறநூல்களில் அப்பெயர்கள் வந்துள்ள இடங்களை ஆராய்ந்தார். இந்த சரித்திர ஆராய்ச்சி பெரிய சமுத்திரமாக இருந்தது. சமுத்திரத்திற்காவது ஒரு பக்கம் கரையுண்டு இதற்கு எந்தப் பக்கத்திலும் கரையே இல்லை. தபால் இலாகாவில் ஸீபரிண்டெண்டெண்டாக இருந்த ஸ்ரீ வி.கனகசபைப் பிள்ளை என்பவர் தமிழ் நூல்களிலும் தமிழ் நாட்டுச் சரித்திரத்திலும் ஈடுபட்டவர். தமிழர் சரித்திரம் எழுத வேண்டுமென்ற கருத்தோடு அவர் ஆராய்ந்து பல செய்திகளையும் தொகுத்து வந்தார். அந்த முயற்சியின் விளைவாகப் பிறகு அவர் ஆங்கிலத்தில் “1800 வருஷங்களுக்கு முந்திய தமிழர்” என்ற அரிய புத்தகத்தை எழுதி வெளியிட்டார்.

துஞ்சிய என்னும் சொல்

புறநானூற்றில் 34ஆம் பாட்டு கிள்ளி வளவனென்ற சோழ அரசனை ஆலத்தூர் கிழாரென்ற புலவர் பாடியது. அதில் அவர்

"கொண்டன் மாமழை பொழிந்த
துண்ப∴ றுளியினும் வாழிய பலவே"

என்று வாழ்த்தும் போதே பாட்டின் இறுதியில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை "ஆலத்தூர் கிழார் பாடியது" என்ற குறிப்பு உள்ளது.இதில் "துஞ்சிய" என்பது இறந்த என்ற பொருள் அமைவதால் அவற்றை கனகசபைப் பிள்ளையிடம் தெரிவித்த போது அவ்வாறே பொருள் கொள்ளுதல் வேண்டும் என்பதற்கு உதாரணமாக சிலப்பதிகாரம், தேவாரம், இப்படியே அரசர்கள் இறந்த காலத்தை அவர்கள் பெயர்க்கு விசேடணமாக்கிக் கூறுதல், கோழிக்கோட்டு ஸாமூதிரி அரசரின் பரம்பரை வழக்கம், திருவனந்தபுரத்தரசரின் வழக்கமும் இதுவே என பிறவிடங்களிலுள்ள வழக்கத்தையும் தெரிவித்தார். இறுதியில் இந்த அருமையான புறநானூறு வெளிவந்தால் தமிழ் நாட்டார் பல ஆச்சரியமான செய்திகளை உணர்ந்து கொள்வார்கள். தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியைப் பலர் மேற்கொள்வார்கள் விரைவில் பதிப்பித்து நிறைவேற்ற வேண்டும் என்றும் எழுதினார். அதன்படி புறநானூற்றை ஒருவகையாக அச்சுக்குக் கொடுப்பதற்காகச் சென்னைக்குப் புறப்பட்டுப் பதிப்பு ஆரம்பித்தார்.

ஏட்டுச் சுவடிகளின் நிலை

உரையில்லாத மூலங்கள் எழுத்துச் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி இவற்றின் சில பாடல்களின் பின் திணை, துறை என இரண்டும் எழுதப்படாமலும் சிலவற்றின் பின் பாடினோர் பெயர் சிதைந்தும், சில முதல் பாகங் குறைந்தும் சில இடைப்பாகங்கள் குறைந்தும் சில கடைப்பாகங்குறைந்தும் சில முற்றுமின்றியும் ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறு பாடல்களுடன் பொருளுண்மை காணாத வண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. இவற்றில் பழைய உரைகளின் இடையிடையே உரையாசிரியர்களால் பூர்த்தியாகவும் எடுத்துக் காட்டப்பட்டிருந்த உதாரணங்கள் பாடல்களில் பொருளை காண்பதற்கும் வரையறை செய்து கொள்ளுதற்கும் பெருந்துணையாக இருந்தன என்பவற்றையும் காணலாம்.

தமிழ்த்தாத்தா (உ.வே.சா) பிரமிப்பு

ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவும் என்ற ஞாபகத்தால் புறநானூற்றில் கண்ட நாடுகள். கூற்றங்கள், ஊர்கள், மலைகள், ஆறுகள் என்பவற்றின் பெயர்களை அகராதி வரிசையில் தொகுத்து அமைத்துள்ளார். பாடினோர் பாடப்பட்டோர் வரலாறுகளைச் சுருக்கமாகத் தெரிவித்து அவர் பெயர்களில் காணப்படும் பேதங்களையும் தனியே பதிப்பித்துள்ளார். விஷய சூசிகை, துறை விளக்கம், துறைக் குறிப்பு, அரும்பத அகராதி, பிரயோக விளக்கம் என்பவற்றைப் பதிப்புக்கு அங்கமாகச் சேர்த்தார். அரும்பத அகராதியில் பதமும் அதன் பொருளும் பிரயோகமும் மேலும் "வி.வெங்கையரவர்களும், வி.கனகசபைப் பிள்ளை அவர்களும் எழுதி அனுப்பிய குறிப்புக்களைப் புத்தகத்தின் இறுதியில் இணைத்துள்ளார். ஆனால் "நிறை குடம் தழும்பாது என்பதற்கேற்ப" புத்தகம் முடிந்து பார்க்கும் பொழுது "நானா இவ்வளவும் செய்தேன்!" என்று

தனக்கே பிரமிப்பாக இருந்ததாகவும் எல்லாம் இறைவன் திருவருளே என்றார். அவரின் புத்தகத்தின் அமைப்பைப் பார்த்து நண்பர்களெல்லாம் பாராட்டியும் எழுதியுள்ளார்.

ஆராய்ச்சியில் விடாமுயற்சி

இந்நூல்களையும் வேறு சில நூல்களையும் ஆராய்ந்து வந்தார். ஒரு நூலைப்பார்த்து வருகையில் சலிப்பு ஏற்பட்டால் வேறு ஒன்றைப் பார்த்தும், ஒன்றுக்குக் குறிப்பு எழுதும்போது தளர்ச்சி உண்டானால் மற்றொன்றைப் படித்தும் இன்புறுவார். இப்படி மாறி மாறி நூல்களைப் பார்த்து வந்தமையால் பல நூல்கள் அவர் ஆராய்ச்சியில் இருந்து வந்துள்ளது. இவை அவரின் விடாமுயற்சியே அடிப்படை காரணம்.

சொந்தவீடும், தமிழாராய்ச்சியும்

புறநானூறு நிறைவேறியவுடன் மேற்கொண்டு ஆராய்ச்சி தொடங்க ஒரு வசதியான வீடு அமைந்தால் நன்றாக இருக்கும் என எண்ணினார். அதன் மூலம் தன் தந்தையின் விருப்பத்தையும் நிறைவேற்றும் வகையில் தன்னிடம் உள்ள தொகையும் தேவைக்கேற்ப கடன் ரூ3000 பெற்று ஸஹாஜி நாயகர் தெருவில் சொந்த வீடு வாங்கினார். குடும்பத்திற்கு வசதியாக அமைந்துவிட்டன. ஒரு நல்ல நாளில் சொந்த வீட்டிற்கு புகுந்தும் தமிழாராய்ச்சியை நடத்தி வந்தார்.

ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர்

புறநானூற்றைப் பெற்று கடிதமெழுதியுள்ளார். அதில் தங்களால் லோகோபகாரமாய் அரிய நூல்கள் அச்சிடுவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட நன்முயற்சிக்கு என்னால் இயன்ற உதவியை செய்வேன் என (14-11-1897)ல் எழுதியுள்ளார். பிறகு அவரை காண வேண்டிய சூழ்நிலை அமைந்த அப்போது புறநானூற்றைப் பதிப்பித்த போது புறத்துறைகளின் இலக்கணத்தை தெரிந்து கொள்வதற்கு புறப்பொருள் வெண்பாமாலை மிகவும் உபயோகமாயிற்று நன்கு ஆராய்தேன் என்று கூறினார்.

செய்யுள் கடிதம்

தனக்கு உதவிப்புரிந்த பாண்டித்துரைதேவர் மற்றும் தேசிகளுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவை வருமாறு சில வரிகள்

"பயன்சிறிய தேனும் பனையளவாக் கொள்வர்
நயன்றெரிவோ ரென்றவுண்மை நாடி-முயன்றிதுபோ"
"தைந்நூறு ரூபா வனுப்பினை ஃதேற்றருள்வாய்
மெய்ந்நூ றுரீஇயொழுகும் வித்தக – மைந்நூறி"

என பாண்டித்துரைத் தேவர் செய்த உதவியை பாராட்டி எழுதியதோடு அம்பலவாண தேசிகரிடமும் தெரிவித்தார். இவ்வாறு இவ்விருவரும் உதவிய பொருளைக் கொண்டு வீட்டுக்காகத் தான் வாங்கிய கடனை அடைத்துள்ளார். தன் தந்தையின் ஆசையை நிறைவேற்றியும் உள்ளார்.

புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருள் வெண்பாமாலை என்பது புறப்பொருளின் இலக்கணத்தைக் கூறும் சூத்திரங்களையும் அவ்விலக்கணத்துக்கு இலக்கியமாகிய வெண்பாக்களையும் கொண்டது. வெண்பாமாலை என்றும் அதற்கு ஒரு பெயர் உண்டு. இதன் ஆசிரியர் ஐயனாரிதனார் என்பவர் அந்நூலின் ஆசிரியர். அவருடைய உரையின் ஆசிரியர் இன்னாரென்று அக்காலத்தில் யாருக்கும் தெரிய வாய்ப்புகள் குறைவு அவருக்கும் தெரியவில்லை. பிறகு இராமநாதபுரம் மகாவித்துவான் ஸ்ரீ ராம இராகவையங்கார் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்த ஒரு சுவடியிற் கண்ட குறிப்பினால் அவ்வுரையாசிரியர் மாகறல் சாமுண்டி தேவநாயகரென்று புலப்படுவதாகத் தெரிவித்தார்.

இளம்பூரணார், உ.வே.சா நட்பு

புறப்பொருள் சம்பந்தமான நூலை தி.த.கனக சுதந்தரம்பிள்ளை உ.வே.சா.விடம் கொடுத்து இந்த பழைய சுவடி என்னவென்று தெரியவில்லை என அவரிடம் தந்தார். கையில் உள்ள ஏடுகளை மிகவும் சிரமப்பட்டு ஒழுங்குபடுத்திப் பிரதி செய்வித்தேன். அதில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் உரையென்று தெரிந்தது. மேலும் உரையாசிரியர் இன்னவாறு எழுதினார் என்ற குறிப்பு இருந்தது. அக்குறிப்பிலிருந்து என்னிடமிருந்த தொல்காப்பிய உரை, உரையாசிரியரென்று வழங்கும் இளம்பூரணருடையதென்று தெரிய வந்தது. அவற்றை அறிந்த தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் பெரும் மகிழ்ச்சியும் அடைந்தார். பிறகு புறப்பொருள் வெண்பாமாலைப் பதிப்புக்கு வேண்டிய அங்கங்களைச் சித்தம் செய்து கொண்டு சென்னைக்குச் சென்று அதனை அச்சுக்குக் கொடுத்துள்ளார் இதிலிருந்து இளம்பூரணார் உ.வே.சா நட்பு புலப்படுகிறது.

முடிவாக

இத்தமிழ் நாட்டின் பழைய சரித்திரங்களைத் தெரிந்து கொள்ளுதலிலும் தெரிவித்தலிலும் பெரும்பாலும் காலங்கழித்து உழைத்து வரும் உபகாரிகளாகிய விவேகிகள், இந்நூலை நன்கு ஆராய்ச்சி செய்வார்களாயின் இதனால் பலர் வரலாறுகள் முதலியன தெரிந்து கொள்ளுதல் கூடும் என்று புறநானூறு பதிப்பித்தலின் போதே தன் ஆராய்ந்த பதிப்பித்த நூல்களின் சிறப்புகளை அவரே குறிப்பிட்டுள்ளார். மேலும் இத்தலைமுறை மட்டும் இன்றி எத்தலைமுறையாயினும் உ.வே.சா.வின் படைப்புகளும், ஆராய்ச்சி நூல்களுமே தமிழின் தனித்தன்மையையும் அதன் சிறப்பையும் எடுத்து இயம்புவதில் காலக்கண்ணாடியாக விளங்கும் என்பதில் தமிழர்கள் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

15. உ.வே.சாவும் சிந்தாமணியும்

இரா. கவிதா, எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., எம்.ஃபில்., (பி.எச்டி).,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

உ.வே.சா. என்றால், உடனே தமிழ்த்தாத்தா எனும் சிறப்புப்பெயரும், அலைந்து திரிந்து சேகரித்து அவர் பதிப்பித்த பழந்தமிழ் இலக்கியங்களும் முதலில் நினைவுக்கு வரும். தமிழின் முன்னோடிப் பதிப்பாசிரியரான உ.வே.சா அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கல்விப்புலத்தோடு தம் வாழ்க்கையைக் கழித்திருத்திருக்கிறார் என்பது வரலாற்றுச் செய்தியாகும். உ.வே.சா ஆசிரியராகப் பணியைத் துவங்கி 140-வது ஆண்டு தொடங்கும் இந்த நாளில் அவர் பதிப்பித்து வெளியிட்ட சிந்தாமணி சிறப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

சீவக சிந்தாமணியின் மூலமும் உரையும் பெரும்பாலும் அச்சாகிவிட்டன. அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்களுக்கு மிக்க உபயோகமாக இருக்குமென்பதை உணர்ந்த உ.வே.சா. சிந்தாமணிக்கு அங்கமாக அவற்றைச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென்று எண்ணினார். என்ன என்ன விஷயங்கள் முகவுரையில் எழுத வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்து, நூலைப் படிப்பதற்கு முன் அதிலுள்ள முக்கியமான செய்திகளையும், நூலின் பெருமைகளையும் உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்பவர்கள் தெரிந்து கொள்வது நலமாக இருக்கும் என எண்ணினார். முதலில் செய்யுட்களின் முதற் குறிப்புகளை எழுதி ஒருவகையாக அகராதி செய்து வைத்துக் கொண்டு சிந்தாமணியைப் பதிப்பிக்கலானார்.

உ.வே.சாவின் பிறப்பு

பிப்ரவரி 19, 1855 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், தஞ்சை மாவட்டத்தில், பாபநாசத்தில் உள்ள சிற்றூர் உத்தமதானபுரத்தில் வேங்கடசுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாளுக்கு மகனாய்ப் பிறந்தவர். உ.வே.சா என்று அன்போடு அழைக்கப்படும் உத்தமதானபுர வேங்கடசுப்பையர் சாமிநாதன்.

உ.வே.சாவின் கல்வியும் பணியும்

இவருடைய தொடக்கநிலை கல்வியானது உத்தமதானபுரத்திலேயே தொடங்கியது. தந்தை ஓர் இசைக்கலைஞர், இசைப் பயிற்சியையும் மேற்கொண்டார். பதினேழாம் அகவையில் தஞ்சை திருவாடுதுறை சைவ ஆதினத்தில் தமிழ் பயிற்றுவித்த திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் சுமார் 5 ஆண்டு காலம் தமிழைக் கற்றார். உ.வே.சா விற்கு சிறுவயதிலேயே ஆங்கில எழுத்துகள் மட்டும் கற்றிருந்தார். இவருக்குத் தமிழில் ஆர்வம்

உண்டாக முதன் முதலில் தமிழைக் கற்பித்தவர் திரு. சடகோப ஐயங்கார் அவர்களே என்று உ.வே.சா. அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிந்தாமணி பதிப்பு

இராமசாமி முதலியாரின் நட்பே உ.வே.சா.வின் பெரும் தமிழ்த்தொண்டிற்கு அடித்தளமிட்டது. அவருடைய உரையாடலின்போது தாம் கற்றறிந்த நூல்களான அந்தாதி, பிள்ளைத்தமிழ், கோவை, நைடதம், பிரபுலிங்க லீலை என்ற புத்தகங்களைக் கூறினார். இவற்றில் மனம் ஒட்டாத முதலியார் அவர்கள் இதற்கு முத்தாய்ப்பாய்த் திகழ்ந்த மூலநூல்களைப் பற்றி வினவினார். உ.வே.சா. அவர்களுக்குச் சிந்தாமணியைப் படிக்கும் வாய்ப்பு கிடைக்காததால் மூலநூலில் சிந்தாமணியை எடுத்துக்காட்டாக அவர் கூறினார். மூலநூலின் நகல் ஒன்றை கொடுத்தார். சிந்தாமணியின் சுவையை உணர்ந்த உ.வே.சா. சமயத்தாலும் நிதி பற்றாக்குறையாலும் விடாது சிந்தாமணியை அச்சேற்றி வெற்றிக் கண்டார். அச்சேறிய நூலில் சிந்தாமணி நூலிற்கு விரிவான முகவுரை எழுதிச் சேர்த்தார். அதற்கு முன் வரை தமிழ்ப்புத்தகங்களில் முகவுரை இருந்ததில்லை. இதனைத் தொடர்ந்து முதன்முறையாக நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாற்றையும் இணைத்து மதிப்பைக் கூட்டினார். அதன் பின் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, புறநானூறு, புறப்பொருள்வெண்பாமாலை ஆராய்ச்சி, மணிமேகலை ஆராய்ச்சிகளை அச்சேற்றி வெற்றிக்கண்டார். ஏட்டுச்சுவடிகளை மீட்டெடுத்தல், சீவகசிந்தாமணி, சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் என பலவகைப்பட்ட 90 ஓலைச்சுவடிகளை மீட்டெடுத்து நூல் வடிவம் கண்டார் உ.வே.சா.

சிந்தாமணியில் மேற்கோள்கள்

நூலைப் பதிப்பித்து வருகையில் அங்காங்கே உள்ள மேற்கோள்களில் விளங்கியவற்றிற்குரிய ஆதாரங்களை அடிக்குறிப்பில் புலப்படுத்தியிருந்தார். பிறகு விளங்கிய மேற்கோள்களையும், விளங்காத மேற்கோள்களையும் தனித்தனியே தொகுத்து எழுதி வைத்துக்கொண்டார். இவற்றையெல்லாம் நூலுக்குப் பின்பு அமைக்கலாமென்று முடிவெடுத்தார். முகவுரைக்கு அடுத்தபடி நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு எழுத நிச்சயித்தார்.

சரித்திரச்சுருக்கம்

சீவகசிந்தாமணி தமிழ்நாட்டில் பழக்கமில்லாத நூலாதலால் அதிலுள்ள கதையை வசன நடையில் எழுதினால் நூலைப் படிப்பவர்களுக்கு உதவியாக இருக்கும். மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களையுடைய சிந்தாமணிக்கு வசனமெழுதத் தொடங்கினால், அது சீக்கிரத்தில் முடியக்கூடிய காரியம் அன்று என்றெண்ணி, சீவகன் சரித்திரத்தை சுருக்கமாக எழுதி அமைத்து விடலாமென்ற முடிவிற்கு வந்து கதைப்போக்கு விட்டுப் போகாமல் ஒருவகையாக அதை எழுதி முடித்தார். அதை தன்னுடன் பழகும் கல்லூரி ஆசிரியர்களிடமும், ஜைன நண்பர்களிடமும் படித்துக்காட்டினார். அவர்கள் அதை கேட்டு அங்கீகரித்ததோடு சில யோசனைகளையும் கூறினார்கள். அவற்றில் தகுந்தவற்றை தம் பணிக்கு எடுத்துக் கொண்டு சிந்தாமணியில் செயல்படுத்தினார்.

நூலாசிரியர் வரலாறு

நூலாசிரியர் திருத்தக்கதேவர் வரலாற்றை எழுத ஒரு குறிப்பும் கிடைக்கவில்லை. ஜைனர்கள் தமக்குள்ளே கர்ண பரம்பரையாகச் சொல்லி வந்த செய்திகளை அவர்கள் வாயிலாக அறிந்து அவற்றைக் கோவைப்படுத்தி அதனையும் ஒரு வகையாக சேர்த்தார். நச்சினார்க்கினியர் வரலாற்றை எழுதுவதற்குத் துணையாக அவர் உரையைப் பாராட்டும் சிறப்புப் பாயிரப் பாடல்கள் இரண்டு இருந்தன. அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு அம்மகோபகசாரியின் வரலாற்றை எழுதினார். அதில் அவர் உரை எழுதிய வேறு நூல்கள் இன்னவென்று எழுதியதைத் தெரிவிக்கும்போது, பத்துப்பாட்டுக்களின் பெயர்களும் அவற்றைப்பாடினோர், பாடப்பெற்றோர் பெயர்களும் இன்னவென்பதைச் சேர்த்து எழுதினார். தமிழ் நாட்டினருக்கு அது புதிய செய்தியாக இருக்குமென்பது உ.வே.சா வின் கருத்து.

பிறகு சீவகன் சரித்திரத்தில் வரும் சிறப்புப் பெயர்களைத் தனியே எடுத்து அகராதியாக அமைத்து அவற்றை விளக்கி எழுதி, "அபிதானவிளக்கம்" என்ற தலைப்பின் கீழ்ப்புலப்படுத்தினார்.

முகவுரை

முகவுரையை எழுதத் தொடங்கி, நூலின் சிறப்பையும் அந்நூலால் இன்ன செய்திகள் தெரிய வருகின்றன என்பதையும் முதலில் எழுதலானார். 'செந்தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் காப்பியம் ஐந்தனுள் முந்தியதாகிய இந்தச் சீவகசிந்தாமணி என்பது திருத்தக்கதேவரென்னும் ஜைன இலக்கிய உரைகளிலும் இலக்கண உரைகளிலும் உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்ட பிரமாண நூல்களுள் ஒன்று, முற்காலத்து முதல், இடை, கடை என்னும் முச்சங்கத்தும் எழுந்தருளியிருந்து தமிழாராய்ந்த தெய்வப் புலவர்கள் அருளிச் செய்த இலக்கியங்கள் போன்று செந்தமிழ் நடையிற் சிறந்துள்ளது. வடமொழியில் வான்மீகம் போல், எல்லா வருணனைகளும் தன்பால் அமையப் பெற்றிருத்தலின் மகாகாவியமென்று கூறப்பட்டிருத்தலன்று, பிற்காலத்து அதிமதுரமான காப்பியங்கள் இயற்றிய மகாகவிகள் பலர்க்கும் இன்ன இன்னவற்றை இன்ன இன்னவாறு வருணித்துப் பாடுகவென அந்த வான்மீகம் போல வழிகாட்டியதும் இந்நூலே என்பர்.

இவ்வாறு எழுதி விட்டுப் பலமுறை திருப்பித் திருப்பி உ.வே.சா. படித்தார். முதன் முதலாக இந்தத் துறையிலே புகுந்த அவர்க்கு 'நல்ல பெயர் வாங்க வேண்டும்' என்ற கவலை மிகுதியாக இருந்தது. அதனோடு 'பிழையென்று தோன்றும் படி விஷயங்களை எழுதக்கூடாது' என்ற நினைவும் இருந்தது. ஆதலில் தான் எழுதியதைப் பலமுறை பார்த்துப் பார்த்து அடித்தும் திருத்தியும் ஒழுங்குபடுத்திக் கொண்டார். பழக்கமில்லாமையால் ஒவ்வொரு வாக்கியத்தையும் எழுதி முடிக்குபோது சந்தேகமும் பயமும் அவர்க்கு உண்டாயின. 'வான்மீகத்தை இதனோடு ஒப்பிடுவது சரியா? பிழையா? சமஸ்கிருத வித்துவான்கள் ஏதாவது சொன்னால் என்ன செய்வது? என்றும், 'பிற்கால நூல்களுக்கு வழிகாட்டி என்று சொல்லுகிறோமே; ஜைன நூலாகிய இதை

அப்படிச் சொல்லுவதால் சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் அவர் மேல் சினம் உண்டாகுமோ?' என்றும் கலங்கினார். 'நம் மனத்திற்குச் சரியென்று தோன்றியதை எழுதி விடுவோம்; பிறகு தவறென்று தெரிந்தால் மாற்றிக்கொள்வோம்' என்று துணிந்து எழுதலானார். நூலைப் பற்றிய செய்திகளை எழுதிவிட்டு அதனை ஆராய்ந்து பதிப்பித்துச் சம்பந்தமான செய்திகளையும், தனது அன்பிற் சிறந்த ஸ்ரீசேலம் இராமசாமி முதலியார் சிந்தாமணி பதிப்பிக்கும்படி தன்னைத் தூண்டியதையும், பிரதி அளித்ததையும் வேறு பல பிரதிகள் கிடைத்ததையும் சிந்தாமணியில் கூறினார்.

சிந்தாமணி பதிப்பித்தலில் உ.வே.சா அடைந்த இன்னல்கள்

சிந்தாமணியின் பிரதிகளை ஆராய்ந்த போது எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டு மாறுபட்டு இருந்த இந்நூலின் பழைய பிரதிகள் பலவற்றையும் பலகால் ஒப்புநோக்கி இடையறாது பரிசோதனை செய்து வந்த பொழுது, கவிகளின் சுத்த வடிவத்தையும் கண்டு பிடிப்பதற்கும், உரையினுள் விசேஷவுரை இன்னது, பொழிப்புரை இன்னது என்று பிரித்தறிதற்கும், மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்து கோடற்கும், மொழிப்புரையை மூலத்தோடு இயைந்துப் பார்ப்பதற்கும், பிழையைப் பிழையென்று நிச்சயித்துப் பரிசலித்தற்கும், பொருள் கோடற்கும் எடுத்துக் கொண்ட முயற்சியையும், அடைந்த வருத்தமும் பல. அப்படி அடைந்தும் சில விஷயத்திலுள்ள இசைத்தமிழ் நாடகத் தமிழின் பாகுபாடுகளும் மற்றும் சில பாகமும் நன்றாக விளங்கவில்லை. அதற்குக் காரணம் அவ்விசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல் முதலியவைகள் இக்காலத்திற்கு கிடைக்காதவையே ஆகும்.

உ.வே.சா. வின் கொள்கை

ஏட்டுச் சுவடிகளிற் கண்ட பாடங்களின் வேறுபாட்டைக் கண்டு கண்டு உ.வே.சாவின் மனம் புண்ணாகியிருந்தது. இன்னபடி இருந்தால் பொருள் சிறக்குமென்று தனக்குத் தோன்றின இடங்களிலும் பிரதியில் உள்ளதையே பதிப்பித்தார். தன்னுடைய கருத்தையோ, திருத்தத்தையோ சிந்தாமணியில் ஏற்றாமல் மிகவும் ஜாக்கிரதையாக கவனித்துப் பதிப்பித்தார். பதிப்பிக்க தொடங்கிய நூல் தனக்கு ஒரு தெய்வ விக்கிரகம் போல இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பதே உ.வே.சா.வின் ஆசை. 'கைக் கோணி இருக்கிறது, வேறுவிதமாக சிறிது திருத்தலாம் என்ற எண்ணம் அவருக்கு உண்டாகவில்லை. அதன் ஒவ்வோரணுவிலும் தெய்வீக அம்சம் இருக்கிறதென்று அங்கத்தையே வேறுபடுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்திருந்தார். இக்கருத்தை புராதனமான குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே தனது நோக்கமாதலின் பிரதிகளில் இல்லாதவற்றை கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும், குறைத்தும் மனம் போனவாறே அஞ்சாது பதிப்பித்தார். ஒரு வகையாகப் பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன் தானாக ஒன்றும் செய்யவில்லை என்று உ.வே.சா. புலப்படுத்தினார்.

பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டில் வழங்கி வந்து இடையிலே மறக்கப்பெற்ற நூல்களில் உள்ள பொருள்களை உள்ளபடியே அறிய வேண்டுமானால் அந்நூல்கள் இயற்றப் பெற்ற காலத்து நிலையும், இலக்கிய மரபையும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி முற்ற உணர்ந்து கொள்வது இவ்வளவு காலத்திற்குப் பின் வந்த நம்மால் இயலாதது. ஆதலின் விளங்காதவை பிறகு விளங்குமென்று காத்திருத்தலும், மாறுபாடாக ஒரு சமயம் தோற்றுவனவற்றை மாறுபாடென்று உடனே துணியாமல் அவற்றுக்குச் சமாதானம் இருக்கக் கூடுமென்று எண்ணிப் பொறுத்திருத்தலும் உ.வே.சா.வின் இயல்புகள். இந்த மாதிரி தாமதத்தால் தன்னோடு பழகினவர்களுக்குள் அவர்ப்பால் சிறிது வெறுப்பு ஏற்பட்டதும் உண்டு. ஆயினும் அவர் தன் கொள்கையைக் கைவிடவில்லை.

சிந்தாமணியில் சிந்தையைச் செலுத்தியவர்கள்

ஏட்டுப் பிரதிகளின் அமைப்பைப் பற்றி எழுதிய பின்னர் தனக்குப் பொருளுதவி செய்தவர்களைப் பற்றியும், பதிப்பிக்குங் காலத்தில் உடனிருந்து உழைத்தவர்களில் முக்கியமானவர்களைப் பற்றியும் எழுதினார். அப்பால் கிடைத்த ஏட்டுப் பிரதிகளின் விவரத்தை எழுதி முகவுரையை முடித்துவிட்டார். அப்பொழுதே சீவகசிந்தாமணிப் பதிப்பு நிறைவேறியது போன்ற ஆறுதலும் ஆனந்தமும் உண்டாயின. எல்லாவற்றையும் கைக்கொண்டு சென்னையை அடைந்தார்.

இறுதிப் பகுதிகளையெல்லாம் முடித்து முகவுரை முதலியவற்றையும் அச்சிற்கு கொடுத்து ஒருமுறை பிரதி திருத்தம் செய்து கொடுத்தவுடன் "ஈசன் திருவருளால் காரியம் இனிது நிறைவேறியது' என்று மனமகிழ்ச்சி மீதூர்ந்தது.

முடிவாக

"தாயே, நீ சிந்தாமணியை இந்த ஏழை முகமாக மீண்டும் அணிந்து கொண்டாய். பிற விபசணங்களையும் அடியேன் கைப்படும்படி செய்து அவற்றைத் துலக்கும் கைங்கரியத்திலே திருவருளைத் துணையாக வைத்துப் பாதுகாக்க வேண்டும்" என்று மனப்பூர்வமாகத் தமிழ்த்தாயை உ.வே.சா. வேண்டிக்கொண்டார். தமிழின் மீதுள்ள பற்றின் காரணமாக பல ஏட்டுச்சுவடிகளில் அழிந்துபோன நூல்களை மீட்டெடுத்து தமிழுக்கு அளப்பரிய பணிகளைச் செய்துள்ள தமிழ்த்தாத்தாவின் பெருமை இத்தரணியில் ஈண்டு எண்ணுதற்குரியது.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

16. பதிப்புப் பணியில் உ.வே.சா.

திருமதி இரா. ஷர்மிளா, பி.எஸ்.ஸி., பி.லிட்., எம்.ஏ., எம்.ஃபில்., டி.பி.டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

"ஏடு தேடி யலைந்தவு ரெத்தனை
எழுதியாய்ந்த குறிப்புரை யெத்தனை
பாடுபட்ட பதந்தெளி வெத்தனை
பன்னெறிக்கட் பொருட்டுணி வெத்தனை"
இரா. இராகவையங்கார்

என்று தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களின் அளப்ரிய ஆய்வுதனை தம் பாட்டால் படம் பிடித்துக் காட்டுகின்றார் இராகவையங்கார். ஐயரவர்களின் தேடுதலே இன்று தமிழ்த்தாய் மனமகிழ்ந்து அணிந்துள்ள அணிகலன்களாய் அமைந்துள்ளது. ஆராய்ச்சி பயணத்தில் சோதனைகள் பலவரினும் அதனைச் சாதனைகளாய் மாற்றியவர். தமிழ் இலக்கிய உலகின் மாமலையாம் ஸ்ரீ மகோகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதரையரவர்கள்.

"பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயில்"
-மகாகவி பாரதி

என்ற பாரதியின் வார்த்தை மெய்பித்த இவருடைய ஆராய்ச்சி செவ்வனே நடைபெற்றது. செவ்வியலக்கியங்களில் சிலவும் தமிழ் மக்களுக்கு முத்தாய்ப்பாய் அமைந்தது.

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையில் ஐந்து நூல்களும் மூன்று பெரும் காப்பியங்களும், ஐம்பதிற்கும் மேற்பட்ட பிற இலக்கியங்களும், இலக்கண நூல்களும் ஐயரவர்களின் பெரும் முயற்சியால் ஓலையில் இருந்து ஏட்டுக்கு மாறியது. அவற்றுள் ஒரு சில நூல்களின் பதிப்பு இக்கட்டுரைக்குப் பொருண்மையாக மாறியது.

சிந்தாமணி பதிப்பு

உ.வே.சா. ஒரு சனி, ஞாயிறு விடுமுறையில் திருவாடுதுறை ஆதின மடத்துக்குச் சென்று பதிணென்கீழ்க்கணக்கு மற்றும் சிந்தாமணி பிரதி ஒன்றையும் எடுத்துக்கொண்டு கும்பகோணம் வந்தார். சிந்தாமணி நூலை மட்டும் படித்தால் ஆராய்வது அரிது என்று உணர்ந்து மற்ற பழைய நூல்களையும் படிக்கலானார். உரையில் காணப்பட்ட மேற்கோள்களை எல்லாம் பலமுறை புரட்டிப் பார்த்து அதை மனனம் செய்து கொண்டார். தான் பார்த்த குறிப்புகள் சில பழைய ஏடுகளில் இருந்ததைக் கண்டு மனமகிழ்ந்து உவகையோடு "இந்த நூல் தொகுதியே ஒரு தனிப்பிரபஞ்சம்" என்ற எண்ணம் அவருக்கு தோன்றி வலுவடைந்தது.

தோன்றிய எண்ணத்திற்கு ஏற்றாற்போல சிந்தாமணி பதிப்பும் அமைந்திருந்தது. இன்னல்கள் பல வந்தாலும் சிந்தாமணியை அச்சிலேற்ற முடிவு செய்து இராமசாமி முதலியாருடன் இணைந்தார். அச்சுப்பணியும் ஆரம்பமானது. நச்சினார்க்கினியர் உரை என்றால் நன்று. சாமிநாதையர் உரை என்றால் தமிழ் நாட்டினரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற ஏளனங்கள் அய்யர் மனதை சிறிதும் மாற்றாமல் பணியைத் தொடர வைத்தது. அச்சுப்பணி தொடர்ந்த வேளையில் தங்கசாலையில் ஸ்ரீ ஆறுமுக நாவலரது வித்தியாநுபாலன் அச்சியந்திர சாலையில் நாவலர் மருமகன் பொன்னம்பலம் பிள்ளையும் சிந்தாமணியை அச்சேற்றினார். அய்யர் தன் பணியைத் துரிதமாகவும் சிறப்பாகவும் நடத்த உழைத்தார். பிழைத்திருத்தம் செய்ய கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சுப்பராயலு நாயக்கரும் உதவினார். கும்பகோணத்திலும் சென்னையிலும் மாறி மாறி சிந்தாமணியைப் பதிப்பிக்கும் முயற்சியில் இன்னல்கள் பல தோன்றி மறைந்திருந்தாலும் அய்யர் தன் விடாமுயற்சியால் அச்சேற்றினார். சீவக சிந்தாமணியின் மூலமும் உரையும் அச்சாகிவிட்டன. நூலை அப்படியே வெளியிடாமல் முகவுரை, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, அபிதான விளக்கம் (நூலில் வரும் சிறப்புப் பெயர்களுக்கான அகராதியும் விளக்கமும்) எழுதி தமிழன்னைக்கு அணிகலனாய்ச் சாத்தினார்.

பத்துப்பாட்டின் பிரதிகள்

சீவகசிந்தாமணியின் ஏடுகளைத் தேடும்போதே அய்யர் திருவாடுதுறை மடத்தில் பத்துப்பாட்டின் சுவடிகளையும் பிரதிகளையும் பார்த்திருந்தார். சிந்தாமணியின் அச்சுப்பணி முடிந்து புத்தகமாய் மாறிய நிலையில் ஊதியம் கொடுத்து பத்துப்பாட்டு நூல்களைப் பெற்ற அய்யர். திருப்தியடைய காரணம், முழுப் பிரதியும் கிடைக்கப்பெறாமையே இருப்பினும் விடாமுயற்சியினால் ஏட்டுப் பிரதிகளை மீண்டும் மீண்டும் தேடியமையே. கவிராயர்களின் வீடு வீடாகச் சென்று ஓலைச்சுவடிப் பிரதிகளைத் தேடலானார். சென்ற இடங்களில் எல்லாம் அவருக்குச் சோர்வு மட்டுமே மிச்சமானது. கல்லாடத்துக்கு உரை எழுதிய மயிலேறும் பெருமாள் அவர்களின் பெயரன் மயிலேறும் பெருமாள் அவர்களிடம் பிரதிகளைக் கேட்ட அய்யரிடம் அவர் கூறிய, “நான் வக்கில் குமாஸ்தா கையில் நம்பர் கட்டு தான் உள்ளது.” “என் தந்தை எனக்கு இலக்கண இலக்கியங்களைச் சொல்லித் தரவில்லை இங்கிலிஷ் தான் சொல்லிக் கொடுத்தார்” என்ற பதில் அய்யரிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. ஆனால் விடாமுயற்சியிடம் மீண்டும் தேடினார். மீண்டும் திருவாடுதுறை ஆதின மடத்திடமே உதவி கோரினார். ஆதினாமோ தன்னைச் சார்ந்த பல இடங்களில் சொல்லியிருந்தது. கவலை வேண்டாம் என்ற ஆதினத்தின் கடிதம் இன்பம் மிகுந்தது அவருக்கு பத்துப்பாட்டின் திருத்தமான பிரதி ஒன்று கிடைத்தது. முன்னம் கிடைத்த பிரதிகளின் குறைகளையும் களைந்தார். பதிப்புக்குப் பிரதியைச் சித்தம் செய்தார்.

ஆனால் குறிஞ்சிப்பாட்டில் குறை உண்டானது அக்குறையைப் போக்க தருமபுர ஆதினத்தை நாடினார். தருமபுர ஆதினத் தலைவரிடமிருந்து குறிஞ்சிப்பாட்டு ஏடுகள் பெறப்பட்டு நான்கு மலர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டன. மேலும் சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலையில் உள்ள பத்துப்பாட்டுப் பிரதி கவலையைப் போக்கியது.

பத்துப்பாட்டு நூல் அச்சுக்குச் சித்தமானது. ஆனாலும் பொருளுதவியைப் பலரிடம் பெற்றார் சென்னைக்கும், கும்பகோணத்துக்குமாக பயணமானார். இறுதியில் அச்சுப்பணி முடிந்தது. பத்துப்பாட்டின் பெருமையை உணர்ந்த இராஜகோபாலச்சாரியார் அரும்பதங்களையும் அருந்தொடர்களையும் அகராதியாக வெளியிட அகராதி செய்யும் பெட்டி (கருவி) ஒன்றைக் தந்தார் அதன் உதவியால் வேலை முடிந்தது. 1889 ஆம் ஆண்டு ஜீன் மாதம் பத்துப்பாட்டு அச்சிட்டு பணி நிறைவேறியது.

சிலப்பதிகார பதிப்பு

1890 ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் சிலப்பதிகாரப் பிரதிகளைத் தேடி தென்பாண்டி நாட்டை நோக்கிப் புறப்பட்டார் அய்யர். திருநெல்வேலியில் சாலிவாடீசுவர ஓதுவார் வீட்டில் சிலப்பதிகார மூலப்பிரதி ஒன்றும், மூலமும் உரையும் பிரதி ஒன்றும் கிடைத்தன. அவற்றில் உரை குறையாகவே இருந்தது. பெரும் முயற்சியின் தேடுதலாய் பெருங்குளத்துக் கிழக்கேயுள்ள ஆறுமுக மங்கலம் என்னும் ஊரில் தமிழ்ப்பண்டிதர் குமாரசாமி பிள்ளையின் மருமகன் வீட்டில் அகநானூறு, புறநானூறு குறைப்பிரதி சிலப்பதிகார உரை, தமிழ் நாவலர் சரித்திரம் ஆகியவை அய்யர் அவர்களுக்குக் கிடைத்தது. மீண்டும் பிரதி தேடி அலைந்தது பயனில்லை. ஒருவழியாக கும்பகோணத்திற்கு கிடைத்த சிலப்பதிகாரப் பிரதிகளையெல்லாம் கொண்டு வந்து ஆராய்ந்தார். அடியாருக்கு நல்லார் உரையில் காணப்படாத பல அரிய செய்திகள் அரும்பதவுரையில் இருந்தது. அவற்றை ஊன்றிப் படிக்கலானார். நடேச தீட்சிதரிடம் அபிநயம், கைவகைகள் செய்திகளையும், ராயரிடம் பரத சாஸ்திர முறைகளையும், சில நட்டுவர்களிடம் தேவையான செய்திகளையும், இசைக் குறிப்புகளையும் கேட்டுத் தெரிந்து உணர்ந்தார்.

பல்வேறு இன்னல்களுக்குப் பிறகு கிடைத்த பிரதிகளில் பதினான்கு உரைப் பிரதிகளும், எட்டு மூலப்பிரதிகளும் இருந்தன. அவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து தீர்க்கமானப் பாடங்களையெல்லாம் கைப்பிரதியாக வைத்துக் கொண்டார். பிறகே நூலுக்கு அங்கமான பகுதிகளைத் தொகுக்க தொடங்கினார். பதிப்புத்துறையில் ஏற்பட்ட அனுபவம் சிலப்பதிகார நூலைச் செம்மைப்படுத்தியது. ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும் வகையில் சில பகுதிகளை அதனுடன் இணைந்தார். 1891 ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் சென்னையில் சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்கும் முயற்சியைத் தொடங்கினார். வெள்ளை நாடார் ஜீபிலி அச்சுக்கூடத்தில் அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டது. கனவான்களில் பொருளுதவியால் பதிப்பு மேலும் தொடங்கியது. சிலப்பதிகாரம் மூலமும் உரையும் முற்றுப்பெறும் நிலையில் இருந்தன. நண்பர்கள் பலர் அரும்பதவுரையைப் பதிப்பித்து வெளியிட வேண்டுமென்று வற்புறுத்தினமையால் அரும்பதவுரையையும் பதிப்பித்து சிலப்பதிகாரம் பின் அச்சிடும்படி கொடுத்துவிட்டார். அரும்பதவுரையைப் பற்றி அதிகமாக எழுதாமல் ஓரிடத்தில் அடிக்குறிப்பில் "தனியே அச்சிட்டு இப்புத்தகத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது" என்று எழுதினார். பின் எஞ்சியிருந்த பகுதிகளையெல்லாம் அச்சிட்டு புத்தகம் பைண்டு செய்து அனுப்ப வேண்டியவர்களுக்கெல்லாம் அனுப்பி வைத்தார்.

புறநானூற்று பதிப்பு

புறநானூற்றை அச்சிட நிச்சயம் செய்தவுடன் புதிய முறையில் அச்சிடுவதற்கு உறுதி செய்தார். புறநானூற்றை ஆய்வதற்கு முன் சங்கநூல் முழுமையையும் ஆராய்வது அவசியமானது. அதில் அவருக்கு இன்பம் மிகுந்தது. ஆனால் அதிலும் சிரமங்கள் பன்மடங்கானது பலரின் உதவியால் பதிப்பு வேலையும் நடந்தது. 1894 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் புறநானூறு பதிப்பு நிறைவேறியது. பதிப்பித்த எட்டுத்தொகை நூல்களுள் முதலாவது நூல் இதுவே. அதனால் முகவுரையில் எட்டுத்தொகை நூல்களில் வரலாற்றையும் அகம், புறம் என்னும் இருவகைப் பொருளின் இயல்பையும் விளக்கியிருந்தார்.

முடிவாக

பதிப்புத்துறையில் பல்வேறு இன்னல்கள் பல தோன்றினாலும், ஐயரவர்களின் பெரும்முயற்சியால் நூல்கள் பல பதிப்புக்குள்ளாகி புத்தகமாய் மாறின. ஐயரின் இப்பெருஞ்செயல் தமிழன்னைக்கு மட்டுமன்று தமிழர்களுக்கும், தமிழின் பழமையைப் பல்வேறு நாட்டினருக்கும், பல்வேறு மொழியினருக்கும் எடுத்துக்காட்டி வீறுநடைப் போடுகின்றது. இப்பெரும் சாதனை அளப்பறியது. தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களைப் போற்றிப் புகழ்வோம்.



~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

17.“தமிழர்களின் வாழ்வில் ஞான ஒளி”

திரு வெ. பாலாஜி, எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095

முன்னுரை

“தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று”

(குறள் - 236)

என்னும் குறளுக்கு ஏற்றாற்போல் வாழ்ந்து காட்டியவர் உ.வே.சாமிநாதையர் அவர்கள். இவர் நமக்கு இல்லையாயின் சிலப்பதிகாரம் பற்றித் தெரியாமல் போயிருக்கும். அகம், புறம் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மாயமாய் மறைந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால் அவர் தமிழினத்தின் அரும்பெரும் சொத்தாவார். தம் வாழ்நாளில் தமிழ்மீது கொண்ட காதலால் தான் கற்ற தமிழ்ப்புலமை அனைத்தையும் ஒன்று திரட்டித் தமிழ் இலக்கியங்களை உயிர்வாழ வைத்தவர் உ.வே.சாமிநாதையர் ஆவார்.

ஓலைச் சுவடிகளை முதுகில் சுமந்தாய்
ஓயாமல் நாடிச்சென்று கலைகளைக் கொணர்ந்தாய்!
தமிழின் இன்பத்தை மக்களுக்குக் கொடுத்தாய்
தமிழனாய் வாழ்வதையே பெருமையாகக் கொண்டாய்!
-கவிஞர் இனியன் பாலா

தமிழர்களின் விடியல்

சங்ககால காவியமாய், கல்வெட்டின் ஓவியமாய், தமிழ்த்தாயின் தவப்புதல்வனாய், தமிழர்களின் விடியலாய், கவிஞர்களின் தேடலாய், தமிழ்ச்சான்றோர்களின் சுவடியாய்த் திகழ்ந்தவர் சாமிநாதையர். 19-ஆம் நூற்றாண்டில் பலர் பிறந்திருப்பினும் அதில் குறிப்பிடத்தக்கவராகவும், மக்களால் அன்புடன் “தமிழ்த்தாத்தா” என்று அழைக்கப்படுபவராகவும் விளங்கினார். ஓலைச்சுவடிகளைக் கறையான்கள் உணவாக்கிக் கொண்டிருந்த நேரத்தில் ஒவ்வொரு ஊராகச் சென்று வீட்டுப் பரண்களின் மேல் கேட்பாரற்றுக் கிடந்த ஓலைச்சுவடிகளை எல்லாம் கையில் எடுத்துச் சீர்படுத்திப் பதிப்பித்துத் தந்தவர்தான் உ.வே.சாமிதையர். மற்றவர்களின் கேலித்தனமான பேச்சுகளையும், செயல்களையும் தகர்த்தெறிந்து வாழ்நாள் முழுவதிலுமே ஓலைச் சுவடிகளைச் சேகரிப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். வெற்றியும் கண்டார்.

உயிராய் உணர்வாய் கவியாய் தமிழாய் தோன்றினாய்!
நிலவாய் தென்றலாய் மலராய் வண்டமிழாய் பேசினாய்!
பனியாய் மழையாய் கனியாய் தீந்தமிழாய் உருகினாய்!
நிலமாய் வானமாய் அருவியாய் தெய்வத்தமிழாய் உருவாகினாய்!

-கவிஞர் இனியன் பாலா

தமிழும் இசையும் கற்றமை

சாமிநாதையர் தெய்வக் குழந்தையாக வளர்ந்து, மண்மீது தவழ்ந்து, மழலை மொழி பேசி பெற்றோரை மகிழ்வித்தார். ஐந்து வயதில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்க்கப்பட்டார். அக்காலத்திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு இக்காலப் பள்ளிப் படிப்புப் போன்றது அன்று. படிப்பை

முடித்துக் கொண்ட சாமிநாதையர், அரியலூர் சடகோபஜயங்காரிடம் தமிழ் பயின்றார். அதுமட்டுமின்றி திருவரங்கத்து அந்தாதி, திருவேங்கட மாலை, திருவேங்கடத்து அந்தாதி முதலிய நூல்களைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டறிந்தார். தன் தந்தையாரிடம் இசையும், செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் பல நூல்களையும், கிருஷ்ண உபாத்தியாயர் என்பவரிடம் தெலுங்கு மொழியும் கற்றுப் புலமை பெற்றவராய் விளங்கினார். இவ்வளவு கற்றும் திருப்தி அடையாமல் மேலும் பல தமிழ் நூல்களைக் கற்க ஆர்வம் காட்டினார்.

அய்யர் மகாவித்துவான் ஆனார்

சாமிநாதையர் தமது பதினேழாம் அகவையில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றார். ஐயர் அவர்களின் அறிவுக் கூர்மையையும் அடக்கத்தையும் கண்டு மகிழ்ச்சியோடு அவரைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டார். இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். செய்யுள் திறன் பெற்றுப் பனை ஓலைச் சுவடியில் திறமையாகப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசைப் பயின்றார். இவரின் புலமைத் திறனை அறிந்த திருவாவடுதுறை மடத்தலைவர், அவருக்கு “மகாவித்துவான்” என்னும் பட்டம் அளித்து மகிழ்ந்தார்.

உ.வே.சா வின் நூல் ஆராய்ச்சி பணிகள்

ஊர் ஊராக அலைந்து திரிந்து சீவகசிந்தாமணியின் பிரதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டு 1887-ஆம் ஆண்டு பிழையின்றி நூலை வெளியிட்டார். பூண்டி அரங்கநாத முதலியாருடன் நட்பு கிடைத்தது. பத்துப்பாட்டு என்னும் நூலைப் பற்றி ஆய்வு செய்து நச்சினார்க்கினியர் உரையோடு 1888-இல் புத்தக வடிவிலும் வெளியிட்டார். பல அரிய நூல்களைத் தேடிக்கண்டுபிடித்தும் வெளியிட்டார். இடர்மிகுந்த வேலையைத் தம் விருப்பப்பணியாக ஆர்வமுடன் மேற்கொண்டு ஐம்பெருங்காப்பியங்களைப் புத்தக வடிவில் பார்த்துவிட வேண்டும் என்று மன உறுதியுடன் ஈடுபட்டார். பல ஊர்களுக்குச் சென்று சிலப்பதிகார ஏட்டுப் பிரதிகள் பலவற்றைப் பெற்று அவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தி, ஒப்பு நோக்கி 1892-இல் சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். இரண்டாண்டுகளில் ஊர் ஊராகச் சென்று நூல்களைத் திரட்டிப் புறநானூற்றினை நூல் வடிவில் வெளிவருமாறு செய்தார். இடையறா முயற்சியின் வாயிலாகவும், உழைப்பின் மூலமாகவும் சங்கத்தமிழ் நூல்களை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட்டு தமிழின் வளர்ச்சிக்கு வித்திட்டார். 1889-இல் மணிமேகலையை வெளியிட்டார். ஐம்பெரும் காப்பியங்களுள் வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரண்டு நூல்களை வெளியிட நினைத்தார். இறுதிவரை இயலாமலேயே போய்விட்டது. ஏட்டுச் சுவடிகளைத் தேடுவதையோ? பழைய சுவடிகளைப் புதிய நூல்களாக வெளியிடுவதையோ ஒருபோதும் கைவிடவில்லை.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு நூலை 1903-ஆம் ஆண்டில் வெளியிட்ட கையோடு அதற்கு அடுத்த ஆண்டே “பதிற்றுப்பத்து” என்னும் பழைய நூல் வெளிவந்தது. பதினான்கு ஆண்டுகள் கழித்து (1918-.இல்) பரிபாடலையும் தன்னுடைய தீவிர முயற்சியினால் 1937-இல் குறுந்தொகை என்னும் அரிய நூலையும் பதிப்பித்து வெளியிட்டார். தமிழ்ப் பணிகளுடன் பொதுத்தொண்டிலும் ஈடுபட்டு உழைத்தார். திங்கள், வார இதழ்களில் கட்டுரைகள் வெளியிட்டும், சொற்பொழிவு ஆற்றியும், சுயசரிதை நூல் ஒன்றும் எழுதினார். ஆனால் நூல் முடிவு

பெரும் முன்னரே ஐயர் காலமானார். பிறகு அந்நூலானது அவருடைய தவப்புதல்வரால் முழுவதும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஆசிரியப் பணியே அறப்பணி

சாமிநாதையரின் தந்தையார் 1900 இல் இறந்து விடவே 1903 இல் சென்னை வந்தார். கும்பகோணம் கல்லூரியில் 23 ஆண்டுகளும், சென்னை மாநிலக் கல்லூரியில் 16 ஆண்டுகளும் பணிபுரிந்தார். மாணவர்களிடம் அன்பாகவும் அதே நேரத்தில் கண்டிப்புடனும் காணப்பட்டார். ஒருமுறை நிறைய பிழைகளுடன் கட்டுரை எழுதி வந்த மாணவனை நோக்கி, “கல்லூரிக்குச் செலவிடும் பணத்தை நிலத்தில் போட்டிருந்தாலாவது பலன் கிடைத்திருக்குமே?” என்று சாமிநாதையர் மாணவரின் செயல்பாட்டினைக் குறித்து நயம்பட எடுத்துரைத்தார். தன் வாழ்நாள் முழுவதிலுமே ஒவ்வொரு நிமிடத்தையும் வீணாக்காமல் வாழ்ந்தவர். தன்னைத் தேடிவருகின்ற மாணவர்களுக்கு எந்நேரத்திலும் பாடம் கற்றுத் தருவார். இன்னின்ன வேளையில் இதைத்தான் செய்ய வேண்டும் என்று தனக்குத்தானே வரையறை செய்து கொண்டு அதன்படி நடந்தும் வாழ்ந்தும் காட்டியவர்தான் சாமிநாதையர். ஓய்வு நேரத்தில் தேவாரம், திருவாசகம் படிப்பதோடு திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களை ஆராய்ச்சியும் செய்வார். உறங்கப் போவதற்கு முன் தாயுமானவரின் பாடலையும், பக்திப் பாடல்களையும் பாடுவதோடு மற்றவரையும் மகிழ்விப்பார்.

மகாமகோபாத்தியாய உ.வே.சா

1906-ஆம் ஆண்டு அவருக்குப் பெரும் பேராசிரியர் எனும் மாபெரும் விருதினை அரசாங்கம் வழங்கி சிறப்பித்தது. (மகாமகோபாத்தியாய) வை.மு.சடகோபராமானுச்சாமி, சுப்பிரமணிய பாரதியார், இரவீந்தரநாத் தாகூர் போன்றோர் ஐயரைப் பாராட்டிப் பேசினார்கள். ஐயரது தமிழ்த் தொண்டினை அறிந்து, 1917-ஆம் ஆண்டு “திராவிட வித்யாபூஷணம்” என்னும் பட்டமும் அவருக்குக் கிடைத்தது. காஞ்சி காமகோடி பீட சங்கராச்சாரி சுவாமிகள் 1925-ஆம் ஆண்டில், தட்சிணாத்ய கலாநிதி எனும் பட்டத்தை வழங்கினார். அதே ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கம் 500 ரூபாய் கொண்ட பணமுடிப்பினை ஐயருக்கு வழங்கியது. 1932-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் ஐயருக்கு “இலக்கியப் பேரறிஞர்” என்னும் பொருள் அமைந்த டாக்டர் பட்டத்தை அளித்துச் சிறப்புச் செய்தது.

வைகறை காற்றாய் எழுவாய்! கலங்கரை விளக்காய் திகழ்ந்தாய்!
தேவாரம் திருவாசகம் படிப்பாய்! தெவிட்டாத தெள்ளமுதாய் இனிப்பாய்!
இறையுணர்வில் இரண்டறக் கலப்பாய்! இனிய சொல்லையே உதிர்ப்பாய்!
சரித்திரக் குறிப்புகளை எடுப்பாய்! சாதித்திடவே இம்மண்ணுலகில் நீ உதித்தாய்!
-கவிஞர் இனியன் பாலா

முடிவாக

பேசும்பொழுதும், பாடம் கற்பிக்கும் பொழுதும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டார். வசதி, வாய்ப்புகள் மிகுதியாக இருந்த போதிலும் சுகபோக வாழ்க்கை

வாழ்ந்ததில்லை வாழவும் ஆசைப்பட்டதில்லை. ஐயர் அவர்கள் தமிழ் கற்பிக்கும் போது பாடல்களை இசையுடன் படிக்கச் சொல்வார், தக்க இசையுடன் படித்தும், பாடியும் காட்டுவார். தமிழ்மணம் எட்டுத்திக்கும் வீசவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தமிழுக்காகவே உழைத்து, தமிழாலேயே வாழ்ந்து, தமிழைக் கொண்டே பெரும்புகழ் பெற்றவர் உ.வே.சாமிநாதையர். எண்ணற்ற தமிழ் இலக்கியங்களை நம் கைகளிலே தவழச் செய்த இவரை தமிழ்த்தாய் ஈன்றெடுத்த தவமாக எண்ணி இவரின் தமிழுக்குத் தலைவணங்கி போற்றுவோம்!

பனைஓலை ஏடுகளைத் தேடிச்சென்றாய்! கொட்டும் மழையிலும் சேகரித்தாய்!
பத்துப்பாட்டைப் பதற்றமில்லாமல் பதிப்பித்தாய்! நூலுக்குப் புத்துணர்ச்சி கொடுத்தாய்!
சிந்தாமணியைச் சிந்தாமல் சிதறாமல் செதுக்கினாய்! குறுந்தொகையை அன்பினால் வடித்தாய்!
தமிழரின் வாழ்விலே உணர்வானாய்! ஒவ்வொரு நூலிலும் உயிரானாய்!

-கவிஞர் இனியன் பாலா



~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

18. உ.வே.சா மகிழ்ந்த தருணங்கள்

திரு கு. இராமராஜன்,எம்.ஏ., பி.எட்., எம்.பில்., டி.டி.எட்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

நம்முடைய காலத்தில் (19ஆம், 20 ஆம் நூற்), நம் கண் முன்னால், தமிழ் மொழிக்குப் பெருமையளித்தவர்களுள் மிகவும் போற்றுதலுக்குரியவர்களாக மகாகவி சுப்ரமணியபாரதியார் மற்றும் மகாமகோபாத்தியாய சாமிநாத அய்யர் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். தேசியக்கவியோ! **“வாடாமலர்களைத் தொகுத்துத் தமிழ்த்தாய்க்குப் பாமாலைசூட்டிப் புதிய நாகரிக முறையில் அழகியசின்னஞ்சிறு ஆபரணங்களைச் செய்தணிவித்தார்.”** தமிழ்ப்பாட்டனோ! **“காணாமற்போயிருந்த தாயின்பழைய ஆபரணங்கள் பலவற்றைத்தேடிக் கண்டுபிடித்துத் தந்ததோடு துருப்பிடித்துக் கிடந்த நகைகளையெல்லாம் துருவெடுத்துச் சுத்தம்செய்து மெருகிட்டளித்தார்”**அத்தகு பைந்தமிழில் கிடந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியில் தம் வாழ்நாட்களையே தியாகம் செய்த பெரியார் இவர். இத்தகு பெரியார் உ.வே.சா அவர்கள் அவ்வாழ்நாட்களில் தான் பட்ட துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் இடையே அடைந்த மகிழ்ச்சியினை இக்கட்டுரையில் காண்போம்.

மகிழ்ந்த தருணங்கள்

‘‘கும்பகோணம் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களும் மாணாக்கர்களும் என்பால் வைத்திருந்த பேரன்பினால் வேலையைச் சிரமமின்றி நான் திருப்தியுடன் பார்த்து வந்தேன். இடையிடையே திருவாவடுதுறைக்குச் சென்றமையால் அவ்வாதீனச் சம்பந்தமும் எனக்கு ஊக்கத்தை உண்டாக்கிற்று. அடிக்கடி தியாகாராச செட்டியார், சேலம் இராமசாமி முதலியார் ஆகிய அன்பர்கள் எனக்குக் கடிதம் எழுதுவார்கள். அவர்களுடைய கடிதங்கள் நேரில் பழகிப் பேசுவதைப் போன்ற இன்பத்தை உண்டாக்கும்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் திருவருளால் எனக்கு உத்தியோகம் கிடைத்ததும் கண்ணும் கருத்துமாகச் சேமித்த பணத்தைக் கொண்டு தன் தந்தையின் முயற்சியின் பயனாக 1884-ஆம் ஆண்டு தொடக்கத்தில் எங்கள் பரம்பரைச் சொத்தாகிய நிலத்தை ஒற்றியிலிருந்து ரூ.770 கொடுத்து (செலுத்தி) மீட்கப்பட்டது. தந்தையாருக்குப் புதிய நிலத்தை ஒன்றினை வாங்கியிருந்தாலும் அத்தகைய இன்பம் கிட்டிருக்காது. அவ்வின்பத்தை அத்தருணம் அவரோடு தானும் பகிர்ந்துக் கொண்டதாகக் கூறுகிறார்.

சிந்தாமணி ஆராய்ச்சி நன்றாக நடந்து வந்தது. சின்ன சின்ன பகுதிகளைப் படித்தேனென்று இராமசுவாமி முதலியாருக்கு எழுதுவது வழக்கமாகக் கொண்டு இருந்தார்.

அதுபோலவே பதிலுக்கு அவரும் அதனைக் குறித்து மிகுந்த சந்தோஷத்தைத் தெரிவித்து விடை எழுதுவதை வழக்கமாகக் கொண்டு இருந்திருக்கிறார்.

“1880 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 தேதி அன்று எழுதிய கடிதமொன்றில் சிந்தாமணி முழுவதும் ஒரு விசை தாங்கள் பார்த்ததாகவும், அதில் சில சந்தேகங்கள் இருப்பதாகவும் தங்கள் கடிதத்தால் தெரியவருகிறது. மறுபடி ஒரு விசை பார்க்கும் பட்சத்தில் சந்தேகங்கள் ஏறக்குறைய முழுவதும் தீர்ந்து விடுமென்று எனக்குத் தோன்றுகிறது. தங்களுடன் மறுபடியும் அந்தப் புத்தகத்தைப் படிக்க எனக்கு எப்பொழுது உதவுமோ கடவுளுக்குத்தான் தெரியும். ஆகிலும் இருவரும் ஒருவிசை படிப்போமென்று நம்பிக்கை மாத்திரம் இருந்துக் கொண்டேயிருக்கிறது என்று தெரிவித்திருந்தார். அதனால் அவருக்குச் சிந்தாமணியிலுள்ள விருப்பமும் என்பாலுள்ள அன்பும் புலப்பட்டன. அதன் காரணமாகவே அய்யருக்குச் ‘சென்னைக்குச் சென்று முதலியாரோடு சில காலம் இருந்துவர வேண்டும்’ என்ற ஆவல் உண்டாயிற்று என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒருமுறை தியாகராச செட்டியாரைப் பார்க்கச் சென்றியிருக்கிறார். அப்போது சிந்தாமணியைப் பற்றி அவரிடம் சொல்லியபோது அவர் மிக்க குதூகலத்தோடு தன்னைப் பாராட்டி மகிழ்வித்ததாகக் கூறுகிறார். மடத்தின் ஆதரவில் வளர்ந்த எனக்கு என் உத்தியோக வருவாயிலிருந்து தக்க சமுதாயத்தில் ஏதேனும் ஒரு தர்மம் மடத்தில் நடத்த வேண்டுமென்று ஓர் எண்ணம் இருந்தது. மடத்தில் மகேசுவர பூஜைக்காக நூறுரூபாய் அளித்து இருக்கிறார். மகாமக விழா முடிந்தபின் திருவாவடுதுறைக்குத் திரும்புகையில் என் தந்தையாருக்கும், எனக்கும் பீதாம்பரங்களும், என் குமாரன் சிரஞ்சீவி கல்யாண சுந்தரத்திற்குச் சந்திரஹாரமென்னும் பொன்னாபரணமொன்றும் அளித்துத் தன்னை மகிழ்வித்ததாகக் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

சிந்தாமணியை அச்சுக்குக் கொடுக்கச் சென்னையில் இருக்கும் சேலம் இராமசுவாமி முதலியார் பங்களாவில் தங்கி நல்ல நாள் பார்த்து அச்சுக்குக் கொடுக்க வேண்டிய பாகத்தை கையில் எடுத்துக்கொண்டு சுப்பராய செட்டியாரோடுப் புறப்பட்டபோது சிறிது தூறல் தூறியதால் தயங்கினோம். “சிறு தூறல் நல்லதுதான்; குற்றமில்லை; புறப்படலாம்” என்று ஒரு குரல் கேட்டு புறப்பட்டோம். செல்லுகையில் பங்களாவின் புறவாயிலிருந்து மனிதன் ஒருவன் வெள்ளித் தாம்பளத்தில் பழங்களைக் கொண்டு நேரே வந்தான். நல்ல சகுனமாகிறது. “உத்தேசித்த காரியம் நன்றாக நிறைவேறும். பழம் வருகிறது. உங்கள் முயற்சி பலனைப் பெறும். கவலையின்றிப் போய்வாருங்கள்”என்று மீண்டும் அதே குரலோடு அப்பழத்தில் இரண்டு அவரிடம் தரும்படியும் உத்தரவு செய்து பழத்தோடு என்னை மறந்து ‘கடவுள் திருவருள்’ கிடைத்ததாக எண்ணிச் சென்றோமென்று கூறியுள்ளார்.

சிறுபஞ்சமூலத்திலும், நீதிநெறி விளக்கத்திலும் “எக்கழுத்தம்” என்ற சொல் வந்ததாகவும், சிந்தாமணியின் காந்தருவதத்தையாரிலம்பகத்தை ஆராய்ந்து வரும்போது நாலாவது பாட்டில்

‘‘ஏக்கழுத்தம்’ என்ற சொல் வந்து அங்கே நச்சினார்க்கினியர் தெளிவாக, ‘ஏக்கழுத்தம் - தலையெடுப்பு’ என்று உரையெழுதியிருப்பதனைக் கண்டு இதற்கு மேல் வேறு என்ன ஆதாரம் வேண்டும்? ஆகையால், சிறுபஞ்சமூலம் செய்யுளையும், நீதிநெறி விளக்கச் செய்யுளையும் திருத்திக் கொண்டதோடு, அப்போது அடைந்த சந்தோஷத்தால் எனக்குக் கூடச் சிறிது ‘ஏக்கழுத்தம்’உண்டாயிற்கு என்று குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியினை இராஜகோபலாச்சாரியரிடம் கூறியபோது அவர் வினவியதற்கு பதிலாக ஆம் ‘‘புதிய சேதத்தை கண்டுபிடித்தாற் கூட இவ்வளவு சந்தோஷமிராது’’ என தனது பெரும் மகிழ்ச்சியின் வெளிப்படுத்தியிருப்பதை காண முடிந்தது.

உ.வே.ச. வின் சிறப்புகள்

- உ.வே.சா என்று அழைக்கப்படும் உ.வே.சாமிநாதையர், தோன்றியிருக்காவிட்டால், தமிழுலகிற்கு சிலப்பதிகாரத்தைப் பற்றித் தெரியாமலே போயிருக்கும். அகநானூற்றிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு மண்ணாக மறைந்திருக்கும். இப்படி நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்துக் காப்பாற்றிப் பதிப்பித்து நமக்கு தந்தவர்.
- தன்னுடைய சொத்துக்களைக் கூட விற்று, பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார் இந்த தமிழ்த்தாயின் தலைமகன். இத்தகைய அரிய சேவைக்காகஅவரின் சீரியமுயற்சிகள் தாராளம், பட்ட சிரமங்களோ ஏராளம். இருந்தும் மனம் தளராது இச்சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.
  சங்க இலக்கியங்களைப் பற்றி இன்று நம்மால் பேச முடிகிறது என்றால் அதற்கு உ.வே.சா.காரணமாவார் சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி இன்று நமக்குத் துல்லியமாகத் தெரிகிறது என்றால் உ.வே.சாதான் காரணம். இவ்விலக்கியங்கள் இல்லாத தமிழையும் தமிழிலக்கியத்தையும் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது. இவர் ஏட்டுச்சுமைகளைப் பார்த்து அப்படியே அவைகளை பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து மறைந்து விட்ட அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும் படி செய்தார். ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கி, நூல்களைக் குறித்த முழு புரிதலுக்கும் வழி வகுத்தார். அவர் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர் மறைந்த காலத்தில் உயர்ந்து நின்ற தமிழின் நிலைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு போன்றதாகும்.
- சீவகசிந்தாமணியைக் கற்றுக் கொடுக்க முயன்ற போது ஏட்டுச்சுவடியிலிருந்த நூலை மிகுந்த சிரமத்திற்கிடையில் கற்று பாடம் சொல்லிக் கொடுத்ததால் இந்த நூலில் உள்ள செய்திகளை உணர்ந்தவர், இந்நூலை 1887 ஆண்டு முதன்முதலாக வெளியிட்டார்கள். தமிழர்கள் அளித்த நல்லூக்கம் இப்பணியை அவர் தொடர்ந்து செய்ய காரணமாயிற்று. இவருடைய வாழ்க்கை வரலாறு தமிழப்பால் அன்பு கொண்ட அனைவரும் போற்றும் ஒரு புதையலாகும்.
- சிறிய வயதில் இவரிடம் யாராவது ஆங்கிலம் இவ்வுலக வாழ்விற்கும், வடமொழி அவ்வுலக (ஆன்மீக) வாழ்விற்கும் பயன்படும் என அறிவுறுத்தினால், என் அன்னை தமிழானது இவ்வுலகம் மற்றும் அவ்வுலக வாழ்வு இரண்டிற்கும் இன்றியமையாதது என கூறுவாராம்.
- தமிழாசிரியர் எங்கு கிடைப்பாரோ என்று தேடித்தேடி, அதன் தொடர்ச்சியாக குடும்பம் முழுவதும் தமிழாசிரியர் இருக்கும் இடத்திற்கும் குடிப்பெயர்ந்து விடுமோ என்றும்.படித்த புலவர்கள் யாரைப் பார்த்தாலும் இவரிடம் தமிழ்க் கற்றுக்கொள்ள முடியுமா என்றுதான் தம் உள்ளம் ஏங்கியுள்ளதாம்.
- உ.வே.சா அவர்கள் வறுமையிலும் மனம் தளராமல் கடினமாக உழைத்து தமிழை விடாமுயற்சியுடன் கற்றுப் பிற்காலத்தில் இமாலய வெற்றியை அடைந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

முடிவுரை

டாக்டர் உ.வே.சா எந்த நிலையிலும் தம் உள்ளம் உருகி எண்ணித்துதிக்கும் பாடல் வரிகளை நாம் எவரும் மறக்க இயலாது. தமது தளர்ந்த முதுமையிலும் மேடையில் மெல்ல எழுந்து நின்று,

“இருந்தமிழே உன்னால் இருந்தேன்
இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்
திருந்த உதிட்டித்த பன்னூல் ஒளிர
அடியேன் பதிப்படிக்கவே கடைக்கண் பார்

என்று அவையினர் விழிகளில் நீர் பெருக உரையாற்றினார் என்பர். தமிழ்விடுதூது நூலில் இடம்பெற இத்தொடர்களையே தம்வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இறதிமூச்சுவரை வாழ்ந்தார். அண்ணல் காந்தியடிகளும் வங்கக் கவியரசர் தாகூரும் அகத்தியனே இவரென உ.வே.சாவின் பெருமையைப் போற்றிப் பாராட்டியுள்ளார்.



~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

19.தமிழுக்குக் கதி உ.வே.சா.

மோ. விஜயலட்சுமி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095.

தமிழுக்குக் கதி

தமிழுக்குக் கதி என்று கம்பரையும் திருவள்ளுவரையும் கூறினர். இக்காலத் தமிழுக்குக் கதி என்று ***உ.வே.சாவையும் பாரதியாரையும்*** கூறுவது சாலப்பொருந்தும். ***ஏட்டுச்சுவடிகளைத் தூசு தட்டி தமிழன்னையை உயிர்த்தெழுப்பினார்*** உ.வே.சா. பாரதியார் ***ஆங்கிலேயர் காலத்தில் முடங்கியிருந்த தமிழன்னையைத் தம் கவிதைகளால் உயிர்தெழச்செய்தார்***. 150 ஆண்டுகளுக்கு முன்பே அதாவது ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தமிழ்மொழி மறைந்துபோகும் என்றெண்ணிய தமிழனின் இனம் இன்றளவும் தலைதூக்கி நிற்க தமிழ்தாத்தா உ.வே.சா.வின் தமிழ்தொண்டு சிறந்தோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

தமிழ் வியாசர்

பாரதத்தைத் தொகுத்த வேத வியாசரைப் போன்று தமிழ் நூல்கள் பலவற்றைத் தேடித் தொகுத்த உ.வே.சாமிநாதய்யரும் ***தமிழ் வியாசரே*** என்கிறார் இராஜாஜி.

"கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்பது பழமொழி. ***ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது*** என்பதும் பழமொழி. ஆனால் ஏட்டுச்சுவடி தமிழுக்கு உதவும் என்பதை கரையில்லாத இந்தச் சமுத்திரத்தில் நீந்தி தமிழனின் பெருமையை மீட்டெடுத்து எட்டுத்திக்கும் பரப்பியவர் உ.வே.சா. என்று **சைதை முரளியின்** வரிகள் உ.வே.சாவின் தமிழ்த்தொண்டினைப் பறைசாற்றும்.

கல்வி பயின்ற முறை

உ.வே.சா அவர்கள் படிக்கும் காலத்தில் மனனம் செய்யும் முறையே அதிகம் இருந்திருக்கிறது. மணலில்தான் எழுதிப் பழகுவர். பனை ஏடுகளில் எழுதுதல், ஓலைச்சுவடிகளைப் பிரித்தல், படித்தல் என எல்லாமே கலை அழகுடன் செய்யப்பட்டது.படிப்பு ஏறாத மாணவர்களுக்குக் கடுமையான தண்டனையும், அளிக்கப்பட்டது. உ.வே.சா வும் ஒருமுறை தண்டனை பெற்றுள்ளார். தமிழும் சங்கீதமும் ஆர்வமாய் இருந்த உ.வே.சாவிற்கு தெலுங்கும், சமஸ்கிருதமும் வரவில்லை என்று அவரே ***தன் சுயசரிதையில்*** குறிப்பிட்டுள்ளார். ஒரு செயல் செய்வதற்கு முன்பு அதை நன்கு தெரிந்துகொண்டு செய்தால் நன்மை பயக்கும். அதேபோல உ.வே.சா. தமிழைப் பல தமிழறிந்த வித்துவானிடம் கற்றறிந்து சுவைத்த பிறகே தமிழ் நூல்களைத் தேடித்தேடி பதிப்பிக்கும் செயலில் ஈடுபட்டார். ***நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*** என்று தமிழ்ச் சுவையை அனைவரும் சுவைக்கும்படி செய்தவர் உ.வே.சா.

கல்வியில் பேதம்

தமிழில் எத்தனையோ இலக்கியங்களைப் பேதமில்லாமல் கற்றுக்கொண்ட உ.வே.சா. கல்வியில் பேதமிருப்பதை உணர்ந்துகொண்டார். ஒரு சமயம் ***அமிர்தகவிராயர்*** தான் கடினப்பட்டுத்

தெரிந்துகொண்ட திருவரங்கத்தந்தாதியை உ.வே.சாவுக்கு விளக்கும்போது, இவ்வளவு கடினப்பட்டு கற்றுக்கொண்டதை இந்தத் தள்ளாத வயதில் எளிமையாக உமக்குச் சொல்லிவிட முடியுமோ? கஷ்டப்பட்டுப் பெற்ற புதையலை வாரி வீசுவதற்கு மனம் வருமோ? எனக்கு தொண்டை வலிக்கிறது என்று கூறி போய்விட்டார். படித்தவர்களுக்கும் ***கர்வம் இருக்கும்*** என்பதை உ.வே.சா. உணர்ந்துகொண்டார். இக்கால கல்விமுறைபோன்று தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் என்று அக்காலத்தில் சொல்லிக்கொடுப்பதில்லை. சிறந்த இலக்கியங்களை நன்கு கற்ற ஆசிரியர்களைத் தேடித்தேடிக் கற்கவேண்டும்.

காந்தியடிகள் தமிழ் பயில ஆசை

1937 ஆம் ஆண்டு பாரதீய சாகித்ய பரீஷத்தின் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டுக்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தார். அம்மாநாட்டின் வரவேற்பு குழுத் தலைவராகத் தமிழ்த்தாத்தாவை நியமித்திருந்தார்கள். தமிழ்த்தாத்தாவின் வரவேற்புரையைக் கேட்ட காந்தியடிகள், ***தமிழின் வடிவமாகவே திகழும் இவர் திருவடியில் இருந்து தமிழ் பயில வேண்டும் என்ற ஆசை எனக்கு எழுகிறது. அந்தச் சந்தர்ப்பம் எப்போது வாய்க்குமோ***? என்று சொன்னார். இந்த மகத்தான நிகழ்வே இவர்களை மகான்கள் என்று காட்டுகிறது.

ஒரு சமயம் ***காந்தியடிகள்*** ஒரு சிறு பையனிடம் இனிப்பு சாப்பிடக்கூடாது என்று அறிவுரை கூறுவதற்காக, தான் இனிப்பு சாப்பிடுவதையே கைவிட்டுவிட்டார். தன்னைத் திருத்திக்கொண்ட பழக்கம் இருந்ததால் காந்தியடிகள் ***மகானாக*** உயர்ந்தார். உ.வே.சா. தமிழைப் பாடமாக அறிந்து கொள்ளாமல் சுவைக்கும் உணவாக எடுத்துக் கொண்டதால் ***தமிழ்த்தாத்தாவாக, மகாமகோபாத்தியாயாராக*** உயர்ந்தார்.

உ.வே.சா.வின் நோக்கங்கள்

தமிழ் நூல்களை ஆழ்ந்து பயிலவேண்டும். பலமுறை பயின்றால்தான் உண்மை புலப்படும். முதலிலே கடினமாகத் தோன்றினாலும் பலகால் பயின்றால் தெளிவுண்டாகும். ஒரு நூலிலுள்ள சொற்சுவை, பொருட்சுவைகளை அனுபவித்துப் படிக்கவேண்டும். அவற்றைப் பிறரும் அறியும் வண்ணம் எளிய நடையில் சொல்லவும் எழுதவும் வேண்டும். பழைய நூல்களையும் உரைகளையும் தெளிவாக ஆராய்ந்து உண்மைக் கருத்தை அறியவேண்டும். பழைய நூல்களில் சொற்பொருட் குற்றம் இருப்பதாகத் தோன்றினால் அங்ஙனம் அமைந்ததற்கு என்ன காரணம் என்று ஆராயவேண்டும். நாமே நன்றாக அறிந்துவிட்டோமென்று மற்றவரைத் தாழ்வாக நினைக்கக்கூடாது.

பதிப்பு முறை சிக்கல்கள்

பெரும்பாலான தமிழிலக்கியங்கள் செய்யுள் நடையிலேயே அமைந்திருக்கும். இவற்றின் பொருளை எளிமையாக அறிந்துகொள்ள இயலாது. அதிலும் கரையான் அரித்த சுவடுகளில் சொற்களை அறிந்துகொள்வது மிகக்கடினம்.

சந்திமுறை தமிழ்மொழியின் ஒரு தனிச்சிறப்பியல்பாகும். இது ஓசை அடிப்படையில் அமைந்தது. ஆயினும் பொருளை அடிப்படையாகக்கொண்டே விளங்குகிறது. புலவர் கூறிய கருத்தை முழுமையாக உணர்வதே படிப்போர் பெறும் பயன். அதற்கேற்பப் பதிப்புகள் அமைய வேண்டும்.

செய்யுளில் சீர் பிரிப்பதிலும் பொருள் அறிவதிலும் ஏற்படும் மயக்கங்களைப் போக்க வில்லை. ஆழ்ந்து கற்ற ஒரு சிலரே பொருள் உணர்ந்து பிறருக்கும் கற்பித்தனர். சந்தி பிரித்துப் பதிப்பிக்க பெரும்பாலோர் விரும்புவதில்லை. சந்தி பிரிக்காமல் பதிப்பிப்பதால் சீர், தளை கூடிய இசை ஒழுங்கு கெடாமல் இருக்கிறது. இதுவே தமிழின் தனிச்சிறப்பாகும்.

கூம்பவும் கூம்பா தலரவும் கொண்டியற்றல் (யாப்பருங்கலக்காரிகை)இவ்வடியில் ***கூம்பாது அலரவும்*** என்று பொருள் புலப்பாடு தோன்றப் பிரித்தால் வெண்பாவினுள் கலித்தளை தட்டு, வெள்ளோசை கெடுகிறது. குற்றியலுகரம் வந்தால் ஓசை நிறைவுபெறாமல் போகிறது.

ஏட்டுச்சுவடி பதிப்பிப்பதில் ஏற்படும் சிக்கல்கள்

நூலைப் பாடும் புலவர் தம் மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்போது அதை மாணவர்கள் ஏட்டுச்சுவடியில் எழுதுவார்கள். இடையிடையே ஆசிரியர் கூறும் மற்ற செய்திகளையும் குறிப்புகளாக எழுதி வைத்துக்கொள்வர்.இந்த ஏட்டுச்சுவடிகளைப் பார்த்துப் பதிப்பு செய்பவர்கள் இந்தக் குறிப்புகளையும் பழைய மூலத்தோடும் உரையோடும் சேர்த்து எழுதிவிடுவார்கள். சிலவற்றில் பாடியவர்களின் பெயர்கள் இருக்காது. ஒரே எண்ணில் இரண்டு பாடல்களும் ஒரே பாடல் இரண்டு இடங்களிலும் இடம் பெற்றிருக்கும். ***முதல்பாகம், இடைப்பாகம், கடைப்பாகம்*** ஒரு சிலவற்றில் குறைந்திருக்கும். இந்தக் குறைபாடுகளைக் களைந்த பின்னரே அது புத்தக வடிவில் கொணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும். இது யாவற்றையும் நன்றாக அறிந்த பின்னரே உ.வே.சா இப்பதிப்புச் செயலைக் கடினமாக உணராமல் மனமுவந்து செய்ய முற்பட்டார்.

உ.வே.சா. விற்குக் கிடைத்த பாராட்டுகள்

ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பிப்பதில் சாமிநாதய்யர் திறமை மிக்கவராக விளங்கியதால் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற மேலைநாடுகளும் மேலைநாட்டு அறிஞர்களும் வியந்து பாராட்டினார்கள். அதிலும் ***ஜி.யு. போப்*** அவர்கள்,

- ***உங்கள் பதிப்புப் பணிகள் செம்மையாகவும் முழுமையாகவும் இருக்கின்றன. பழந்தமிழ் நூல்களையெல்லாம் இன்று வாழும் தமிழர்கள் அறிந்துகொள்ள வகைசெய்யுங்கள்*** என்று ஒரு கடிதம் எழுதினார்.

பதிப்பிக்க உதவி செய்ய முன் வந்தவர்கள்

- தமிழ்த்தாத்தாவின் தமிழ்த்தொண்டுக்கு ஒரு கிராமத்தையே பரிசாக வழங்கலாம் என்று நினைத்தவர் ***பாஸ்கர சேதுபதி.***
- ***கும்பகோணம் கல்லூரியில் முதல்வராக*** இருந்த ***இராவ்பகதூர் வி. நாகோஜிராவ்*** உ.வே.சா.விடம் பழைய நூல்கள் பதிப்பிப்பதில் எந்த பயனும் இல்லை. பள்ளிப்பாட நூல்கள் தயாரித்துத் தந்தால் தக்க சன்மானம் கிடைக்கும் என்று திசை திருப்பினார்.

- ***திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாண தேசிகர்*** உ.வே.சா.விடம் பிற அச்சகங்களைத் தேடி நூல் பதிப்பிப்பதைவிட ரூ. 5000 நான் தருகிறேன். அதைக்கொண்டு அச்சகம் ஆரம்பியுங்கள். இன்னும் விரைவாகப் பல நூல்கள் வெளியிடலாம் அல்லவா? என்றார்.

இவையெல்லாம் பேரன்புகொண்டு உ.வே.சா.வுக்குக் கிடைத்த உதவிகள். ஆனால் உ.வே.சா அனைத்து உதவிகளையும் மறுத்துத் தமிழ்த்தொண்டையே பிரதானமாகக் கொண்டார்.

வயிற்றுக்காய் வேலையென்றால்
நெஞ்சில் ஒரு பிசாசுத்தலை
நில்லாமல் ஓடும்
உள்ளத்து உந்தலானால்
கட்டாந்தரைகள்
கனக மாளிகையாகும்.

என்ற வரிகளை உ.வே.சா. வாழ்க்கையாக்கினார். பொருளுக்கு மயங்காமல் தமிழுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

உ.வே.சா. வின்சிறப்புப் பணி

டாக்டர் சாமிநாதய்யர் பதிப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் நூலாசிரியராகவும் விளங்கியவர். ஆசிரிய மாணவப் பரம்பரைக்கும் பள்ளிக் கல்விப் பரம்பரைக்கும் பாலமாக அமைந்தவர். இவரின் மூலமாக ***ஒரு தன் வரலாறு, இரண்டு வாழ்க்கை வரலாறுகள், நல்லுரைக் கோவை, நினைவுமஞ்சரி கட்டுரைகள்*** முதலிய உரைநடை நூல்கள் தமிழுக்குக் கிடைத்தது. ***நினைவு மஞ்சரி*** நூலானது பல்வேறு அனுபவங்களைச் சித்தரிக்கும். அந்நூற் கட்டுரைகள் படிக்கவும் சிந்திக்கவும் வாய்ப்பளிக்கக் கூடியவை.

முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் உள்ள வருணனைகள், கோயில் சிற்பங்களில் உள்ள வடிவமைப்புகளில் எல்லாம் ஆபாசம் நிறைந்ததாக நினைத்த போலீஸ் அதிகாரியின் எண்ணத்தை உ.வே.சா., ஆபாசம் என்பது வேறு. ரச உணர்ச்சி வேறு. மனித வாழ்க்கையில் காதல் மிக முக்கியமான உணர்ச்சி. ஆண்டவனைக் காதலனாக வைத்து, தங்களைக் காதலிகளாக வைத்து ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியிருக்கிறார்கள். அங்கெல்லாம் சிருங்கார ரசம் இருக்கும் என்று கூறி அவரின் எண்ணத்தை மாற்றிய திறம் சிறப்பிற்குரியது. மேலும் உ.வே.சாமிநாதய்யர், தமிழ்ப் புலவர்களிடம் மட்டுமல்லாமல், தமிழைக் கற்க விரும்பிய அதிகாரிகள் மற்றும் வியாபாரிகளிடம்கூட அளவற்ற அன்புகொண்டு அவர்களிடமும் தமிழின் சிறப்புகளை எடுத்துரைத்துத் தமிழ்ப்பற்றை வளர்த்தார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

20. ஏட்டுச்சுவடியை அச்சாக்கிய உ.வே.சா.

பா. விஜிபிரபா, எம்.ஏ., எம்.ஃபில்., டி.டி.எட்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095.

நூற்றாண்டுகள் பல கடந்த தமிழ் இலக்கியம் உரை நூல்களாலும் ஆய்வுகளாலும் நிறைவதற்கு மூலவிதையாக இருந்த சிறந்த பேராசிரியர்களுள் உ.வே.சா.வும் ஒருவர். ஊர் ஊராக அலைந்து, பசி தூக்கம் பாராது புலவர்கள் வீடுகளில் காத்துக்கிடந்து சிதைந்து செல்லரித்துப்போக இருந்த ஏடுகளைச் சேகரித்துப் பாதுகாத்து ஒவ்வொரு ஏடுகளையும் நம் கைகளில் பதிப்பித்துத் தருவதற்கு அவர் அடைந்த இன்னல்களுக்கு அளவில்லை எனலாம். இதனை,

"ஏடு தேடி அலைந்த ரெத்தனை
எழுதி யாய்ந்த குறிப்புக்கள் எத்தனை
நாடும் அச்சிற் பதிப்பிக்குங் கூலிக்கு
சாளும் விற்றபல் பண்டங்கள் எத்தனை"

என்று உருக்கமாக தன் வாழ்க்கை வரலாறு நூலில் கூறுகிறார்.

நாகரிகம் வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் ஒரு நூலைப் பதிப்பிக்க வேண்டும் என்றால் அச்சகத்தார் தயவு வேண்டும், ஓவியர் மனம் வைக்க வேண்டும், அச்சு, பிரதி எனப்பல வேலைகளை முடித்து ஒரு புத்தகம் வெளிஉலகிற்கு வந்தாலும் அது நல்ல நிலையில் விற்பனையாக வேண்டும், போன்ற பல சிரமங்கள் உண்டு என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தவர்களுக்கு மட்டுமே தெரியும். உ.வே.சா நூல்களைப் பதிப்பித்த நாட்களில் இவ்வளவு நவீன சாதனங்கள் இல்லை. பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல்கள் ஒவ்வொன்றும் ஏட்டில் இருந்தன, அவை கைக்குக் கிடைப்பதிலும் சிரமம் இருந்தது.

ஒருமுறை பத்துப்பாட்டு ஆராய்ச்சியைத் தொடங்கியதும் உரையுடன் முழுமையும் கூடிய ஓலைச்சுவடியைத் தேடி திருவாவடுதுறை ஆதீனம் சென்று தேடியும் கிடைக்காமல் ஆதீனத் தலைவரைச் சந்தித்து கேட்டறிந்து திருச்செந்தூரில் சுவடிகளைப் பெற்றார். அச்சுவட்டில் குறிஞ்சிப்பாட்டில் சில அடிகளைக் காணாததால் தருமையாதீனம் சென்று சுவடிகளைப் பார்வையிட்டு அப்பகுதிகளை நிறைவு செய்ததாக ***உ.வே.சா வாழ்வும் தமிழ்த்தொண்டும் நூலில் புலவர் ம.வே.பசுபதி*** கூறுகிறார். தமிழின் மீதுள்ள தாகமே தன் கடினத்தைப் பாராமல் ஓலைச்சுவடிகளைத் தேடவும் சேமிக்கவும் செய்தது எனலாம். இத்தகைய ஆன்றதோர் மகனைப் பெற்றெடுக்க தமிழன்னை என்ன தவம் செய்தாளோ!

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" -திருக்குறள்

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப தமிழ்த்தாயின் உள்ளம் குளிரவைத்த உ.வே.சா 1885-ல் உத்தமதானபுரத்தில் தோன்றினார்.

"கள்ளிவயிற்றின் அகில் பிறக்கும் மான்வயிற்று
ஒள்ளரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி" -நான்மணிக்கடிகை

என்ற பொன்னான வார்த்தைகளுக்கு ஏற்ப ஆண்டவன் உலகைப் படைத்ததோடு தன் கடமை முடிந்துவிட்டதாக நினைக்காமல் அவ்வப்போது உலகில் ஞானிகளையும், மேதைகளையும் தோன்றச் செய்கிறார். அவ்வாறு தோன்றிய மேதைகளுள் தமிழ் இலக்கிய உலகில் நீங்கா இடம் பெற்றவர் இவர். இத்தகைய பேரறிஞர் சோழ வளநாட்டில் பிறந்தது நம் தமிழகத்துக்கு பெருமை. விளக்கம் பெறாமல் கிடந்த எண்ணற்ற தமிழ் இலக்கியங்களை விளக்கி மக்கள் மத்தியில் உலாவ விடுவதற்காக தோன்றினார் எனலாம்.

அறியாமை அகற்றும் கல்வி

மகனை அறிவாற்றலில் சிறந்தவனாகச் செய்யும் பெருமை தந்தைக்கு உரியது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்ற புறநானூற்று வரிகளுக்கு ஏற்ப உ.வே.சா அவர்களின் தந்தை வேங்கட சுப்பிரமணிய ஐயர் தம் பிள்ளையைச் சான்றோனாக்கினார். ***பாட்டனாரிடம்*** மழலைக்கல்வி, தந்தையிடம் இசைப்பயிற்சியும் பெற்றவர். திண்ணைப்பள்ளியை நாராயண ஐயரிடம் கற்றுக் கொண்டார். மேலும் ***கிருட்டிண வாத்தியார், முத்துவேலாயுதப் பண்டாரம், சடகோப ஐயங்கார், குன்னம் சிதம்பரம் பிள்ளை, கஸ்தூரி ஐயங்கார், விருத்தாசல ரெட்டியார்*** போன்ற பலரிடம் கல்வி பயின்றார். இவர் படிக்கும் காலத்தில் தன் முயற்சியாலே தனிப்பாடல் திரட்டு, பாகவதம், தண்டியலங்காரம், திருக்கோவையார் போன்ற நூல்களைக் கற்றார். பின் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கல்வியைத் தொடர்ந்தார். சிவப்பிரகாசர் இயற்றிய பழமலைத் திரிபந்தாதி, பிள்ளைத்தமிழ் போன்ற பல பிரபந்தங்களை மாணவர்களோடு கற்றார்.

ஒரு நாள் ஆசிரியர் சீர்காழிக்கோவை மறுநாள் சொல்லித் தருவதாகக் கூறியதோடு தன்னிடம் ஒரு பிரதி மட்டுமே உள்ளது இன்னொரு பிரதி கூறைநாடு கனகசபை என்பவரிடம் உள்ளது. அவர் அதை தர மாட்டார் என்றும் கூறினார். இதனை அறிந்த உ.வே.சா இரண்டு மைல் தூரம் உள்ள மாயூரம் சென்று புலவரிடம் **கெஞ்சி** நூலைப் பெற்றார் இச்செயலை பவணந்தி முனிவர் குறிப்பிட்டது போன்று ***கல்வி கற்பவன்*** பருகுவன் அன்ன ஆர்வத்தனாகி இருக்கவேண்டும், அதாவது தண்ணீர் தாகம் உள்ளவன் எவ்வளவு ஆவலுடன் தண்ணீர் அருந்துவானோ, அவ்வளவு ஆவல் வேண்டும். இத்தகைய ஆவல்தான் உ.வே.சா.விற்குக் கல்வி கற்பதிலும் இருந்தது.

ஆராய்ச்சிக் கொத்துக்கள்

பேராசிரியர் அவர்கள் பல நூல்களை ஆய்ந்து அறிந்து பதிப்பித்துள்ளார். அவற்றுள் சில

சிந்தாமணி: சிந்தாமணியை நச்சினார்க்கினியர் விருத்தியுரையுடன் அடங்கிய முதற்பதிப்பை 1887-ல் பதிப்பித்தார். 1907-ல் பதிப்பித்த இரண்டாம் நூற்பதிப்பில் மேலும் 17 ஓலைச்சுவடிகளைப் பார்வையிட்டு முதற்நூலைக் காட்டிலும் சிறப்பு வாய்ந்ததாக 41 பக்கங்களில் சிந்தாமணி **ஆராய்ச்சி விளக்கம்** என்ற பெயரில் பதிப்பித்திருக்கிறார். மூன்றாம் பதிப்பு 113 பக்கங்களில் பிரயோக விளக்கம், விசேடக்குறிப்பு என்னும் பகுதிகளுடன் 1922-ல் வெளிவந்தது. 1942ஆம் ஆண்டு சீவகசிந்தாமணி பதிப்பு தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகுந்த கீர்த்தியைப் பெற்றதால் உ.வே.சா. அவர்கள் நான்காம் முறையாக பதிப்பிக்க நினைத்தார் ஆனால் அப்பதிப்பு நிறைவேறும் முன்பே இவ்வுலக வாழ்வை இழந்தார் எனவே அந்நூலை அவரது மகன் திரு. சா. கல்யாணசுந்தரனார் அப்பணியைத் தொடர்ந்து செய்துமுடித்தார்.

பத்துப்பாட்டு: சிந்தாமணி போன்று பத்துப்பாட்டையும் மூன்று முறை பதிப்பித்துள்ளார். 1889-ம் ஆண்டு முதற்பதிப்பையும் தொடர்ந்து 1918, 1931-ம் ஆண்டுகளில் மூன்று பதிப்பையும் வெளியிட்டார். இந்நூலையும் நச்சினார் உரையுடன் பாடினோர், பாடப்பட்டோர் வரலாறு, மேற்கோள்கள் உள்ளிட்ட அடிக்குறிப்புகள் அடங்கிய ஆராய்ச்சி அம்சங்களுடன் வெளியிட்டார். இவர்தான் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிபாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்து நூல்களின் தொகுப்பே **பத்துப்பாட்டு** என்று தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திய பெருமை இவரைச் சாரும் என்கிறார் புலவர் **ம.வே. பசுபதி**

சிலப்பதிகாரம்

இரட்டைக் காப்பியங்களுள் சிலப்பதிகாரம் தலைசிறந்தது அடியார்க்குநல்லார் உரையுடனான நூலைத்தேடிப் பேராசிரியர் பல புலவர்களைச் சந்தித்துக் கேட்டார். எங்கும் உரையுடன் கூடிய நூல் கிடைக்காததால் தாமே மூன்று காண்டங்களுக்கு உரை எழுதி 1892-ல் பதிப்பித்தார். மேலும் பல ஓலைச்சுவடிகளை ஒப்புநோக்கி 1920-ம் ஆண்டிலும், 1927ம் ஆண்டிலும் மூன்று முறை பதித்தார்.

புறநானூறு

16ஓலைச்சுவடிகளை ஆய்ந்து இந்நூலை 1894-ல் பதிப்பித்தார். இந்நூலில் குறிப்பிட்டுள்ள ஊர்களுக்குச் சென்று ஆராய்ந்ததில் அங்குள்ள மக்கள் தன் பெயருடன் ***வள்ளல்*** என்ற அடைமொழியைப் பயன்படுத்தி வருவதை அறிந்தார். இவர்கள் அனைவரும் கடையெழு வள்ளல் மரபினராக இருக்கலாம் என்று அறிந்துகொண்டு அதை தான் (1923-ம், 1935-ம் ஆண்டில்) பதித்த நூலில் குறிப்புரையுடன் வெளியிட்டுள்ளார். மேலும் அவர் தனக்குக் கிடைத்த புறநானூற்று ஓலைப்பிரதிகள் இருந்த நிலையைப் பின்வருமாறு கூறுகிறார்.

உரையில்லாத மூலங்கள் எழுத்தும் சொல்லும் மிகுந்தும், குறைந்தும், பிறழ்ந்தும், திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி இவற்றுள் சில பாடல்களின் பின் திணை எழுதப்படாமலும், சிலவற்றின் பின் துறையெழுதப்படாமலும் சிலவற்றின் பின் இரண்டுமெழுதப்படாமலும், சிலவற்றின் பின் பாடினோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின் பின் பாடப்பட்டோர் பெயர் சிதைந்தும், சில பாடல்கள் இருவர் பெயர் சிதைந்தும், சில பாடல்கள் இரண்டிடத்து எழுதப்பெற்று இரண்டு எண்களை ஏற்றும், வேறு வேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டு பாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஒரெண்ணை ஏற்றும், சில முதற்பாகம் குறைந்தும், சில இடைப்பாகம் குறைந்தும், சில கடைப்பாகம் குறைந்தும், சில முற்றும் இன்றியும் ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறு பாடலின் அடிகளோடு கலந்தும், ஓரடியே ஒருபாட்டுள் சிலவிடத்து வரப்பெற்றும் பொருளுண்மை காணாவண்ணம் இன்னும் பல வகைப்பட்டு மாறியும் கையெழுத்துப் பிரதிகளில் இருந்தன என்று கூறுகிறார்

மணிமேகலை

1891-ம் ஆண்டு திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளை இந்நூலின் மூலத்தை மட்டும் பதித்திருந்தார். அதைக்கொண்டு மாணவர்கள் படிப்பது கடினமாக இருந்தது. எனவே ஆராய்ச்சி உரையுடன் நூலின் பொருளை உணரச்செய்யும் குறிப்புரையுடன் 1898-ம் ஆண்டு மணிமேகலையைப் பதிப்பித்தார் உ.வே.சா. இந்நூல் பௌத்த சமயத்தைச் சார்ந்ததால் அம்மதம் பற்றிய தெளிவு தனக்கு தேவை என்பதால் **மளுர் அரங்காசாரியார்** அவர்களிடம் ஒன்றரை ஆண்டுகாலம் தங்கியும் இலங்கையிலிருந்த பௌத்த மதத்தலைவர் **சுமங்களரிடம்** பல கருத்துகளைக் கேட்டறிந்து கொண்டார். தன் வாழ்நாளில் மணிமேகலையையும் மூன்று முறை பதிப்பித்தார்.

ஐங்குநூறு

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான இந்நூலை பதிப்பிக்க ஆசிரியருக்கு போதுமான ஓலைச்சுவடிகளை **தே.லமணக்கவிராயர்** தந்தார். அதில் ஒரு ஓலைச்சுவடியில் மட்டுமே உரை இருந்தது. மீதியுள்ள ஓலைச்சுவடிகளில் மூலம் மட்டுமே இருந்தது. எனவே இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து எழுதிய பாரதம் பாடியபெருந்தேவனார் பற்றிய குறிப்பும், மருதம் பாடிய ஓரம்போகியார், நெய்தல் பாடிய அம்மூவனார், குறிஞ்சி பாடிய கபிலர், பாலை பாடிய ஓதாலந்தை, முல்லை பாடிய பேயனார் போன்ற புலவர்களைப் பற்றிய வரலாற்றோடு, இத்தகைய ஐந்து நூற்றையும் தொகுத்த புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார், தொகுப்பித்த யானைக்கட் சேய்மாந்தஞ்சேரல் இரும்பொறை பற்றிய செய்திகளையும் ஆய்வுசெய்து படிப்பவர்கள் பயனுள்ள விதத்தில் புரிந்துகொள்ளும் வகையில் பதிப்பித்துள்ளார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1920-ம் ஆண்டு பதிப்பித்தார்.

இதைப்போன்று மேலும் பல நூல்களைப் பதிப்பித்து தமிழ் உலக மக்களின் மனங்களை கொள்ளை கொண்டவர் நம் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள்.

முடிவுரை

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற சிறந்த குறிக்கோளின் அடிப்படையிலே கடல்கோளுக்கும், கறையானுக்கும், கால வெள்ளத்திற்கும் எஞ்சி நின்ற பாடல்களைப் பொருள் நோக்கியும், செய்யுளின் திறம் நோக்கியும் அடி அமைத்துத் தொகுத்த நம் பேராசிரியர் இவ்வுலகை விட்டு நீங்கினாலும் தமிழர்களின் உள்ளத்தில் இன்றும் வாழ்ந்து வருகிறார்.

சான்றெண் நூல்கள்

1. புலவர் ம.வே.பசுபதி, உ.வே.சா வாழ்வும் தமிழ்த்தொண்டும் நூலில், பக்:88
2. சைதை முரளி, தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் வாழ்கை வரலாறு,

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



21. தமிழ்த் தந்த தவப்புதல்வன்

திருமதி ம. சுஜிதா, எம்.ஏ., எம்.எட்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

"கண்ணுஞ் சடையாமல் கையுந் தளராமல்
உண்ணப் பசியெழுவ தோராமல் - எண்ணியெண்ணிச்
செந்தமிழ்த் தாய்க்குச் செய்த திருத்தொண்டுக்
கிந்நிலத்துண்டோ இணை"

என்று உ.வே.சா அவர்களின் தமிழ்த்தொண்டைப் புகழ்ந்தார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். இவரின் வரிகளுக்கேற்ப பழந்தமிழ் இலக்கியத்திற்குப் புதுப்பொலிவு தந்து, தமிழ் மொழியின் பெருமையை உலகம் அறியச் செய்த தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத அய்யருக்கு உண்டு. ஐயரவர்களைப் பண்டைத் தமிழிலக்கியத்தின் பிரதிநிதி என்பர். உ.வே.சாவின் பன்முகம் தனிப்பட்ட மனிதர் யாரும் பழந்தமிழ் இலக்கியத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதற்கு ஆய்வுக் குறிப்புகள் தந்ததில்லை. ஆனால் இவரது பணி மகத்தானது. இவர் பதிப்பித்த நூல்களின் எண்ணிக்கை மொத்தம் எழுபத்தி நான்கு. உ.வே.சாவைத் தற்கால இலக்கியத் திறனாய்வின் முன்னோடி என்றும் சொல்லமுடியும்.

தமிழ்ப்பற்று

உ.வே.சா.வின் தந்தை இசைக்கலைஞராக இருந்தார். இதனால் திண்ணைப் பள்ளியில் பாடத்தோடு இசையையும் கற்றுத்தர சிறப்பு ஏற்பாடுகள் செய்தார். உ.வே.சாவின் தந்தை 17ஆம் வயதில் திருவாவடுதுறை ஆதினத்தின்கீழ் தமிழ் கற்றுத் தந்து கொண்டிருந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றுத்தரச்சொல்லி கேட்க அவரும் உ.வே.சாவைத் தனது மாணவராக சேர்த்துக்கொண்டு தமிழின் இலக்கணம், இலக்கியம், செய்யுள் அறிந்துகொள்வது, இயற்றுவது கவிதைகளை இயற்றுவது, பாடல் புனைவது போன்றவற்றைக் கற்றுத் தந்தார். இவருக்குத் தமிழில் இருந்த பேரார்வத்தைக் கண்டு எங்கெல்லாம் தமிழ்ப்பாடம் கற்றுத் தருபவர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று குடியேறி மகனுக்குக் கல்விக் கற்பிக்கச் செய்தார்.

தமிழ் விதை விதைத்தவர்

உ.வே.சாவின் தந்தையுடைய நண்பரான அரியலூர் சடகோபையங்கார் சங்கீதத்திலும் தமிழிலும் வல்லவர். அவரிடம் உ.வே.சாவை அழைத்துச்சென்று இவனுக்குச் சங்கீதத்திலும் தமிழிலும் பிரியம் இருக்கிறது. இவனை உங்கள் மாணவராக ஏற்றுக்கொண்டு இரண்டு வகையிலும் பயிற்சி செய்விக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சடகோபையங்காரிடம் என்றுநான் மாணாக்கனாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த் தாயின் அருட்பரப்பிற் புகுந்தவனானேன். எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற்குரு சடகோபையங்கார். பொம்மை (பாவை)களைக் காட்டி குழந்தைகளைக் கவர்வதுபோலத்

தமிழ்ச் செய்யுட்களின் நயத்தை எடுத்துக்காட்டி என் உள்ளத்துக்குள் அந்த இளம்பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே என்று உ.வே.சா அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் ஆர்வம்

தனது இளம் வயதில் சந்தித்த சில தமிழ்ப் பேரார்வலர்களால் சாமிநாதரின் தமிழ்க் காதல் துளிர்த்தது. ஆங்காங்கே கிடைத்த தமிழின்பம் அதைச் சிறுகச்சிறுக வளர்த்து வந்தது. அவர் உண்மையான தமிழ் நாட்டத்தால் ஆசிரியரைத் தேடிச் சென்றார். அவருடன் இருந்து தமது தமிழறிவை வளர்த்துக்கொண்டார். வளர்த்துக்கொண்டதுடன் அவருடைய பேரன்புக்கு உரியவராகி அவரோடு தொடர்பும் அவரிடத்து மதிப்பும் கொண்ட பலதுறை பெரியவர்களையும் பழக்கப்படுத்திக்கொண்டார். அவருடைய தமிழ் ஆர்வம் அவரது ஆசிரியரை அவர்மீது அன்பு கொள்ளச்செய்து அவருடைய எதிர்கால நல்வாழ்விலும் அக்கறை கொள்ளச்செய்தது.

உ.வே.சாவைத் தமிழிலக்கியத்தின் மெய்க்காப்பாளர் என்றார் புதுமைப்பித்தன் அவர்கள். அவரின் கூற்றுப்படி உ.வே.சா அவர்கள் தமிழின் மீதுள்ள ஆர்வத்தால் பல பழந்தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். அவரின் நூல்கள் பரிபக்குவமெய்தி குளிர்ந்த நிலவொளியை வீசுகின்றன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு சமய இலக்கியங்கள், காப்பியங்கள் தனித்தனியாக ஆங்காங்கு சிதறிக் கிடந்தன. பனை ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்ற அவை பூச்சி அரித்தும் உருக்குலைந்தும் இருந்தன. மக்களின் அறியாமையால் பண்டைத்தமிழ் இலக்கிய ஏடுகளில் பல தீக்கிரையாகின. ஆடிப் பதினெட்டு போன்ற நீர்விழாக்களின்போது ஆற்றில் விடப்பட்டன. இப்படி காணாமல் போனது தவிர எஞ்சி இருந்த ஓலைச்சுவடிகளைத் தேடிப் புறப்பட்டார். இவரின் தமிழ் ஆர்வத்தைக் கண்டுவியந்த தருமபுரி ஆதினத்தின் தலைவர் மாணிக்கவாசக தேசிகர் அங்கிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட சுவடிகளை அளித்தார்.

தமிழ்த் தேடல்

ஆங்காங்கே மறைந்து கிடந்த தமிழ்த்தாயின் ஒவ்வொரு அணிகலனாகத் தேடித் தேடிக் கண்டுபிடித்துப் புதுப்பித்துத் தமிழன்னையை அலங்கரித்தார். இவரது காலத்துக்கு முன்பு பெரும் புலவர்களின் படைப்புகள் சங்க நூல்கள் அகநானூறு, புறநானூறு, மணிமேகலை ஆகியவை வெறும் பெயரளவிலேயே இருந்தன. அழிந்து மறைந்து போகும் நிலையில் இருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடித்தேடி அச்சிட்டு பதிப்பித்தார். இதன்மூலம் தமிழ் இலக்கியத்தின் தொன்மையும், செழுமையும் உலகறியச் செய்தார்.

சுயமுயற்சி

சாமிநாதர் பெரும்பாலும் தம்முடைய சுயமுயற்சியினாலேயே தமிழில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத புலமை பெற்றவர் ஆவார். அவரது சொந்த முயற்சியினாலே என்சரித்திரம் என்ற வாழ்க்கை வரலாற்று நூலினை எழுதி நூலாக பதிப்பித்தார். “பெருக்கத்து வேண்டும் பணிதல்” என்ற குறளுக்கேற்ப இதுதான் சரியான இலக்கியம் என்ற உண்மையைத் தெளிவாக அறியலாம். “நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்” என்ற தொடரை விளக்குவதற்காக இவர்

மண்ணுலகில் பிறந்தார் என்று நாம் அனைவரும் பெருமிதமாகக் கொள்ளலாம். ஐயவர்களின் தமிழ்ப்பற்றின் காரணமாகவே மக்களிடையே நீங்காத இடம்பெற்றுள்ளார்.

உ.வே.சா வின் பதிப்புத்திறன்

தமிழக வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டில் பெரும் வழக்கத்திற்கு வந்த அச்சுக் கலையின் பரவல் புதிய தொழில்நுட்பமாக வளர்ந்தது. நூல் வெளியீட்டு முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. இந்த வளர்ச்சி முகங்களில் தமிழ் இலக்கிய நூல்களை ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதி அச்சிடுவது என்பது நம் இலக்கியங்களின் மறுபிறவியாக அமைந்தது. நூலுக்கு நல்ல ஆராய்ச்சி, முன்னுரை, ஆசிரியர் கால ஆராய்ச்சி, நூல் பேசும் பொருள் பற்றிய ஆராய்ச்சி போன்றவை இடம்பெறவேண்டும்.இறுதியில் பாடல் மேற்கோள் அகராதி என்று பலவும் அமைய வேண்டும். இவற்றையெல்லாம் உள்ளடக்கியதுதான் மூலபாடத் திறனாய்வு எனச் சொல்லப்படும் சுவடிப் பதிப்புக் கலை. இந்தத் திறனாய்வின் அறிவியல் நுட்பங்களை ஆங்கிலம் கற்காமல் தாமாகவே தன் பட்டறிவால் உணர்ந்து உருவாக்கியவர் உ.வே.சா. இதுதான் அவரது தனித்தன்மை.

தமிழ் நூல்களில் பத்திப் பிரிப்பு, நிறுத்தக் குறிகள் போன்றவற்றை ஒரே முறையில் ஆளல் போன்றவற்றைச் சீராகக் கடைபிடித்து அதற்குரிய முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் அய்யரவர்கள் விளங்கிருக்கிறார்கள் என்பது பலருக்கும் தெரியாது. சங்க இலக்கியம், காப்பியங்கள் ஆகியவற்றையே பதிப்புக்கென அவர் பிராதானமாகத் தேர்தெடுத்துக்கொண்டார். அவற்றிலும் பிறர் பதிப்பிக்கிறார்கள் என்னும் தகவல் கிடைத்தால் அந்நூலைத் தவிர்த்து விடுவது அவர் வழக்கம். "சொல் மடவன்னம்சொல் நடையொவ்வா" என்றும் தன் பதிப்புகளில் மாற்றுவதற்கு உ.வே.சா இடையறாது கற்றுக் கொண்ட அந்தத் திறனாய்வு முறைகள்தான் காரணம். உ.வே.சா அன்றைய மரபுத் தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியே என்பதை அவருக்கு உணர்த்திய சேலம் இராமசாமி முதலியார் சந்திப்பு அவர் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தாலும், சங்க இலக்கியம் சமணக் காப்பியங்கள் போன்றவற்றைப்பற்றி ஒரு புது அறிவாகக்கண்டு அவற்றைப் பதிப்பித்து வெளிட்டது அவரின் அழியாத அடையாளங்கள் ஆகும்.

பதிப்பிற்கு உதவியவர்கள்

ஐயரவரது முயற்சி யாரெனினும் ஒருவரால் தாமாகவே செய்து முடிக்கக்கூடும் அளவினதன்று. பலவகையிலும் உதவி செய்யத்தக்க வித்துவான்கள் வேண்டியதாய் இருந்தது. இவ்வகை உதவியும் இவருக்கு நிரம்பக் கிடைத்தது. உதவியவர் ஒருசிலர் தமிழ் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுவனவாகும். ஐயரது அருமைத் தம்பியராகிய வே.சுந்தரேச ஐயரும் இப்பெருந்தொண்டில் உடனிருந்தும் பெரிதும் உழைத்து வந்தார்.வை.மு.கோபாலை கிருஷ்ணமாச்சாரியரும் சிலகாலம் ஐயருக்கு உதவியாயிருந்ததுண்டு. திருவாவடுதுறை ஆதினம், தருமபுர ஆதினம் திருப்பனந்தாள் ஆதீனம். செங்கோல் மடம், மந்தித்தோப்பு மடம், மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலியன சிறப்பாகக் கூறத்தக்கன. மேற்குறித்த இடங்களிலுள்ள தமிழ்நூற்

கருவூலங்களை ஐயர் நன்றாகப் பயன் படுத்தியுள்ளார். இவர் கையில் சங்கநூல்கள் முதலியன கிடைக்காமல் போயிருந்தால் இப்பொழுது அந்நூல்கள் சிதல்வாய்ப்பட்டுப் பெரும்பாலும் அழிந்திருக்கும் என்பது திண்ணம். அவ்வாறு அழிந்தொழியாதபடி பிரதிகளைப் பாதுகாத்து அவற்றைத் தமிழ் மக்களுக்குச் செம்மையாக்கியவர் உ.வே.சா.

நிரம்பிய வாழ்வு

ஐயரது வாழ்வு நிரம்பிய வாழ்வு. காலத்தால் நிரம்பிய வாழ்வு, கல்வியாலும், ஆராய்ச்சியாலும் நிரம்பிய வாழ்வு. பலதிறப்பட்ட பெருமையாலும், பரந்த புகழாலும் நிரம்பிய வாழ்வு. தமிழ்ப்புலமை உலகில் ஐயர் தம் காலத்தில் தனியாட்சிப் புரிந்தார் என்றே சொல்லவேண்டும். இந்நிரம்பிய வாழ்விற்கு மேலே குறித்த சில வாய்ப்பான நிகழ்ச்சிகள் காரணமாயின என்று சிலர் கருதலாம். உ.வே.சா தமது ஊக்கத்தாலும் சலிப்பறியாத உழைப்பினாலும் இடைவிடாத கல்வியினாலும், ஆராய்ச்சியினாலும். தமது வாழ்வை நிரம்பிய வாழ்வாக ஐயரே செய்து கொண்டார் என்பதுதான் உண்மை. நிறைவாழ்வு வாழ்ந்து, தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய உ.வே.சாவுக்கு ஒரு தமிழறிஞர் நினைத்துப் பார்க்க முடியாத அனைத்து பெருமைகளும் தம் வாழ்நாளிலேயே அடையும் அரிய பேறும் வாய்த்திருந்தது. எவரின் ஆற்றலையும் முழுவளர்ச்சி பெறவிடாத தமிழ்ச்சூழலில் உ.வே.சா என்னும் ஆளுமையின் திறமை எவ்வளவு அரிதானது என்று சொல்ல வேண்டியதில்லை.

உ.வே.சா வின் திறமை - பேச்சாளர்

உ.வே.சா கருத்துச் செறிவோடு நகைச்சுவை இழையோடு பேச வல்லவர் என அவருடைய மாணவர்களான க.வ.ஜகந்நாதன் அவர்களும், தண்டபாணி தேசிகர் அவர்களும், உ.வே.சா -வின் பேரரான க.சுப்பிரமணியன் அவர்களும் கூறியுள்ளார்கள். அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு சங்ககாலத் தமிழும் பிற்காலத்தமிழும் எனும் நூலாக வெளிவந்துள்ளது.

நல்லாசிரியர்

இவர் பாடம் சொல்லும்போது கடின பதங்களுக்கு மட்டும் பொருள் சொல்லுவார். கற்பனைகளை இன்றியமையாத இடங்களில் விளக்கிக் காட்டுவார். இன்ன கருத்துக்களை ஒழுங்காக மனத்தில் வைத்திருக்கவேண்டும் என்று கூறுவார். பாடம் சொல்லும் நூல்களில், உரைகளில் மேற்கோளாக வரும் செய்யுளுக்குப் பொருள் கூறுவார். புலவர்களைப் பற்றிய வரலாறுகளை அடிக்கடி சொல்லுவார். தம் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மாணவர்களுக்குத் தமிழ் நூல்களைப் பாடம் சொல்லும்முறை பற்றித் தெளிவாய் இவர் கூறுவது குறிப்பிடத்தக்கது. தம் ஆசிரியரின் வழியிலேயே கும்பகோணத்திலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் மிகச்சிறந்த தமிழ்ப்பேராசிரியராகத் திகழ்ந்தார். இக்காலத்தில் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் உணர வேண்டிய கருத்துக்கள் அதில் அடங்கிருப்பதை அறியலாம்.

உரையாசிரியர்

உ.வே.சா. பதிப்பித்தனவும் உரை எழுதி வெளியிட்டனவுமாகிய நூல்களில் தனித்தனிச் சொற்களை இவர் சுவைபெற எடுத்துக்கூறி விளக்கம் தந்திருக்கிறார். அவர் சில நூல்களுக்கு அரிய உரை எழுதியுள்ளார். மணிமேகலைக்கும், குறுந்தொகைக்கும் அவர் இயற்றிய உரைகள் அவரை ஒரு சிறந்த உரையாசிரியராக உலகுக்குக் காட்டுகின்றன. மணிமேகலைக்கும் பல இடங்களில் பதவுரையும் இடையிடையே சில அடிகளின் பொருட்சுருக்கத்தையும் காதை இறுதியில் ஒரே சொற்றொடரில் பெரும்பாலும் மூலநூல் சொற்களைக்கொண்டே அக்காதையின் பொருட்சுருக்கத்தையும் தந்துள்ளார்.

முடிவுரை

மறைந்து போக இருந்த பல தமிழ்நூல்களை மக்கள் நடுவில் தவழச்செய்த காரணத்தினால் தேசியக்கவிசுப்பிரமணியபாரதி “பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும் காலமெல்லாம் புலவோர் வாயில் துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றித் துலங்குவாயே” என்று வாழ்த்தியது போல் தமிழ் நெஞ்சங்கள் உ.வே.சாவை என்றும் போற்றி மகிழும். நாமின்று படித்துப் பயன்பெறும் பல சங்க இலக்கியங்களையும் உலக மத்தியில் தமிழின் பெருமையாக மேற்கோள் காட்டும் அரிய காப்பியங்களையும் நவீன உலகிற்கு அனைவரும்படித்து புரிந்கொள்ளும் அளவிற்கு அச்சு வடிவத்தில் தந்தவர் உ.வே.சா.பாரதநாட்டில் உயிருடன் வழங்கிவரும் மொழிகள் யாவற்றிலும் பழையது. இலக்கியவளம் பொருந்தியது, இலக்கண வரம்புடையது. எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது என்றெல்லாம் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளும் நிலை தமிழுக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்த்தாத்தாவின் அரும் பெருந்தொண்டே இத்தனை உயர்வுக்கும் மூலகாரணம் என்பதை தமிழ்ப்புலவர்கள் அறிவார்கள். தமிழ் வரலாற்றில் ஐயரவர்களுக்கு என்று ஒரு தனிப் பகுதி இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

~(😉)~(😉)~(😉)~(😉)~(😉)~

22. உ.வே.சா. தந்த தமிழ்க்கொடை

ஆ. பொன்ராதா, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

தமிழினத்தின் பழம்பெரும்பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பற்றி உலகமே வியக்கிறது என்றால் அதற்கு முக்கியக் காரணம் தமிழிலக்கியம். கற்பனைக்குச் சொந்தக்காரரான உ.வே.சா. அவர்கள்இலக்கிய நயத்தோடு பதிப்பதில் தனக்கென ஓர் தனியிடத்தைப் பெற்றுக்கொண்டார். சிறந்தஎழுத்தாளராகவும் ஆராய்ச்சியாளராகவும் விளங்கினார் என்பதற்குச் சான்றாக அவரது கட்டுரைகள்உள்ளன. 1901-இல் சுதேசமித்திரன் தொடங்கி தென்னிந்திய வர்தமானி, கலைமகள், ஆனந்தவிகடன்,தினமணி, தாருல் இஸ்லாம் எனப் பல்வேறு பத்திரிக்கைகளில் கிளை பரப்பியது அவரது எழுத்தாற்றல். தமிழ்ப்பற்றின் காரணமாகத் தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தவர் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஜனனம்

ஒவ்வொரு மனிதனின் பிறப்பும் ஒரு வரமாக இருக்க வேண்டுமே தவிர, சாபமாக இருக்கக்கூடாது என்பதற்கேற்ப ஒரு சிறந்த வரமாகத் தமிழ்நாட்டின் பொக்கிஷமாகத் தமிழன்னை நமக்குக் கொடுத்த ஒருவரப்பிரசாதமாகக் கும்பகோணத்திற்கு அருகேயுள்ள உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் ***வேங்கடசுப்பையா – சரசுவதி*** அம்மாள் தம்பதியருக்கு மகனாக 1855 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் பிறந்தார்.இவருடைய தந்தை ஒரு இசைக்கலைஞர். இவரும் இசையைக் கற்றாலும் தமிழார்வத்தால் மிகவும்கவரப்பபட்டு தமிழுக்குத் தொண்டு செய்தார்.

கல்வி

கற்றோரை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதற்கேற்ப இவர் தனது தொடக்கக் கல்வியையும் இசைக்கல்வியையும் சொந்த ஊரிலுள்ள ஆசிரியர்களிடமே கற்றார். பின் தனது 17 ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை ஆதீனத்தில் புகழ்பெற்ற மகாவித்துவான் என்றழைக்கப்பட்ட தமிழறிஞர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் ஐந்தாண்டு காலம் பயின்று தமிழறிஞரானார்.***படித்தலைவிட கேட்டலே நன்று*** என்பதற்கேற்ப நிறைய பாடல்களையும் விளக்கங்களையும் கேட்டுப்பின்னர் அந்நூலின் முழுமையான கருத்துக்களைப் பதிப்பித்தார். தொடக்கத்தில் கும்பகோணத்தில் கல்லூரி ஆசிரியராக இருந்து பின் சென்னை மாநிலக் கல்லூரி ஆசிரியரானார்.

வறுமைக்காலம்

தமிழைத் தரணியெங்கும் பரப்பி தமிழரை அடிமைத்தளத்தில் இருந்து தலைநிமிரச் செய்த பாரதியும் வளமான வாழ்வை வாழ்ந்திடவில்லை. ***தேசியக்கவி*** என்று நாம் கொண்டாடினாலும் வறுமையையே அவர் செல்வமாக வைத்திருந்தார். ஆயினும் அவரின் புரட்சிக்கனலும் விடுதலை வேட்கையும் சமூகச் சாடலும் என்றுமே அழிவதில்லை. வறுமை நெருங்க முடியாத அனல் தெறிக்கும் அக்னிப் பிழம்பாக வாழ்ந்து மறைந்தார். அதேபோன்ற நிலையில்தான் உ.வே.சா. அவர்களும் வாழ்ந்திருந்தார். பசிகூட சோர்ந்து போகும் அளவுக்கு வறுமையான குடும்பத்தில் இருந்தபோதிலும் தமது இலட்சியத் தாகத்தை இழக்காமல் நூல்களைச் சேகரிப்பதிலிருந்து பின்வாங்காமல் இருந்தார்.

இலமென்று வெ.்குதல் செய்யார் புலம்வென்
புன்மையில் காட்சி யவள் (குறள் - 174)

தொண்டு

உ.வே.சா. அவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் இறுதிக்காலம் வரையில் தமிழ்த்தாயின் அணிகள் ஒவ்வொன்றையும் புதுப்பிக்கும் தொண்டில் தன் காலம் முழுவதையும் செலவிட்டார். பெரும்பான்மையான புலவர்கள் சங்க நூல்கள் என்று தெரிந்துகொண்டார்களே ஒழிய அவை இன்னவை என்பது அவர்களுக்குத் தெரியாது. கோவலன், கண்ணகி, மாதவி என்ற நாடோடியின் கதையினை அறிவார்களேயன்றி சிலப்பதிகாரக் கதாப்பாத்திரங்களை அறியமாட்டார்கள். அகநானூறு, புறநானூறு வேறுபாடு தெரியாது. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் உ.வே.சா. ஐயரும் ஒருவர்.

பாரத நாட்டில் வழங்கிவரும் மொழிகள் யாவற்றிலும் பழையது; இலக்கிய வளம் பொருந்தியது;எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது; என்றெல்லாம் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளும் நிலை தமிழுக்குக் கிடைத்திருக்கிறது என்றால் அதற்கு மூலகாரணம் உ.வே.சா. அவர்களின் பெருந்தொண்டே என்பதை இவ்வுலகமே அறியும்.

அயராத உழைப்பு

ஒருவன் திக்குத் தெரியாத காட்டில் நுழைந்து தாமே வழியமைத்து நாட்டினை உருவாக்குவது போன்று உ.வே.சா. அவர்களின் புத்தகப்பதிப்பு என்பது இலக்கிய ஆய்வு என்ற காட்டில் நுழைந்து பிழைபட்டிருக்கும் சொற்களைக் கண்டுபிடித்துப் பல நூலின் அறிவாலும் இயற்கையான அறிவுத்திறமையாலும் விடாமுயற்சியாலும் திருவருளின் துணையாலும் ஆராய்ந்து செப்பம் செய்து ***நாடு*** என்றஇலக்கிய நூல்களைக் கண்டுபிடித்து அவற்றைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இவர் பதிப்பித்த நூல்கள் வருங்காலத் தலைமுறையினரும் பயன்பெறும் வகையில் அமைந்திருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. முன் பின் சொற்களுக்கும், மெய்யெழுத்து இல்லாத சொற்களுக்கும் சரியான முறையில் அர்த்தங்களைப் புரிந்துகொள்ள பல்வேறு ஆசிரியர்களின் உரைகளைக்கண்டு விளக்கங்களைப் படித்துப் பதிப்பித்தார்.

உதாரணத்திற்குப் ***பெரன, பேரன*** என்பதற்குப் ***பேரன்*** என்ற அர்த்தத்தைப் புரிந்துக் கொண்டு எழுதினார். துன்பத்துக்குள் இன்பம் இருப்பதைப்போல துன்பப்பட்டு இன்பத்தை அடைந்தார்.

உ.வே.சா.வின் சிறப்புகள்

தமிழ் நூல்களைத் தேடியெடுத்து பதிப்பிப்பதே தம் வாழ்நாளின் குறிக்கோள் என்பதைத் தமிழ்விடு தூதில் புதிதாக இருவரிகளை உ.வே.சா.வே சேர்த்துள்ளதன் வழி அறியலாம். அப்பாடல்,

"இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர, அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்"

உ.வே.சா. அவர்கள் தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21,1932 இல் சென்னைப் பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது. அதுமட்டுமின்றி ***மகாமகோபாத்தியாய, தாட்சிணாத்திய கலாநிதி, திராவிட வித்தியா பூஷணம், டாக்டர்*** என்று பல பட்டங்கள் இருந்தாலும் தமிழ்த்தாத்தா என்ற பட்டமே அவருக்குரிய சிறப்புப் பெயராகி அவருடைய பட்டங்கள் அனைத்திலும் புகழுடையதாக இன்றும் விளங்குகிறது. உ.வே.சா.வை திசை திருப்பிய நிகழ்வு கல்லூரியில் வேலை பார்த்துக் கொண்டும் வீட்டுக்கு வரும் மாணவர்களுக்கு ஒழிந்த நேரங்களில் பாடம் சொல்லிய வண்ணமுமாக இருந்த உ.வே.சா. வின் வாழ்வில் புகழின் உச்சிக்கே செல்லும் முகமாக ஒரு சம்பவம் நடந்தது. அதுதான் தமிழாசிரியராக இருந்த உ.வே.சாமிநாதய்யரை தமிழ்த்தாத்தாவாக உருமாற்றியது. சேலம் இராமசாமி முதலியாார் பெரிய மிட்டா ஜமின்தார் பரம்பரையைச் சேர்ந்தவரான இவர் தமிழிலும் சங்கீதத்திலும் வடமொழியிலும் இளமையிலேயே பேரறிவு பெற்று விளங்கினார். இராமசாமி முதலியாரைச் சந்திப்பதற்காக உ.வே.சா. சென்றிருந்தார். தான்செய்கின்ற வேலையைப்பற்றி உ.வே.சா.சொன்னபோது நீங்கள் என்னென்ன நூல்களெல்லாம் படித்திருக்கிறீர்கள் என்று முதலியார்கேட்டார்.அதற்குப் பெரியபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம் போன்ற நூல்களைச் சொன்னபோது பழைய நூல்களையும் படித்திருக்கிறேன் என்றபோதும் மூலநூல்களையும் படிக்கவில்லையா என்று கேட்டபோதுதான் இவரிடம் நிறைய விஷயம் இருக்கிறது என்ற எண்ணம் தோன்றி பழைய நூல்களைத் தேடிப்பிடித்துப் படித்து அவற்றைப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

நூல் வடிவமைப்பு

சங்க இலக்கியம் என்றாலே உ.வே.சா என்று போற்றும் அளவிற்கு அவருடைய நூல் வடிவமைப்பு இருந்தது. ஆரம்பகாலத்தில் கல்வெட்டு, சுவரொட்டி, ஓலைச்சுவடிகளில் அச்சாணி கொண்டு நூல்களை எழுதினார். பின் அவை கறையானாலும் மழையாலும் ஆற்றில் எறிந்தும் அழியத் தொடங்கியது. அச்சு காகிதம் வந்த பின்னர் எஞ்சிய நூல்களைப் பதிப்பிக்கும்

பணியில்ஈடுபட்டார்கள். அவற்றுள் உ.வே.சா. அவர்கள் ஐம்பெருங்காப்பியத்தில் மூன்று காப்பியங்களைப் பதிப்பித்தார். முதலில் சீவக சிந்தாமணி என்ற நூலைப் பதிப்பிக்க நினைத்து சமணர்களிடம் சென்றார். அவர்கள் இந்நூலை ஆடிப்பெருக்கில் ஆற்றில்போடுவதற்காக வைத்திருக்கிறோம் என்றும், அதை மற்றவர்களுக்குக் கொடுத்தால் சாபம் வரும் என்று கூறி தர மறுத்தனர். ஆற்றில் எறிந்தபின் ஓலைச்சுவடியின் பின்னால் சென்று தேடி எடுத்து அதனைப் படித்த பின்பு ஆனந்தக்களிப்புற்று சிந்தாமணி என்ற நூலை முதலில் பதிப்பித்தார். பின் பத்துப்பாட்டையும் பல்வேறு நூல்களையும் பதிப்பித்து வடிவமைத்துள்ளார்.

பதிப்பித்த நூல்கள்

- எட்டுத்தொகை – 5
- பத்துப்பாட்டு – 10
- சீவக சிந்தாமணி – 14
- சிலப்பதிகாரம் - 1
- மணிமேகலை – 1
- புராணம் - 12
- உலா – 9
- கோவை – 6
- தூது – 6
- வெண்பா நூல்கள் - 13
- அந்தாதி – 3
- பரணி – 2

தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தியவர்

ஆங்கிலம், சமஸ்கிரும் மொழிகளைத் தூக்கிப்பிடிப்பவர்களிடம் தமிழ்மொழியின் முன் இந்த இரண்டு மொழிகளும் கும்பிடுபோட்டு காலில் விழும் அளவுக்கு தொன்மை வாய்ந்த சிறப்புமொழி என்றார். சங்க இலக்கியங்களைத் தேடிப்பிடித்து அவற்றிற்குப் புதுவடிவம் கொடுத்தார். தமிழ்மொழி வரலாற்றில் தனக்கென ஓர் தனியிடத்தைப் பெற்றிருந்தார். கால்டுவெல் என்ற ஆங்கிலேயர் திராவிட மொழிகளின் அமைப்பைப்பற்றி திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற அழகான நூல் ஒன்றினை எழுதினார். அதைச் சிறந்த நூலாகப் புலவர்கள் கொண்டாடுகிறார்கள். அக்காலத்தில் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் எழுதினவருக்கே கிடைப்பது அரிதாக இருந்தது. ஆனால் இன்றோசங்ககாலத் தமிழனையும் நூல்களையும் பாராட்டிப் பேசுகிறோம். தமிழர் நாகரிகம், தமிழர் மரபு,தமிழர் பண்பாடு, மொழிகள் யாவற்றிலும் பழையது இலக்கிய வளம் பொருந்தியது. இலக்கண வரம்புடையது என்று கூறுவதற்குக் காரணமாகத் திகழ்ந்தவர் நம் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள். அவருடைய புகழை எவ்வளவு போற்றினாலும் நம் வார்த்தைக்கு ஈடாகாது.

உ.வே.சா. வின் ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் இடங்கள்

- கீழ்த்திசைச்சுவடிகள்நூலகம்- சென்னை
- அரசு ஆவணக் காப்பகம் - சென்னை
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - சென்னை

- சரசுவதி நூலகம் - தஞ்சாவூர்

முடிவுரை

உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் பரந்த நூலமைப்பும் சொற்களுக்கும் பொருள்களுக்கும் அகராதி கொடுத்த முறையும் யார் உதவியும் இன்றி அவர் செய்த முயற்சியும் மேல்நாட்டவரும் வியக்கும் வண்ணம் தமிழ்த்துறையில் தமிழ்ப்பண்டிதராய் இருந்து சாதித்தார் என்பது ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். 2006 இல் அஞ்சல் தலை ஒன்றை வெளியிட்டுத் தமிழக அரசு அவரைக் கௌரவப்படுத்தியுள்ளது. ***தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா*** என்று நாமக்கல் கவிஞர் கூறியது போல உ.வே.சா. அவர்கள் வாழ்ந்து மறைந்தார். அவர் ஓய்வு பெற்றாலும் அவர்வளர்த்த தமிழ்த்தொண்டு என்றுமே ஓய்வு பெறுவதில்லை.

ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்

- மணிமேகலை – டாக்டர் உ.வே.சா. பதிப்பு – டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம்.
- தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் வாழ்க்கை வரலாறு – சைதை முரளி – ஆரம் வெளியீடு –பிப் - 2016.



~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

23. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் உ.வே.சா.வின் பங்களிப்பு

திருமதி சு. ஈஸ்வரி, எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

“தமிழர்தான் எனக்குச் செல்வம் அதுதான் என் அறிவுப் பசிக்கு உணவு... அன்றும் சரி இன்றும் சரி இந்த நிலைமை மாறவே இல்லை” என்று தமிழ்மீது தான் கொண்ட பற்றின் எல்லையை உணர முடிகின்றது. அவர் தன் வாழ்க்கையின் இறுதி வரை தமிழ் மூச்சையே சுவாசித்து, தமிழுடன் வாழ்ந்து தமிழை மேலும் மேலும் கற்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்துடனே வாழ்ந்தார். தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆவலைத் தவிர வேறு சிந்தனையை எண்ணத்தில் நிறுத்தாத பெரும் தமிழ் ஆர்வலர் என்ற சிறப்புக்குரியவர்.

உ.வே.சாவின் பிறப்பு

பிப்ரவரி 19, 1855 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், தஞ்சை மாவட்டத்தில், பாபநாசத்தில் உள்ள சிற்றூர் உத்தமதானபுரத்தில் வேங்கடசுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாளுக்கு மகனாய்ப் பிறந்தவர். உ.வே.சா என்று அன்போடு அழைக்கப்படும் உத்தமதானபுர வேங்கட சுப்பையர் சாமிநாதன்.

உ.வே.சாவின் கல்வியும் பணியும்

இவருடைய தொடக்கநிலை கல்வியானது உத்தமதானபுரத்திலேயே தொடங்கியது. தந்தை ஓர் இசைக்கலைஞர், இசைப் பயிற்சியையும் மேற்கொண்டார். பதினேழாம் அகவையில் தஞ்சை திருவாடுதுறை சைவ ஆதினத்தில் தமிழ் பயிற்றுவித்த திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் சுமார் 5 ஆண்டு காலம் தமிழைக் கற்றார். உ.வே.சா விற்கு சிறுவயதிலேயே ஆங்கில எழுத்துகள் மட்டும் கற்றிருந்தார். இவருக்கு தமிழில் ஆர்வம் உண்டாக முதன் முதலில் தமிழை கற்பித்தவர் திரு. சடகோபஐயங்கார் அவர்களே என்று உ.வே.சா. அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப்பணியில் உ.வே.சாமிநாதன் (உ.வே.சா)

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் உ.வே.சா. அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அச்சுப்பதிப்பு உலக மக்களுக்கு செய்த நன்மையை காட்டிலும் தமிழுக்கு பெரும் தொண்டாற்றியுள்ளது எனலாம். உ.வே.சா வின் அச்சுப்பதிப்பிக்கும் பணியால் தமிழ் இலக்கியத்தின் செம்மையும், தொன்மையும், பெருமையும் உலகத்தவரால் அறிய முடிந்தது. இவர் 90-க்கும் மேற்பட்ட புத்தங்களை அச்சுப்பதித்தது மட்டுமல்லாது 3000-க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்து தமிழுக்கு தமிழ் இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்தவர்.

உ.வே.சா. இயற்றிய முதல் பாடலும் பதிப்பித்த முதல் புத்தகமும்

உ.வே.சா வின் குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியிருந்த காலத்தில், தந்தையாரின் வறுமையைக் கண்டு ஒரு பெரிய மனிதரிடம் நெல் வேண்டி, இயற்றிய முதல் செய்யுளே அவர் இயற்றிய முதல் பாடலாகும். பின்னர் சுப்பிரமணிய தேசிக விலாசம் என்னும் மடலாயத்தில் தங்கியிருந்த தமிழ்ப்புலவர்களின் 86 பாடல்களை அவற்றுள் அவருடைய 8 பாடல்களையும் இணைத்தார். இப்பாடல் திரட்டை திருநெல்வேலி முத்தமிழகரத்தில் அச்சேற்றினார் இதுவே அவருடைய முதல் பதிப்பாகும்.

உ.வே. சா அச்சு பதித்த நூல்கள்

சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்,12 புராணங்கள், பெருங்கதை, 9உலா நூல்கள், 6தூது நூல்கள், 3வெண்பாநூல்கள், 4அந்தாதி நூல்கள், 2பரணி நூல்கள், 2மும்மணிக்கோவை நூல்கள், 2இரட்டை மணிமாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இத சிற்றிலக்கியங்கள் 4 என இவர் பதிப்பித்து வெளிவந்த நூல்கள் பல.

சங்க இலக்கியங்களில் உ.வே.சா

சங்க இலக்கியங்களைப் பற்றி இன்று நம்மால் பேச முடிகிறது என்றால் உ.வே.சா காரணமாவார். சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி இன்று நமக்குத் துல்லியமாகத் தெரிகிறது என்றால் உ.வே.சா தான் காரணம். இவ்விலக்கியங்கள் இல்லாத தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.

இவர் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அப்படியே அவைகளை பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து மறைந்து விட்ட அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும் படி செய்தார். ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கி, இந்த நூல்களை குறித்த முழு புரிதலுக்கும் வழிவகுத்தார். அவர் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர் மறைந்த காலத்தில் உயர்ந்து நின்ற தமிழின் நிலைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு போன்றதாகும்.

சீவகசிந்தாமணியைக் கற்றுக்கொடுக்க முயன்றபோது ஏட்டுச்சுவடியிலிருந்த நூலை மிகுந்த சிரமத்திற்கிடையில் கற்று பாடம் சொல்லிக் கொடுத்ததால் இந்த நூலில் உள்ள செய்திகளை உணர்ந்தவர், இந்த நூலை 1887 ஆண்டு முதன் முதலாக வெளியிட்டார்கள். தமிழர்கள் அளித்த நல்லூக்கம் இப்பணியை அவர் தொடர்ந்து செய்ய காரணமாயிற்று. இவருடைய வாழ்க்கை வரலாறு தமிழ்பால் அன்பு கொண்ட அனைவரும் போற்றும் ஒரு புதையல்.

பத்துப்பாட்டு பதிப்பு

பத்துப்பாட்டை பதிப்பிக்கும் முயற்சியை ஐயரவர்கள் கையிலெடுத்தார்கள். சீவக சிந்தாமணி போலவே ஏட்டுச் சுவடிகளை தேடி ஊர் ஊராகச் சென்றார். ஒரு பிரதி அவர்

கைவசம் ஏற்கனவே இருந்தது. "பத்துப்பாட்டில் விசயம் தெரியாமல், பொருள் தெரியாமல், முடிவு தெரியாமல் மயங்கிய போதெல்லாம் இந்த வேலையை நிறுத்தி விடலாம் என்று சலிப்புத்தோன்றும். ஆனால் அடுத்த கணமே ஒரு அருமையான விசயம் புதிதாகக் கண்ணில்படும்போது, அத்தைய விசயங்கள் சிரமமாக இருந்தாலும் அவற்றிற்காக வாழ்நாள் முழுவதும் உழைக்கலாம் என்ற எண்ணம் உண்டாகும்" என்று தமது விடா முயற்சியை உ.வே.சா பதிவு செய்கிறார். சில கெட்ட எண்ணம் கொண்ட மதியிலோர் உ.வே.சா வின் முயற்சியில் குற்றம் கண்டு தமது சுய விளம்பரத்திற்காக துண்டுப் பிரசுரம் வெளியிட்டனர். இதற்கு மறுப்பு எழுத வேண்டும் என்று உ.வே.சா விரும்பினார். சாது சேசையர் அவர்கள் இவ்வாறு நீங்கள் மறுப்பு எழுதினால் உங்கள் காலம் இதிலேயே வீணாகும் எனவும் அறிவுரை கூறி மறுப்பு கடிதத்தை தட்டி கழித்தார்.

பத்துப்பாட்டு பதிப்பு வேலையும் சென்னையில் துவங்கியது. சீவக சிந்தாமணி பதிப்பிலும் பத்துப்பாட்டுப் பதிப்பிலும் திருமானூர் கிருஷ்ணையரை சென்னையில் தங்கி மேற்பார்வையிட்டு உ.வே.சாவிற்கு உதவி உள்ளார். 1889 ஆம் ஆண்டு உ.வே.சாவின் 34-வது வயதில் பத்துப்பாட்டு பதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக திரு.கச்சியப்ப முனிவர் இயற்றிய ஆநந்தருத்தரேசர் வண்டுவிடுதூது, மாயூரம்ராமையர் இயற்றிய மயிலையந்தாதி முதலிய நூல்களையும் உ.வே.சா பதிப்பித்து வெளியிட்டார்.

புறநானூறு பதிப்பு

உ.வே.சா கும்பகோணம் கல்லூரியில் சரித்திர ஆசிரியர் வைத்திருந்த பைபிளை மையமாகக் கொண்டு அதே போல் ஆராய்ந்து ஒரே மாதிரியான கருத்துள்ள பகுதிகளை ஆராய்ச்சி செய்து 1894 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் புறநானூறு நூல் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. உ.வே.சா பதிப்பித்த எட்டுத்தொகை நூல்களுள் இதுவே முதலானதாகும். முகவுரையில் எட்டுத்தொகையும் அது பற்றிய வரலாற்றையும், அகம், புறம் என்னும் இருவகைப் பொருளின் இயல்பையும் விளக்கி எழுதிச் சேர்த்துள்ளார். அடுத்து புறப்பொருள் வெண்பாமாலை நூலை ஆராய்ச்சி செய்து பதிப்பித்தார்கள். மணிமேகலை நூலை ஆராய்ச்சி செய்து பதிப்பித்துள்ளார். அதில் உள்ள கருத்துக்களை புரிந்து கொள்ள புத்தரை பற்றியும் அவர்தம் வரலாறு பற்றியும் படித்தார். 1898 ஆம் ஆண்டு ஜீலை மாதம் மணிமேகலை மூலமும் அரும்பதவுரை முதலியனவும், முகவுரை, புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்த சங்கம் மணிமேகலைக் கதைச்சுருக்கம் முதலியவற்றுடன் வெளியிடப்பட்டது. 59 தமிழ் நூல்களிலிருந்தும் குறிப்புரையில் மேற்கோள்கள் காட்டியிருந்தார். பல சாதனைகளைத் தொடர்ந்து "என்சரித்திரம்" என்னும் அவருடைய சுய சரிதையை அவர் இத்துடன் முடித்துக் கொண்டுள்ளார்.

சிந்தாமணி பதிப்பு

இராமசாமி முதலியாரின் நட்பே உ.வே.சா.வின் பெரும் தமிழ்த் தொண்டிற்கு அடித்தளமிட்டது. அவருடைய உரையடலின் போது தாம் கற்றறிந்த நூல்களான அந்தாதி,

பிள்ளைத்தமிழ், கோவை, நைடதம், பிரபுலிங்க லீலை என்ற புத்தகங்களை கூறினார். இவற்றில் மனம் ஒட்டாத முதலியார் அவர்கள் இதற்கு முத்தாய்ப்பாயத் திகழ்ந்த மூலநூல்களைப் பற்றி வினவினார். உ.வே.சா. அவர்களுக்கு சிந்தாமணியைப் படிக்கும் வாய்ப்பு கிடைக்காததால் மூலநூலில் சிந்தாமணியை எடுத்துக்காட்டாக அவர் கூறினார். மூலநூலின் நகல் ஒன்றை கொடுத்தார் சிந்தாமணியின் சுவையை உணர்ந்த உ.வே.சா. சமயத்தாலும் நிதி பற்றாக்குறையாலும் விடாது சிந்தாமணியை அச்சேற்றி வெற்றிக் கண்டார். அச்சேறிய நூலில் சிந்தாமணி நூலிற்கு விரிவான முகவுரை எழுதிச் சேர்த்தார். அதற்கு முன்வரை தமிழ்ப்புத்தகங்களில் முகவுரை இருந்ததில்லை. இதனைத் தொடர்ந்து முதன்முறையாக நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாற்றையும் இணைத்து மதிப்பைக் கூட்டினார். அதன்பின் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, மணிமேகலை ஆராய்ச்சிகளை அச்சேற்றி வெற்றிக் கண்டார். ஏட்டுச்சுவடிகளை மீட்டெடுத்தல், சீவகசிந்தாமணி, சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் என பலவகைப்பட்ட 90 ஓலைச் சுவடிகளை மீட்டெடுத்து நூல் வடிவம் கண்டார் உ.வே.சா.

சிலப்பதிகார பதிப்பு

1891-ம் ஆண்டு ஜீன் மாதம் கோடை விடுமுறையில் சென்னைக்கு வந்து சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்கத் தொடங்கினேன். சிலப்பதிகாரம் அரும்பதவுரை மிகவும் சிதைந்திருந்தமையால் அதனைப் பதிப்பிக்கலாமா? வேண்டாமா? என்று யோசித்தார். ‘சிலப்பதிகாரம் நிறைவேறட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்’ என்று முடிவு செய்யாமல் நிறுத்திக்கொண்டார். சிலப்பதிகாரத்திற்கு முகவுரையை முதலில் எழுதி பின் அரும்பதவுரை எழுதினார். சிலப்பதிகாரம் மிக அரிய சரித்திரச் செய்திகளை உடைய நூல். தமிழ் நாட்டு அரசனாகிய செங்குட்டுவன் வட நாடு சென்று வடவேந்தர்களை வென்று கண்ணகியின் படிமச்சிலை கொணர்ந்த செய்தி மிக்க ஆர்வத்தை உண்டாக்கியது. அதைவிட, சங்க காலத்தை நிர்ணயிப்பதற்குச் சிலப்பதிகாரம் மிகவும் முக்கியமான ஆதாராமாக இருந்த நூலாகும். அடியாருக்கு நல்லார் உரையினால் அறிந்த வேறு நூல்கள் தமிழன்பர்களுடைய அறிவுக்கு ஒரு விருந்தாய் அமைந்தன. இதனை எதிர்பார்த்தே அவருரையில் கண்ட நூல்களைப் பற்றிய குறிப்புகளைத் தனியே தொகுத்து வெளியிட்டார்.

மணிமேகலை பதிப்பு

பௌத்த சமயத்தினர் கூறும் நான்கு சத்தியங்களாகிய துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்னும் நான்கையும்,

“பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்;
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம் ;
பற்றின் வருவது முன்னது; பின்ன
தற்றோ ருறுவ தறிக”

என்று மணிமேகலை சுருக்கமாக புத்த பிரானைப் புகழ்ந்து கூறியுள்ளது. மணிமேகலையின் மூலமும், அரும்பத உரையும் 1898-ஆம் ஆண்டு ஜீலை மாதத்தில் அச்சிப்பிரதி நிறைவேறியது.

முகவுரையும், புத்த சரித்திரமும், பௌத்த தருமம், பௌத்த சங்கம், மணிமேகலைக் கதைச் சுருக்கம் என்பதையும் முதலில் சேர்க்கப்பட்டன. மணிமேகலையை விரைவில் அச்சுக்குக் கொடுக்கும் பொருட்டு உரிய ஏற்பாடுகளை உ.வே.சா செய்து வந்தார். மிதிலையில் கிடைத்த பிரதிதான் எனக்கு மிகவும் பெரும் உதவியாக இருந்தது. மற்ற பிரதிகளில் ஒவ்வொரு பகுதியும் காதையென்ற பெயர் மாறியிருந்தது. ஆனால் மிதிலைப் பட்டிப் பிரதியில் பாட்டு என்று இருந்தது. முதலில் பதிகமென்பது கதை பொதி பாட்டு என்றும், விழாவறை காதை என்பது விழாவறைந்த பாட்டு என்றும், இவ்வாறாக பிறவற்றின் பெயர்களும் மாறிக் காணப்பட்டது. அந்தத் தலைப்பிலிருந்து காதை என்பதற்குப் பாட்டு என்னும் பொருள் கொள்ளலாமென்று தெரிய வந்தது. மற்ற ஆதாரங்களைக் கொண்டும் அப்பொருளே உறுதியானது.

ஏட்டுச்சுவடி மீட்பு

சங்கஇலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு நூல்வடிவம் தந்து அவற்றை அழிவில் இருந்து காத்தது மட்டுமின்றி அடுத்த தலைமுறையினர் அறியத்தந்தார். சங்ககாலத்தமிழும் பிற்காலத்தமிழும், புதியதும் பழையதும், நல்லுரைக்கோவை போன்ற பல உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

முடிவாக

தான் கொண்ட தமிழ் ஆர்வத்தால் சங்ககாலத் தமிழைத் தொட்டு பிற்காலத் தமிழ் வரை தமிழையே மூச்சாக்கி தமிழ்த் தொண்டாற்றிய உ.வே.சா. அவர்கள் "தமிழ்த் தாத்தா" என்று அனைவராலும் அறியப்படுகிறார். உ.வே.சா. தமிழ் இலக்கியத்தை பல நூல்களை பதிப்பித்துள்ளார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

24. தமிழிலக்கியத்தில் உ.வே.சா.

சி. தனலட்சுமி,
முனைவர்பட்டஆய்வாளர்,
லேடி விலிங்டன் கல்வியியல் கல்லூரி.

தமிழைக் காத்த தமிழ்த்தாத்தா என நாம் வரலாற்றில் அறியப்படும் அறிஞர் **உ.வே.சாமிநாதய்யர்**. அழிந்து கொண்டிருந்த சங்ககாலநூல்களையும் ஓலைச்சுவடிகளாக இருந்தவற்றை தேடித்தேடி கண்டறிந்து அதைப் புதுபித்த உரைநடையாசியர், பதிப்பாசிரியர், தமிழறிஞர் என்பதால் அவரைத் தமிழ்த்தாத்தா என தமிழறிஞர்கள் அழைக்கிறார்கள். பலரும் மறந்து அழிந்துபோகும் நிலையில் இருந்த பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர் இவரே. இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் உ.வே.சாமிநாத ஐயரும் குறிப்பிடத்தக்கவர். சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி இன்று நமக்குத் துல்லியமாகத் தெரிகிறது என்றால் அதற்கு உ.வே.சா தான் காரணம். தமிழ் கண்டதவப்பயன் உ.வே.சா என்றே கூறலாம். தமிழுக்கு உ.வே.சா ஆற்றிய தொண்டை இன்றைய இளைஞர்கள் உணரவேண்டும்.

உ.வே.சாவின் பிறப்பும், தமிழ் மீதுகொண்ட பற்றும்

உ.வே.சாமிநாதய்யர் பிப்ரவரி 19.1855 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு அருகே உள்ள“உத்தமதானபுரம்” எனும் சிற்றூரில் வேங்கடசுப்பையர் மற்றும் சரசுவதிஅம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். இவரது தந்தை ஒரு இசைக்கலைஞர். இவர்குடும்பம் தீராத வறுமையில் வாடியபோதும், குடும்பத்திற்காகவும் உ.வே.சா கல்வி கற்பதற்கும் இவர்தந்தை மிகுந்த முயற்சி எடுத்தார். அக்காலத்தில் இவர்குடும்பம் ஒருஊரில் நிலையாகத் தங்குவதற்கு கூட வசதியில்லாமல் ஊர் ஊராக இடம் பெயர்ந்து வாய்ப்புகளைத் தேடியலைந்தபோதும் மனம் தளராமல் தமிழைவிடாமுயற்ச்சியுடன் கற்றார் உ.வே.சாமிநாதய்யர்.

தமிழ்மொழியில் உ.வே.சா ஆழமான பற்று பெற, அவருக்கு தமிழ் கற்றுக்கொடுத்த ஆசிரியர்களும் ஒருகாரணம். அவரது முதல் ஆசிரியர் அவரின் தாய்வழிப்பாட்டனார். ஆரம்பக்கல்வியை திண்ணைப்பள்ளிக் கூடத்திலும், தமிழறிஞராகிய சவேரிப்பிள்ளையிடமும் கற்றார்.அரியலூர் சடகோபையரிடம் இசையுடன் தமிழ் கற்றார். பின்னர் குன்னம் சிதம்பரபிள்ளையிடம் திருக்குறள் பயின்றார். காரைக்குடி கஸ்தூரி ஐயங்காரிடம் நன்னூல் கற்றார். ஆங்கிலம் கற்க குடும்பத்தினர் வலியுறுத்தியபோதும், தமிழ் மீதுகாதல் கொண்டு தமிழ் நாவலர்களைத் தேடிச் சென்றார்.

உ.வே.சாவின் பன்முகம்

தனிப்பட்ட மனிதர்யாரும் பழந்தமிழ் இலக்கியத்தைத் தேடிகண்டுபிடித்து அதற்கு ஆய்வுக் குறிப்புகள் தந்ததில்லை. ஆனால் இவரது பணி மகத்தானது. இவர் பதிப்பித்த இலக்கியங்கள் 74. எழுதி வெளியிட்ட உரைநடைநூல்கள் 18, மறைந்த பின்பு பதிப்பித்து வெளியிட்ட

உரைநடைநூல்கள் 3 அவரது குறிப்புரையுடன் வெளிவந்தவை 2, ஒலைச் சுவடிகளை தேடி அலைந்த அவரது பயணங்கள் புனிதப் பயணங்களாகவே அமைந்தன.

ஆங்கிலேயருடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தகாலம்

பழந்தமிழ் நூல்களைக் கற்கவோ பாதுகாக்கவோ எவரும் முயன்றதில்லை. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சமய இலக்கியங்கள், காப்பியங்கள் தனித்தனியாக ஆங்காங்கு சிதறிக்கிடந்தன. பனைஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்ற அவை, பூச்சி அரித்தும் உருக்குலைந்தும் இருந்தன. மக்களின் அறியாமையால் பண்டைத் தமிழிலக்கிய ஏடுகளில் பல தீக்கிரையாகின. ஆடிப் பதினெட்டு போன்ற நீா் விழாக்களின்போது ஆற்றில் விடப்பட்டன. இப்படிகாணாமல் போனது தவிர, எஞ்சி இருந்த ஓலைச்சுவடிகளை தேடிப் புறப்பட்டார் உ.வே.சா. இதனால் அவா் அடைந்த இன்னல்கள் பல. அவற்றைப் பொருட்படுத்தாது சில இடங்களில் ஏற்பட்ட அவமானத்தையும் தாங்கிக்கொண்டு எங்கேயாவது ஏடு கிடைக்கும் என்று நம்பிக்கையோடு தேடியலைந்தாா். இவரது தமிழ் ஆர்வத்தைக்கண்டு வியந்த தருமபுரி ஆதீனத்தின் தலைவா் மாணிக்கவாசக தேசிகர், ஆதீனத்தில் இருந்த 50 க்கும் மேற்பட்டசுவடிகளைஅளித்தாா்.

ஏடுகளின் நிலை

இலக்கியங்கள் எழுதப்பட்டிருந்தஏடுகள் அனைத்தும் காலத்தால் பழையனவாய் உளுத்துப்போய், செல்லரித்து, எலிகடித்து, கிழிந்தும், சிதைந்து, பூச்சிகள் உண்டும் எஞ்சியவையாகக் கிடந்தன என்று ஏடுகள் இருந்த நிலையைப் பற்றி உ.வே.சா. குறிப்பிடுகிறாா். ஆசிரியா் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னா் பதிப்புத்துறையிலும் எழுத்துத்துறையிலும் முழுமூச்சாக ஈடுபட்டாா்.

உ.வே.சா. பதிப்பித்தமுதல் புத்தகம்

பாண்டிநாட்டில் செவந்திபுரத்தில் வேணுவனஉலிங்கத்தம்பிரான் கட்டிய மடாலயத்திற்கு ***சுப்பிரமணியதேசிகவிலாசம்*** என்றுபெயா். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்துப் பலதமிழ்ப் புலவா்கள் பாடலியற்றியிருந்தனா். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா. 8 பாடல்கள் இயற்றினாா். வேறு சில பாடல்களும் சோ்த்துத் திருநெல்வேலி முத்தமிழாகரமென்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன்முதலாக ஐயரவா்கள் பதிப்பித்தாா்.

பதிப்புத் துறை

கும்பகோணத்தில் முன்சீப்பாக இருந்த ராமசாமியின் உதவியால் உ.வே.சா. முதன்முதலில் பதிப்பித்த நூல் ***சீவகசிந்தாமணி***. உ.வே.சா. சைவசமயச் சாா்புடையவராய் இருந்தாலும் சமண நூலான சீவகசிந்தாமணியையும், பௌத்த நூலான மணிமேகலையையும் பதிப்பித்தாா். இறைபக்திவேறு, இலக்கிய ஈடுபாடு வேறு என்று வாழ்ந்துகாட்டியவா் உ.வே.சா. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களைத் தொடா்ந்து குறுந்தொகைக்கு உரை எழுதிப்பதிப்பித்தாா்.

எல்லாப் பாடல்களுக்கும் அவற்றின் உரைகளுக்கும்அவா் தந்திருக்கும் அடிக்குறிப்புகளும் பாடவேறுபாடுகளும் ஆய்வாளா்களுக்குப் புதுவழிகாட்டுவனவாகவும் அமைந்துள்ளன. உ.வே.சா.

வின் இச்சிறந்தபணியினால் தமிழகத்தில் பதிப்புத்துறையில் பல்வேறு புது மாற்றங்கள் ஏற்பட்டன. ஆய்வுப்போக்கில் புதுமாற்றத்தையும் புகுத்தியது.

உ.வே.சா. எழுதியவை

சிறந்த குருபக்தி, சுவாமி இருக்கிறார், மாம்பழப் பாட்டு போன்ற கட்டுரைகள் நகைச்சுவை தோன்ற உ.வே.சா. எழுதியவை. உ.வே.சா. தம் வாழ்வில் கண்டுபழகியவர்கள், இசையறிஞர்கள், இலக்கிய அறிஞர்கள், பதிப்பாசிரியர்கள், புலவர்கள் சமயக்காவலர்கள் எனப் பலரோடும் பழகியபொழுது நடந்த நிகழ்ச்சிகளை, தான் கேட்டவற்றை சுவைபடவும் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் கட்டுரைகளாகப் படைத்தார். சிலசெய்திகளைக் கதைபோலவும் படைத்துள்ளார்.

1940ல் என் சரித்திரம் என்ற நூலை எழுதத் தொடங்கினார். இந்நூலில் தமிழ் வளர்ச்சி தமிழ்நாட்டின் வரலாறு, அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள், புரவலர்கள், ஆதீனத் தலைவர்கள் ஆகியோரின் வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளார். பெரும்பாலான பதிப்புகள் தமிழ் அறிஞர்களின் இலக்கிய ஆர்வத்தினைத் தூண்டக் காரணமாகஅமைந்தன. உதாரணமாகக் ***குறிஞ்சிப்பாட்டு*** பதிப்பிக்கும்பொழுது, 99 வகையானமலர்களின் பெயர்களில் சிலமலர்களின் பெயர்கள் இல்லை. அதனைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது எத்தனை மலர்கள் உதிர்ந்துவிட்டனவோ அவற்றை எங்கேயாவது தேடிஎடுத்துக் கோர்த்துக் குறையை நிரப்புவோம் என்று சுவைபடக் கூறுகிறார்.

காந்தியின் பாராட்டு

1937ல் மகாத்மாகாந்தி தலைமையில் சென்னையில் இலக்கிய மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராய் இருந்தார் உ.வே.சா அவரின் உரையைக் கேட்டகாந்தி, ***இந்தப் பெரியவரின் அடிநிழலில் இருந்தவண்ணம் நான் தமிழ் கற்கவேண்டுமென்ற ஆர்வமிகுதிதான் என்னிடம் எழுகிறது*** என்று கூறியுள்ளார். உ.வே.சா மறைந்தபொழுது புலவர் நத்தம் என்னும் ஊர் அவரின் நினைவாக சாமிநாதபுரம் எனப்பெயர் சூட்டப்பட்டது. ***இந்தத் தமிழறிஞர்கள் மறைந்தபொழுதுகண்ணுஞ் சடையாமல் கையுந் தளராமல் உண்ணப் பசியெழுவதோராமல் எண்ணியெண்ணிச் செந்தமிழ்த் தாய்க்குச் செய்ததிருத்தொண்டுக் கிந்நிலத் துண்டோஇணை*** என உ.வே.சா.வின் தமிழ்த்தொண்டைப் புகழ்ந்தார் கவிமணிதேசிகவி நாயகம்பிள்ளை. மறைந்துபோக இருந்த பல தமிழ் நூல்களை மக்கள் நடுவில் தவழச்செய்த காரணத்தினால் தேசியக்கவிசுப்பிரமணியபாரதி, ***பொதியமலை பிறந்த மொழிவாழ்வறியும் காலமெல்லாம் புலவோர் வாயில் துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றித் துலங்குவாயே*** என்றுவாழ்த்தியதுபோல தமிழ் நெஞ்சங்கள் வாழ்த்தும்.

ஆசிரியர் பணி

1880 பிப்ரவரி 16ஆம் தேதி கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர் பணியைஏற்றஉ.வே.சா. தொடர்ந்து 23 ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்பு 1903 நவம்பரில் சென்னைமாநிலக் கல்லூரியில் ஆசிரியராகப் பதவியேற்றார். அங்கு 16 ஆண்டுகள் பணியாற்றினார். இந்த இரண்டு அரசுக் கல்லூரிகளில் பணியாற்றிய காலப்பகுதியில் அவர் பல

நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருந்தார். 1924 ஆம் ஆண்டு மீனாட்சிதமிழ்க் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை உ.வே.சா. ஏற்றார்.

உ.வே.சா. வின் பேச்சுத்திறன்

உ.வே.சா. கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமையுடையவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா. ஆற்றிய சொற்பொழிவே ***சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்*** எனும் நூலாக வெளியிடப்பட்டது.

உ.வே.சா. பெற்றபட்டங்கள்

உ.வே.சா. தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21, 1932 அன்றுசென்னைப் பல்கலைக்கழகம் ***மறுப்புறுமுனைவர் பட்டம்*** அளித்தது. இது தவிர ***மகாமகோபாத்தியாய*** மற்றும் ***தட்சிணகலாநிதி*** எனும் பட்டமும் பெற்றுள்ளார். இந்தியஅரசு,பிப்ரவரி 18, 2006 ஆம் ஆண்டில் இவரது ***நினைவு அஞ்சல் தலை*** வெளியிட்டுள்ளது.

நினைவு இல்லம்

உத்தமதானபுரத்தில் உ.வே.சா. வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. 1942ல் இவர் பெயரால் சென்னை வசந்தநகரில் (பெசன்ட் நகரில்) டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் அமைக்கப்பட்டு இன்றும் தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

முடிவுரை

ஓய்வின்றி உழைத்த உத்தமர் 28.4.1942ல் இவ்வுலக வாழ்வினின்றும் ஓய்வுபெற்றார். அவர் மறைந்தாலும் அவர் தமிழுக்குச் செய்தபணி என்றும் மங்காது நிலைத்துநிற்கும்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

25. உ.வே.சா.வின் இலக்கிய ஆராய்ச்சிப் பணிகள் - ஒரு பார்வை

ரா. கணேசன்,
வளாகம் – ஐஐ ஃ அலுவலகம்,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

'தமிழ்த்தாத்தா' என்று தமிழ் நெஞ்சங்கள் சுட்டுகின்ற உ.வே.சாமிநாதையர் சூரியசூலை என்னும் ஊரில் சங்கீத வித்துவானாகிய ஸ்ரீ வேங்கடசுப்பையருக்கு மகனாகப் பிறந்தார். சாதாரண குடும்பத்தில் பிறந்து, பணிவோடு கல்வி பயின்று, தமிழின் மேல் காதல் கொண்டு ஆராய்ச்சி செய்த இலக்கிய நூல்கள் பதிப்புப் பணிகள் சிலவற்றைக் காண்போம்.

கல்வி வளர்ச்சி

உ.வே.சா. அரியலூர், குன்னம் ஆகிய ஊர்களில் தங்கியிருந்து கல்வி கற்றார். அரியலூரில் கிருஷ்ண வாத்தியாரிடம் மாணவராகச் சேர்ந்து ஆத்திச்சூடி, மூதுரை, மணவாள நாராயண சதகம், இரத்தினசபாபதி மாலை, நாலடியார், குறள் முதலிய நூல்களைக் கற்றார்.குன்னத்தில் அவர் நன்னூல், காண்டிகையுரையைக் கற்றுத் தெளிந்தார். உ.வே.சா.வின் தொடக்கக் காலக் கல்வி மலர்தோறும் நாடிச் செல்லும் வண்டு போலக் கல்வி வல்லாரைத் தேடிச் சென்றது. அவரின் கல்வி நாட்டத்தை நன்கு வெளிக்காட்டுவன.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை

தமிழகத்தில் அந்நாளில் பெரும் புகழோடு திகழ்ந்தவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. அவர் பெருங்கவிஞர். உ.வே.சா அவரிடம் சென்று கல்வி பயிலும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவர் விருப்பம் கைகூடும் நாள் நெருங்கியது. அவர் தந்தையுடன் மாயுரத்திற்குச் சென்று மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் மாணாக்கராகச் சேர்ந்தார்.அதுவே உ.வே.சா அவர்களுக்கு ஒரு பொன்னான நாளாகும். அதன் பின்னர் திருவாவடுதுறை மடத்தில் தங்கியிருந்து பிள்ளையோடு இணைந்து புலமைப் பெற்று, தமிழ் இலக்கியங்கள் பலவற்றைப் பதிப்பித்தார்.

புராணப் பிரசங்கம்

உ.வே.சா திருவிளையாடற் புராணப் பிரசங்கம் செய்தார். அதில் கிடைத்த இருநூறு ரூபாயில் தம் குடும்பக் கடன்களை அடைத்தார். அவர் சைவசித்தாந்த சாத்திரங்களையும், சில இலக்கியங்களையும், நன்னூல் முதலிய இலக்கணங்களையும் மற்றவர்களுக்குக் கற்பித்து வந்தார். உ.வே.சா அவர்களுக்குச் சுப்பிரமணிய தேசிகரின் நட்பு கிடைத்தது. சுப்பிரமணிய தேசிகர் உ.வே.சா அவர்களின் தமிழ்ப்புலமையை எண்ணி வியந்து ஆதின வித்வானாக அவரை நியமித்தார்.

சிந்தாமணி ஆராய்ச்சி

சேலம் இராமசாமி முதலியார் கடிதம் வாயிலாக உ.வே.சா அவர்களைச் சிந்தாமணி ஆராய்ச்சியைத் தொடருமாறு தூண்டிக் கொண்டே இருந்தார். உ.வே.சா அவர்களுக்குப் பலர் சிந்தாமணி பிரதிகளைக் கொடுத்தனர். இவ்வாறு 23 பிரதிகளைப் பெற்று ஆராய்ந்தார். சிந்தாமணி

முழுவதையும் தனியே இருகுறிப்புப் புத்தகங்களில் எழுதி வைத்துக் கொண்டு ஆராய்ந்தார். இவ்வாறு சிறிது சிறிதாகத் தெரிவுப் பெற்றுச் சிந்தாமணியைப் பதிப்பிக்க உறுதி பூண்டார். சிந்தாமணி பதிப்புப்பணித் தொடங்கி ஒவ்வொரு இலம்பகமாக அச்சேறியது. பதிப்பு வேலையில் முழு கவனத்தையும் செலுத்தினார். சிந்தாமணி பதிப்பு இறுதிக் கட்டத்தை நெருங்கியது. உ.வே.சாமிநாத ஐயரின் தமிழ்ப்பற்றைப் பெரிதும் பாராட்டினர். அன்பர்கள் பலர் பாராட்டி எழுதினர்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சியும் பதிப்பும்

உ.வே.சா அவர்கள் பத்துப்பாட்டினைப் பதிப்பிப்பதாக முடிவு செய்தார். நல்ல பிரதிகளைத் தேடித் தொகுத்து ஆராயலாம் என்று கருதினார். அவரின் நண்பர் கவிராயர் இல்லத்திலிருந்து உரையோடு கூடிய பத்துப்பாட்டு பழமையான ஏடு ஒன்று கிடைத்தது. வேறு சில சுவடிகளும் கிடைத்தன. அதில் திருமுருகாற்றுப்படை முதல் ஏழு பாட்டுகள் வரிசையாக இருந்தன. நீண்ட தேடலுக்குப் பின் குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் இவற்றையும் ஆராய்ந்து தொகுத்துப் பத்துப்பாட்டினை அச்சுக்குக் கொடுக்க ஆயத்தம் செய்தார். 1819ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பத்துப்பாட்டுப் பதிப்பு வெளிவந்தது. உ.வே.சா அவர்களின் கடின உழைப்பால் பத்துப்பாட்டுப் பதிப்பு முழுவடிவம் பெற்றது.

சிலப்பதிகார ஆராய்ச்சி

பத்துப்பாட்டைக் கொண்டு பலவகை ஆராய்ச்சிகளைச் செய்யலாம் என்று அறிஞர்கள் போற்றினர். உ.வே.சா. மகிழ்ச்சியால் அடுத்துச் சிலப்பதிகார ஆராய்ச்சியைத் தொடங்கினார். சேலம் இராமசுவாமி முதலியார் தம்மிடம் தந்த சிலப்பதிகார மூலமும் உரையும் அடங்கிய காகிதப் பிரதி ஒன்று, பிள்ளையவர்களின் மூலப்பிரதி ஒன்று, உரைப்பகுதி ஒன்று, தியாகராய செட்டியாரின் பிரதி ஒன்று, இன்னும் சில பிரதிகள் ஆகியவற்றை கொண்டு சிலப்பதிகார ஆராய்ச்சியை நடத்தினார். அச்சிடுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டார். ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படும் வகையில் பல்வேறு அகராதிகளையும் கதைச்சுருக்கம் இளங்கோவடிகள் வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு மேற்கோள்நூல் பற்றிய குறிப்புகள், முன்னுரை முதலியவற்றை எழுதி முடித்தார். 1891ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்கத் தொடங்கினார்.

புறநானூற்றுப் பதிப்பு

உ.வே.சா. அவர்களின் புறநானூற்று ஆராய்ச்சியில் புதுமுறை ஒன்று தோன்றியது. முதலில் புறநானூற்றில் உள்ள பொருள்களையும் சொற்களையும் அகராதியாகச் செய்து கொண்டார். பின்னர் சங்க நூல்கள் அனைத்திற்கும் அகராதி எழுதி வைத்துக் கொண்டார். உ.வே.சா. பதிப்பித்த எட்டுத்தொகை நூல்களுள் முதலாவது இதுவே. மணிமேகலை பௌத்த சமயநூல் என்பதனை அறிந்த உ.வே.சா. பௌத்த சமயச் செய்திகள் தமிழில் எங்கெங்கே வருகின்றன என்று தேடித் தொகுத்தார். மணிமேகலை பௌத்த சமயக் கருத்துக்களை எளிமையாகவும் இனிமையாகவும் கூறுவதனைக் கண்டு உள்ளம் உருகினார். உ.வே.சா. முதன்

முறையாக உரை எழுதிய நூல் மணிமேகலை. இதன் பதிப்பு வெளிவந்தபின் உ.வே.சா. அவர்களுக்குப் பாராட்டுகள் குவிந்தன.

உ.வே.சா. பதிப்பித்த யாம் அறிந்த நூல்கள் சில

ஐங்குறுநூறு, தமிழ்விடுதூது, சீவகசிந்தாமணி, குறுந்தொகை, திருக்காளத்தி புராணம், பரிபாடல், பத்துப்பாட்டு, புறநானூறு, சிவசிவ வெண்பா, பாசவதைப் பரணி, பழனி இரட்டை மணிமாலை.

முடிவுரை

தமிழ் வரலாற்றில் உ.வே.சா. அவர்களுக்கென்று ஒரு தனிப்பட்ட பகுதி இருக்கும். தமிழ்த் தாத்தாவின் அரும்பெருந்தொண்டே தமிழின் உயர்வுக்கு மூலக்காரணம் என்பதைத் தமிழ்ப்புலவர்கள் அறிவார்கள். சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற காப்பியங்களையும், சங்க இலக்கியங்களையும் பழுமரம் தேடிச்செல்லும் பறவை போன்று பிரதிகளைத் தேடி அலைந்து அவற்றைப் பதிப்பிப்பதற்குப் பலரின் உதவியை நாடிப் பொருள் சேகரித்து நூலாகப் பதிப்பித்தவர் உ.வே.சாமிநாதையர். உ.வே.சா. வின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்க நாம் நமது ஞானத்தைப் பயன்படுத்திக் கடிதின் முனைந்து உழைத்தால் நிச்சயமாகப் பெருமையை நாம் தேட வேண்டியதில்லை. அது நம்மைத் தேடி வரும் என்பதை நாம் உணரலாம்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

26.பன்முகத் தன்மைகொண்ட உ.வே.சா

ம. சுகிர்தா,
முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதிநேரம்),
நிர்மலா கலைக்கல்லூரி, கோயமுத்தூர்.

முன்னுரை

கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்ச்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந்தமிழ்நாடு"

- **(பாரதியார் கவிதைகள் பக்.42)**

என்று பாரதியார் பாடக் காரணகர்த்தாவாய் இருந்த பெருமகனார்; சங்க நூல்கள் என்னும் பழைய அணிகலன்களைத் தேடித்தேடி எடுத்து ஆராய்ந்து பதிப்பித்து தமிழ் அன்னையின் திருமேனியில் அணிவித்தவர்; தமிழகத்தில் ஒரு புதிய யுகத்தை; புது மலர்ச்சியை உண்டாக்கியவர்; "தமிழ்த்தாத்தா" என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள். பாரி என்றும், அதியமான் என்றும் வெறும் பெயர்களை, சம்பவங்களை செவிவழிச் செய்தியாகவே கேட்டுக் கொண்டிருந்த மக்களை, காப்பிய இன்பத்தை நூல்களின் வழியே நுகரச் செய்தவர். அவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டினை, தமிழ் மீது அவர் கொண்டிருந்த பற்றினை, தமிழ் மாணவராய், தமிழாசானாய், நூல் பதிப்பாளராய், நூலாசிரியராய் எனப் பன்முகத் தன்மை கொண்டிருந்த டாக்டர் உ.வே.சா அவர்களைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

மாணவர் உ.வே.சா

19.02.1855 அன்று கும்பகோணத்தை அடுத்த உத்தமதானபுரம் எனும் சிற்றூர் தமிழுலகிற்கு ஒரு பெரும் புலவரைத் தானமாகத் தந்தது. அவர்தான் உ.வே.சா அவர்கள். வேங்கட சுப்பையருக்கும் சரசுவதி அம்மாளுக்கும் தவப்புதல்வனாய் பிறந்தார். இளமைப் பருவத்தில் தம்முடைய பாட்டனார் வேங்கடாசலையர் அவர்களிடம் அரிச்சுவடி படித்தார்.

அதன் பிறகு துதிநூல்களை எல்லாம் கற்றுக்கொண்டார். உ.வே.சா அவர்களின் தந்தையார் வேங்கட சுப்பையர், தான் இசை பயின்ற ஆசான் கிருஷ்ணையர் அவர்களிடம் தன் மகனும் இசை பயில வேண்டு என்ற ஆவல் கொண்டார். தந்தையின் விருப்பப்படியே இசையைக் கற்றுக்கொண்டாலும் உ.வே.சா அவர்களின் எண்ணமெல்லாம் தமிழ் கற்றுக்கொள்வதிலேயே இருந்தது. மகனின் விருப்பத்தை நிறைவேற்றுவதே தம் கடமை என்று உணர்ந்த வேங்கட சுப்பையர், 1870 முதல் 1876 வரை "தமிழ்க்கடல்" என்று போற்றப்பட்ட திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் உ.வே.சா அவர்களைத் தமிழ்க்கல்வி பெறச்செய்தார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதன்முதலில் உ.வே.சா அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடம், அவர் பாடிய திருக்குடந்தைத் திரிபந்தாதிப் பாடல்கள் தாம். இவ்விளைவே மாணாக்கரிடத்தில் காணப்பெற்ற தமிழ்ப்பசியைப் பிள்ளையவர்கள் தெரிந்து கொண்டார். இவரது பசிக்கேற்ப ஒரு நாளில் பல பாடல்களைப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பஞ்சத்தில் அடிபட்டவன் சிறிது சிறிதாகப் பல இடங்களில் உணவு பெற்று உண்டு, பிறகு ஓரிடத்தில் வயிறு நிறைய சோறு உண்டது போல ஒரு வகை உணர்ச்சியைப் பெற்றதாக உ.வே.சா அவர்கள் சொல்கிறார். மேலும் அவர்,

“எனக்கிருந்த தமிழ்ப்பசி மிக அதிகம். மற்ற இடங்களில் நான் பாடம் கேட்டபோது அவர்கள் கற்பித்த பாடம் யானைப் பசிக்குச் சோளப் பொரிபோல இருந்தது. பிள்ளையவர்களிடம் வந்தேன். என்ன ஆச்சரியம்! எனக்குப் பெரிய விருந்து. தமிழ் விருந்து கிடைத்தது. என் பசிக்கு ஏற்ற உணவு. சில சமயங்களில் அதற்கு மிஞ்சிக்கூடக் கிடைக்கும். “இனி நமக்குத்தமிழ்ப் பஞ்சம் இல்லை” என முடிவிற்கு வந்தேன்” - என்று எழுதுகிறார்.

அடுத்தடுத்த நாள்களில் வரிசையாகப் பல பிரபந்தங்களை மகாவித்வானிடம் பாடம் கேட்டார். பல அந்தாதிகளையும், பிள்ளைத்தமிழ் நூல்களையும் வேறு பிரபந்தங்களையும் இவர் கற்றார்.

பாடம் சொல்வதற்காகவே அவதரித்தவர்போல மகாவித்துவான் அவர்களும், பாடம் கேட்பதற்காகவே வந்தவர் போல உ.வே.சா அவர்களும் இருந்தனர். இருவரின் உணர்ச்சியும் ஒன்றுபட்டு சங்கமமாயின. அதனால் இருவருக்கும் பயன் கிட்டியது. மகாவித்துவான் பாடம் சொன்னார். உ.வே.சா அவர்கள் தம் தமிழ்ப் பசிதீரப் பாடம் கேட்டார். இவ்வாறாக இவரது மாணவப்பருவம் மீனாட்சி சுந்தரனாருடன் கழிந்தது.

ஆசிரியர் உ.வே.சா அவர்கள்

பிள்ளையவர்களின் மறைவுக்குப் பின்னர், அவரது நண்பர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரிடம் சிலநூல்களை உ.வே.சா அவர்கள் பாடம் கேட்டார். தாம் பாடம் கேட்டதோடல்லாமல் அங்கிருந்த தம்பிரான்களுக்குப் பாடம் சொல்லும்படியாகத்தேசிகர் இவரைப் பணித்தார். இவ்வண்ணமே உ.வே.சா அவர்களின் ஆசிரியப்பணி துவங்கியது.

பின்னர் 1880ஆம் வருடம் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக தியாகராசச் செட்டியார் அவர்களால் நியமிக்கப்பட்டார். கல்லூரி வந்த உ.வே.சா. அவர்களை, சக ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து உ.வே.சா. அவர்களிடன் புலமையைச் சோதிக்க எண்ணி, சில பாடல்களுக்கு விளக்கம் கேட்டார்கள். உ.வே.சா அவர்களும் தங்குதடையின்றி, அவர்கள் குறிப்பிட்ட அனைத்துப் பாடல்களுக்கும் விளக்கம் அளித்தார். அவரது பதில்களைக் கேட்ட பேராசிரியர்கள் மிகவும் வியந்து, மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பாடம் கேட்டவருக்கு இத்தகைய திறமை இருப்பது ஆச்சரியமன்று என்று புகழ்ந்தார்கள். கல்லூரி முதல்வர் கோபால்ராவ் இந்தச்

செய்திகள் அனைத்தையும் கேட்டுத் திருப்தி அடைந்து உடனே வேலையை மேற்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். அதுமுதல் உ.வே.சா. அவர்களின் ஆசிரியப்பணி தொடர்ந்தது.

நூல் பதிப்பாளர் உ.வே.சா. அவர்களின் சீவக சிந்தாமணிப் பதிப்பு

சேலம் இராமசாமி முதலியார் என்பவர் கும்பகோணத்தில் முன்சீப்பாகப் பணிபுரிந்து வந்தார். அவர் தமிழ், வடமொழி மற்றும் இசையிலும் வல்லவர். திருவாவடுதுறை ஆதினக்கர்த்தராக இருந்த சுப்பிரமணிய தேசிகர் இராமசாமி முதலியாரைப் பார்த்துவரும்படியாக உ.வே.சா. அவர்களைப் பணித்தார். 21.10.1880ல் உ.வே.சா. அவர்களும் போய்ப் பார்த்தார். இராமசாமி முதலியார் அவர்கள், "என்னென்ன படித்திருக்கிறீர்கள்?" என்று உ.வே.சாவிடம் கேட்டபோது, அவர் தாம் படித்த அந்தாதிகள், பிள்ளைத்தமிழ் நூல்கள், கோவைகள் முதலியவற்றை வரிசையாக ஒப்புவித்தார். அதைக் கேட்ட இராமசாமி முதலியார், "இவை எல்லாம் பிற்காலத்து நூல்கள் தாமே? பழங்காலத்து நூல்களான சங்கப்பாடல்களைப் படித்திருக்கிறீர்களா? சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றைப் படித்தது உண்டா?" என்று கேட்டார். "சுவடிகள் கிடைத்தால் நிச்சமாக படித்துப் பார்ப்பேன்" என்று உ.வே.சா. அவர்கள் தைரியமாகச் சொன்னார்.

சில நாட்கள் கழித்து இராமசாமி முதலியார் சீவகசிந்தாமணிக் கடிதப்பிரதி ஒன்றை எடுத்து உ.வே.சா. அவர்களிடம் கொடுத்தார். உ.வே.சா. முதலில் அதைப் படித்தபோது சிறிது தடுமாறினார். நச்சினார்க்கினியார் உரையுடன் அந்தப்பிரதி இருந்ததால் ஒருவாறு அதைப் படித்துப் பொருள் தெரிந்து கொண்டார். அதன்பிறகு இ.ராமசாமி முதலியாருக்குப்பாடம் சொல்லத் தொடங்கினார். தமக்கு விளங்காத விஷயங்களை விளங்கவில்லை என்றே சொல்லி வந்தார். இந்தச்செயலைக் கண்டு முதலியார் மிகவும் உவகை அடைந்தார்.

சிந்தாமணி, சமணநூலாதலால், அதிலுள்ள சம்பிரதாயங்களைக் கும்பகோணத்தில் வாழ்ந்து வந்த சமணர்களிடம் கேட்டுத்தெரிந்து கொண்டார். பிறகு மீண்டும் சிந்தாமணியைப் படித்துப்பார்க்கவே பல செய்திகள் நன்றாக விளங்கின. அப்பால் அதைப் பதிப்பிக்க எண்ணம் கொண்டார். அதன்படி சென்னையில் சக்கரவர்த்தி ராஜ கோபாலச்சாரியார் (இராஜாஜி) என்பவரின் உதவியைப் பெற்று சிந்தாமணிப் பதிப்பைத் தொடங்கினார். முதன் முதலாக ஒரு பழைய நூலைப் பதிப்பிக்கும் பேறு கிடைத்தது கண்டு உவகை கொண்டார்.

சீவகசிந்தாமணி வெளியான பிறகு, தமிழ்நாட்டில் ஒரு புதுமலர்ச்சி ஏற்பட்டது. உ.வே.சா. அவர்கள், சிந்தாமணி உரையில் காட்டப்பெற்ற மேற்கோள்களுக்குரிய இடங்களையும் பல பழைய நூல்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகளையும் கொடுத்திருந்தார். இந்நூலைப் படித்த ஆராய்ச்சியாளர்களும், புலவர்களும் பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

பத்துப்பாட்டுப் பதிப்பு

சீவகசிந்தாமணியைப் பதிப்பித்த உ.வே.சா. அவர்கள், பத்துப்பாட்டை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். சீவகசிந்தாமணி ஒரு காவியம்; பத்துப்பாட்டு நூலோ கடைச்சங்க நூல். இரண்டு

நூல்களின் இயல்பையும் தெரிந்து கொள்வதற்காக உ.வே.சா. அவர்கள், ஏட்டுச்சுவடிகள் பலவற்றைத் தேடிச் சேகரித்தார்.

பல நண்பர்களின் பொருள் உதவியோடு, பத்துப்பாட்டைப் பதிப்பிக்கத் தொடங்கினார். அப்போது பத்துப்பாட்டின் மூலம் கிடைக்காததால், நச்சினார்க்கினியர் உரையுடன் இருந்த ஓலைச்சுவடியை வைத்துக்கொண்டே, பத்துப்பாட்டு நூலாக 1889-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அச்சிட்டு வெளியிட்டார்.

சிலப்பதிகார வெளியீடு

பத்துப்பாட்டை அடுத்து, சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து வெளியிட விருப்பம் கொண்டார். அடியார்க்கு நல்லார் உரையைக் கொண்டு நூலைப் பதிப்பிக்கலாம் என்றால் அதில் எல்லாக் காதைகளுக்கும் உரை இல்லை. அரும்பத உரை ஒன்று கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு பலவற்றுக்கும் பொருள் செய்து கொண்டார். மேலும் சில ஏடுகள் கிடைக்கலாமே என்ற எண்ணத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சைவர்களுடைய வீடுகளில் தேடினார். இவரது பெரும் முயற்சியால் ஒன்றிரண்டு சிதிலமான ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அவற்றை வைத்துக்கொண்டு, சிலப்பதிகாரத்தை மேலும் ஆராய்ச்சி செய்து அச்சிடத் தொடங்கினார்.

புறநானூறு வெளியீடு

சிலப்பதிகாரத்தைக் தொடர்ந்து, புறநானூறு என்ற சங்க நூலைப் பதிப்பிக்க வேண்டுமென்ற விருப்பம் உ.வே.சா.-வுக்கு உண்டாயிற்று. புறநானூற்றுக்கு ஒரு பழைய உரை உண்டு. ஆனால் அதில் முதல் 260 பாடல்களுக்கே உரை இருந்தது. அதற்கு மேல் இல்லை. ஆனாலும், பலகாலம் நூல்களைப் பயின்ற பழக்கத்தால் ஒருவாறு பொருள் செய்து கொண்டு 1893ம் வருடம் ஜனவரி மாதம் அச்சிடத் தொடங்கி 1894ஆம் வருடம் செப்டம்பர் மாதம் புறநானூற்றுப் பதிப்பு நிறைவேறியது. புறநானூற்றில் காணப்பட்ட வரலாற்றுச் செய்திகள், பழங்கால மன்னர்கள், வள்ளல்கள், மக்களின் வாழ்க்கை நிலை எல்லாம் அதனால் தெரியவந்தன. உ.வே.சா.வின் இவ்வரிய முயற்சியால் தமிழகத்திற்கு ஒரு சங்ககாலப் புதையல் கிடைத்தது.

மணிமேகலை வெளியீடு

உ.வே.சா. அவர்கள் புறநானூற்றுக்குப் பிறகு மணிமேகலையை ஆராயத்தொடங்கினார். ஆனால், அந்த வேலை அவ்வளவு எளிதாக அமையவில்லை. காரணம், சீவகசிந்தாமணி சமணநூலாக இருந்ததால், சமணர்கள் பலரிடம் நூலைப் பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றுக் கொண்டார். ஆனால் மணிமேகலை புத்தமத கொள்கைகள் நிரம்பிய நூல். அதைப்படித்த போது உ.வே.சா. அவர்களுக்குப் பலசெய்திகள் தெரியவில்லை. ஆனாலும் வீரசோழியம் என்னும் இலக்கணநூலில் பௌத்தமதக் கருத்துகள் காணப்பட்டன. அவற்றைப் படித்து பல செய்திகளை அறிந்து கொண்ார்.

மேலும் சென்னையில் மளூர் ரங்காசாரியார் என்ற பேராசிரியர் இருந்தார். அவர் பௌத்த நூல்களை நன்றாகக் கற்றவர். அவர்மூலம் பௌத்த மதக்கருத்துகளை எல்லாம் மிக்க ஆர்வத்தோடு ஒரு மாணாக்கனைப் போல அறிந்து கொண்டார். அதன் விளைவாக 1896-ஆம்

ஆண்டு ஜூன் மாதம் மணிமேகலையைச் சென்னையில் அச்சிடக்கொடுத்தார். 1898-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மணிமேகலை பதிப்பிக்கப்பட்டது. அதில் 59 தமிழ் நூல்களிலிருந்தும், 29 வடமொழி நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருந்தார். அரும்பதவுரையில் கண்ட சொற்களுக்கு விளக்கங்களையும், மணிமேகலைக் கதைச் சுருக்கத்தையும் சேர்த்திருந்தார்.

உ.வே.சா. பதிப்பித்த பிற நூல்கள்

ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு ஆகிய எட்டுத்தொகை நூல்களை பதிப்பிடுவதில் உ.வே.சா. அவர்கள் கவனம் செலுத்தினார். ஒரு திணைக்கு நூறு பாட்டாக ஐந்து திணைகளுக்கு ஐங்குறுநூறு பாடல்களைக் கொண்டது பதிற்றுப்பத்து. சேர மன்னர்களுடைய பெருமையைச் சொல்வது. அகநானூறு அகப்பொருள் அமைதியுடையது. உதயணன் சரித்திரத்தைச் சொல்வதே பெருங்கதை என்ற நூலை வெளியிட்டார். மேற்கண்ட நூல்களை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடலாம் என்ற எண்ணத்தில் தம் கவனத்தைச் செலுத்தினார் உ.வே.சா. அவர்கள்.

தானத்தை மறுத்த உ.வே.சா.

ஒருமுறை இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி அவர்கள், உ.வே.சா. சங்ககால நூல்களைப் பதிப்பிப்பதைக் கேள்வியுற்று, அவருடைய சேவையைப் பாராட்டி ஒரு கிராமத்தைத் தானமாகத் தர முன்வந்தார். ஆனால் உ.வே.சா. அவர்களோ சமஸ்தானத்தின் பொருளாதார நிலையை அறிந்து, பெருந்தன்மையுடன் அரசர் அளிக்க வந்த கொடையை ஏற்க மறுத்தார். தமிழுக்காகத் தானமாக எதையும் பெறாமல், தமிழ்நூல்களையே நமக்குத் தந்து சென்ற உ.வே.சா. அவர்களின் பெருந்தன்மையை என்னவென்று புகழ்வது!

ஆங்கிலேயருடன் உ.வே.சா.

1898-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கும்பகோணம் கல்லூரிக்கு ஆளுநர் ஹாவ்லக் பிரபு வந்திருந்தார். ஆங்கிலேயரான அவரை உ.வே.சா. அவர்கள் தமிழில் வரவேற்றுப் பேசினார். அதனை மிகவும் ரசித்த ஆளுநர் உ.வே.சா.-வுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

அதேபோல பாரிஸில் இருந்த பேராசிரியர் ஜூலியன் வின்சனுக்கும் உ.வே.சா. அவர்களுக்கும் நெடுநாள் பழக்கம் உண்டு. இருவரும் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர். வின்சனின் மாணவர் ஒருவர் தமிழகம் வந்தபோது உ.வே.சா. அவர்களைச் சந்தித்தார். ஜூலியன் வின்சன், உ.வே.சா. அவர்களைச் சந்தித்தார். ஜூலியன் வின்சன், உ.வே.சா.-வைப் பற்றி பக்கடி சொல்வது உண்டு என்றும், தமிழுக்கு இவர் செய்துள்ள தொண்டைப் பற்றிச் சிலநூல்களில் எழுதியிருப்பதாகவும் சொன்னார்.

ஆசிரியர் கனவை நனவாக்கிய உ.வே.சா.

உ.வே.சா.-வின் ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவாரூர் தியாகராச பெருமானின் 360 திருவிளையாடல்களையும் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்று எண்ணினார். ஆனால் மூலநூலின் ஒரு பகுதியே கிடைத்தது. கிடைத்த 14 லீலைகளை மொழி பெயர்த்துத் தமிழ்ச் செய்யுளாக இயற்றினார். அந்த நூலை 1895-ஆம் ஆண்டு பதிப்பித்து ஆசிரியரின் கனவை நனவாக்கினார்.

பாரதியாரால் பாராட்டப் பெற்ற உ.வே.சா.

1906-ஆம் ஆண்டு உ.வே.சா. அவர்களுக்கு மகாமகோபாத்தியாய பட்டம் கிடைக்கப் பெற்றது. அதனைப் பாராட்டி நடத்தப்பட்ட கூட்டத்திற்கு பாரதியார் வந்திருந்து உ.வே.சா.-வைப் பாராட்டிப் பாடல்கள் எழுதி வாசித்துச் சிறப்பித்தார்.

முடிவுரை

"கும்பமுனி எனத் தோன்றும் சாமிநாதப் புலவன்" என்று பாரதியாரால் சிறப்பிக்கப்பட்ட உ.வே.சா. அவர்கள், தமிழுக்காகவே வாழ்ந்தவர். தமிழாசிரியராய், நூல் பதிப்பாளராய் பழந்தமிழ் நூல்களையும், உயர்காப்பியங்களையும் காலத்தின் அழிவின்றும் மீட்டுத் தந்தவர். பழந்தமிழர் வாழ்வை இலக்கியச் செய்திகள் வாயிலாக உணர்த்தியவர். தமிழ் இலக்கியப் பதிப்புத்துறையில் பாடுபட்டு, "தமிழ் ஏடு தேடுவதுதான் நான் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் தல யாத்திரையும், தீர்த்த யாத்திரையும் ஆகும்" என்று கூறும் இவரை, நீருக்கும் நெருப்புக்கும் இரையாக இருந்த தமிழைத் தடுத்து காப்பாற்றிய தமிழ்த்தாயின் தவப் புதல்வன் என்று சொன்னால் மிகையாகாது.

துணை நின்ற நூல்கள்

1. பாரதியார் கவிதைகள்
2. தமிழ் நேசச் செல்வர்கள் : ஆசிரியர் தஞ்சை நா.எத்திராஜ்
3. இந்திய இலக்கிய சிற்பிகள்
   தமிழ்த் தாத்தா (உ.வே.சாமிநாத ஐயர்) ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் :

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

27. உ.வே.சா. கண்ட கல்விமுறை

டாக்டர் மா. ஆனந்த், எம்.இ., பி.எச்.டி.,
பேராசிரியர், மின்னணு மற்றும் தகவல் தொடர்பு துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095.

தமிழ்த்தாயின் அணிகலன்களை ஒவ்வொன்றாய் புதுப்பித்து தமிழன்னைக்கு அழகுச் சேர்த்தவர். புலவர் பெருமக்கள் யாவரும் பெயரளவிலேயே புகழ்ப் பெற்ற காலத்தில் அவர்தம் பாடல்களின் அழகினை, நயத்தினை ஏட்டிற்கு ஏற்றி அவர்களுக்கு பெரும் புகழினைத் தேடித் தந்தவர். இன்று நமக்கு தொல்பொருள் ஆய்வுகளின் உண்மைகளைப் பொதித்து வைத்திருந்த நூல்களினைச் சுவடியில் இருந்து அச்சிற்கு ஏற்றியவர். உலக மக்கள் சங்ககால தமிழரின் வாழ்வினை அறிந்து கொள்ள முன்னோடியாய்த் திகழ்ந்தவர். பலவகை ஆராய்ச்சிகளை எல்லாம் நாம் நிகழ்த்தி சங்ககாலம் பொற்காலம் என்று நாம் பெருமை பேச வழிவகுத்து தந்தவர். பண்டைய தமிழரின் வீரம், காதல், பண்பாடு, கொடை, புகழ் இவற்றை மறைத்து வைத்திருந்த சுவடிகளை அச்சில் ஏற்றி புத்தக வடிவில் நாம் காண விழைந்தவர். அவரே நம் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்கள்.

இவரின் பெருமையை உணர்ந்ததால் தான் தமிழுலகம் இவருக்குப் பல பட்டங்களை வழங்கி சிறப்பித்துள்ளது.

1906-ல் மகாமகோபாத்தியாயர் பட்டம்
1917-ல் திராவிட வித்தியா பூஷணம் பட்டம்
1925-ல் தட்சிணாத்திய கலாநிதி பட்டம்
1932-ல் டாக்டர் பட்டம்
1948-ல் சென்னை அரசினர் கல்லூரியில் முழு உருவச் சிலை
(1942 ஏப்ரல், 28 அவர் மறைவுக்குப் பின் நிறுவப்பட்டது)

தமிழ் என்னும் கடலின் ஆழத்தைத் தமிழுலகுக்குக் காட்டிய நம் தமிழ்த்தாத்தா சிறந்த பண்பாளர், இணையற்ற ஆசிரியர். மாணவர்கள் உள்ளம் அறிந்து கற்பிப்பவர், கவிஞர், எழுத்தாளர், புலமைப் பெருங்கடல் என்னும் பாராட்டிற்கு உரியவர்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்,
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்”

மகாகவி பாரதியார்

என்ற பாரதியின் கனவை செயலாக்கித் தந்தவர். இவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. அப்பெருமகனாரின் தொண்டுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

இவரின் சுயசரிதையில் இருந்து அவர் பெற்ற கல்வி மற்றும் கல்வி முறையை மட்டுமே பொருண்மையாய்க் கொண்டு இக்கட்டுரை வழங்கப்பட்டுள்ளது.

காகிதம் இல்லா பள்ளிக்கூடம்

உ.வே.சா. அவர்கள் தான் முதலில் உத்தமதானபுரத்தில் இருந்த நாராயணையர் உபாத்தியாயரிடம் கல்வி கற்றார். இவர் உ.வே.சாமிநாதயையருக்கு அரிச்சுவடியும், எண்சுவடியும் கற்பித்தார்.

இவ்விரண்டையும் நன்கு கற்ற ஐயரவர்கள் பின்னர் சாமிநாதரையது பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். அங்குதான் ஐயரவர்கள் ஏட்டில் எழுதவும் கற்றுக் கொண்டார். ஐயரவர்கள் பள்ளிக்கூடம் சென்ற காலம் பள்ளிகள் காகிதங்களை அறியாத காலம். சிலேட்டும் இல்லை. மாணவர்கள் மணலில் எழுதியே பழக வேண்டும். மணலில் பெற்ற பயிற்சிக்குப் பின்னரே எழுத்தாணியால் ஓலைச்சுவடியில் எழுதக் கற்று கொள்ள வேண்டும். இம்முறையான கிராமத்துப் பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்லுவார்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடம் ஆங்கிலேயர்களின் கல்வி முறைக்கு முன் தமிழகத்தில் இருந்த கல்வி முறையாகும். வீட்டுத் திண்ணையிலே மாணவர்களை உட்காரச் செய்து புதுமணல் பரப்பி அதன் மேல் எழுத்துகளை எழுதக் கற்றுத் தருவர். ஆசிரியர் வீட்டு திண்ணையில் நிகழ்ந்ததால் இது இப்பெயர் பெற்றது போலும்.

இதனை உ.வே.சா அவர்களும் நல்லுரைக் கோவை என்னும் நூலில் பண்டைக்காலத்துப் பள்ளிக்கூடங்கள் என்ற கட்டுரையில் தெரியப்படுத்தியுள்ளார். மாணவர்களுக்கு ஐந்து வயது ஆனபின்பு விசயதசமியில் பள்ளிகளில் சேர்ப்பர். அங்கு அவர்கள் மணலில் எழுதிப் பழகுவர். திண்ணைப் பள்ளிகளில் கல்வி முறை பெரும்பாலும் மனப்பாட முறையை பின்பற்றுவதாகவே அமைந்திருந்தது. மேலும் அப்பள்ளிகளில் வகுப்புத் தலைவனுக்கு “சட்டாம் பிள்ளை” என்பது பெயர் என்கிறார் உ.வே.சா. இப்பள்ளிகள் விடியற்காலையிலேயே துவக்கப்பட்டுவிடும்.

தாமஸ் முன்ரோ (மாகாண ஆளுநர்) அவர்களின் கணக்கெடுப்பின் படி 1822 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திண்ணைப் பள்ளிகள் செயல்பட்டதாக அறியப்படுகிறது. ஒரு மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒரு பள்ளி இருந்ததாகத் தெரிகிறது என்பது”, எப்படியிருந்தது அந்தக் காலப் பள்ளிக்கூடம் கட்டுரையின் ஆசிரியர் ஆதி (2017, தி இந்து) (ஜூன்-7) அவர்களின் கருத்து.

சுவடித்தூக்கோடு பள்ளிக்குச் செல்லல்

சாமிநாதையர் சங்கீதமும் சமஸ்கிருதமும் தெரிந்தவர். அவர் உ.வே.சா. அவர்களுக்கு சம்சேஷ ராமாயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம், நீதிசாரம், அமரம் (மூன்று காண்டங்கள்) போதித்தார். இவை உ.வே.சாவிற்கு நன்கு மனப்பாடம். சாமிநாதையர் அவர்களே உ.வே.சாவிற்கு தமிழும் கணக்கும் கற்பித்தார்.

பள்ளிகள் காலை 5மணிக்கு துவங்கிவிடும். இன்று நம் பிள்ளைகள் சுமக்கும் புத்தகப் பைகளைப் போன்று அன்றைய மாணவர்கள் சுவடித்தூக்கோடு பள்ளிகளுக்குச் சென்றனர். சுவடிகளையெல்லாம் வைத்துத் தூக்கிச் செல்லும் கயிறுகள் சேர்ந்த பலகைக்குச் சுவடித்தூக்கென்று பெயர். இந்தத் தூக்கும் ஒருவகை உறியைப் போலவே காணப்படும். இந்தத் தூக்குகளை எல்லாம் பள்ளிக்கூடத்தில் ஓரிடத்தில் மாட்டி வைத்துவிட்டு மாணவர்கள்முதல் நாள்

நடந்த பாடங்களை எல்லாம் பாராமல் ஒப்பிக்க வேண்டும். ஆசிரியர் திண்ணையில் அமர்ந்திருந்தாலும் இராமல் போனாலும் இது மாணவர்களுக்கு வாடிக்கையாய் நிகழும் நிகழ்வு.

பள்ளிக்கூடமும் நேரமும்

- ✓ விடியற்காலை ஐந்து மணிக்கு பள்ளிக்கூடம் தொடங்குதல்.
- ✓ ஆறு மணிக்கு மேல் வாய்க்கால் அல்லது குளங்களில் தந்த சுத்தி செய்து தத்தம் குலத்திற்கேற்ற சின்னங்களைத் தரித்து சந்தியா வந்தனம் அல்லது வேறு அனுஷ்டானம் செய்தல் வேண்டும்.
- ✓ பழைய மணலை அகற்றி புதிய மணலை பரப்பி பாடங்களைப் படிப்பர்,
- ✓ ஒன்பது மணிக்கு சாப்பிடுவது வழக்கம். (பழைய அமுதை) அச்சமயம் ஆசிரியர் பிரம்பால் பிள்ளைகளின் கையில் அடித்து அனுப்புவார். சோற்று ருசியில் பள்ளிக்கூட ஞாபகம் மறவாதிருப்பதற்காக...
- ✓ பன்னிரண்டு மணிக்கு மதிய உணவுக்கு வீட்டுக்குச் செல்லுவார்கள்.
- ✓ மூன்று மணிக்கு மீண்டும் பாடம் தொடங்கும்.
  (இரவு ஏழுமணி வரை பள்ளிக்கூடங்கள் நடைபெறுவதுண்டு)

என்று பள்ளிகளின் வேலை நேரத்தை பிரித்துக் காட்டுகிறார் உ.வே.சாமிநாதயைரவர்கள்.

ஓலைச்சுவடியும் மாணவர்களும்

பிள்ளைகளுக்கு மணல் தான் சிலேட்டு, பனையேடு தான் புத்தகம் என்கிறார் உ.வே.சா அவர்கள். மாணவர்கள் ஏட்டுச்சுவடியில் இருந்து நெடுங்கணக்கை (அரிச்சுவடி) கற்றுக்கொள்வான். பின் சுவடிகளைப் பெற்று படிப்பான். ஓலை வாரவும், சுவடி சேர்க்கவும் நன்றாக எழுதவும் நாளாகும். முதலில் எழுதித் தரும் ஓலையைப் பார்த்து மாதிரி எழுதிப் பழுகுவர். அந்த மூல ஓலைக்குச் "சட்டம்" என்று பெயர்.

மாணவர்கள் சுவடிகளை அப்படியே பயன்படுத்துவதில்லை. ஏட்டுச் சுவடிகளில் மஞ்சள், ஊமத்தை இலைச்சாறு, வசம்புக்கரி முதலியவற்றைத் தடவி படிப்பது வழக்கம். இவை ஏடுகளில் உள்ள எழுத்துக்கள் தெளிவாக தெரிவதற்கும் பூச்சிகள் வராமலும் தடுக்கும். மேலும் ஏடுகளுக்கு என்று குறிப்பிட்ட அளவுகள் இல்லை. வெவ்வேறு அளவுகளில் இவை காணப்படும். மேலும் சுவடிகளில் துவாரம் ஒன்று இருக்கும் அவை ஏடுகளைக் கட்டி வைக்கப் பயன்படும். இத்துவாரத்தின் வழியாக நூற்கயிற்றைக் கோர்த்து அதில் கிளிமூக்கு என்ற ஒன்றை முடிந்தும் வைப்பர். பனையோலையை நரம்போடு சேர்த்தும் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கிளி மூக்குக்குப் பதிலாகவும் பயன்படுத்துவார்கள். மேலும் பொத்தான், செம்புக் காசு, சோழிகளையும் முடிப்பர்.

இவ்வாறு கட்டப்பட்ட ஏடுகளில் ஆரம்பத்திலும் இறுதியிலும் வெற்றேடுகள் சிலவும் சேர்த்திருப்பர். இதேபோன்று எழுத்தாணிகளிலு: குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என வெவ்வேறு வகை உண்டு. வாரெழுத்தாணிக்கு பனையோலையில் உரை செய்வர். மடக்கெழுத்தாணியில் பிடி இருக்கும். அதற்கு மரத்தினாலோ, தந்தத்திலோ, மாட்டுக்

கொம்பிலோ பிடி அமைக்கப்படும் என்று தான் இளமைப் பருவத்தில் கற்ற கல்வியின் உபகரணங்களைச் சுயசரிதையில் வடித்துக் காட்டுகிறார் உ.வே.சா.

சுவடித் துவக்கல்

சுவடித்துவக்கல் என்றால் பிள்ளைகளுக்கு எல்லாம் அளவற்ற இன்பம். காரணம் புதுப்பாடம் கற்கப்படுவதால் அன்று "காப்பரிசி கிடைக்கும் பள்ளிக்கூடம் இராது" என்பது ஐயரவர்களின் கூற்று.

ஒரு பையன் புதிததாக ஒரு நூலைப் படிக்கத் தொடங்குவதைச் சுவடி துவக்கல் என்பர். பனையோலையில் அந்த நூலை எழுதி மஞ்சள் தடவி விநாயக பூஜை செய்து பையனிடம் கொடுப்பார் உபாத்தியர் என்கிறார் உ.வே.சா. அவன் வீட்டிலிருந்து காப்பரிசி நிவேதனம் கொண்டு வருவான். அதில் தேங்காய்த் துண்டு, எள்ளு, வெல்லம் இவற்றை சேர்த்திருப்பார்கள். பிள்ளைகளுக்கும் அவற்றை பகிர்ந்து கொடுப்பர். பள்ளிக்கூடமும் அன்று விடுமுறையாகும்.

விடுமுறை நாட்கள்

பௌர்ணமி, அமாவாசை, பிரதமை, அஷ்டமி ஆகிய தினங்களில் பள்ளிக்கூடம் நடைபெறாது. அன்று விடுமுறை நாளாகும். இதனை "வாவு" என்று கூறுவார்கள். உவா என்பதே அவ்வாறாக மருவியது. உவா – பௌர்ணமிக்கும் அமாவாசைக்கும் வரும் பெயராகும்.

பள்ளிக்கூடப் பாடங்கள்

காகிதம், புத்தகம் வழக்கத்தில் வராத காலத்தில் மாணவனின் ஞாபகத் திறனை அபிவிருத்தி செய்வது ஆசிரியரின் கடமை. அந்நிலையிலும் ஒரு மனிதனின் அடிப்படை வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களை இளமையில் பள்ளிக்கூட வாழ்வில் மனப்பாடமாகத் தெரிந்து கொள்வான். காரணம் எண்சுவடியிலுள்ள கீழ்வாயிலக்கம், மேல்வாயிலாக்கம் குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்ப்பாடுகள் போன்றவையே. இவை தங்கள் வியாபாரத்தை நடத்தும் வழியைப் புகட்டின. எல்லாம் பெரும்பாலும் மனக்கணக்காகவே இருந்தன. மேலும் அக்காலத்தில் பிரபவாச் சுவடி (பிரபவாதிச் சுவடி) என்ற ஒரு புத்தகம் பாடமாக இருந்தது. இதில் வருடங்கள், மாதங்கள், நட்சத்திரங்கள், யோகம், கரணம், ராகு காலம், குளிகை காலம், யமகண்டம் முதலிய சோதிட குறிப்புகளும் லோகங்கள், சக்கரவர்த்திகள், மன்வந்தரம், தீவுகள் முதலிய பல செய்திகளும் இருந்தன. இவற்றையெல்லாம் நன்றாக மனனம் செய்து பின் வரும் பல சந்தேகங்களை ஆசிரியரின்றி தெரிந்து கொள்ளும் சக்தியைப் பெறுவான் என்பது ஐயரவர்களின் வாக்கு.

இவ்வாறாய் மாணவர்களை நன்முறையில் உருவாக்கியவை திண்ணைப் பள்ளிக்கூடங்கள். உ.வே.சாவும் இதே திண்ணைப் பள்ளிக்கூடங்களிலேயே கல்வி கற்றவர். அதனால்தான்போலும் தமிழன்னை உ.வே.சாவை மடியில் தாங்கிக் கொண்டாள். இச்சிறந்த பள்ளிகளின் ஞாபகங்களே உ.வே.சா வை தன் சுயசரிதையில் "என் சரித்திரம்" என்னும் நூலில் இளமைக் கல்வி என்னும் பகுதியில் சிறப்பாய் எழுதப்பெற அமைந்தது. உ.வே.சாவும் தான் கற்ற இளமைக் கல்வியில்

தான் கண்ட சிறந்த கல்வி முறையை விவரிக்கிறார். இவை அக்காலத்து கல்வி முறையை மட்டும் கூறவில்லை. கல்வியின் சிறப்பையும் அதனால் மாணவர்கள் பெற்ற பயனையும் நம்மிடையே படம் பிடித்துக் காட்டுகின்றது.

தொகுப்புரை

1. காகிதம், சிலேட்டு, பேனாக்கள் இன்றி நடந்த அன்றைய பள்ளிக்கூட முறையை அறியமுடிகின்றது.
2. பள்ளிக்கூடங்களின் காலமும் வகுப்பு நேரமும் எவ்வாறாய் பகுக்கப்பட்டிருந்தது என்பதை காணலாம்.
3. சுவடித்தூக்கல் என்னும் புத்தகப்பையை நாம் அறியலாம்.
4. ஓலைச்சுவடியோடு மாணாக்கர்களுக்கு இருந்த தொடர்பை உணர முடிகின்றது.
5. சுவடித்துவக்கலின் நிகழ்வு இனிமையாய்ப் பகிரப்பட்டுள்ளது.
6. விடுமுறை நாட்களின் சிறப்பு நன்கு புலனாகிறது.
7. மாணவர்கள் கற்ற பாடங்கள் அனைத்தும் வாழ்க்கைக்குப் பேருதவி செய்யும் பாடங்களாய் அமைந்ததும் தெரிய வருகின்றது.

நிறைவாக உ.வே.சா. கண்ட கல்விமுறை மனனம் செய்யும் கல்வி முறையாக அமைந்தது என்பது நன்கு புலனாகிறது.

~(😉)~(😉)~(😉)~(😉)~(😉)~

28.பன்முகப் பார்வையில் தமிழ்த் தாத்தா உ.வே.சா.
உ.வே.சா அவர்களின் தமிழ்ப்பற்று

தங்க.ஆரோக்கியதாசன்
ஆர்வலர்

கால வெள்ளத்தில் காணாமல் போய்க் கொண்டிருந்த சங்க இலக்கியங்களைத் தமிழுக்கு மீட்டுக் கொடுத்த பெருமை தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத அய்யரையேச் சாரும். அவரின் அரிய அர்ப்பணிப்பு இல்லை என்றால் தமிழ் உலகு கிடைத்தற்கரிய பொக்கிஷமான அமிழ்தினும் இனிய சங்க இலக்கியங்கள் தமிழுலகத்திற்குக் கிடைக்காமல் போய் இருக்கும்.

அதற்குக் காரணம் உ.வே.சா அவர்கள் தமிழ் மீது கொண்ட பக்தியும் பற்றுமாகும். அவர் தன் வாழ்நாளின் இறுதி வரை தமிழை ஆர்வத்தோடு கற்கும் தமிழ் மாணவராகவே வாழ்ந்தார் உண்பதும் உடுப்பதும் சுவாசித்து வாழ்வதும் தமிழுக்காகவே என்று தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

உ.வே.சா இளமையில் கற்ற தமிழ்

உ.வே.சாமிநாத அய்யர் கும்பகோணத்தில் உத்தமதானபுரத்தில் 1885 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பத்தொன்பதாம் தேதி தந்தை வெங்கட்ட சுப்ரமணி அய்யருக்கும் தாயார் சரஸ்வதி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.

இளம் வயதில் தனது பாட்டனாரிடமும், திண்ணைப் பள்ளியிலும் கல்வி பயின்றார். பின்னர் சடகோப அய்யங்காரிடம் தமிழ் பயின்றார். அந்தத் தமிழே அவரை தமிழ்ப்பணி அர்பணிக்கு அடித்தளமாக மாற்றி இருக்கிறது.

அக்காலத்தில் பள்ளியில் பயில காகிதமோ, சிலேட்டோ கிடையாது தரையில் மணல்பரப்பி அதன் மீது எழுதியும், ஓலையில் எழுத்தணிக்கொணடு எழுதி கல்வி பயின்றிருக்கின்றனர். உ.வே.சா அவர்களும் அவ்வாறே கல்வி கற்றிருக்கிறார்.

இளமையில் உ.வே.சா அவர்கள் விருத்தாச்சல ரெட்டியாரிடம் தமிழ் கற்றார். அங்கு தான் நன்னூல், தொல்காப்பியம் மற்றும் பல இலக்கணங்களையும் பாடல் எழுதும் நுணுக்கங்களையும் கற்றார்.

தமிழ் தான் எனக்குச் செல்வம், அது தான் என் அறிவுப் பசிக்கு உணவு, அன்றும் சரி இன்றும் சரி என்று சொன்னவர் உ.வே.சா. தன் வாழ்க்கையின் கடைசி வரை தமிழ் கற்பதிலே நாட்டம் கொண்டிருந்தார் என்பதே தமிழ் மீது அவர் கொண்டிருந்த பற்றை உணர்த்தும்.

இரவென்றும் பகல் என்றும் பாராமல் அன்ன ஆகாரம் இன்றி தேடித் தேடி அலைந்து தமிழைக் கற்று என்ன பயன் அதைவிட ஆங்கிலம் கற்றால் வாழ்வின் உன்னத நிலை அடையலாம் என்று பலர் பலவிதமாக இவருக்கு யோசனை சொன்னபோது அதை பொருட்படுத்தாத தமிழ்த் தாத்தா அவர்கள் பல புலவர்களை தேடிச் சென்று அவர்களிடம் தமிழ் கற்றார்.

சிறு வயதில் இவரிடம் யாராவது ஆங்கிலம் இவ்வுலக வாழ்விற்கும், வடமொழி அவ்வுல வாழ்விற்கும் (ஆன்மீகம்) பயன்படும் என்று சொன்னால், என் அன்னைத் தமிழ் இவ்வுலகம் மற்றும் அவ்வுலகம் இரண்டிற்கும் இன்றியமையாதது என்று வார்த்தையால் சாட்டை அடி கொடுப்பார்.

தமிழ் தாகத்தால் கற்றறிந்த தமிழாசிரியர்கள் எங்கு கிடைப்பார்கள் என்று தேடிச் சென்று தமிழ் கற்றிருக்கிறார். தமிழ்ப் புலவர்களைக் கண்டால் இவரிடம் தமிழ் கற்றுக் கொள்ளமுடியுமா என்று ஏங்கித் தவித்திருக்கிறார். விடா முயற்றியோடு அத்தகையவர்களிடம் தமிழ் கற்றிருக்கிறார். தமிழ்மீது தீராக் காதலனாக இருந்திருக்கிறார்.

தமிழ் மீது இவர் கொண்ட ஆர்வத்தை உணர்ந்த ஆசிரியர் இவரின் 17ஆவது வயதில் தஞ்சாவூர் திருவாடுதுரை சைவ ஆதினத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற மகா வித்துவான் தமிழறிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்க அனுப்பினார். அங்கு அவர் ஐந்து ஆண்டுகள் அவரிடம் தமிழ் கற்று தமிழறிஞரானார். இங்கு தான் இவர், பிரபந்தங்கள், கோவைகள், பிள்ளைத் தமிழ், அந்தாதி போன்றவைகளை கற்று தேர்ந்தார்.

உ.வே.சா.வின் படைப்புத் திறன்

உ.வே.சா செய்யுள் இயற்றும் ஆற்றல் கொண்டவராக திகழ்ந்தார். தந்தையின் வறுமையை போக்க ஒரு பெரிய மனிதரிடம் சென்று நெல்லுக்காய் இயற்றிய செய்யுள் தான் இவர் இயற்றிய முதல் செய்யுளாகும். அதன் பின் அவர் கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்தார். அங்கு மாணவர்களுக்கு கற்பிப்பதோடு நிறைய தமிழ் இலக்கியங்களைக் கற்றார்.

பாண்டி நாட்டில் செவந்திபுரத்தில் சும்பிரமணி விலாசம் என்ற அழகிய மடாலயத்தை பல புலவர்கள் பாடி இருக்கின்றனர். ஊ.வே.சா அவர்கள் அம் மடாலயத்தைப் பற்றி எட்டு பாடல்கள் பாடி அதை புத்தகமாக்கினார் இதுவே இவர் பதிப்பித்த முதல் புத்தகமாகும். பின் திருக் குடந்தை புராண புத்தகத்தை பதிப்பித்தார். இது இவரது இரண்டாவது புத்தகமாகும்.

உ.வே.சா வின் தமிழ்த் தொண்டு

கும்பகோணம் கல்லூரியில் உ.வே.சா பணியாற்றிக் கொண்டிருந்த போது, முன்சிபு பணியில் இருந்த இராமசாமி முதலியார் அவர்கள் சேலத்தில் இருந்து பணிமாற்றம் பெற்று கும்பகேணத்திற்கு வந்தார் அப்போது இருவருக்கும் தமிழால் நட்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த தொடர்புதான் தன் வாழ்க்கையில் புத்தகம் பதிப்பிக்க திருப்புமுனையாக அமைந்தது என்று உ.வே.சா சொல்வார்.

இராமசாமி முதலியார் உ.வே.சாவின் தமிழ் புலமையையும் ஆர்வத்தையும் அறிந்து தன்னிடமுள்ள சீவகசிந்தாமணி ஓலைச்சுவடியைக் கொடுத்து அதை படித்து முறைப்படுத்தி படி எடுத்து குடுக்கச் சொன்னார். அது சமண நூலாக இருக்கிறது என்று சைவர்கள் குறை கூறியபோது "நமக்கு வேண்டுவன சொற்சுவையும், பொருட் சுவையும், தமிழ் நயமும் சுவையும் தான் அது அதிகமாக இருக்கும் காவியத்தை படித்து இன்புறுவதில் என்ன தடை?" என்று தமிழ் தொண்டில் மதம் குறுக்கிடுவதை உ.வே.சா விரும்பாதது தமிழ் மீது அவர் கொண்ட பற்றினை விளக்குகிறது.

சிந்தாமணியை பதிப்பிக்க பல ஓலைச்சுவடி நகல்களை ஒப்புநோக்கி படி எடுத்து அதன் சுவை மாறாமல் பொருத்தமான சொற்களுக்கு தகுந்த பொருளோடு வார்த்தைகளை தேர்ந்தெடுத்து காவியச் சுவை குன்றாமல் படி எடுப்பது அவருக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்தது, அதோடு கிடைத்த பல ஓலைச்சுவடிகள் மடிந்தும் சிதைந்தும் எழுத்துக்கள் தெரியாமல் இருந்ததால் படி எடுக்க மிக சிரமப் பட்டு சிந்தாமணியைப் பதிப்பத்தார்.

உ.வே.சா அவர்கள் ஓலைச்சுவடிகளை தேடிப்போகும் போது பல அவமானங்களை அடைந்திருக்கிறார். சில இடங்களை பல சிரமப் பட்டு சில இடங்களை தேடிப் போகும் போது ஓலைச் சுவடிகள் கிடைக்காமல் திரும்பி இருக்கிறர். சிலரால் கொடுக்க இயலாது என்று திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார். பிறகு கிரிவலம் வந்த நல்லூர் பால்வந்தநாதன் சன்னதியில் இருக்கிறது என்று கேள்விப்பட்டு அங்கு சென்று கேட்கும்போது அந்த கோயிலில் இருந்தவர் அதை ஆகமமுறைப்படி நெய்யில் தோய்த்து ஆகுதியில் இட்டு சாம்பலாக்கி விட்டோம் என்று சொன்னபோது அதிர்ச்சியடைந்த உ.வே.சா தமிழை எரிப்பதைவிட ஆகமத்தை அல்லவா ஆகுதியில் இட்டிருக்க வேண்டும் என்று சொல்லி மதங்களைக் கடந்தது தமிழ் என்று தமிழின் பெருமை நிலைநாட்டி இருக்கிறார்.

அதைப்போல சிலப்பதிகார காப்பிய ஓலைச்சுவடியை மற்ற சுவடிகளுடன் ஒப்பு நோக்க தேடிக் கொண்டிருக்கும் போது அது தருமபுரம் மடத்தில் இருப்பதாகக் கேள்விப் பட்டு திருவாவாடுதுறை மடத்தில் இருந்த இவர் அங்கு எப்படிப் போவது என்று மனம் கலங்கினார். ஏன் என்றால் அந்தக் காலத்தில் இரண்டு மடங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்ததால் ஒரு மடத்தில் இருந்தவர்கள் அடுத்தமடத்திற்கு செல்லாமல் இருந்திருக்கின்றனர். இருந்தாலும் உ.வே.சா அவர்கள் திருவாவாடுதுறை மடத்திடம் அனுமதிப்பெற்று தமிழ்மாணம் காக்க தன்மானம் பார்க்காமல் தருமபுரம் மடத்திற்குச் சென்று அவர்கள் ஒத்துழைப்புடன் சிலப்பதிகார ஓலைச்சுவடிகளை தேடி எடுத்து தனக்கு தேவையானவற்றை குறிப்பெடுத்துக் கொண்டு வந்து சிலப்பதிகார காப்பியத்தைப் பதிப்பித்தார். தன் சொந்த செலவில் பல நூல்களை பதிப்பித்திருக்கிறார். பத்துப்பாட்டு ஓலைச்சுவடிகளை 50 ரூபாய் கொடுத்து ஒருவரிடம் வாங்கி அதை பதிப்பித்திருக்கிறார்.

உ.வே.சா பதிப்பித்த நூல்கள்

உன் அறிவால் பிறர் அறிவை உயர்த்து, அடுத்தவரைப் பற்றி சிந்தி என்ற சிந்தனைக்கு ஏற்ப உ.வே.சா அவர்கள் சுமார் 96 நூல்களுக்கு மேல் ஓலைச் சுவடியில் இருந்த தமிழை வளர்ப்பதற்காக, ஆசிரியப் பணியை செய்துக் கொண்டே நடந்தும், மாட்டுவண்டியில் பயணம் செய்தும் ஆறுகளைக் கடந்தும் ஓலைச் சுவடியில் இருந்த தமிழை காகிதத்தில் அச்சேற்றி தமிழின் பெருமையையும், தமிழரின் பண்பாட்டுச் சிறப்பையும் இவ்வுலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறார். அவற்றுள் சீவகசிந்தாமணி,பெருங்கதை, பத்துப்பாட்டு எட்டுத்தொகையில் 4, காப்பியத்தில் 3, பரணி, மும்மணிக்கோவை, இரட்டைமணிமாலை, அந்தாதி, தூது இலக்கியம், உலா, சில வெண்பா நூல்கள், மற்றும் கோயில் புராணங்கள் அடங்கும்.

தமிழரின் சாட்சிக்கு சாட்சியாக திகழ்ந்த இலக்கிய ஓலைச்சுவடிகளை தமிழ் மீது கொண்ட தீராக் காதலால் வாழ்நாள் எல்லாம் ஓடி ஓடி தேடித் தேடி பதிப்பித்த உ.வே.சா அவர்களை ஆங்கிலேயரான ஜி.யு.போப் அவர்கள் "உங்கள் பதிப்பு பணி மிகவும் செம்மையாகவும் முழுமையாகவும் இருக்கிறது. பழந்தமிழ் நூல்களை எல்லாம் இன்று வாழும் தமிழர்கள் அறிந்துக் கொள்ள வகை செய்யுங்கள். பழந்தமிழையும் புதுத்தமிழையும் இணைக்கும் ஒரு பாலத்தை அமையுங்கள் என்று உ.வே.சா அவர்களைப் பாராட்டி இருக்கிறார்.

இவ்வாறு தமிழ் மீது கொண்ட பற்றால் உ.வே.சா, அவர்கள், இரவென்றும் பகல் என்றும் பாராமல் அன்ன ஆகாரம் இன்றி ஊர் ஊராகச் சென்று தமிழ் புலவர்கள் எழுதி வைத்த ஓலைச் சுவடிகளை தேடித் தேடி கண்டெடுத்து அவைகள் கரையானால் அரிக்கப்பட்டும், முறையான பராமரிப்பின்றி மண்ணும் தூசியும் படிந்து மட்கிப்போயும், கோவில்களிலும், வசதி படைத்தோரின் மாட மாளிகைகளிலும் மடங்களிலும் ஓலைக் குடிசையிலும் இருந்தவைகளை கண்டெடுத்து முறைப்படுத்தி படியெடுத்து காகிதத்தில் அச்சேற்றி நூலாக பதிப்பித்து கட்டையெனத் தேய்ந்து தமிழ் மணமாக கமழ்கிறார்.

இதனால் தமிழரின் பண்பாடு, கலாச்சாரம்,வீரம், ஈரம்,காதல், நாகரீகத்தை நம்மால் அறிய முடிகிறது. தமிழரின் தொன்மைக்கு ஒரே சான்றாக இருந்த ஓலைச் சுவடிகளை ஆவணப்படுத்திய பெருமை தமிழ்த் தாத்தா உ.வே.சா அவர்களையேசாரும்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

29. டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் பதிப்புக்கலை : ஓர் ஆய்வு

ம.சபரிநாதன் எம்.ஏ.,எம்.ஃபில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) ,தமிழ்த்துறை,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 029.

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், உத்தமதானபுரம் என்ற ஊரில், ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஐந்தாம் ஆண்டு பிப்ரவரி திங்கள் பத்தொன்பதாம் நாள் அந்தணர் பரம்பரையில் பிறந்தார். இவரின் பெற்றோர் வேங்கட சுப்பையர் சரசுவதியம்மாள் ஆவார்கள். இவரின் தாத்தா வேங்கடாசலையர் பள்ளிக் கூடம் வைத்து நடத்தி வந்தவர். பாட்டி செல்லத்தம்மா இசைக்கலையில் வல்லுநராக விளங்கியவர்.

கல்வி

தன் தாத்தாவாகிய வேங்கடாசலையர்தான் **ஐந்தாம் வயதில்** டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் **கல்விக்கு வித்திட்டவர்.** மன்னன் செங்கோல் ஏந்தி ஆட்சி செய்தததைப் போல், தன் கையில் ஒரு பிரம்பை வைத்து **'நாராயண ஐயா'** அவர்கள் உத்தமதானபுரத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து **'எண் சுவடிகளையும் அரிச்சுவடிகளையும்'** மனப்பாடம் செய்ய வைத்தார்.

பள்ளிகளில் படிக்க நூல்களோ எழுதத் தாளோ இல்லாத காலத்தில் ஓலைச்சுவடிகளைக் கொண்டே படித்து வந்தார். **'சாமிநாத ஐயர் என்பவர் தமிழ், கணக்கு'** ஆகியவற்றைப் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொடுத்தார். எழுத்துப் பயிற்சியில் **'விஷ்ணுசகஸ்ரநாமம், நீதிசாரம், அமரம் மூன்று காண்டங்கள்'** ஆகியவற்றை மனப்பாடம் செய்ய செய்தார். ஆசிரியரான சாமிநாத ஐயரின் உறவினரான **'சிவசாமி ஐயர்'** அவர்களிடம் ஆங்கில எழுத்துக்களையும் எண்களையும் கேட்டுக் கற்றுக் கொண்டார்.

அரியலூரில் **'கிருஷ்ணவாத்தியார்'** என்பவரிடம், ஏடுகளில் எழுத்தாணி கொண்டு எழுதப் பழகினார். மட்டிக் காகிதத்தில், கொறுக்கந்தட்டாகிய பேனாவால் எழுதக் கற்றுக் கொண்டார். **'ஆத்திச்சூடி, மூதுரை, மணவாள நாராயண சதகம், இரத்தின சபாபதி மாலை, நாலடியார், திருக்குறள்'** ஆகிய மூல நூல்கள் ஆகியவற்றைப் படித்தார்.

'சடகோப ஐயங்கார்' இயற்றிய **'ஆலந்துறை ஈசர் பதிகம்**, **பிறவாகிய திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கடமாலை'** ஆகியவற்றையும் மனப்பாடம் செய்தார். வீட்டில் ஓய்வு நேரங்களில் **'சூடாமணி நிகண்டு பன்னிரண்டு தொகுதிகளையும்'** மனப்பாடம் செய்தார். **'நன்னூல் சூத்திரம், அறப்பளீசுவர சதகம், குமரேச சதகம், கோவிந்த சதகம், மணவாள நாராயண சதகம், இரத்தின சபாபதி மாலை, நீதி வெண்பா'** ஆகிய நூல்களையும் மனப்பாடம் செய்தார்.

'கதிர்வேல் கவிராயரிடம் பல தனிப்பாடல்கள், பாடியோர் வரலாறு', போன்றவற்றில் சிறந்த அனுபவம் பெற்றார்.

அவ்வரலாறுகள் பதிப்புப்பணிக் காலத்தில் பெரிதும் துணைபுரிந்தன. **'குன்னம் என்னும் ஊரில் உள்ள சிதம்பரம் பிள்ளை'** என்பவரிடம் **'சிறுபிரபந்தங்கள்'** சிலவற்றைப் பாடம் கேட்டறிந்ததோடு நில்லாமல் திருவிளையாடற் புராணத்தையும் முறையாகக் கற்றார்.

'கார்குடி கஸ்தூரி ஐயங்கரிடம் நன்னூல், நவநீதப்பாட்டியல், சில பிரபந்தங்கள்' போன்றவற்றை முறையாகக் கற்றுணர்ந்தார். **'கம்பராமாயணத்தையும், திருவரங்கத்தந்தாதியையும் சாமி ஐயங்கார்'** அவர்களிடம் கற்றார். **'யாப்பருங்கலக்காரிகை, பிரபந்த இலக்கணங்கள் என்னும் இலக்கண நூலை, செங்கணம் என்னும் ஊரில் உள்ள விருத்தாசல ரெட்டியார்'** அவர்களிடம் கற்றுணர்ந்தார்.

முதல் முயற்சி

பல ஆசிரியர்களிடம் கல்வியைக் கற்றுணர்ந்து தெளிந்து வந்த பிறகு, தாமே நூலை யாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். தாம் இயற்றிய முதல் நூல் **'அறுசீரடி ஆசிரிய விருத்தம்'.** இதில் **'நான்கு அடிகளும், ஒரு அடிக்கு ஆறு சீர்களும் என அமைத்து, எதுகை, மோனை எல்லாம் பொருந்த இயற்றியிருந்தார்'.** இந்நூலை **பெருமாளையர்** என்பவரிடம் காண்பித்தார். அவர் நூலை பார்த்துவிட்டு ஓசை பொருந்த அமைந்து இருந்தால் மட்டுமே விருத்தத்தின் அமைப்பை முழுமையாக பெற்றிருக்கும் என்ற உண்மையை பெருமாளையர் என்பவர் மூலம் உணர்ந்தார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

'நோய்க்கு மருந்து இலக்கியம்' என்று கூறியவரும், திருச்சியில் எண்ணெய் கிராமத்தில் பிறந்தவருமான **'மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் 1871 ஆம் ஆண்டு மாணவராக சேர்ந்தார்'.** முதலில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவரான **'சவேரிநாத பிள்ளையிடம் நைடதத்தைக் கற்றார்'**. அடுத்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய **'திருக்குடந்தைத் திரிபந்தாதியை'** கற்பித்தார்.

அந்தாதி

'பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் திரிபந்தாதி, மறைசையந்தாதி, தில்லையமக அந்தாதி, துறைசையமகயந்தாதி, திருவேரகத்து யமக அந்தாதி' ஆகியவற்றை கற்றார்.

பிள்ளைத்தமிழ்

'அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துகுமாரசுவாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்' ஆகியவற்றைக் கற்றுணர்ந்தார். ஆசிரியருடன் இணைந்த வாழ்க்கையை வாழ்ந்து பல நூல்களைக் கற்றுத்தேர்ந்தார்.

பதிப்பு பணிக்கு வித்திட்டவர்

'சேலம் இராமசாமி முதலியார்' அவர்களை சந்தித்த பிறகுதான் பதிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றியது. **'சீவக சிந்தாமணி'** என்னும் பழம்பெரும் காப்பியத்தை அறிய வைத்து படிப்படியாக அந்நூலை பதிப்பிக்கவும் செய்ய வைத்தது என்றால் மிகையாகாது.

நூல் வெளிவருவதற்கான உழைப்பு

ஒரு நூல் வெளியாவதற்கு முதலில் **'நூலாசிரியரின் உழைப்பு'** மிகவும் முக்கியம். தம்முடைய கருத்துக்கும் கற்பனைக்கும் ஏற்ப ஒரு நூலை உருவாக்குகிறார் நூலாசிரியர். அடுத்து நூலுக்கானப் பொருளை அறிந்து கொள்வதற்கு **'உரையாசிரியரின் பணி'** தேவையாகிறது. பதிப்பாசிரியர் என்னும் மூன்றாமவரின் பணியைச் சேர்த்துதான் நூல் வெளியிடுவதற்கு முழுமையாகிவிடுகிறது. நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் ஆகியோரின் முழு உழைப்பின் மூலமாக அச்சிடத் தயாராக இருக்கும் எழுத்துப்படியை **'அச்சுப்படி' (Press copy)** என்று கூறுவர். சுவடியிலுள்ள நூல்களைப் பதிப்பிப்பதற்கு பதிப்பாசிரியரால் மட்டுமே முடியும்.

பதிப்புப் பணி

ஓலைச்சுவடிகளில் உள்ள எழுத்துக்களை நூலாகப் பதிப்பிப்பதற்கு முதலில் **'படியெடுத்தல்'** என்ற பணியை மேற்கொள்ள வேண்டும். படியெடுத்தலில், **'பாடல், உட்தலைப்பு, உரை, விளக்கம், பாடல் எண், திணை துறை விளக்கம், இலக்கணக் குறிப்பு, மேற்கோள், ஒப்புமைப்பகுதி, பாடவேறுபாடு, பிற உரையாசிரியர் கருத்து, அதற்கான மறுப்பு** ஆகியவற்றை ஒன்றுக்கொன்று பிரித்து அறிய இயலாதவாறு தொடர்ந்து எழுதப்பெற்றிருந்ததை – ஆழ்ந்து படித்து, உற்று நோக்கி அறிந்து பதிப்புப் பணியை மேற்கொண்டார். **தொல்காப்பிய எழுத்ததிகார பதினைந்தாவது நூற்பாவில்,**

> ***"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" (தொல்காப்பியம் நூற்பா – 15).***
> ***மெய்யீரெல்லாம் புள்ளியொடு நிலையல்" (தொல்காப்பியம் நூற்பா – 104).***

இவை இரண்டு நூற்பாவும் எழுத்ததிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. இந்த எழுத்தின் அமைப்புகளையும் தெளிவு படுத்திக் காட்டியிருக்கிறார். இடைக்காலத்தில் வடமொழித் தாக்கம் தமிழில் நுழையத் தொடங்கிய போதுதான் சிக்கல் ஏற்பட்டது. **'தமிழும் கிரந்தமும்'** கற்றிருந்த சான்றோர், தம் நூல்களில் கிரந்த எழுத்துக்களைப் புகுத்தியும், கிரந்த எழுத்துக்களைப் போல

புள்ளி வைக்காமலும் எழுதத் தொடங்கினர். **‘டாக்டர் உ.வே.சா. அவர்கள்’** இந்த உண்மையை அறிந்து, தமிழ் முறைக்கு ஏற்ப பதிப்பு முறையைக் கையாண்டுள்ளார்.

செய்யுட்களைப் பதிப்பிக்கும் போது ஏற்படும் சிக்கல்களை மீட்டல்

‘எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை’ ஆகிய உறுப்புகள், செய்யுள் யாத்த பயன்படுவனவாகும். **‘சீரும் தளையும் பொருந்தி, தொடைநயம் தோன்ற வருவதே சிறந்த பாடலுக்குரிய அமைப்பாகும்’.** டாக்டர்.உ.வே.சா. அவர்கள் இந்த அமைப்பை ஆழ்ந்து அறிந்து, ஒழுங்கு முறைகளைக் கையாண்டுள்ளார்.

“ஆடகச் செம்பொன் கிண்ணத்
தேந்திய அலங்கல் தெண்ணீர்
கூடகங் கொண்ட வாழ்நாள்
உலர்ந்ததேற் கொள்ளும் பவ்வத்
தூடகங் புக்கு முந்நீர்
அழுந்தினு முய்வர் மேலோர்
பாடகம் போலச் சூழ்ந்த
பழவினைப் பயத்தி னென்றான்” (சீவக சிந்தாமணி – விருத்தப்பா – 510).

இந்த அறுசீர் விருத்தத்தின் **முதலடியின் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்கள். பிற நான்கும் மாச்சீர்கள்.** இதே சீர் அளவுகள் அடுத்த மூன்று அடிகளிலும் ஒத்த ஓசையுடையவனாக உள்ளன.

திருவிளையாடற் புராணத்தில் உள்ள ஒரு பாடலில் எழுசீர் விருத்தத்தில் உள்ளது.

“ கண்ணுதல் மதுரைப் பிரானையிவ் வாறு
கருதிய பாணியாற் கனிந்து
பண்ணுதல் பரிவட் டனைமுதல் இசைநூல்
பகர்முதற் றொழிவிரு நான்கும்...........” (திருவிளையாடற் புராணம் - 37).

இவை யாப்புக் கூறும் வாய்ப்பாட்டில் **‘விளம் மா ‘விளம் மா ‘விளம் மா’** என்னும் வாய்ப்பாட்டால் அமைந்துள்ளது.

செய்யுள்களைப் படியெடுக்கும்போது ஒவ்வொரு அடியிலும் அமையும் எதுகை மோனைகள் உதவிப் புரிகின்றன. விருத்தப்பாக்களுக்கு மட்டுமின்றி **‘கலித்துறை, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, கலிவெண்பா, வெண்கலிப்பா’** போன்றவற்றிலும் மாற்றம் இருந்தால் அதைத் தெளிவுப்படுத்தி, பாடல் அமைப்பிற்கேற்ப பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

ஒப்பிட்டுதல்

ஒரு மூல நூல் **பலரிடம்** இருக்கும். அதில் உரையுடன் இருக்கும் நூல்களும் உண்டு. பல நூலககங்களிலும் ஒரே நூல் இடம்பெற்றிருக்கும். அனைத்து நூல்களிலும் உள்ள கருத்துக்களை ஒப்பிட்டுக் காண்பதே ஒப்பிடுதல் ஆகும். அவ்வாறு ஒப்பிடும்போதுதான் **‘கபிலர் இயற்றிய**

குறிஞ்சிப்பாட்டில்’ 99 வகையான மலர்களுக்கு பதிலாக 96 மலர்கள் இருந்ததில், மீதி மூன்று மலர்களின் பெயர்களை அறிந்து பதிப்பிப்பதற்கு ஒப்பிடுதல் முறை பயன்பட்டது.
மேலும், ஒப்படுதலின் மூலம் **‘எழுத்துமுறை, பாட்டு அமைப்பு’** போன்றவற்றை உறுதி செய்துக் கொள்வதற்கும் வழிவகுத்தது.

முதலில் ஒரு நூலை யாப்பதற்குத் துணையாக நின்ற ஓலைச்சுவடியில் **‘பிழைகள், விடுபட்ட இடங்கள், விளங்காத சொற்கள், தொடர்கள், எழுத்துத் தெளிவின்மை, ஓலை முறிவு’** போன்றவற்றால் ஐயம் ஏற்பட்ட இடங்கள் பல இருக்கக் கூடும். பல ஓலைச்சுவடிகளைக் கொண்டு ஒப்பிடுவதன் மூலம் தெளிவு உண்டாகி பதிப்புப்பணியை மேற்கொள்வதற்கு ஒப்பிடுதல் முறை துணை செய்கிறது.

பதிப்புப் பணிக்காக யாத்திரை செல்லல்

பதிமுன்று இலம்பகங்களைக் கொண்டு, விருத்தப்பாக்களால் அமைந்த **‘முதல் காப்பியத்தைத் திருத்தக்கத தேவர் இயற்றினார். இந்நூலுக்கு காம நூல், மணநூல் என்ற வேறுபெயரும் உண்டு. தொண்டர் சீர் பரவுவார் இயற்றிய பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் உருவாகுவதற்கு காரணமாக இருந்த நூல் சீவக சிந்தாமணியே ஆகும்’**. நச்சினார்க்கினியர் உரை எழுதிய சீவக சிந்தாமணியை முதலில் பதிப்பிக்க எண்ணி, திருவாவடுதுறைக்குச் சென்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதி வைத்திருந்த ஒரு ஓலைச்சுவடியைப் பெற்றார். **‘ஆதினக்கர்த்தர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர்’** அவர்கள் திருநெல்வேலியிலிருந்து சில சுவடிகளை வரவழைத்துக் கொடுத்தார்கள்.

தஞ்சைக்கு ஓலைச்சுவடியைத் தேடச் சென்றார். தஞ்சை செல்வந்தர் **‘விருபதாச முதலியார்’** அவர்களிடம் சுவடி இருப்பதை அறிந்து கேட்கச் சென்றார். சமண சமயத்தவர்களுக்குத் தவிர, மற்ற சமயத்தார்க்குக் கொடுத்தால் இழுக்காகும் என்றுக் கூறி ஓலைச்சுவடியை கொடுக்க மறுத்துவிட்டார். இறுதியல் தஞ்சை **‘துக்காராம் ஹோல்கார்’** என்னும் மகாராஷ்டிரச் செல்வந்தரை அழைத்துச் சென்று, அவர் உதவியால் ஓலைச்சுவடியைப் பெற்றார்.

‘மேலகரம், திருக்குற்றாலம். செங்கோட்டை, கிருஷ்ணாபுரம், கடைய நல்லூர்’ போன்ற ஊர்களுக்குச் சென்று ஓலைச்சுவடியைத் தேடும் யாத்திரையை மேற்கொண்டார். **‘ஈரோடு மாவட்டம் கொடுமுடியில்’** உள்ள ஒரு பெரியவரிடம் ஓலைச் சுவடியைக் கேட்டார். ஆடிப்பெருக்கிற்காக ஆற்றில் விடுவதற்காகத்தான் வைத்து இருக்கிறேன், உமக்கு அளிக்க முடியாது என்றுக் கூறி கதவைத் தாழிட்டுக்கொண்டார். டாக்டர்.உ.வே.சா. அவர்கள் அங்கேயே மறைந்திருந்து கடும் பனியிலும் குளிரிலும் இரவெல்லாம் ஒரு திண்ணையில் இரவுப் பொழுதைக் கழித்தார். விடிந்ததும் அப்பெரியவர் **‘பொன்னி ஆற்றங்கரையில்’** நீராட சென்றுவிட்டதைப் பார்த்ததும், டாக்டர்.உ.வே.சா. அவர்களும் அப்பெரியவரைப் புதரின் மறைவிலேயே பின்

தொடர்ந்தார். அப்பெரியவர் நீராடிவி முடித்துவிட்டு, தான் கொண்டுச்சென்ற ஓலைச்சுவடியை ஆற்றில் விட்டார். அப்பெரியவர் சென்ற பிறகு, நீரில் அடித்துச் சென்ற ஓலைச்சுவடியை எடுத்து தன் வேட்டியால் துடைத்து படித்தப் பொழுது கண்களில் நீர் சொரிந்தது. பிழை இல்லாமல் எழுத வேண்டும் என்பதற்காக, உ.வே.சா. வெவ்வேறு சுவடிகளை வைத்துப் பலமுறை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே, அவற்றை அச்சுக்கு அனுப்பி வைப்பார். இவ்வாறாக ஒவ்வொரு சுவடிப் பதிப்பிற்காக யாத்திரையை மேற்கொண்டு பதிப்பிப்பார்.

பதிப்புப் பணிக்காலம்

ஆயிரத்து எண்நூற்றி எண்பதாம் ஆண்டு கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்தக் காலத்தில் அரியலூரிலிருந்து கும்பகோணத்திற்கு **'முனிசீபாக'** மாற்றப்பெற்று சேர்ந்தவர்தான் **'சேலம் இராமசாமி முதலியார்'** அவர்கள். இருவரும் உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில் பழைய நூல்களான **'சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம்'** போன்ற நூல்களைப் படித்ததுண்டா? என்று கேள்வியை உ.வே.சா. அவர்களைப் பார்த்து முதலியார் வினவினார். **"முதலியார் கூறிய நூல்களை நான் படித்ததில்லை என்னுடைய ஆசிரியரும் படித்ததில்லை என்று கூறியதோடன்றி, அந்த நூல்களைக் கண்ணாலும் கண்டதில்லை என்று கூறிய காலம் அது. (என் சரித்திரம் - பக்கம் - 531 -532).**

சிலப்பதிகாரம் புகார்க் காண்டம் கல்லூரிப் பாடமாக வைக்கப்பட்டிருந்த சமயத்தில், மாணவர்களுக்குப் பயன்படுமாறு, **'மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு.ஈ. ஸ்ரீநிவாச ஐயங்கார்'** அவர்கள், பாடமாக இருந்த புகார்க் காண்டத்தை மட்டும் கி.பி. 1876 ஆம் ஆண்டு வெளியிட்டார். **'ஜி.யு.போப் அவர்கள் நாலடியார் பதிப்பு வெளியீட்டின் ஆங்கில முன்னுரையில் 1893 – ஆம் ஆண்டு சிலப்பதிகாரம் என்னும் நூலின் ஒரு சிறு பகுதியே அச்சாகியிருக்கிறது. அதன் ஆசிரியர் சேரமான்'** என்று குறிப்பிட்டுள்ளார்.

1892 – ஆம் ஆண்டிலேயே சிலப்பதிகாரம் முழுவதையும் பதிப்பித்து வெளியிட்டு, இளங்கோவடிகளின் வரலாற்றையும் எழுதியிருக்கிறார் டாக்டர்.உ.வே.சா. அவர்கள். இவ்வாறாக நூல்களின் பெயரையும், அதன் ஆசிரியரின் பெயரையும் அறியாமல் இருந்தக் காலமே டாக்டர்.உ.வே.சாமிநாத ஐயரின் பதிப்புக் காலமாகும்.

"அகராதி என்பதே இல்லாதக் காலம், கலைக்களஞ்சியம் போன்ற துணைக்கருவிகளின் பெயரைக்கூட நினைக்காத காலம். துறைவல்லுநர் என்போரை அறியாதக் காலம், அனுபவம் நிறைந்தோரைத் தேடிச்சென்றும் பல செய்திகளை அறிய இயலாத நிலையிலியருந்த காலம், தங்களிடம் இருந்த சுவடிகளைத் தருவதற்கும் மறுப்புத் தெரிவித்தக் காலம்". இவ்வாறாக பல

இடையூறுகள் நிலவிய காலமே மகாமகோபாத்தியாய அவர்கள் பதிப்புப் பணியை செய்த காலம் ஆகும்.

தமிழ்த் தாத்தா அவர்களின் முதல் வெளியீடு

'தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் மீது திரு.பரமசிவத் தம்பிரான் அவர்கள் ஒரு மும்மணிக்கோவை இயற்றினார்'. அக்கோவைக்குப் பதின்மர் சிறப்புப்பாயிரம் அளித்தனர். தமிழ்த்தாத்தாவும் இரண்டு பாடல்களை இயற்றியுள்ளார். அதன்பிறகு **'ஆதீன மகாவித்துவான்'** என்ற சிறப்புப்பெயரும் அளிக்கப் பெற்றது. அக்காலத்தில் திருவாவடுதுறை மண்டபத்தின் முன் வெளியானது கீற்றுப் பந்தலாகவே இருந்தது. ஜமீன்தாரின் முயற்சியால் தூண்கள் இல்லாமல் மரக்கொட்டகை மண்டபமாக்கினர்.

"இந்த மண்டபத்தைக் காலில்லா மண்டபம் என்று யாவரும் கூறுவர். அங்கே தென்கால் பலகாலும் விரவுவதால் நான் அங்ஙனம் கூறேன்" என்னும் கருத்தைப் பெற்றிருந்தது. (என் சரித்திரம் - பக்கம் - 437).

'வேணுவனலிங்க விலாச வெளியீட்டு விழாவிலும், **'சுப்பிரமணிய தேசிக விலாச'** வெளியீட்டு வழாவிலும் படிக்கப்பெற்ற அனைத்துப் பாடல்களையும் சேர்தது வெளியிடலாம் என்று வேணுவனலிங்கத் தம்பிரான் அவர்களின் விருப்பத்தின்படி அனைவராலும் முடிவெடுக்கப்பட்டது. ஆந்தப் பாடல்கள் முழுவதையும் ஒழுங்குப்படுத்தி நூலாக வெளியிடும் பொறுப்பைப் பெற்று, **'வேணுவனலிங்க விலாசச் சிறப்பு'** என்ற பெயர் பெற்ற நூலைத் தமது முதல் நூலாக வெளியிட்டவர் டாக்டர்.உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் ஆவர்.

ஓலைச்சுவடியில் உள்ள நூல்களை பதிப்பித்து வெளியிடுதல்

சங்க நூல்கள்

1. பத்துப்பாட்டு - 1889. 2. புறநானூறு - 1894. 3. ஐங்குறுநூறு – 1903.
4. பதிற்றுப்பத்து – 1904. 5. பரிபாடல் - 1918. 6. குறுந்தொகை – 1937.

காப்பியங்கள்

1. சீவகசிந்தாமணி **– 1887. 2.** சிலப்பதிகாரம் - 1892. 3. மணிமேகலை – 1898.
4. பெருங்கதை – 1924. 5. உதயணகுமாரகாவியம் - 1935.

தலபுராணங்கள்

1. திருக்குடந்தைப்புராணம் - 1883 2. திருப்பெருந்துறைப் புராணம் - 1892.
2. வீரவனப் புராணம் - 1903. 4. சூரைமாநகர்ப் புராணம் - 1904.
5. தியாகராசலீலை – 1905. 6. திருவிளையாடற்புராணம் - 1906.
7. தனியூர்ப்புராணம் - 1907. 8. மண்ணிப்படிக்கரைப்புராணம் - 1907.
9. திருக்காளத்திப்புராணம் - 1912. 10. விளத்தொட்டிப்புராணம் - 1934.
11. தணிகாசலப்புராணம் - 1935. 12. ஆற்றூர்ப்புராணம் - 1935.
13. வில்லைப்புராணம் - 1940.

இலக்கண நூல்கள்

1. புறப்பொருள் வெண்பாமாலை – 1895. 2. நன்னூல் மயிலைநாதர் உரை – 1925.
3. நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரை – 1928. 4. தமிழ்நெறி விளக்கம் - 1937.

சிற்றிலக்கியங்கள்

1. சீர்காழிக்கோவை - 1903. 2. திருவாவடுத்துறைக்கோவை –1903.
3. பழமலைக்கோவை – 1935. 4. கலைசைக்கோவை – 1935.
5. சிராமலைக்கோவை – 1937. 6. திருவாரூர்கோவை – 1937.
7. திருக்கழுக்குன்றக் கோவை – 1943 (அவர் குறிப்புரை எழுதி வைத்தது).
8. மதுரை மும்மணிக்கோவை – 1932. 9. வலிவல மும்மணிக்கோவை – 1934.

உலா

1. திருப்பூவணநாதர் உலா – 1904. 2. திருக்காளத்திநாதர் உலா – 1904.
3. தேவை உலா – 1905. 4. திருவாரூர் உலா – 1905.
5. சொக்கநாதர் உலா. 6. கடம்பர் கோயில் உலா – 1932.
7. சங்கரலிங்க உலா – 1933. 8. திருஇரஞ்சிமுருகன் உலா – 1935.
9. திருக்கழுக்குன்றத்து உலா – 1938.

தூது

1. வண்டுவிடு தூது – 1888. 2. தமிழ்விடு தூது – 1930. 3. தென்றல்விடு தூது – 32.
4. மான்விடு தூது – 1936. 5. அழகர் கிள்ளைவிடு தூது – 1938.
6. புகையிலைவிடு தூது – 1939.

பிரபந்த திரட்டுகள்

1. ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு – 1910.
2. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு – 1932.
3. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு – 1939.

பரணி

1. தக்கயாகப் பரணி – 1930. 2. பாசவதைப் பரணி – 1933.

அந்தாதி

1. திருமயிலைத் திரிபு அந்தாதி – 1930. 2. சங்கர நயினார் கோயில் அந்தாதி – 34.
3. திருமயிலை யமக அந்தாதி – 1936.

இரட்டை மணிமாலை

1. பழநி இரட்டை மணிமாலை – 1932. 2. களக்காட்டு சத்திய வாகீசர் - 1932.

வெண்பா

1. சிவசிவ வெண்பா – 1938. 2. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா – 1939.
3. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா – 1940.

மாலை

1. திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை – 1938.
2. மகர நெடுங்குழைக்காதர் பாமாலை – 1939.

குறவஞ்சி

1. திருமலையாண்டவர் குறவஞ்சி – 1938.

பிள்ளைத்தமிழ்

1. **பழநி பிள்ளைத்தமிழ் - 1932.**

விருத்தம்

1. திருத்தணிகை விருத்தம் - 1941.

தொகுப்புரை

யார் காப்பார்? என்று தமிழ் அன்னை ஏங்கியபோது, நான் காப்பேன் என்று வந்தவர்தான் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர். பதிப்புலகின் தந்தை என்று பாராட்டப்பெறும் அவர்கள் நூல் உருவாக்கத்திற்கென்று தனித்த பதிப்புக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கிக் கொண்டவர். பல நூல்களை அச்சிட்டுத் தமிழ் உலகில் வலம் வந்த தமிழ்ச் சான்றோர் பலரும் ஒரு நூலையாவது டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் பதிப்பைப் போன்று கொண்டு வர இயலாதா? என்று ஏங்குகின்ற அளவிற்கு இவரது பதிப்பு பலராலும் போற்றத்தக்கதாக அமைந்துவிட்டது.

மனிதனின் மனத்தில் உள்ள அழுக்கைப் போக்குவதற்கும், மக்கள் வாழ்வதற்கான கலைகளை அறிந்து கொள்வதற்கும், மரபு செல்வங்களை நம்மிடையே புகுத்தியவர்கள் யார்? என்பதை பற்றி தெரிந்துக் கொள்ளவதற்கும் உதவி புரிந்தவை டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் பதிப்புப் பணி என்று வெறுமனே வார்த்தைகளால் சொன்னால் அது மிகையாகாது.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

30. உ.வே.சா. வாழ்வும் பணியும்

க. ஆனந்த சுரேஷ், எம்.பி.ஏ., (பி.எச்டி.) ,
உதவிப்பேராசிரியர்,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095

முன்னுரை

உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் சுவாமிநாதன் சுருக்கமாக உ.வே.சா என்று அழைக்கப்படுகிறார். இவர் சிறப்பாகத் தமிழ்த்தாத்தா என அறியப்படுகிறார். இவர் ஒரு தமிழறிஞர். பண்டைத் தமிழிலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர். தமிழிலக்கியத்தின் தொன்மையையும் செழுமையையும் அறியச்செய்தவர். உ.வே.சா 90 க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப் பதித்தது மட்டுமின்றி 3000 க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார். இவரது வாழ்க்கை வரலாற்றை இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

உ.வே.சா. வின் வாழ்க்கை

சாமிநாதன் பிப்ரவரி 19, 1855 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு அருகே உள்ள உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய் பிறந்தார். இவரின் தந்தை ஓர் இசைக்கலைஞர். உ.வே.சா தனது தொடக்கத் தமிழ்க்கல்வியையும் இசைக்கல்வியையும் சொந்த ஊரில் உள்ள ஆசிரியர்களிடத்தே கற்றார். பின்னர் தம் 17 ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ்க் கற்பித்துக்கொண்டிருந்த புகழ்பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சி மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் ஐந்தாண்டு காலம் பயின்று தமிழறிஞரானார். தொடக்கத்தில் கும்பகோணத்தில் இருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியிலிருந்த சாமிநாதன், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்தார்.

உ.வே.சா. வாழ்க்கையின் சிறப்பு

சீவக சிந்தாமணியைக் கற்றுக்கொடுக்க முயன்றபோது ஏட்டுச்சுவடியிலிருந்த நூலை மிகுந்த சிரமத்திற்கிடையில் கற்றுப் பாடம் சொல்லிக்கொடுத்ததால் இந்த நூலில் உள்ள செய்திகளை உணர்ந்தார். இந்த நூலை 1887ஆம் ஆண்டு முதன்முதலாக பதிப்பித்து வெளியிட்டார். தமிழர்கள் அளித்த நல்லூக்கம் இப்பணியை அவர் தொடர்ந்து செய்ய காரணமாயிற்று. இவருடைய வாழ்க்கை வரலாறு தமிழ்பால் அன்புகொண்ட அனைவரும் போற்றும் ஒரு புதையல்.

சிறிய வயதில் இவரிடம் யாராவது ஆங்கிலம் இவ்வுலக வாழ்விற்கும் வடமொழி அவ்வுலக வாழ்விற்கும் பண்படும் என அறிவுறுத்தினால், ***என் அன்னை தமிழானது இவ்வுலகம் மற்றும் அவ்வுலக வாழ்வு இரண்டிற்கும் இன்றியமையாதது*** என கூறுவாராம்.

இவரது குடும்பம் தீராத வறுமையில் வாடியது. தமது குடும்பம் பிழைப்பதற்கும் இவர் கல்வி கற்பதற்கும் இவர் தந்தை மிகுந்த முயற்சி எடுத்துள்ளார். அக்காலத்தில் இவர் குடும்பம் ஒரு ஊரில் நிலையாகத் தங்குவதற்கு வசதியில்லாமல் ஊர் ஊராக இடம் பெயர்ந்து வாய்ப்புகளைத் தேடியலைந்துள்ள போதிலும் மனம் தளராமல் இவ்வளவு கடினமான சூழ்நிலையிலும் தமிழை விடாமுயற்சியுடன் கற்றுக்கொண்டுள்ளார். இவர் பிற்காலத்தில் அடைந்த இமாலய வெற்றிக்கு இவர் கற்ற கல்வியும் குடும்பத்தின் தியாகமும் பெரும் அடித்தளமாக அமைந்தது.

தமிழாசிரியர் எங்குக் கிடைப்பாரோ என்று தேடித்தேடி அதன் தொடர்ச்சியாக குடும்பம் முழுவதும் தமிழாசிரியர் இருக்கும் இடத்திற்குக் குடிபெயர்ந்து விடும். படித்த புலவர்கள் யாரைப் பார்த்தாலும் இவரிடம் தமிழ் கற்றுக்கொள்ள முடியுமா? என்றுதான் தம் உள்ளம் ஏங்கியதாக இவர் குறிப்பிட்டுள்ளார் உ.வே.சா. இவர்கள் பெரிய வித்துவான்களாக இருக்கவேண்டும். இன்று பல விசயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று உ.வே.சா. பதிவு செய்கிறார்.

உத்தமதானபுரம் மக்கள் அவர்தம் வாழ்க்கை

உ.வே.சா. தாம் பிறந்த உத்தமதானபுரத்தின் பெயர்க்காரணம் பெருமையையும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் மனப்பான்மையையும் வாஞ்சையோடு பேசுகிறார்கள். எவ்வாறு அவ்வூர் மக்கள் சோம்பலை அறியாதவர்களாகவும் நவீன நாகரிகத்தின் வாசனை சிறிதளவும் வீசாமலும், உள்ள வளத்தைப் பங்கிட்டு அழகாக வாழ்க்கை நடத்தினர் என்று உணர்வுபூர்வமாக குறிப்பிடுகிறார்கள். இவர் குடும்பம் இசையும் தமிழும் கலந்த குடும்பம். இவ்வழியில் வந்த உ.வே.சா. இவைகளில் தேர்ந்த ஞானம் பெற்றிருந்தார் என்பதில் வியப்பில்லை. அக்காலத்தில் வேளாண் நிலத்தை ***போக்கியத்திற்கு*** விடும் வழக்கம் இருந்தது. இக்காலத்தில் வாழ்ந்த தமிழ் ஆசிரியர்கள் மற்றும் சில புகழ்பெற்றவர்களைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கை பற்றியும் பல செய்திகளை அறியமுடிகிறது.

இயற்றிய நூல்கள்

உ.வே.சா. பல செய்யுள்களையும் நூல்களையும் இயற்றியுள்ளார். “தந்தையாரின் வறுமையைக்கண்டு ஒரு பெரிய மனிதரிடம் சென்று நெல் வேண்டுமென்று” இயற்றிய செய்யுள்தான் முதல் செய்யுள். ***கலைமகள் துதி, திருலோகமாலை ஆனந்தவல்லியம்மை, பஞ்சரத்தினம்*** முதலியன மற்ற நூல்கள் ஆகும்.

குடும்பத்தின் வறுமையும் தொல்லையும் உ.வே.சா. வை மிகவும் வாட்டியது. சிறிது காலம் தம் தந்தையுடன் புராண விரிவுரை நடத்தி பொருள் ஈட்டத் தொடங்கினார். இவர்களின் விரிவுரைக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. இது நடந்தது 1874 ஆம் வருடம். அப்போது உ.வே.சா. அவர்களுக்கு 19 வயது. இக்காலத்தில் தம் ஆசிரியரிடம் தமிழ் கேட்க முடியவில்லையே என்ற ஏக்கம் இவரிடம் நீங்காமலிருந்தது.

இதற்கிடையே உ.வே.சா. அவர்களின் ஆசிரியர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்கை எய்தினார். அச்சமயம் உ.வே.சா. அவர்களும் உடனிருந்துள்ளார்.

ஆசிரியரை இழந்த உ.வே.சா. மீளாத துயரத்தில் இருந்தார். உ.வே.சா. மீது நல்லெண்ணம் கொண்ட ஆதீனம் தேசிகர் அங்கேயே வீடுகட்டிக் கொடுப்பதாகவும் பெற்றோர்களையும் மடத்திற்கே வந்துவிடும்படியும் கேட்டுக்கொண்டதற்கிணங்க குடும்பத்துடன் மடத்திற்கே வந்துவிட்டார்கள். மடத்தில் இருக்கும்பொழுது பல பெரும் தமிழ்ப்புலவர்களைக் கண்டு கலந்துரையாடும் வாய்ப்பு கிட்டியது.

உ.வே.சா. பதிப்பித்த முதல் புத்தகம்

பாண்டி நாட்டில் செவந்திபுரத்தில் வேணுவனாரிங்கத்தம்பிரான் கட்டிய மடாலயத்திற்கு சுப்பிரமணிய தேசிக விலாசம் என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்து பல தமிழ்ப் புலவர்கள் பாடலியற்றி இருந்தனர். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா. 8 பாடல்கள் இயற்றினார். வேறுசில பாடல்களும் சேர்த்து திருநெல்வேலி முத்தழரகரம் என்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன்முதலாக ஐயரவர்கள் பதிப்பித்தார்.

பேச்சுத்திறன்

உ.வே.சா. கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமுடையவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா. ஆற்றிய சொற்பொழிவே ***சங்ககாலத் தமிழும் பிற்காலத்தமிழும்*** எனும் நூலாக வெளியிடப்பட்டது.

பட்டங்கள்

உ.வே.சா. தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் மதிப்புறு ***முனைவர் பட்டம்*** அளித்தது. இது தவிர ***மகாமகோபாத்தியாய*** மற்றும் ***தட்சிண கலாநிதி*** என்னும் பட்டமும் பெற்றுள்ளார். இந்திய அரசு பிப்ரவரி 18, 2006 ஆம் ஆண்டில் இவரது ***நினைவு அஞ்சல் தலை*** வெளியிட்டுள்ளது.

நினைவு இல்லம்

உத்தமதானபுரத்தில் உ.வே.சா. வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டு உள்ளது. 1942 இல் இவர் பெயரால் சென்னை பெசன்ட் நகரில் டாக்டர் ***உ.வே.சா. நூல்நிலையம்*** அமைக்கப்பட்டு இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

தன் வரலாறு

உ.வே.சா. தனது வரலாற்றை ***என் சரித்திரம்*** என்னும் தலைப்பில் ஆனந்த விகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக எழுதி வந்தார். இது 1950 ஆம் ஆண்டில் தனி புத்தக வடிவம் பெற்றது. இது தவிர இவரது வாழ்க்கை வரலாறு ***தமிழ்த்தாத்தா*** என்னும் தலைப்பில் தொலைக்காட்சித் தொடராகவும் எடுக்கப்பட்டுச் சென்னை தொலைக்காட்சி நிலையத்தாரால் ஒளிபரப்பப்பட்டது.

அச்சு பதித்த நூல்களின் பட்டியல்

சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டை பதிப்பித்து வெளியிட்டார். எட்டுத்தொகையில் ஐங்குநுறூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு ஆகியவற்றைப் பதிப்பித்தார். ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகியவற்றை வெளியிட்டார். 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள், 2 மும்மணிக்கோவை நூல்கள், 2 இரட்டை மணிமாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இதர சிற்றிலக்கியங்கள் 4 முதலானவற்றை பதிப்பித்து வெளியிட்டார்.

முடிவுரை

தமிழ்த்தாத்தா என அழைக்கப்படும் உ.வே.சா. ஏப்ரல் 28, 1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். எவ்வளவு தமிழ் ஆர்வம் எவ்வளவு விடாமுயற்சி, தமிழில் புலமை பெறவேண்டும், என்கிற எண்ணம், பழைய நூல்களைப் பதிப்பித்துத் தமிழ் தொண்டாற்ற வேண்டும் என்னும் குறிக்கோள் இவைகளைத் தவிர வேறெதனையும் தம் வாழ்நாளில் உ.வே.சா. சிந்தித்ததே இல்லை. இதனால் அவர் தமிழ்த்தாயின் தலைமகனாக இன்றளவும் விளங்குகின்றார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

31. தமிழைக் காத்த தமிழ்த்தாத்தா - உ.வே.சா.

முனைவர் கி. அருள்ஜோதி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095.

தமிழ்த்தாத்தா என நாம் வரலாற்றில் அறியப்படும் அறிஞர் உ.வே.சாமிநாதய்யர். அழிந்துகொண்டிருந்த சங்ககால நூல்களை, ஓலைச்சுவடிகளாக இருந்தவற்றைத் தேடித்தேடிக் கண்டறிந்து அதைப் பதிப்பித்த உரைநடையாசிரியர், பதிப்பாசிரியர், தமிழறிஞர் என்பதால் அவரைத் ***தமிழ்த்தாத்தா*** என தமிழறிஞர்கள் அழைக்கின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் அருகிலுள்ள உத்தமதானபுரம் என்கிற கிராமத்தில் வேங்கடசுப்பையா – சரஸ்வதி தம்பதியரின் மகனாக 1855 பிப்ரவரி 19 ஆம் தேதி பிறந்தார் வேங்கடநாதன். பிற்காலத்தில் திருவாவடுதுறை ஆதீன மடத்தில் பயிலும்போது சாமிநாதன் எனப் பெயர் மாற்றினார் ஆசிரியர். அது பின்னர் ஊர்ப்பெயரையும் தந்தை பெயரையும் முன்னெழுத்துகளாக இணைக்கும் வழக்கப்படி உ.வே.சாமிநாதன் ஆனார். அதனைச் சுருக்கி உ.வே.சா. என அழைத்தனர்.

இவரது தந்தை இசைக்கலைஞராக இருந்தார். இதனால் திண்ணைப்பள்ளியில் பாடத்தோடு இசையையும் கற்றுத்தர சிறப்பு ஏற்பாடுகளை உ.வே.சா.வின் தந்தை செய்தார். 17வது வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தின் கீழ் தமிழ் கற்றுத் தந்துகொண்டிருந்த மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தமிழ் கற்றுத் தரச்சொல்லி கேட்க, அவரும் உ.வே.சா.வை தனது மாணவராக சேர்த்துக்கொண்டு தமிழின் இலக்கணம், இலக்கியம், செய்யுள் அறிந்துகொள்வது, செய்யுள் இயற்றுவது, பாடல் புனைவது போன்றவற்றைக் கற்றுத் தந்தார்.

இவரது குடும்பம் வறுமையான குடும்பம். அக்காலத்தில் இராமாயண சொற்பொழிவு நடக்கும். மாதக்கணக்கில் நடக்கும். சொற்பொழிவாளராக இருந்த உ.வே.சா.வின் தந்தை தொழில் செய்யும் இடத்துக்கே தன் குடும்பத்தையும் அழைத்துச் செல்வார். இப்படி பிழைப்புக்காக ஊர் மாறி மாறி தங்கினார். உ.வே.சா.விற்கு 14 வயதாகும்போது திருமணம் நடைபெற்றது. தனது 19வது வயதில் குடும்ப வறுமையைப் போக்க உ.வே.சா.வும் இராமாயணம் சொற்பொழிவு நிகழ்த்தத் துவங்கினார். இதனால் குடும்பத்தின் வறுமை மற்றும் கடன் ஓரளவு தீர்ந்தது.

படித்து முடித்தபின் கும்பகோணத்தில் செயல்பட்ட ஆதீனத்தின் கீழ் செயல்பட்ட பள்ளியில் 1880 முதல் 1903 வரை கும்பகோணத்தில் ஆசிரியர் பணியாற்றி வந்தார். கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்த்துவிட்டவர் தியாகராஜ செட்டியார். அதன்பின் சென்னை

பல்கலைக்கழகத்தில் 1903ல் பணிக்குச் சேர்ந்தார். 16 ஆண்டுகள் பணியாற்றியவர் 1919ல் அப்பணியிலிருந்து ஓய்வுபெற்றார். சென்னைக்கு வந்தபின்பே அவரது வறுமை ஓரளவு நீங்கியது.

ஆங்கிலம் சமஸ்கிருதத்தைத் தூக்கிப் பிடிப்பவர்களிடம் தமிழ்மொழி முன் இந்த இரண்டு மொழிகளும் கும்பிடு போட்டு காலில் விழும் அளவுக்குத் தொன்மை வாய்ந்த சிறப்புமொழி என்பார். சங்க இலக்கிய நூல்களைத் தேடிப்பிடித்துப் பதிப்பிக்க முடிவு செய்தார். வேணுவனலிங்க விலாசச்சிறப்பு என்கிற நூலில் எழுதப்பட்ட 86 பாடல்களில் 8 பாடல்களை எழுதினார். அந்த நூலைப் பதிப்பித்தவர் உ.வே.சா. அந்த நூல்தான் அவரின் ***முதல்பதிப்பக நூல்*** என்பது குறிப்பிடத்தக்கது.

சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்க முடிவு செய்து அதற்கான குறிப்புகளைத் தேடித்தேடிச் சேகரித்து அதனைச் சரிபார்த்துக்கொண்டு இருந்தபோது, அதை வெளிவர விடாமல் செய்ய பெரும் சிக்கல்களை உருவாக்கினார்கள். அந்த சிக்கல்களை வெற்றிகரமாக முறியடித்து வெளிக்கொண்டு வந்தார். அதன்பின்பே சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, புறநானூறு, போன்ற சங்ககால இலக்கிய நூல்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான நூல்களைக் கண்டறிந்து அதைப் புதுப்பித்து வருங்காலத் தலைமுறைக்கு அறிமுகப்படுத்தினார்.

ஐம்பெருங்காப்பியங்களில் மணிமேகலை நூலுக்கு உரை எழுதியுள்ளார். இன்றளவும் சங்க இலக்கிய நூல்களில் சிறந்த உரை நூலாக உ.வே.சா. எழுதிய மணிமேகலையை தமிழறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். என் சரித்திரம் என்கிற தனது வரலாற்றை இரண்டு ஆண்டுகள் ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார் உ.வே.சா.. அது 1940 முதல் 1942 வரை வெளிவந்தது. ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளைத் தேடி சேகரித்து வைத்திருந்தார். அதனைத் தன் வாழ்நாள் பணியாகவே செய்தார்.

1931 மார்ச் 21ஆம் தேதி உ.வே.சா.வின் தமிழ்ப்பணியைப் பாராட்டி ***மகாமகோபாத்தியாயர்*** என்கிற பட்டம் வழங்கி கௌரவித்தது சென்னைப் பல்கலைக்கழகம். ***சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்*** என்கிற தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் பேசிய பேச்சு பின்னர் நூலாக வெளிவந்தது. அந்த அளவுக்குப் பேச்சுக்கலையில் சிறந்தவர். பேசுவதை நகைச்சுவை இழையோடப் பேசுவார்.

1942 ஏப்ரல் 28ஆம் தேதி தனது 87வது வயதில் மறைந்தார். உத்தமதானபுரத்தில் உ.வே.சா. பிறந்த இல்லம் அரசால் நினைவில்லமாக மாற்றப்பட்டது. 1942ல் சென்னையில் அவர் பெயரில் அமைக்கப்பட்ட நூல் நிலையம் இன்றளவும் செயல்படுகிறது.

இயற்றிய நூல்கள்

உ.வே.சா. பல செய்யுள்களையும் நூல்களையும் இயற்றியுள்ளார். தந்தையாரின் வறுமையைக்கண்டு, ஒரு பெரிய மனிதரிடம் சென்று நெல் வேண்டுமென்று இயற்றிய செய்யுள்தான் அவரின் முதல் செய்யுள். கலைமகள் துதி, திருலோகமாலை, ஆனந்தவல்லியம்மை, பஞ்சரத்தினம் முதலியன மற்ற நூல்களாகும்.

குடும்பத்தின் வறுமையும் கடன் தொல்லையும் உ.வே.சா.வை மிகவும் வாட்டியது. சிறிது காலம் தந்தையுடன் புராண விரிவுரை நடத்தி கடனை அடைக்கலாம் என்ற தந்தையின் கருத்துக்கிணங்க இருவரும் விரிவுரை நடத்தி பொருள் ஈட்டத் தொடங்கினர். இவர்களின் விரிவுரைக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. இது நடந்த வருடம் 1874. இது தன் 19ஆம் வயதில் நடந்ததால் தம் ஆசிரியரிடம் தமிழ் கேட்க முடியவில்லையே என்ற ஏக்கம் இவரிடம் நீங்காமலிருந்தது.

இதற்கிடையே ஆசிரியர் பிள்ளையவர்கள் இயற்கை எய்தினார். அச்சமயம் உ.வே.சா. அவர்களும் உடனிருந்தார். ஆசிரியரை இழந்த உ.வே.சா. மீளாத துயரத்தில் திருவாவடுதுறை யில் தங்கி பாடம் கேட்டு வந்தார். உ.வே.சா. மீது நல்லெண்ணம் கொண்ட ஆதீன தேசிகர் அங்கேயே வீடுகட்டிக் கொடுப்பதாகவும் பெற்றோர்களையும் மடத்திற்கே வந்து விடும்படியும் கேட்டுக்கொண்டதற்கிணங்க குடும்பத்துடன் மடத்திற்கே வந்துவிட்டார்கள். மடத்தில் இருக்கும்பொழுது பல பெரும் தமிழ்ப் புலவர்களைக் கண்டு கலந்துரையாடும் வாய்ப்பு கிட்டியது. வேதநாயகம்பிள்ளை, சந்திரசேகர கவிராஜபண்டிதர், திரிசிரபுரம் கோவிந்தபிள்ளை, ராவ்பகதூர் திரு பட்டாபிராம் பிள்ளை ஆகியோரும் அடங்குவர். தேசிகருடன் மற்ற மாவட்டங்களுக்குச் சென்று அங்கும் பலரை அறிந்துகொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

உவே.சா. பதிப்பித்த முதல் புத்தகம்

பாண்டி நாட்டில் செவந்திபுரத்தில் வேணுவனலிங்கத் தம்பிரான் கட்டிய மடாலயத்திற்குச் சுப்பிரமணிய தேசிக விலாசம் என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்துப் பல தமிழ்ப் புலவர்கள் பாடல் இயற்றியிருந்தனர். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா. 8 பாடல்கள் இயற்றினார். வேறுசில பாடல்களும் சேர்த்து திருநெல்வேலி முத்தமிழாகரமென்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன்முதலாக ஐயரவர்கள் பதிப்பித்தார்.

உ.வே.சா. பதிப்பித்த நூல்கள்

1. அகநானூறு
2. அழகர் கிள்ளை விடு தூது – 1938
3. ஆற்றூர் புராணம் - 1935
4. இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை – 1936
5. உதயண குமார காவியம் - 1935
6. உதயணன் சரித்திரச் சுருக்கம் - 1924
7. ஐங்குநுறூறு – 1903
8. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது – 1888
9. கடம்பர் கோயிலுலா – 1932
10. கபாலீசுவரர் பஞ்சரத்தினம் - 1940
11. கலைசைக் கோவை – 1935
12. களக்காட்டு சத்தியவாகீசர் இரட்டை மணிமாலை – 1932
13. கனம் கிருஷ்ணையர் - 1936
14. குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு – 1939
15. குறுந்தொகை – 1937
16. கோபால கிருஷ்ண பாரதியார் - 1936
17. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் - 1928

18. சங்கர நயினார் கோயிலந்தாதி – 1934
19. சங்கரலிங்க உலா – 1933
20. சிராமலைக் கோவை – 1937
21. சிலப்பதிகாரம் - 1892
22. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் - 1932
23. சிவசிவ வெண்பா – 1938
24. சீகாழிக்கோவை – 1903
25. சீவக சிந்தாமணி – ?
26. திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் - 1908
27. திருப்பூவண நாதருலா – 1892
28. திருப்பெருந்துறைப் புராணம் - 1982
29. திருமயிலை யமக அந்தாதி – 1936
30. திருமயிலைத் திரிபந்தாதி – 1888
31. திருமலையாண்டவர் குறவஞ்சி – 1938
32. திருவள்ளுவரும் திருக்குறளும் - 1936
33. திருவாரூர்க் கோவை – 1937
34. திருவாரூர்த் தியாகராச லீலை – 1905
35. திருவாரூருலா – 1905
36. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் - 1906
37. திருவாவடுதுறைக் கோவை – 1903
38. தேவையுலா – 1907
39. நல்லுரைக்கோவை பகுதி 1 – 1937
40. நல்லுரைக்கோவை பகுதி 1 – 1937
41. நல்லுரைக்கோவை பகுதி 1 – 1938
42. நல்லுரைக்கோவை பகுதி 1 – 1939
43. நன்னூல் மயிலைநாதர் உரை – 1925
44. நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை – 1925
45. நான் கண்டதும் கேட்டதும் - 1936
46. நினைவு மஞ்சரி – பகுதி 1 – 1937
47. நினைவு மஞ்சரி – பகுதி 1 – 1942
48. பத்துப்பாட்டு முழுவதும் 1 –

முடிவுரை

உ.வே.சா. அவர்கள் தங்கள் வாழ்வை முழுக்க முழுக்க தமிழ்ப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு என் கடன் பணிசெய்து கிடப்பதே என்பதை தன்னகத்தே கொண்டு வாழ்வில் பாடுபட்டு தமிழுக்கு முழுமூச்சாக விளங்கியமை இக்கட்டுரையின் வாயிலாகத் தெளிவாகக் காணமுடிகிறது. மேலும், இளமை முதல் முதுமை வரை தமிழுக்காக தொண்டாற்றியுள்ளதால் தமிழ்த்தாத்தா என்ற சிறப்புப் பெயரும் பெற்றமை உயர்சிறப்பே....

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

32. செம்மொழி செம்மல் உ.வே.சா.

டாக்டர் திருமதி ரா. நாகரத்தினம்,
எம்.எஸ்.ஸி., எம்.ஃபில்., பி.எட்., பி.எச்.டி.,
துறைத்தலைவர் (பொறுப்பு), (கணிதத்துறை),
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

மனிதன் தன் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திய கருவியே மொழி. இம்மொழி முதன்முதலில் செய்யுளில் வந்தது. அனைத்துச் செய்யுள்களும் ஓலைச் சுவடிகளில் இருந்தன. ஓலைச்சுவடிகளைக் கறையான்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றன. அவற்றைச் சேகரித்து நூல்களாகப் பதிப்பித்த செம்மல் உ.வே.சா என்று சாதாரண வார்த்தைகளில் எழுத முடியாது. அவர் தமிழுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். அவரது பதிப்புப் பணியை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிறப்பு

தமிழ்த்தாத்தா என்று மக்களால் அன்புடன் போற்றப் பெற்றவர் டாக்டர் உ.வே.சாமிநாதர். இவர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உத்தமதானபுரம் என்னும் ஊரில் 19.02.1855 ஆம் ஆண்டு வித்துவான் ஸ்ரீ வேங்கட சுப்பையருக்கும் ஸ்ரீமதி சரசுவதிக்கும் மகனாகப் பிறந்தார். இளம் வயதிலேயே வறுமை அவரை வாட்டியது. அவரது தந்தையார் தன் மகனை இசைத்துறையில் சேர்க்க எண்ணினார். உ.வே.சா அவர்கள் அதில் ஆர்வம் கொள்ளாமல் தமிழ்ப்புலமை பெற்று சிறந்து விளங்கினார். பழைய இலக்கிய உரைகளைக் கற்றுப் புலமை பெற்றிருந்தாலும் நூலுக்குத் தாமே உரையெழுதிப் பதிப்பிக்கத் துணிந்தார். உ.வே.சா பதிப்பு நூல் தேர்வில் தன் அனுபவ அறிவைப் பயன்படுத்தினார்.

பதிப்புத்துறையில் நாட்டம்

உ.வே.சா. இல்லையென்றால் பல தமிழ்நூல்கள் அறியப்படாமலே அழிந்து இருக்கும். இவர் ஊர் ஊராகச் சென்று காணாமல் போனதும் சிதிலமானதுமான ஓலைச்சுவடிகளைத் தேடிக்கண்டெடுத்துக் கறையான் தின்றது போக எஞ்சியதைத் திருத்தமுறைப் பதிப்பித்துத்தந்தார். அவரிடம் வேரூன்றியும் புலமையும் மரபும் பதிப்புத்துறைக்கு நன்மை செய்தன எனக் கூறலாம். பாடல்களை நீக்கவும் அடிகளை மாற்றவும் சொற்களைத் திருத்தவும் செம்மைப்படுத்தினார். தனக்குப் பயன்படும் அறிவைச் சேகரித்துக் கொள்ளும் புலமை பெற்றவராவும் திகழ்ந்தார்.

தமிழ்த் தொண்டின் பெருமை

எத்தனை அரிய நூல்களை உ.வே.சா அழகுறக் கல்வியாளர்கள் பாராட்டும்படி நல்லமுறையில் பதிப்பித்துத் தந்திருக்கிறார். இவையெல்லாம் நமக்குத் தந்த பண்டைத் தமிழ்க்கருவூலங்கள் பதிப்புப் பேராசிரியர் என்ற அருமைப் பெயருக்கு இவரே தகுதியானவர் உ.வே.சா.தேடித்தந்த அரிய நூல்களைத் திருந்திய முறையில் பதிப்பிடுவதால் சிறந்த

தமிழறிஞர்களுக்கும் இன்றைய இளைய தலைமுறையினருக்கும் பெருந்துணையாக இருக்கிறது. தாம் கற்றதை எளிமையாக்கிக் கற்போர்க்கு இனிமை சேர்ப்பது இவரது தனிச் சிறப்பு. உ.வே.சா நூலுக்கு உரை எழுதும்போது சொல்லுக்குப் பொருளுரைப்பதோடு நின்று விடாமல் முதலில் நூல் சுருக்கம் தந்து பாடியவர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு உரைத்து மேற்கோள் காட்டி சில குறிப்புகள் தருவது இவரது உரைமரபாகும். தமிழ் நூல்களைத் தேடி எடுத்துப் பதிப்பிப்பதே தம் வாழ்நாளின் குறிக்கோளாக நினைத்தார். உ.வே.சா பதிப்பித்து வெளியிட்டுள்ள தமிழ்நூல்கள் யாவும் அவருடைய கல்விப் பெருக்கு, ஆராய்ச்சியின் திறம், சமயவுணர்ச்சி, அயராத உழைப்பு, என் கடன் தமிழ்ப்பணி செய்து கிடப்பதே என்ற அவரது உள்ளப்பாங்கு, நேர்மை, அடக்கம் ஆகிய அரிய இயல்புகளை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. பல்வேறு காலத்திலே தோன்றிய பல ஆசிரியர்கள் செயற்குரிய தமிழ்ப்பணியை அவரே வாழ்நாளில் செய்து முடித்தார். தன்னுடைய தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் தமிழுக்கேத் தொண்டு செய்து வாழ்ந்தவர். இவரின் தமிழ்த்தொண்டு கண்டு பலரும் இவரைப் பெரிதும் பாராட்டினார்கள்.

தமிழ்க்காதல்

தனது இளமைக் காலத்தில் சில தமிழ்ப்பேரார்வலர்களால் உ.வே.சாவின் தமிழ்க்காதல் தளிர்த்தது. அங்கங்கே கண்ட தமிழ் இன்பத்தால் சிறுகச் சிறுக வளர்ந்தது. சிறப்புப் பயிற்சி உடையவர்களை அணுகித் தமிழ் நூல்களில் பெரும்பாலானவற்றைக் கற்றுத் தேர்ந்தார்.இவர் தேடித்தேடிச் சென்று கற்றுத் தேர்ந்ததனால்தான் மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவதிலும் சிறப்புப் பெற முடிந்தது. பாடஞ் சொல்லித் தருவதற்குத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் தெளிவுப்பெற்று இருக்க வேண்டும். தன்னைவிட அறிவில் சிறந்த ஆசான்களிடம் கல்விக் கற்றுத் தெளிவு பெற்று மாணவர்களுக்குப் பாடம் நடத்தி வந்தார். தம்மிடம் வரும் மாணவர்களை மாணவர்களாக எண்ணாமல் கல்விப் பெற்று வெளியே செல்லும்போது மற்றவர்களுக்குப் பாடஞ் சொல்லும் ஆசிரியர்களாகவே செல்ல வேண்டும் என்பதே இவரது குறிக்கோள்.

நன்றிமறவாத செம்மல்

தமிழகத்தில் தலைசிறந்த ஆசிரியர் என்று புகழப் பெற்றவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் அவர்கள். இவர் திருவாடுதுறை ஆதினத்தின் வித்துவானாக இருந்தார். இவர் தமிழ்த்தாத்தா என அழைக்கப்பட்ட உ.வே.சா அவர்களின் ஆசிரியர். அவரிடம் பயின்ற காலத்தில் ஸ்ரீகோபால கிருஷ்ண பாரதியார் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர், வித்துவான் தியாகராச செட்டியார் ஆகியோரின் தொடர்பும் ஆதரவும் கிடைத்தது. ஆசிரியர்மீனாட்சி சுந்தரம், தன் மாணவனுக்குச் சாமிநாதன் எனப் பெயரிட்டார். தன் ஆசிரியருடன் இருந்து தமிழ் நூல்களைக் கற்றார். பலரின் பழக்கம் ஏற்பட்டதால் அறிவு சிறந்து விளங்கினார். ஆசிரியர் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் இறந்த பிறகுத் திருவாவடுதுறை மடத்தில் ஆசிரியராக இருந்தார். தன் ஆசிரியரின் பெருமை துலங்க திரு.மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் என்ற நூலாக எழுதி வெளியிட்டார். தனக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியரின் நினைவாக அவரது சரித்திரத்தை எழுதி நன்றி மறவாத செம்மலாக விளங்கினார். “தாயைவிட

என்மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான்” என்று உ.வே.சா இவரைக் குறிப்பிட்டுள்ளார்.

பதிப்பில் ஏற்பட்ட சிக்கல்கள்

உ.வே.சாவின் சீவகசிந்தாமணிப் பதிப்புத் தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் சிறந்த முக்கியத்துவம் பெற்றது. அப்பதிப்பில் ஏற்பட்ட சிரமங்கள், பாராட்டுகள், கண்டனங்கள் என பல தரப்பட்ட துன்பங்களைச் சந்தித்தார். உ.வே.சாவைப் பழந்தமிழ் இலக்கியங்களின் மேல் பார்வையைத் திருப்பச் செய்தவர் சேலம் இராமசாமி முதலியார். சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்கக் காரணமாக இருந்தவர். உ.வே.சாவின் வாழ்நாளில் சீவக சிந்தாமணியின் மூன்று பதிப்புகள் வெளிவந்தன. முதல் பதிப்பைவிட மற்ற பதிப்புகள் பல பக்கங்கள் கூடி மாற்றங்கள் செய்து அவரது வளர்ச்சியை அறியலாம். அரும்பத அகராதி சீவகசிந்தாமணி முதல் பதிப்பில் இல்லை. மற்ற பதிப்பில் இது விரிவாகத் தரப்பட்டுச் சில சொற்களுக்குப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் விதமாகத் தம்பதிப்பை உயர்வுபடுத்துவதில் கவனம் கொண்டார்.

மணிமேகலைப் பதிப்பில் பௌத்தத் தத்துவத்தை விளக்கும் விதமாகப் புத்த சரித்திரம் என்னும் பகுதியை உ.வே.சா எழுதியிருந்தார். மணிமேகலையைப் பயன்படுத்தும் ஒருவருக்கு அனைத்து தகவலும் கிடைக்கும்படி செய்தார். பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லிலும் பெரும் கவனம் செலுத்தினார். புறநானூற்றைப் பழைய உரையுடன் உ.வே.சா பதிப்பித்தார். புறநானூறு மூலமும் பழைய உரையும் என்று தலைப்பிட்டார்.

தமிழ்ப்பல்கலைக் கழகம் பழைய என்ற சொல்லை நீக்கி புறநானூறுமூலமும் உரையும் என்ற தலைப்புடன் வெளியிட்டது. சீவகசிந்தாமணியும் புறநானூறும் பல இன்னல்களைச் சந்தித்தன. காலத்திற்கு ஏற்றவாறும் அறிவுப்புலமையாலும் பேரறிஞர்கள் சிலர் சிறு சிறு திருத்தங்கள் செய்தனர். ஒரு பதிப்பை மேலும் செம்மை செய்ய வேண்டுமென்றால் திருத்தங்களைக் குறிப்பிட்டுக் காட்டலாம். பதிப்பு என்பது ஒரு கால கட்டத்தோடு நின்றுவிடும் வேலையல்ல புதிது புதிதாகச் செய்து கொண்டே இருக்க வேண்டும். காலத்தின் குரலுக்கேற்றவாறு தமிழ்ச் சமூகம் ஒத்துப்போக வேண்டும்.

உ.வே.சா ஆற்றிய பணிகள்

1. 1880 ஆம் ஆண்டு வித்துவான் தியாகராச செட்டியாரின் விடா முயற்சியால் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியில் இருந்தார்.
2. 1903 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் பணியில் அமர்ந்தார்.
3. 1924 ஆம் ஆண்டு இராஜா அண்ணாமலை செட்டியார் நிறுவிய மீனாட்சி தமிழ்க்கல்லூரியில் தலைவராக இருந்தார்.
4. 1919 ஆம் ஆண்டு சென்னைக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றார். கல்லூரி ஆசிரியர் என்ற பணியிலிருந்து ஓய்வு பெற்றாரேயன்றி மாணவர்களுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியர் தொண்டிலோ நூல்களைப் பதிப்பிக்கும் தொண்டிலோ அவர் ஓய்வு பெறவில்லை. வேலைகள் பல மடங்காகப் பெருகி இருந்தன. உ.வே.சா. அவர்களின் புலமை, ஆற்றல் எதையும் சுவையாக எடுத்துக்கூறும் பாங்கு பெற்றமையால் மாணவர்கள் உள்ளத்தில் நிலைத்து இருந்தார்.

அவர் பெற்ற பட்டங்கள்

1. 1906 ஆம் ஆண்டு அரசாங்கத்தார் மகாமகோபாத்தியாயர் என்ற பட்டத்தை அளித்தார்கள்.
2. 1917 ஆம் ஆண்டு பாரத் தர்ம மண்டலத்தார் திராவிட வித்தியா பூஷணம் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்.
3. 1925 ஆம் ஆண்டு காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீசங்கராசார்ய சுவரி அவர்கள் தாஷிணாத்திய காநிதி என்ற பட்டத்தை அருளினார்கள்.
4. 1932 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தார் டாக்டர் பட்டம் அளித்தார்கள்.
5. இவரது பெருமையைப் பாராட்டும் வகையில் 1935 ஆம் ஆண்டு 80வது வயது உ.வே.சா அவர்களுக்குச் சதாபிஷேக விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தது. சென்னையில் பல்கலைக்கழக மண்டபத்தில் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது.
6. 1948 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் உ.வே.சா அவர்களின் முழு உருவச்சிலை நிறுவப்பட்டது.
7. 2006இல் நடுவண் அரசு தமிழ்த்தொண்டினைப் பெருமைப் படுத்தும் வகையில் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

பதிப்பித்த நூல்கள்

சங்க இலக்கியம், காப்பியங்கள் ஆகியன பதிப்புக்கெனத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இவற்றில் வேறொருவர் பதிப்பிக்கிறார் எனத் தெரிந்தால் அந்நூலைத் தவிர்த்து விடுவது இவரது வழக்கம். பதிப்பாசிரியருக்கு இருக்க வேண்டிய பொறுமையும் கவனமும் அவரிடம் இருந்தன. இவர் பதிப்பித்த நூல்கள்



எட்டுத்தொகை-5
பத்துப்பாட்டு-10
சீவகசிந்தாமணி-1
சிலப்பதிகாரம்-1
மணிமேகலை-1
புராணங்கள்-12
உலா-9
கோவை-6
தூது-6
வெண்பா பாடல்கள்-13
அந்தாதி-3
பரணி-2
மும்மணிக்கோவை-2
இரட்டை மணிமாலை-2
பிரபந்தங்கள்-2

மேலும் 1942 ஆம் ஆண்டு சென்னை பெசன்ட் நகரில் டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் நிறுவப்பட்டது.

முடிவுரை

தமிழ்மொழிக்கு ஒப்பற்ற தொண்டாற்றிய தமிழ் அறிஞர் உ.வே.சா அவர்கள் 1942 ஆம் ஆண்டு தனது 86 வது வயதில் இயற்கை எய்தினார். தனது வாழ்க்கை வரலாற்றை என் சரித்திரம் என்ற நூலாக எழுதியுள்ளார். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் செய்த தொண்டைப்போல் முன் யாரும் செய்ததுமில்லை, இனிமேல் செய்யப்போவதுமில்லை. இவ்வுலகம் உள்ளவரை அவரது புகழ் நிலைத்து நிற்கும். கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பதை அவரது வாழ்நாளளவும் மறக்கவில்லை.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

33. உ.வே.சா. என்னும் பேரிலக்கியம்

முனைவர் ச. மகேந்திரன்,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
மார் கிரிகோரியஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037.

முன்னுரை

நம் தமிழ் இலக்கியங்களில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள்கள் அமைந்த இலக்கியங்களைப் பேரிலக்கியங்கள் என்றழைக்கிறோம். அந்த நான்கு உறுதிப்பொருள்களையும் ஏடுகளில் கண்டெடுத்து உறுதிப்படுத்திய உ.வே. சாமிநாதய்யரும் ஒரு பேரிலக்கியமே. சி.வை. தாமோதரம்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, மு. அருணாசலம் ஆகியோர் வரிசையில் உ.வே.சா.வுக்கும் என்றும் ஒரு தனிச்சிறப்பிடம் உண்டு.

கந்தபுராணத்தில் சுவையான பகுதி

உ.வே.சா. வின் ஆசிரியர் மீனாட்சிசுந்தரனார் ஒருமுறை கந்தபுராணத்தை ஆழ்ந்து சுவையான பகுதிகளைப் படிக்கும்போது அவர் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. அதைப்பார்த்த செல்வந்தர் ஒருவர், குடும்பக் கவலையை மறக்க படித்துக்கொண்டிருக்கிறீர்களா? எனக் கேட்டார். அவர் இல்லை என்றதால், செல்வந்தர் நீங்கள் என்னதான் சிரித்து மழுப்பினாலும் நான் ஏமாறமாட்டேன். உங்கள் மனவருத்தத்தைக் கூறுங்கள் என்றார் செல்வந்தர். இலக்கியச் சுவை அறியாத இவரின் அன்பை ஏற்றுக்கொண்டார் மீனாட்சி சுந்தரனார்.

உ.வே.சா.வின் தமிழ்ப்பசி

உ.வே.சா. விற்கு மீனாட்சி சுந்தரம்பிள்ளை நைடதத்தை முதலில் கற்றுக்கொடுத்தார். நைடதத்தை ஆர்வத்தோடு கற்றதால் அவரின் தமிழ்ப்பசியாற்ற பிற நூல்களையும் கற்றுக்கொடுக்கலானார். இதைத் தன் சரிதத்தில் உ.வே.சா. குறிப்பிடும்பொழுது,

எனக்கிருந்த தமிழ்ப்பசி மிக அதிகம். மற்ற இடங்களில் நான் பாடம் கேட்டபொழுது அவர்கள் கற்பித்த பாடம் யானைப் பசிக்குச் சோளப்பொரி போல இருந்தது. பிள்ளையவர்களிடம் வந்தேன். என்ன ஆச்சரியம் எனக்குப் பெரிய விருந்து. தமிழ் விருந்து கிடைத்தது. என் பசிக்கேற்ற உணவு. சில சமயங்களில் அதற்கு மிஞ்சிகூடக் கிடைக்கும். இனி நமக்குத் தமிழ்ப் பஞ்சம் இல்லை என்ற முடிவுக்கு வந்தேன் என்று தமிழ்ப்பசிக்கான ஆர்வத்தை, ஏக்கத்தை, உணர்வை வெளிப்படுத்துகிறார்.

உ.வே.சா. வின் தமிழ்ப்புலமை

காவடி சிந்தை இயற்றிய சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் தமிழ் படிக்கவேண்டும் என்ற ஆசையுடன் வந்தார். உ.வே.சா. சில நூல்களிலிருந்து அவருக்குப் பாடம் நடத்தி அவரது ஆர்வத்தை நிறைவேற்றினார்.

உ.வே.சா. வின் சேவையில் மகிழ்ந்த சுப்பிரமணிய தேசிகர் அவருக்கு ஒரு வீட்டைக் கட்டித்தந்தார். உ.வே.சா.வும் குடும்பத்தோடு வந்து வாழ்ந்தார். அவரைப் பராமரிக்கும் பொறுப்பை ஆதீனமே ஏற்றுக்கொண்டது.

நன்கு தேர்ந்த ஆசிரியர் - உ.வே.சா.

1880 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் தியாகராசச் செட்டியார் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்து சுப்பிரமணிய தேசிகரிடம், ***என் வேலையிலிருந்து நான் ஓய்வு பெறப்போகிறேன். நான் வகித்த தமிழாசிரியர் பதவியில், எனக்குப் பிறகு நன்கு பாடம் சொல்லக்கூடியவரான ஆசிரியர் ஒருவரை நியமிக்கவேண்டும். உ.வே.சா. அவர்களை நியமிக்கலாம் என இருக்கிறேன். உ.வே.சாமிநாத ஐயரின் பிற்கால வாழ்வுக்கு அது மிகவும் உதவியாக இருக்கும்*** என எண்ணுகிறேன் என்று கூறினார்.

தேசிகரும் அப்பணிக்கு உ.வே.சா.வை அனுப்பும்போது, ***தியாகராசச் செட்டியார் ஸ்தானத்தில் தமிழாசிரியர் பதவி வகித்து நல்ல புகழ் பெறுவதோடு மட்டும் நின்றுவிடாதீர்கள். மகாவித்துவான் மகாலிங்கய்யரும், விசாகப் பெருமாளய்யரும் பெற்ற புகழையும் ஸ்தானத்தையும் நீங்கள் அடையவேண்டும்*** என்று கூறி ஆசீர்வதித்தார்.

உ.வே.சா. தமிழ்த்தாத்தா ஆன விதம்

உ.வே.சா. வின் வாழ்வில் அவரைப் புகழின் உச்சிக்குத் திசை திருப்பும் முகமாக ஒரு சம்பவம் நடந்தது. குருவருளும் இறையருளும் ஒன்றிணைந்து செயல்பட்ட சம்பவம் என்றே இதைச் சொல்லலாம்.

அரியலூரிலிருந்து சேலம் இராமசாமி முதலியார் என்பவர் கும்பகோணத்துக்கு முன்சீபாக உத்தியோக மாற்றம் பெற்றுவந்தார். இவர்தான் தமிழாசிரியராக இருந்த உ.வே.சாமிநாதய்யரைத் ***தமிழ்த்தாத்தாவாக உரு*** மாற்றியவர். அச்சந்திப்பை உ.வே.சா. குறிப்பிடுகையில்,

என் நல்லூழ்தான் என்னை அவரிடம் கொண்டு சேர்த்தது. அவருடைய நட்பினால், என் வாழ்வில் ஒரு புதுத்துறை தோன்றியது. தமிழிலக்கியத்தின் விரிவை அறியமுடிந்தது.

அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களிலும் புராணங்களிலும் தமிழ் இன்பம் கண்டு மகிழ்வதோடு நின்றிருந்த என்னை, பழைமையும் பெருமதிப்புடைய பழந்தமிழ் நூல்களில் பொதிந்து கிடந்த இன்தமிழ் இன்பத்தைச் சுவைக்க வைத்தார். பிறரும் அறிந்து இன்புறச் செய்யும் வழியை எனக்குக் காட்டித்தந்தார் என்று குறிப்பிடுகிறார்.

உ.வே.சா. என்னும் பேரிலக்கியம்

உ.வே.சா. வைத் தமிழ்த்தாத்தாவாக மாற்றிய சேலம் இராமசாமி முதலியார், முதலில் உ.வே.சா.வைப் பார்த்தபொழுது முகம்கொடுத்து பேசவில்லை. உ.வே.சா. படித்த நூல்களை வரிசையிட்டுக் கூறியபோதும் முதலியார் அவ்வளவுதானே! என சுருக்கமாகக் கூறிவிட்டார். பிற்காலப் புத்தகங்களையெல்லாம் படித்தது இருக்கட்டும். பழைய நூல்களை ஏதாவது படித்ததுண்டா? என்றார் முதலியார்.

உ.வே.சா. வுக்குச் சற்றே ஆச்சரியம் உண்டானது. தான் படித்ததாகச் சொன்ன கந்தபுராணம், பெரியபுராணம், கம்ப ராமாயணம் போன்றவையெல்லாம் பழைய நூல்கள்தானே என்றார். முதலியாரோ, இவற்றுக்கெல்லாம் மூலநூல்களைப் படித்திருக்கிறீர்களா? என்று கேட்டபோது, தாங்கள் எந்த நூல்களைச் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லையே? என்றார் உ.வே.சா.

சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் படித்ததுண்டா? என்று கேட்ட முதலியாரிடம், உ.வே.சா. எனக்குப் புத்தகம் கிடைக்கவில்லை. கிடைத்தால் அவற்றையும் படிக்கத் தைரியமுண்டு எனக் கம்பீரமாகக் கூறினார் உ.வே.சா..

சீவகசிந்தாமணி

சீவகசிந்தாமணியில் ***மூவா முதலா உலகம்*** என்னும் முதல்தொடரே நான் கற்றதைவிட, பரந்த தமிழ் இலக்கிய உலகம் இருக்கிறது என்பதை எனக்கு உணர்த்திற்று என்கிறார் உ.வே.சா.

புலவனின் கற்பனைத்திறம், உளவெளிப்பாடு, கதை நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தல், சொல்நயம் தோன்றக் கூறல், ஒன்பாண் சுவையும் மிகுவித்தல், பாத்திரத் தன்மையைப் படம்பிடித்துக் காட்டல், அறம் கூறல் என எந்தெந்தச் சூழல்களில் தற்குறிப்பேற்ற அணியைப் புலவன் பயன்படுத்துகிறான் என்பதைத் தெரிவித்துள்ளார் திருத்தக்கத்தேவர்.

சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகத்தில், இரவு கழிந்து ஞாயிறு தோன்றிய இயல்பைத் தெரிவிக்கும்போது,

எல்லை எய்திய வாயிரச் செங்கதிர்
மல்லன் மாக்கட றோன்றலும் வைகிருட்
டொல்லை நல்வினை முற்படத் தோன்றிய
வல்லல் வெவ்வினை போல வகன்றதே

ஞாயிறு கதிர்பட்ட அளவிலே அதுவரை குடியிருந்த இருள் விலகுவதைப்போன்று பழைமையான நல்வினை வந்த அளவிலே முன்தோன்றிய தீவினைச் செல்வதைப்போல விசையையின் துன்பம் தீர்ந்து நல்வினை நல்கும் காலம் வந்ததை கதை நிகழ்ச்சிக்கேற்ப தற்குறிப்பேற்றிக் கூறியுள்ளார் திருத்தக்கத்தேவர்.

ஜைன மதக் கருத்துக்களை அறிந்த பின்னரே உ.வே.சா. சீவக சிந்தாமணியின் பாடல் வரிகளைப் புரிந்துகொண்டு அச்சில் வெளிக்கொணர்ந்தார்.

சீவகசிந்தாமணி பதிப்பு வெளியான பிறகு, தமிழ்நாட்டில் ஒரு மறுமலர்ச்சி உருவானது. உ.வே.சா. அந்நூலில் சிந்தாமணி உரையில் காட்டப்பட்டிருந்த மேற்கோள்களுக்குரிய இடங்களையும், பழைய நூல்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகளையும் ஒருசேர தந்திருந்தார். இதனால் அந்த நூல் பதிப்பு, பல பழைய நூல்களுக்கெல்லாம் களஞ்சியம் போல இருந்ததால், ஆராய்ச்சியாளர்களும் புலவர் பெருமக்களும் ஆராய்ச்சிக்கு உகந்த இலக்கியமாகக் கருதினர்.

நூல்பதிப்பின் முன்னோடி

நூல்களை முதன்முதல் பதிப்பிக்கையில் ஏட்டுச்சுவடிகளில் உள்ளபடியே பதிப்பிக்க வேண்டும். அவற்றில் பிழை இருந்தாலும் அவற்றை அப்படியே பதிப்பிக்கவேண்டும் எனும் சி.வை. தாமோதரத்தின் கருத்துக்கேற்பவே, உ.வே.சாமிநாதய்யரும் பதிப்புத்துறையில் செயல்பட்டார். அப்போது, தமிழ் ஏடுகளைப் பதிப்பிக்கும் பணியில் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் போன்றோர் முன்னோடிகளாக விளங்கினார்கள்.

உ.வே.சா. பதிப்பித்த முதல் நூல்

திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் மற்றும் பல வித்துவான்களின் பாடல்களுடன் ***கொலு மண்டபம்*** எனும் ***வேணுவனலிங்க விலாசர் சிறப்பு*** என்ற நூலாக 1878 ஆம் ஆண்டு தம் முதல் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார் உ.வே.சா.. இதனைத் தொடர்ந்து பல நூல்களை அச்சில் வெளியிட்டவண்ணம் இருந்தார்.

முடிவுரை

பல பெரும் வித்துவான்களிடம் கல்வி கற்ற உ.வே.சா., தான் கற்ற கல்வி வீணாகாமல் அனைவரும் படிக்கும்வண்ணம் அச்சில் பதிப்பித்தார். ஓலைச்சுவடிகளில் உள்ள பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி இரவுபகல் பாராது படித்த பொக்கிஷத்தை, தான் பட்ட துன்பம் தன்னோடு போகட்டும் என்றெண்ணி இன்றைய தலைமுறையினருக்கு எளிதாகக் கிடைக்கும்படி செய்தார். இவரின் தமிழ்த்தொண்டு தமிழுலகம் உள்ளவரை நீண்டு வாழும்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

34. பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ. வே. சா.

ஜா. ஜோன் சில்வியா பிரேமா,
உதவிப்பேராசிரியர,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

உ.வே.சா என்று அழைக்கப்படும் உ.வே.சாமிநாத ஐயர் அன்று உழைத்திராவிட்டால் தமிழுலகிற்கு சிலப்பதிகாரத்தைப் பற்றி தெரியாமலே போயிருக்கும். அகநானுற்றிற்கும், புறநானுற்றிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு மண்ணாக மறைந்திருக்க வாய்ப்பிருக்கும் இப்படி நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றிப் பதிப்பித்து தந்தவர் என்னும் பெருமை உடையவர் உ.வே.சா. மேலும் தன்னுடைய சொத்துக்களையும் விற்று பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். இத்தகைய அரிய சேவைக்காக அவரின் சீரிய முயற்சிகள் தாராளம், பட்ட சிரமங்கள் ஏராளம், இருந்தும் மனம் தளராது இச்சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

டாக்டர். ஐயர் தமிழ் இலக்கியத்தில் பழைய அணிகளை வெளியிட்ட பிறகு தமிழ் நாட்டில் ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கை நிலையையும் அவர்களது பண்பாட்டு நிலையும் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொள்வதற்கு அந்த நூல்கள் கருவிகளாக விளங்குகின்றன. இவ்வாறு தமிழகத்தில் ஒரு புதிய யுகத்தை உண்டாக்கிய பேராளர் டாக்டர் ஐயர் அவர்கள் இறைவன் திருவருளால் 87 ஆண்டுகள் வாழ்ந்தார் தமிழுக்கு வளம் சேர்த்தார். தம்முடைய இளமைக் காலத்தில் அவர் காணாத காட்சியை அவர் தம் முதுமையில் கண்டார். பாரி என்றும் அதிகமான் என்றும் வெறும் பெயர்களைக் கேட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்றி அவர்களால் தமிழ் உலகத்திற்கு பல நன்மை உண்டாயிற்று என்பதை பள்ளிக்கூட மாணவர்களும் தெரிந்து கொள்ளும் நிலை இவரால் உண்டாயிற்று. காப்பிய இன்பத்தை நுகர்ந்த தமிழ்ப் புலவர்கள் சங்க இலக்கியங்களைப் பாராட்டினார்கள் தமிழ் மிகப் பழமையானது, மிகச் சிறந்த பண்பாட்டை உள்ளுறையாகக் கொண்டது என்பதை புலவர்கள் எல்லாம் ஆராய்ந்தறிந்து சொன்னார்கள். இதற்குக் காரணம் உ.வே.சா அவர்களின் உழைப்பே ஆகும்.

இளமைக் கல்வி

டாக்டர் ஐயர், நாராயண ஐயர், சாமிநாதையர் என்பவர்களிடம் தம் இளமைக் கல்வியை பெற்றார், அரிச்சுவடி எண்சுவடி முதலியவைகளையே அவர்களிடம் கற்றுக் கொண்டார் அந்த சின்ன பிராயத்தில் அவருக்குச் சித்திரம் எழுதுவதில் விருப்பம் இருந்தது, காகிதங்களில் பூக்களைப் போல கத்தரித்து அமைக்கும் பழக்கம் உண்டாயிற்று (ஓரிகமி) கற்பனையில் சிறந்த கவிஞர்கள் இயற்கையின் எழிலைக்கண்டு அநுபவித்து அப்படியே அதைக் கவிதையில் வடிக்கும் முயற்சியில் ஈடுபடுவது போல உவே.சா இயற்கையைக் கண்டு இன்புற்றார். இவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் கல்வி கற்றார். பல அரிய இலக்கணங்கள் மற்றும் இலக்கியத்தை

ஆர்வமுடன் கற்றுக்கொண்டார். திரு.மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் அளவிட முடியாத பற்றும் பாசமும் பக்தியும் கொண்டிருந்தார்.

இசை

உ.வே.சாசிறுவயதில் விளையாட்டிலும் இசையைக் கற்பதிலும் ஆர்வமுடையவராயிருந்தார். ஒரு முறை திரு.சுப்ரமணியத் தேசிகரை சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது, அங்கு ஒரு பாடலுக்கு விளக்கம் சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அதனை இசையுடன் பாடி விளக்கம் அளித்தார் தேசிகர் அவர்கள், ஐயரவர்களுக்கு புத்தகங்களைப் பரிசு கொடுத்து அன்பு பாராட்டினார். கும்பகோணக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்காக சென்றிந்த போது அங்கு இருக்கும் ஆசிரியர்கள் இவரை சோதிக்கும் பொருட்டு ஒரு புதிய பாடலை இயற்றுமாறு கேட்டுக் கொண்டனர். தியாகராச செட்டியாரை வைத்து அவரிடம் சொல்வது போல உடனே ஒரு பாட்டைப் பாடச் சொன்னார்கள் சில நிமிடங்களிலேயே ஆசிரியப்பெருமான் பின்வரும் பாட்டைப் பாடி முடித்தார்.

“வாய்ந்தபுகழ் படைத்திலங்கு மீனாட்சி
சுந்தரநா வலவன் பாலே
ஏய்ந்ததமிழ் ஆய்ந்தமுறைக் கியைவுறந
……………………………………..................
வேய்ந்த தமிழ் முதற்புலமைத் தியாகரா
சப்பெயர்கொள் மேன்மை யோனே! ”

இதிலிருந்து ஐயர் அவர்களின் இசைப் புலமையை அறியலாம்.

இயற்றிய நூல்கள்

உ.வே.சா பல செய்யுள்களையும் நூல்களையும் இயற்றியுள்ளார். கலைமகள் துதி, திருலோகமாலை, ஆனந்திவல்லியம்மை, பஞ்சரத்தினம் முதலிய நூல்கள் ஆகும்.

பத்திரிக்கை ஆசிரியர்

கலைமகள் என்ற பத்திரிக்கையில் ஆசிரிய பெருமான் அவர்கள் சில நூல்கள் பற்றி செய்திகளை அற்புதமாக வெளியிட்டார். தம்முடைய அனுபவங்களையும், புலவர்களின் வரலாறுகளையும் கலைமகளில் கட்டுரையாக எழுதத் தொடங்கினார். அதனால் கலைமகளின் பெருமை உயர்ந்தது. “பிச்சைப் பாட்டு” என்ற தலைப்பில் ஆசிரியர் கட்டுரை எழுதியிருந்தார், இக்கட்டுரையைப் படித்துவிட்டு இராஜாஜி அவர்கள் ஆனந்தம் தாங்காமல் நான் இதை எழுதுகிறேன், அதற்குத் தலைப்பு “ஊரைச்சுடுமோ” என்று வைத்திருக்கலாம். இத்தகைய ஓர் இரத்தினத்தை நான் எழுதியிருந்தால் அவ்வாறுதான் பெயர் வைத்திருப்பேன், என்று பாராட்டினார்.

ஐயர் எழுதிய கட்டுரைகளின் நடை தெள்ளத் தெளிந்த நீரோட்டம் போன்ற நடை, எந்த சொல்லுக்கும் அகராதியைத் தேட வேண்டிய அவசியம் இருக்காது, ஆழமான நீர் நிலையில் தானே தெளிவு இருக்கும்? சிறிய சிறிய வாக்கியங்களாக அமைத்திருப்பார், மனிதனுடைய

இதய ஆழத்தில் தோன்றும் உணர்ச்சியலைகளை அழகாக விவரித்திருப்பார். இதிலிருந்து ஆசிரியரின் பத்திரிக்கை புலத்தினை அறியமுடிகிறது.

தமிழ்நாடு பாக்கியம் செய்தமையால் ஆசிரியப் பெருமான் ஒரு பொக்கிசமாக கிடைத்தார், இறைவன் இவருக்கு 87 ஆண்டு நீண்ட ஆயுளைக் கொடுத்தான். இவர் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் தமிழுக்காகவே பாடுபட்டார், தமிழ் அன்னையை மீண்டும் பழைய நிலையில் இருக்கச் செய்தார், பழைய அணிகளைச் செப்பம் செய்து அணிந்ததோடு புதிய உரைநடையினாலும் அவளை எழில் கொழிக்கச் செய்தார். தமிழ் உலகம் தம் ஆசிரியரை நன்கு அறிந்துகொள்ளும்படி அவரது வரலாற்றை வெளியிட்டார். பழைய சங்க இலக்கியங்கள் எல்லாம் இன்றைக்கும் மாணவர்களும் எளிதில் கிடைக்கின்றன என்றால் இதற்கெல்லாம் மூலகாரணம் இந்த தமிழ் பெருமகனார் செய்த தொண்டுதான். இன்று உலகம் முழுவதும் தமிழ் மொழியை பற்றிப் பேசி, ஆராய்ந்து வருகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் இந்தப் பெருமகனார் செய்துள்ள தமிழ்ப் பணியே ஆகும்.

இவரைப் பற்றி மாககவி பாரதியார்,

> ***"பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்***
> ***காலமெல்லாம் புலவோர் வாயில்***
> ***துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்***
> ***இறப்பின்றி துலங்கு வாயே!"***

என்று பாடியபடி தமிழர்களின் நெஞ்சில் என்றைக்கும் இந்தப் பெருமகனார் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்.

ஏட்டுச்சுவடிகள்

சங்க இலக்கியங்களைப் பற்றி இன்று நம்மால் பேச முடிவதற்கு உ.வே.சா பெரும் காரணமாவார். சங்க கால மக்களின் வாழ்க்கை பண்பாடு போன்றவற்றைப் பற்றி இன்று நமக்குத் துல்லியமாக தெரிய இவருடைய உழைப்பு பெரிதும் உதவியது. இவர் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அப்படியே அவைகளைப் பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை சிதைந்து மறைந்து விட்ட அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும்படி செய்தார். ஆசிரியர் குறிப்பு நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கி, இந்த நூல்களை குறித்த முழுபுரிதலுக்கும் வழிவகுத்தார். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90 க்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு நூல்வடிவம் தந்து அவற்றை அழிவில் இருந்து காத்தது மட்டுமின்றி அடுத்த தலைமுறையினர் அறிய வாய்ப்புத் தந்தார்.

பேச்சுத்திறன்


உ.வே.சா. கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமை உடையவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா. ஆற்றிய சொற்பொழிவே "சங்ககாலத் தமிழும் பிற்காலத்தமிழும்" எனும் நூலாக வெளியிடப்பட்டது.

பழைய நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்னும் குறிக்கோளைத் தவிர வேறெதனையும் தம் வாழ்நாளில் அவர் சிந்தித்ததே இல்லை. தமிழர்களின் நெஞ்சில் என்றைக்கும் இந்தப் பெருமகனார் வாழ்வார் என்பது திண்ணம்.

<u>பார்வை நூல்கள்:</u>

1. தமிழ் இலக்கிய வரலாறு தமிழண்ணல்
2. இந்திய இலக்கிய சிற்பிகள் கி.வா.ஜகந்நாதன்
   தமிழ்தாத்தா உ.வே.சாமிநபத ஐயர்

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



35. உ.வே.சா.வின் இலக்கியப்பணி

சு. சதீஷ் குமார்,
தமிழ் ஆர்வலர்

முன்னுரை

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும்,பாதுகாப்பிற்காகவும் பாடுபட்டவர்களில் மிகவும் முக்கியமானவர் உ.வே.சாமிநாதய்யர். தமிழ்த்தாத்தா என அனைவராலும் போற்றப்படும் இவர் அழிந்துபோகும் நிலையில் இருந்த பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடிஅச்சிட்டுப் பதிப்பித்தார். தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும் செழுமையையும் அறியச்செய்தவர். சங்க இலக்கியங்களைப் பற்றி இன்றுநம்மால் பேசமுடிவதற்கும்,சங்ககாலமக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி நமக்குத் துல்லியமாக தெரிவதற்கும் இவருடைய உழைப்பு பெரிதும் காரணமாக உள்ளது.

ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பிக்கும் முறை

காலங்கள் மாறினாலும் என்றும் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் உ.வே.சாஅவர்கள். அக்காலத்தில் பனைஓலைகளை பக்குவபடுத்தி அதில் எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள். அப்படி எழுதப்பட்ட சுவடிகளை தேடிகண்டுபிடித்து அவற்றை வாசித்து நமக்காகத் தாளில் எழுதி அச்சிட்டுப் புத்தகமாக வழங்கினார். அவர் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அப்படியே பதிப்பித்தல் செய்யவில்லை. சிதைந்து மறைந்துவிட்ட அடிகளையும் சொற்களையும் கண்டுமுழுப்பொருள் விளங்கும்படி செய்தார். ஆசிரியர் குறிப்புநூல் குறிப்பு போன்ற செய்திகளை தொகுத்து வழங்கி நூல்கள் குறித்த முழுபுரிதலுக்கும் வழிவகுத்தார். நன்னூல், தொல்காப்பியம், போன்ற இலக்கண நூல்களையும், சமகாலத்தில் இயற்றிய பிள்ளைத்தமிழ், கோவை முதலிய இலக்கியங்களையும் தமிழறிஞரிடம் பாடம்கேட்டு புலமையடைந்தார்.

சுவடிபுராணம்

பனைமரங்களின் ஆயுள் 200 முதல் 300 ஆண்டுகள் ஆகும். இளம் பனைமரங்களை பக்குவபடுத்தி அவற்றைப்பதப்படுத்தி பருவநிலைக்கு ஏற்றார்போல் அவற்றைப் பாதுகாத்து வந்தனர். பனையோலை சிலமடங்களில் பூஜைப் பொருளாகவும்,சிலவீடுகளில் அறிவாளிகளின் அறிவிடமாகவும் ஆடிப்பெருக்கில் ஆற்றில் வீசியும் எறிந்தனர். இலக்கியப் பேரறிவும், இலக்கணச் சீறரிவும், கரையான் அழித்தது போக மீதியுள்ளதை வாசித்து பனையோலையை காகிதத்திற்கு மாற்றினார். 18 ஆம் நூற்றாண்டுமுதல் 19 ஆம் நூற்றாண்டுவரை பனையோலை முறையை பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ராமன் சீதையைத் தேடி எவ்வாறு அலைந்தானோ அதேபோல் ஒலைச்சுவடிகளைத் தேடிபெரும் வெற்றி கண்டவர்உ.வே.சா.

பேச்சித்திறன்

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் அதுபோல உ.வே.சாவின் ஒவ்வொரு பதிப்பும் ஒலைச்சுவடிகளின் வாசம் கூறும். படிப்பறிவோடு சிறந்த பேச்சுத் திறமையும், நகைச்சுவை இழையோடு பேசும் திறமையும் பெற்றவர் நம் உ.வே.சாஅவர்கள். சிறந்த பேச்சுத்திறம் கொண்டவனால் மட்டுமே ஒரு பேச்சாளராகவும், அறிவாளியாகவும், ஆசானாகவும் விளங்கமுடியும்.

சென்னைபல்கலைக்கழகத்தில் ஆற்றிய இவருடைய சொற்பொழிவு “சங்ககாலத் தமிழும், பிற்காலத்தமிழும்” என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பேச்சுத்திறன்,திருவாடுதுறைஆதினம் தொடர்பு

“கல்வி இல்லாமக்கள் களர்நிலம் போன்றவர்கள்”அந்நிலத்தில் புல் விளையலாம் நல்ல புலவர்கள் வரமாட்டார்கள். உ.வே.சாவும் இவர்குடும்பமும் இசையும் தமிழும் கலந்தகுடும்பம் ஆகும். தாம் வாழ்ந்து வந்த ஊரான ஆரியமூலையில் தமிழ் மேலும் கற்க வழியில்லாததால் சோர்வடைந்ததாகவும் அரும்பாவூர் நாட்டார் என்னும் பெரும் செல்வர் தமது இல்லத்தில் தங்கி இருந்தபோது, உ.வே.சாவின் தமிழ் ஆர்வத்தை உணர்ந்து இவரை மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பும் படி பரிந்துரைத்து தம்மனத்தில் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்கவேண்டும் என்னும் வேட்கையை ஏற்படுத்தியது என்றுகுறிப்பிடுகிறார். இடையில் சிலகாலம் விருதாச்சலம் ரெட்டியாரிடம் உ.வே.சா தமிழ் கற்றார். மேலும் புத்தகங்களைப் படிப்பதுமட்டும் போதாது படித்தவர்களிடம் பாடம் கேட்கவேண்டும் என்பதையும் அப்பொழுது நன்கு உணர்ந்து கொண்டார். பின்னர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சேர்ந்து பாடம் கற்கத் தொடங்கினார். அப்போது திருவாடுதுறை ஆதினத்தின் தொடர்பும் கிடைத்தது. அத்தொடர்பு இவர் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

திருநாகைக்கோணம், நைடதம், திருக்குடந்தை, திரிபந்தாதி, பழமலை திருப்பந்தாதி, திருப்புகலாதிருபந்தாதி, மறைசையந்தாதி தில்லையக அந்தாதி, மீனாட்சிஅம்மன் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமிபிள்ளைத்தமிழ், செங்கழநீர்வினாயகர்பிள்ளைத்தமிழ் மூதாம்பிகைபிள்ளைத்தமிழ், அஸ்டபபிரபந்தங்கள் சீர்காழிக்கோவை, கண்ணப்பநாயனார் புராணம் ஆகியநூல்கள் அவரிடம் கற்றார். ஆசிரியரும் மிகவும் வறுமையில் இருந்தார் என்று உ.வே.சா கூறுகிறார்.***“ புலமையும் வறுமையும் சேர்ந்தே இருப்பது இந்நாட்டின் சாபம்”*** இது உ.வே.சா கூற்று.

இலக்கியஆய்வு

சீவகசிந்தாமணி பதிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே தம்மிடமிருந்த எட்டுத்தொகைநூலை ஆராய்ந்து வந்தார். பதிப்பு நிகழ்ந்து வந்தாலும் சீவகசிந்தாமணி ஏடு தேடும் முயற்சி தொடர்ந்தது. இதற்காக திருநெல்வேலி சென்று பல ஊர்களில் சீவகசிந்தாமணி நூலை உ.வே.சா தேடினார்.

சீவகசிந்தாமணி பதிப்புப் பற்றி பலபத்திரிக்கைகளிலும் செய்திகள் வந்தவண்ணமிருந்தன. சிந்தாமணிபதிப்பிற்கு வாங்கியிருந்த முன்பணம் போதவில்லை. அச்சிடுவதற்கு காகிதம் தேவையாக இருந்தது. கடன் வாங்கி இதுபோன்ற இடர்பாடுகளை உ.வே.சா சரி செய்துவந்தார். அக்காலத்தில் தமிழ்ப் புத்தகங்களில் முகவுரை இருந்ததில்லை. ஆனால் உ.வே.சா சிந்தாமணி நூலிற்கு விரிவான முகவுரை எழுதிச்சேர்த்தார். இதனைத் தொடர்ந்து முதன்முறையாக நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, முதலியவற்றைச் சேர்த்து நூலுக்கு மிகுந்த மதிப்பைக் கூட்டினார்.

சீவகசிந்தாமணிபோலவே ஏட்டுச்சுவடிகளை தேடி ஊர் ஊராகச் சென்றார். ஒருபிரதி அவர் கைவசம் ஏற்கனவே இருந்தது. பத்துப்பாட்டில் விசயம் தெரியாமல் பொருள் தெரியாமல் முடிவு தெரியாமல் மயங்கியபோதெல்லாம் இந்தவேலையை நிறுத்திவிடலாம் என்று சலிப்பு தோன்றும். ஆனால் அடுத்தகணமே ஒருஅருமையான விசயம் சிரமமாக இருந்தாலும் அவற்றிற்காக வாழ்நாள் முழுவதும் உழைக்கலாம் என்ற எண்ணம் உண்டாகும் என்று தமது விடாமுயற்சியை பதிவு செய்கின்றார்.

பத்துப்பாட்டுப் பதிப்பு வேலையும் சென்னையில் துவங்கியது. சீவகசிந்தாமணி பதிப்பிலும் பத்துப்பாட்டு பதிப்பிலும் திருமானூர் கிருஷ்ணரை சென்னையில் தங்கி மேற்பார்வையிட்டு உதவி உள்ளார். 1889 ஆம் வருடம் உ.வே.சாவின் 34 வயதில் பத்துப்பாட்டும் பதிக்கப்பட்டது.

சமண இலக்கியங்களோடு பல ஒலைச்சுவடிகளையும் உ.வே.சாதேடித் தேடித் சேகரித்தனர். பிழைதிருத்தி அச்சேற்றல் பணியும் துவக்கினார்.சங்க இலக்கியங்கள் காப்பியங்கள் புராணங்கள் சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு நூல்வடிவம் தந்து அவற்றைஅழிவில் இருந்து காத்தது மட்டுமின்றி அடுத்ததலைமுறையினர் அறியத் தந்தார்.

பேச்சுத்திறன்

உ.வே.சாமிநாத ஐயர் கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமை உடையவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா ஆற்றிய சொற்பொழிவு ***"சங்ககாலத்தமிழும் பிற்காலத்தமிழும்"*** என்னும் நூலாகவெளியிடப்பட்டது.

பட்டங்கள்

அன்புக்கு அன்னை, அறிவுக்குத் தந்தை, நல்லமுறையில் கல்வியைக் கற்பித்து சிறப்பான எதிர்காலத்தை கொடுத்துள்ளார். தான் மட்டுமின்றி எதிர்கால சந்ததியினரும் பயன்பெறும் வகையில் இவருடைய பதிப்பு உள்ளது. தமிழுக்கும் இலக்கியத்திற்கும் ஆற்றிய பங்களிப்பினை பாராட்டி மார்ச்21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் மதிப்புறுமுனைவர் பட்டம் அளித்தது. இது தவிர மகாமகோபாத்தியாய மற்றும் தக்ஷிணகலாநிதி எனும் பட்டமும் பெற்றுள்ளார். இந்தியஅரசு பிப்ரவரி 18, 2006ம் ஆண்டில் இவரது நினைவுஅஞ்சல் தலைவெளியிட்டுள்ளது.

நினைவு இல்லம்

உத்தமதானபுரத்தில் உ.வே.சா வாழ்ந்த இல்லம் தமிழ்நாடுஅரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. 1942 இவர் பெயரால் சென்னை வசந்தநகரில் (பெசன்ட் நகரில்) டாக்டர்உ.வே.சா நூல்நிலையம் அமைக்கப்பட்டு இன்றும் தொடர்ந்துசெயல்பட்டுவருகிறது.

அச்சுபதிப்பித்த நூல்களின் பட்டியல்

- சீவகசிந்தாமணி
- மணிமேகலை

- சிலப்பதிகாரம்
- புறநானூறு
- திருமுருகாற்றுப்படை
- பத்துப்பாட்டு
- பெருநாற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுபடை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்
- 12 புராணங்கள்
- பெருங்கதை
- 9 உலாநூல்கள்
- 6 தூதுநூல்கள்
- 3 வெண்பாநூல்கள்
- 4 அந்தாதிநூல்கள்
- 2 பரணிநூல்கள்
- 2 மும்மணிக்கோவைநூல்கள்
- 2 இரட்டைமணிமாலைநூல்கள்
- அங்கையற்கண்ணிமாலை
- இதரசிற்றிலக்கியங்கள்

முடிவுரை

உ.வே.சா தனது வரலாற்றை ***“என் சரிதம்”*** என்னும் தலைப்பில் ஆனந்தவிகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக எழுதிவந்தார். இது 1950 ஆம் ஆண்டில் தனிப் புத்தகவடிவம் பெற்றது. இது தவிர இவரது வாழ்க்கை வரலாறு தமிழ்த்தாத்தா எனும் தலைப்பில் தொலைக்காட்சி தொடராகவும் எடுக்கப்பட்டது அவை சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தாரால் (தூர்தர்சன்) ஒளிபரப்பட்டது. இவர் 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் 28அன்று திருக்கழுகுன்றத்தில் இயற்கை எய்தினார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

36. ஓலைச்சுவடியும் உ.வே.சாவும்

டாக்டர் க. கீதா, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.எச்.டி.,
முதல்வர் – கல்வியியல்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

உ.வே.சாமிநாதய்யர் (உ.வே.சா) ஒரு தமிழறிஞர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் உ.வே.சா குறிப்பிடத்தக்கவர். பலரும் மறந்து அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர், சங்க கால மக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி இன்று நமக்குத் துல்லியமாகத் தெரிகிறது என்றால் அதற்கு உ.வே.சா தான் காரணம்.

தோற்றம்

உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் 1855 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி தமிழ்நாட்டில் பாபநாசத்தில் உள்ள உத்தமதானபுரம் என்னும் ஊரில் வேங்கட சுப்பையர், சரஸ்வதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் வெங்கட்ராமன், இவரது தாயார் சாமிநாதன் என்ற செல்லப்பெயரால் அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பின்னர் சாமிநாதன் என்ற பெயரே நிலைத்து விட்டது. இவரது தந்தை ஒரு இசைக்கலைஞர். உ.வே.சா அவரது தொடக்க நிலைத் தமிழ்க்கல்வியையும், இசைக் கல்வியையும் இனிதாய்க் கற்றார். தமிழை மாணாக்கருக்கும் இனியதாய், இன்புறச் செய்தார். இதற்கு ஐயரவர்களின் மாணக்கர்களான கி.வ.ஜகன்நாதன் அவர்களும் தண்டபாணி தேசிகர் அவர்களும் சான்று. இவர்களுடன் ஐயரவர்களின் பெயரன் க.சுப்பிரமணியன் அவர்களும் சான்றாவார். மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா அவர்கள் ஆற்றிய ‘‘சங்க காலத் தமிழும் பிற்காலத் தமிழும்’’ என்னும் சொற்பொழிவு நூலும் உ.வே.சா வின் பேச்சுத் திறமையையும் தமிழ்வளமையையும் நம் கண்முன்னே இழையோடச் செய்கின்றன.

பன்முகத்தார் உ.வே.சா

உ.வே.சா அவருடைய மாணாவர்களிடம் நகைச்சுவை உணர்வோடு இழையோடப் பேசும் பேச்சாளர். பாடம் சொல்லிக் கொடுக்கும் தருணத்தில் கடின பதங்கள் எவையோ அதற்கு மட்டும் நன்கு பொருள் கூறி விளக்குவதில் வல்லவர். நூலாசிரியர், சுவடிகளைத் தேடித்தேடி நூலாக்கிய பதிப்பாசிரியர். பாடத்தில் கற்பனைக் கூற்றுகள் இடம்பெறும் நேரத்தில் அவற்றை விளக்கும் சிந்தனையாளர். தான் பதிப்பித்த நூல்களுக்கு உரை எழுதி பதிப்பித்த சிறந்த உரையாசிரியர், கற்பனையாளர் என்று உ.வே.சா.வின் பல்துறைத் திறமைகள் பல.

உ.வே.சா கண்ட கல்வி

உத்தமதானபுரத்தில் தொடக்ககல்வியைக் கற்று தன் அறிவுப்பசிக்கு உணவு தேடியவர் உ.வே.சா அவர்கள். கல்வியைப் போன்று இசையும் இவருக்கு ஊற்றெடுத்தது அதனால் உத்தமதானபுரத்திலேயே தன்னுடைய இசைப் புலமையையும் வளர்த்து கொள்ள விழைந்தார். தந்தை ஒரு இசைக்கலைஞர் இவருக்கும் இசை நாற்றாங்கால் போட்டு அமர்ந்தது. பின்னர் தன் பெயரையே கொண்ட சாமிநாதய்யர் என்னும் ஆசிரியரிடம் திண்ணைப்பள்ளியில் சேர்ந்தார். உ.வே.சா சிறந்த மாணவன் அவையே காரணம் ஆசிரியரிடம் அவர் அடிவாங்காமல் கல்வி கற்றதற்கு. திண்ணைப் பள்ளிக்கூடம் 5மணி முதல் தொடங்கி சில நேரம் 7 அல்லது 8மணி வரையிலும் நடைபெறும் மாணவர்கள் தத்தம் வசதிகேற்ப பொருள் கொணர்ந்து ஆசிரியரிடம் கொடுத்து தான் கற்கும் கல்விக்கு உண்டான தொகையைச் செலுத்துவர்.

மதிய உணவு இடைவேளை மிகவும் அருமை அவர் கல்வி கற்ற காலங்களில் சுமார் 3மணி நேரம் உணவு இடைவேளை உண்ட மயக்கத்தில் மறந்துவிடக் கூடாது என்பதற்காக ஏதேனும் ஒரு பாடக்குறிப்பினைக் கூற மாணவர்கள் மனனம் செய்வர். பாலக் கல்வி இவ்வாறாய் முடிய 17ம் வயதில் தஞ்சாவூர் திருவாடுதுறை சைவ ஆதினத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ்ப்பெற்ற “மகாவித்துவான்” என்று அழைக்கப்பட்ட தமிழறிஞர் திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு காலம் தமிழ் பயின்று தமிழறிஞர் ஆனார். தான் கற்ற கல்வியை மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசானாக தமிழாசிரியராய் தொடக்கத்தில் கும்பகோணத்தில் கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1903 ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராய் தன் பணியினை செவ்வனே நிறைவேற்றினார். 16 வருடம் பணியாற்றிய உ.வே.சா 1919ல் ஓய்வு பெற்றார்.

இவர் தன் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் அவர்களிடம் அளவற்ற பற்றும் மரியாதையும் கொண்டிருந்தார். புலமையும் வறுமையும் சேர்ந்தே இருக்கும் என்பது நாட்டின் சாபம் என்பதை அவர் அறிந்திருந்தார். அவரிடம் திருநாகைக்காரோணம், நைடதம், திருக்குடந்தைத்திரிபரந்தாதி, பழமலைதிருபந்தாதி, திருப்புகலாதிருபந்தாதி மறைசையந்தாதி, தில்லையக அந்தாதி, மீனாட்சி அம்மன் பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் வினாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், அஸ்டப்பிரபந்தங்கள், சீர்காழிக்கோவை, கண்ணப்பநாயனார் புராணம் ஆகிய நூல்களை அவரிடம் கற்றார்.

ஏடுகளின் நிலை

‘இலக்கியங்கள் எழுதப்பட்டிருந்த ஏடுகள் அனைத்தும் காலத்தால் பழையவனவாய் உளுத்துப்போய், செல்லரித்து, எலிகடித்து, கிழிந்தும், சிதைந்தும், பூச்சிகள் உண்டும் எஞ்சியவையாகக் கிடந்தன’ என்று ஏடுகள் இருந்த நிலையைப் பற்றி உ.வே.சா குறிப்பிடுகிறார். ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் பதிப்புத் துறையிலும், எழுத்துத் துறையிலும் முழு மூச்சாக ஈடுபட்டார். கும்பகோணத்தில் முன்சீப்பாக இருந்த ராமசாமியின் உதவியால்,

உ.வே.சா முதன் முதலில் பதிப்பித்த நூல் ‘சீவக சிந்தாமணி” உ.வே.சா, சைவ சமயச் சார்புடையவராய் இருந்தாலும் சமண நூலான ‘மணிமேகலையையும்’ பதிப்பித்தார். இறை பக்தி வேறு இலக்கிய ஈடுபாடு வேறு என்று வாழ்ந்து காட்டியவர் உ.வே.சா, ‘சிலப்பதிகாரம்’ ‘மணிமேகலை’ ஆகிய காப்பியங்களைத் தொடர்ந்து குறுந்தொகைக்கு உரை எழுதி பதிப்பித்தார். எல்லா பாடல்களுக்கும் அவற்றின் உரைகளுக்கும் அவர் தந்திருக்கும் அடிக்குறிப்புகளும். பாடவேறுபாடுகளும் ஆய்வாளர்களுக்கு புதுவழி காட்டுவனவாகவும், புதுச்செய்திகளைத் தருவனவாகவும் அமைந்துள்ளன. உ.வே.சாவின் இச்சிறந்த பணியினால் தமிழகத்தில் பதிப்புத்துறையில் பல்வேறு புதுமாற்றங்கள் ஏற்பட்டன. ஆய்வுப் போக்கில் புதுமாற்றத்தையும் புகுத்தியது. உதாரணமாக புறநானூற்றுப் பதிப்பால் தமிழகத்தின் பண்டைய நாகரிகமும், மக்களின் பழக்கவழக்கங்களும் தெரிந்தன. ‘சிறந்த குருபக்தி’ ‘சுவாமி இருக்கிறார். ‘மாம்பழப்பாட்டு’ போன்ற கட்டுரைகள் நகைச்சுவைத் தோன்ற உ.வே.சா எழுதியவை. உ.வே.சா நம் வாழ்வில் கண்டு பழகியவர்கள் இசையறிஞர்கள், இலக்கிய அறிஞர்கள் பதிப்பாசிரியர்கள், புலவர்கள் சமயக் காவலர்கள் என பலரோடும் பழகிய பொழுது நடந்த நிகழ்ச்சிகளை, தான் கேட்டவற்றை அவையாவும் சிந்திக்கத்தூண்டும் வகையிலும் கட்டுரைகளாகக் படைத்தார். சில செய்திகளைக் கதை போலவும் படைத்துள்ளார்.1940ல் ‘என் சரித்திரம்’ என்ற நூலை எழுதத் தொடங்கினார். இந்நூலில் தமிழ்வளர்ச்சி, தமிழ்நாட்டின் வரலாறு, அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ்புலவர்கள், புரவலர்கள், ஆதினத்தலைவர்கள் ஆகியோரின் வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளார்.

பெரும்பாலான பதிப்புகள் தமிழ் அறிஞர்களின் இலக்கிய ஆர்வத்தினைத் தூண்டக்காரணமாக அமைந்தன. உதாரணமாக ‘குறிஞ்சிப்பாட்டு’ பதிப்பிக்கும் பொழுது, 99வகையான மலர்களின் பெயர்கள் இல்லை. அதனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது? ‘எத்தனை மலர்கள் உதிர்ந்து விட்டனவே, அவற்றை எங்கேயாவது தேடி எடுத்து கோர்த்துக் குறையை நிரப்புவோம் என்று சுவைப்படக் கூறுகிறார். காந்தியின் பாராட்டு 1937ல் மகாத்மா காந்தி தலைமையில் சென்னையில் இலக்கிய மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராய் இருந்தார் உ.வே.சா. அவரின் உரையைச் கேட்ட காந்தி “இந்த பெரியவரின் அடிநிழலில் இருந்த வண்ணம் நான் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆர்வ மிகுதிதான் என்னிடம் எழுகிறது” என்று கூறியுள்ளார். உ.வே.சா மறைந்த பொழுது புலவர் நத்தம் என்னும் ஊர் அவரின் நினைவாக “சாமிநாதபுரம்” எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்த தமிழறிஞர் மறைந்த பொழுது “கண்ணுஞ் சடையாமல் கையுந்தளராமல் உண்ணப் பசியெழுவ தோராமல் எண்ணியெண்ணிச் செந்தமிழ்த் தாய்க்குக் செய்த திருத்தொண்டுக்கிந் நிலத்தூண்டோ இணை” என உ.வே.சா வின் தமிழ் தொண்டைை புகழ்ந்தார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மறைந்து போக இருந்த பல தமிழ் நூல்களை மக்கள் நடுவில் தவழச்செய்த காரணத்தினால் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி “பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலமெல்லாம்

புலவோர் வாயில் துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றித் துலங்குவாயே" என்று வாழ்த்தியது போல் தமிழ் நெஞ்சங்கள் உ.வே.சா வை என்றும் வாழ்த்தும்.

உ.வே.சாவின் முதல் செய்யுள்

உ.வே.சா என்றால் அவருடைய புத்தக வடிவில் இயற்றிய நூல்களே நம் நினைவுக்கு வரும். ஆனால் உ.வே.சா பல செய்யுள்களையும் நூல்களையும் வடித்துள்ளார். தன் குடும்பம் வறுமையுற்ற சூழ்நிலையில் தந்தையின் மனபோக்கை அறிந்து அவரின் வறுமையைக்கண்டு, ஒரு பெரிய மனிதரிடம் இருந்து நெல் வேண்டுமென்று இயற்றிய செய்யுள் தான் அவரின் முதல் செய்யுள்.

கலைமகள் துதி
திருலோகமாலை
ஆனந்த வல்லியம்மை
பஞ்சரத்தினம்

முதலியவை அவர் இயற்றிய வேறு நூல்களாகும்.

ஓலைச்சுவடிகளும் உ.வே.சாவும்

தமிழின் அருமை உணர்ந்த சான்றோர் பலர் அழிந்து வரும் நிலையில் இருந்த தமிழின் பழந்தமிழ் நூல்களை ஓலைச்சுவடியில் இருந்து பிரதி எடுத்த நிலையிலும் நூலைப் புத்தக வடிவில் மாற்றிய நேரத்திலும் உ.வே.சாவும் அதனையே தமிழன்னைக்கு செய்யும் மகனின் செயல்களாகச் செய்தார்.

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்"

(குறள்-70)

என்ற குறளின் போக்கில் தன் தமிழ்த்தாய்க்கு அணிகலன் பூட்டிய பெருமையாளன் உ.வே.சா தஞ்சையில் கற்ற கல்வியின் காரணமோ அல்லது தமிழன்னையின் தவப்புதல்வன் அவனோ என்று சிந்தையைத் தட்டி எழுப்புகின்றது உ.வே.சாவின் செயல். ராஜ ராஜ சோழன் பன்னிரு திருமுறையில்இடம்பெற்றுள்ள பாடல்களை மீட்டெடுத்ததைப் போல் மீட்டெடுத்துள்ளார் உ.வே.சா.

உ.வே.சா வின் முதல் பதிப்பக நூல்

சங்கஇலக்கியம், சிற்றிலக்கியம் என்று ஐயரவர்கள் பதிப்பிக்காத துறைஇல்லை எனலாம். வேணுவனலிங்க லாசச்சிறப்பு என்கின்ற நூலில் 86 பாடல்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் மீதமிருக்கும் 8பாடல்களை எழுதி முடித்தார். ஆனால் இதுவே அவரின் முதல் பதிப்பக நூலாகும்.

அச்சுப்பணியில் உ.வே.சா

தமது அச்சுப்பணியினால் உலகிற்கு தமிழ்மொழியின் இனிமையையும் பழமையையும், உலகிற்கு படம்பிடித்துக் காட்டியவர். உ.வே.சா அவர்கள் 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்தவர் உ.வே.சா இவருடைய அயராது உழைப்பால் 90க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வடிவம்கண்டன.

சமண இலக்கியங்களோடு பல ஓலைச்சுவடிகளையும் ஊர் ஊராக தேடிச் சென்று கைப்பற்றினார். அதுமட்டுமன்றி அவற்றைப் பகுத்து, சேமித்து, பாடவேறுபாடுகளை எல்லாம் களைந்து, தொகுத்து அவற்றை அச்சில் ஏற்றி புத்தகவடிவில் 13ம் கைகளிலே தவழச் செய்தார். இவர் தேடி தேடிச் சென்று ஓலைச்சுவடிகளை மீட்டெடுத்ததால் இன்று தமிழன்னை இன்புற்று வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

இவர் தோன்றியிருக்கா விட்டால்

- ❖ சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் நம் கண்ணால் கண்டிருக்க முடியுமோ?
- ❖ அகநானூற்றிற்கும் புறநானூற்றிற்கும் வேறுபாடு கண்டிருப்போமா?
- ❖ மணிமேகலை என்னும் மகளை மறந்தே போயிருப்போம்.

தன் சொத்துகளை விற்று தமிழைக் காத்த தமிழ்மகன் நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து காத்தார் அவர் மீண்டும் வருவாரா?

அதனால் தான் சென்னைத் தொலைக்காட்சி (தூர்தர்சன்) தமிழ்த் தாத்தா என்னும் தலைப்பில் அவரது வாழ்க்கை வரலாற்றை மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டியது.

முடிவுரை

- ❖ 84 ஆண்டில் தன் வாழ்க்கையில் தமிழ் என்ற ஒரு சொல்லை தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து 1942ல் இயற்கை மரணம் எய்தினார்.
- ❖ மார்ச் 21, 1932ல் உ.வே.சா மதிப்பு முனைவர் என்ற பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றார்.
- ❖ இது தவிர மகா கோபாத்தியாய என்ற பட்டமும், தக்கின கலாநிதி எனும் பட்டத்தையும் பெற்றார்.
- ❖ பிப்ரவரி 18, 2006ல் இந்திய அரசு அவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டது.
- ❖ உத்தமானபுரத்தில் இவர் பிறந்த இல்லத்தை தமிழ்நாடு அரசு நினைவு இல்லமாக மாற்றியது.
- ❖ 1942ல் சென்னை பெசனட் நகரில் உ.வே.சா நூல் நிலையம் அமைக்கப்பெற்று நன்முறையில் இயங்கிக் கொண்டும் உள்ளது.
- ❖ இப்பெரும் தமிழன்னையின் தவப்புதல்வனை போற்றுவோம்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

37. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யரின் ஆசிரியர் நேசம்

டாக்டர் சு. இராதாகிருஷ்ணன்,
எம்.எஸ்.ஸி., எம்.ஃபில்., பி.எட்., பி.எச்டி.,
துறைத்தலைவர் (இயற்பியல் துறை),
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095

முன்னுரை

இலக்கிய, இலக்கண வரம்புகளுடைய தமிழ் நூல்களை ஏட்டிலிருந்து பிழைப்படாமல் ஆய்ந்து புத்தகப் பதிப்பாக வெளியிட்டவரும், மாநிலக் கல்லூரி தமிழ் ஆசிரியர், மீனாட்சி தமிழ்க்கல்லூரி தலைவர், எல்லாவற்றையும் கூர்ந்து உணரும் இயல்புடைய தமிழ்த்தாத்தா, தமிழ்க்கடல், மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் பாசமிகு நேசமான மாணவன் உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் ஆசிரியர் நேசத்தை வெளிப்படுத்தும் ஒரு சில நிகழ்வுகளை இங்கு காண்போமா!

ஆசிரியர் பக்தி

திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டது தனது பிறவிப்பயன் என்றுணர்ந்த தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் தனது ஆசான் பிள்ளை அவர்கள் பெரிய புராணத்தைக் கற்பிக்கும்போது ஆசானின் அந்தரங்க பக்தியையும், அகத்தே சிவநேச விதை விதைப்பதையும் நேரில் கண்டதோடு, தனது தெய்வபக்தியைத் துரிதப்படுத்திய ஆசிரியர் மீதான நேசத்தைக் கண்டு நெகிழ்ந்தவர் நமது தமிழ்க்கடல் உ.வே.சா அவர்கள் ஆவார்.

தனது ஆசிரியர் நெய்யில்லாமல் உணவருந்துவதைக் கண்ணுற்று வருந்தியதோடு, ஆசிரியர் தலையில் தேய்ப்பதற்கு எண்ணெய் இல்லை என்பதையறிந்து, தன்னுடைய பணத்தைக் கொண்டு எண்ணெய் வாங்கி ஆசிரியருக்குத் தெரியாமல் வழங்கிய உண்மை மாணவனான உ.வே.சா.வின் ஆசிரிய நேசம் பாராட்டத்தக்கதன்றோ!

ஆசிரியரின் புலமை

தம்பிரான்கள் மூலமாக சுப்பிரமணியதேசிகர் அவர்கள் தனது சந்தேககங்களைப் பிள்ளை அவர்களிடம் தீர்த்து கொள்வதையறிந்து தனது ஆசிரியரின் புலமையை வியந்தவர்.

குருபூஜை தினத்தில் கொலுபூஜை நடந்த பிறகு தேசிகரின் சன்மானம் வழங்கும் பண்பினை அறிந்தவர்கள், தனது ஆசிரியரிடம் செய்யுள் இயற்றித்தருமாறு கேட்க அதன் மூலம் தேசிகரிடம் சன்மானம் (வெகுமதி, பரிசுப் பொருட்கள்) பெற்றதையும், அதன் காரணமாகத் தனது ஆசிரியர் இரவு முழுவதும் பலருக்குப் பாடல் வழங்கியதையும் அதனால் பலர் சன்மானம் பெற்றதையும் கண்டுணர்ந்து தனது ஆசிரியரின் புலமையைக்கண்டு பெருமையுற்ற உ.வே.சா அவர்களின் ஆசிரியர் நேசம் நெஞ்சைக் கிளர்தலன்றோ.

ஆசிரியரின் கற்பித்தல் முறை

திருவாவடுதுறையில் தம்பிரான்கள் தனது ஆசிரியரான பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்பதற்குத் தயாராகியிருந்த போது, தான் திருவானைக்காப் புராணத்திலுள்ள விநாயகர் காப்பு செய்யுளையும், பின் சீகாளத்தி புராணத்தின் காப்பு செய்யுளையும் படித்தபோது ஆசிரியர் அதற்கு உரை கூறியதையும், மெய்கண்ட சாஸ்திரங்களிலிருந்து மேற்கோள் காட்டி அதனை அருமையாக விளக்கியதையும் கண்ணுற்ற உ.வே.சா அவர்கள் தனக்குப் புதிய செய்திகளையும், ஆதினத்து முறைகளையும் அறிந்ததில் மகிழ்ச்சியடைந்த உ.வே.சா அவர்களின் ஆசிரிய நேசம் உவகையன்றோ!

தம்பிரான்களுக்கு தண்டியலங்காரத்தின் ஐயங்களைப் பிள்ளை அவர்கள் விளக்கும் போது அதில்வரும் அஷ்டநாகபந்த செய்யுளை நாகங்களை அடக்கி காட்டும் வண்ணம் அவர் விவரித்தபோது, அதனால் தனக்கு ஏற்பட்ட தெளிவினையும், ஆசிரியரின் உரையால் தூண்டப்பட்டு காகிதமொன்றில் நாகங்கள் இணைந்த சித்திரத்தை வரைந்து ஆசிரியரிடம் காண்பித்து அதன் காரணமாக தனது ஆசிரியர் உவகை கொண்டதை கண்ணுற்ற உ.வே.சாவின் ஆசிரிய நேசம் போற்றுதலன்றோ.

ஆசிரியரின் தாயன்பு

மாயூரத்தில் (உ.வே.சா) ஆகிய நான் சாப்பிட்டு வந்த விடுதிக்கு பணம் கொடுக்க இயலாமையால் உணவு அருந்தப் போவதை தவிர்த்து நானே சமையல் செய்வதை அறிந்த தனது ஆசான் தன்னிடம் ரூ.3 வழங்கி விடுதியில் சாப்பிட்டு வருமாறு வினவிய பண்பும்.

புரட்டாசி மாதம் தீபாவளிப் பண்டிகையின்போது உடுத்துவதற்காக தனது ஆசிரியர் அளித்த அங்கவஸ்திரங்களை (உடைகளை) தரித்துக் கொண்டு மிக மகிழ்ச்சியடைய காரணமான ஆசிரியரின் அன்பை எண்ணி வியந்ததும், மடத்தில் பந்தி நடைபெறும்போது வெள்ளை வேஷ்டிக்காரர்கள் வரிசையில் முதலிடம் வகிக்கும் பிள்ளை அவர்கள் கவலை முகத்துடன் இருக்கையிலிருந்து எழுந்ததைக் கண்ட தேசிகர் அவர்கள் அதற்கான காரணத்தை ஆராய்ந்தபோது, பிள்ளை அவர்கள் தனது மாணவன் உ.வே.சாவுக்கு உணவு ஏற்பாடு செய்யாமல் தான் மட்டும் உணவு புசிக்க வந்ததைக் கூறியபோது, அதனால் தனது ஆசிரியருக்கு ஏற்பட்ட ஏக்கத்தைக்கண்டு புழகாங்கிதமடைந்த உ.வே.சாவின் ஆசிரிய நேசம் தாயன்பை போன்றதன்றோ.

ஆசிரியரின் அறிவுரையும், மனநிறைவும்

திருமலைராயனில் ஆறுமுகத்தாபிள்ளையிடமிருந்து திருநாகைக் காரோணப் புராணம் என்ற நூலைப் பெற்றபோது அதனை வேகமாக படிக்காமல் ஒவ்வொரு செய்யுளையும் சுருங்கச் சொல்லுமாறு கூறிய தனது ஆசிரியரின் அறிவுரையும் திருநாகைக்காரோணப் புராணத்தின் ஒவ்வொரு செய்யுளையும் ஒவ்வொரு நேரத்தில் மாற்றி மாற்றி படித்தபோது பிள்ளை அவர்களை நோக்கி தேசிகர் அவர்கள் “உங்கள் மாணவர் ராகமாலிகையில் செய்யுளை படிப்பது

திருப்திகரமாக இருக்கிறது என்பதை கேட்ட ஆசிரியரின் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் கண்ணுற்ற உ.வே.சா அவர்களின் ஆசிரியர் நேசத்தை இயம்ப இயலுமோ!

ஆசிரியரின் தன்னலமற்ற சேவை

பல வித்துவான்களிடம் பழக்கம், உரையாடல் அமரவசதிகள் அனைத்தும் தனது மாணவர்கள் பெறுவதற்காகவே திருவாவடுதுறை ஆஸ்ரமத்திற்கு அடிக்கடி பயணம் மேற்கொள்ளும் தனது ஆசிரியரின் தன்னலமற்ற சேவையை உயர்வாக எண்ணிய மாணவன் உ.வே.சாவின் ஆசிரிய நேசம் உயர்ந்ததன்றோ.

தேசிகரின் நல்லாசி (பாராட்டு)

பெரிய வித்துவான்கள் சபையில் சுப்பிரமணிய தேசிகர் கட்டளைப்படி அந்தாதிப் பாடலையும், அதன் பொருளையும் தனது ஆசிரியரான பிள்ளை அவர்களின் குறிப்பறிந்து சபையில் விளக்கியதோடு, அந்தாதியிலிருந்து சில பாடல்களைக் கூறி அதற்கான பொருளும் எடுத்துணர்ந்து தேசியரிடம் தான் நல்லாசி பெற உதவிய தனது ஆசிரியரின் உயர்ந்த உள்ளத்தைக் கண்ணுற்ற உ.வே.சா. அவர்களின் ஆசிரிய நேசம் அளப்பரியதன்றோ.

தேசிகர் அவர்கள் கம்பரந்தாதி, பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் போன்ற நூல்களை வழங்கியதோடு மேலும் பல நூல்களைத் தருகிறேன் என்று தனது ஆசிரியரிடம் கூறியபோது ஆசிரியரின் முகமலர்ச்சியைக் கண்டு பெருமிதம் கொண்ட மாணவன் உ.வே.சாவின் ஆசிரியர் நேசம் ஞாலத்தின் பெரிதன்றோ.

நல்லாசான் அமைதல்

திருவிடைமருதூரில் கட்டளை தம்பிரான் அவர்கள் பிள்ளை அவர்களிடம் தான் கற்றுவருவதையும், அன்னாரின் மாணவன் உ.வே.சா என்று அறிந்தவுடன் தனக்கு உபசாரத்துடன் (மிகுந்த வரவேற்பு), பிரசாதம் வழங்க உத்தரவிட்டபோதும், தியாகாராசச் செட்டியார் தன்னிடம் கூறிய வார்த்தையான "பிள்ளை அவர்களிடமிருந்து போய்விடாதீர்" என்ற கூற்றும் தனக்கு தன் ஆசிரியராக பிள்ளை அவர்கள் அமைந்தது பெரும்பாக்கியம் என்று எண்ணும் உ.வே.சாவின் ஆசிரிய நேசம் கடல் ஆழத்தைவிட அதிகமன்றோ".

பட்டீஸ்வரம்

சரஸ்வதி பூஜையின்போது தனது சிறிய தந்தையார் அவர் இல்லத்தில் சில தினங்கள் இருந்துவிட்டு செல் என்றபோது, விஜயதசமியன்று தனது ஆசிரியரான பிள்ளை அவர்களிடம் ஏதாவது புத்தகம் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு தவறக் கூடாது என்று எண்ணி பட்டீசுவரம் சென்றதும்,

பட்டீஸ்வரத்திற்கு திரும்பும்போது பட்டு சாலியர்கள் பட்டுநூலை சுத்தம் செய்து கொண்டிருப்பதைக் கண்ணுற்ற ஆறுமுகத்தா பிள்ளை தன்னைப் பார்த்து "இந்த நூலுக்கும், நீருக்கும் சிலேடையாக ஒரு பெண்பாவை" 10 நிமிடத்தில் பாடுமாறு கூறியபோது தனது ஆசிரியர் தனக்கு சிலேடை அமையும்படி இரண்டு அடிகளைக் கூறி மீதியை என்னைப் பாடச் சொல்லி என்னை வியப்புக்கு ஆழ்த்தியும், நான் செய்யுளை முழுவதும் சொன்னதைக்கேட்டு ஆறுமுகம் பிள்ளை அவர்கள் குற்றம் கூறாமல் தவிர்ப்பதற்காக ஆசிரியர் அவர்கள் "நன்றாயிருக்கிறது, அதிலும் அன்பில் தாய் நேர்ந்த ஆறுமுகத்தாளாளா" என்ற பகுதி மிகவும் பொருத்தம் என்று கூறி ஆறுமுகத்தா பிள்ளையின் முகத்தில் புன்னகை மலரச் செய்த நிகழ்வினை கண்ட உ.வே.சாவின் ஆசிரிய நேசம் அன்னாரின் அன்பிற்கு அடைக்கலமன்றோ!

முடிவுரை

எண்பொருள வாகச் செலச் சொல்லித்தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பதறிவு - அதி. 43-குறள் 424

(கேட்பவர் மனத்தில் பதினாறு எளிமையாக கூறியவற்றிலுள்ள நுட்பத்தை அறிவதே) என்ற குறளுக்கேற்ப பிள்ளை அவர்களின் கருத்துக்களைத் தன் மனதில் கொண்டு அதன் மெய்ப்பொருளறிந்து அதனை யாவரும் பயனுறு வகையில் தமது பணியினால் தமிழுக்கு அளப்பரிய தொண்டு செய்த உ.வே.சா என்ற தமிழ்த்தாத்தாவுக்கும், அன்னாரின் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நேசத்திற்கும் எல்லையுண்டோ! இது அறுசுவைக்கும் அப்பாலன்றோ. வானவில்லின் ஏழுநிறங்களையும் உள்ளடக்கிய வான் புகழ் கொண்டதன்றோ.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

38. உ.வே.சா.வின் பதவிகளும், பட்டங்களும்

டாக்டர் சி.பா. செந்தில்குமார், எம்.காம்., பி.எச்டி.,
வணிகவியல் துறைத்தலைவர்,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

முன்னுரை

அறுபதாண்டுக் காலத்துக்கும்மேல் தமிழ்க் கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் தமிழுக்காகவே வாழ்ந்தார். உ.வே.சா. என்ற பெயர் தமிழ்ப் பதிப்புலக வரலாற்றில் சிறப்பிடம் பிடித்த பெயர். பழந்தமிழ் நூல் பதிப்பித்தலில் இவர் காட்டிய சிறப்பு அக்கறையாலேதான் சங்கத்தமிழ் நூல்கள் பலரையும் சென்றடைந்தன. இந்த நூல்களின் வாயிலாகவே இன்று நாம் பழங்காலத்தில் தமிழரின் வாழ்வினையும், வளங்களையும் அறிந்து கொள்கிறோம். சங்கத் தமிழர்களை தற்காலத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் உ.வே.சா. எனலாம். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளை அச்சுப்பதிப்பில் தமிழர் கையில் தவழ விட்டவர் என்றால் அது மிகையன்று. இவர் தமிழ் இலக்கியப் பதிப்புத்துறையின் முன்னோடிகளில் ஒருவர். தமிழின் செம்மொழித் தரத்திற்கு உ.வே.சா. பதிப்பித்த சங்கத்தமிழ் நூல்களே தக்க சான்றுகள் வழங்கின. தமிழர் பெருமைகளை தமிழருக்கே உணர்த்தின. இத்தகு மாமனிதராக விளங்கியவர் தம் வாழ்நாளில் வகித்த பதவிகளையும், பெற்ற பட்டங்களையும், பாராட்டுகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

உ.வே.சா. வகித்த பதவிகள்

உ.வே.சா. மதிப்புமிக்க பதவிகளையும் இவர் அலங்கரித்துள்ளார். ராஜா அண்ணாமலை செட்டியார் சிதம்பரத்தில் தாம் தொடங்கிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் இன்றைய (அண்ணாமலை பல்கலைக்கழகம்) முதல்வராகப் பொறுப்பேற்க உ.வே.சா.வை அணுகினார். சென்னை மாநிலக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றி பணிவோய்வு பெற்றிருந்த உ.வே.சா. அவர்கள் அண்ணாமலை செட்டியாரின் அழைப்பினை ஏற்று மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வராக 1924-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொறுப்பேற்றார். குடந்தை கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி, சிதம்பர அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழாசிரியராக தமிழ்ப் பயிற்றிவித்தார். சென்னை, அண்ணாமலை நகர், மைசூர், ஆந்திரா, காசி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைத் தமிழ்க் குழுக்களில் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் தேர்வுக் குழுத் தலைவர் பதவியிலும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

உ.வே.சா. பெற்ற பட்டங்கள்

உ.வே.சாமிநாத ஐயர் பெற்ற பட்டங்கள் பல. அந்நாளில் நாட்டை ஆண்ட ஆங்கிலேய அரசு நாட்டில் சிறப்பான பணி புரிந்தவர்களுக்குப் பாராட்டும் முகமாகப் பட்டங்கள் வழங்கும்

பொழுது, உ.வே.சாவிற்கு 1906ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று ‘‘மகாமகோபாத்தியாய’’ பட்டம் வழங்கி அவர் பணியினைப் சிறப்பித்தது. உ.வே.சாவிற்கு மகாமகோபாத்தியாயப் பட்டம் பெறும் தகுதியினை அரசுக்கு சுட்டிக்காட்டி யார் அன்று உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த மணி ஐயரே அப்பணியினை மேற்கொண்டார். மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் இவரே (உ.வே.சா.) என்பதும் குறிப்பிடத்தக்கது.

காங்கிரசின் தலைவராக விளங்கிய ‘‘பண்டிதர் மதன் மோகன் மாளவியா’’ என்பவர் சனாதன தர்மத்தையும், இந்துப் பண்பாட்டையும் பரப்புவதற்காகக் காசியில் ‘‘பாரத தர்ம மகா மண்டலம்’’ என்ற அமைப்பினை தொடங்கியது. அதனைச் செயல்படுத்தும் வகையில் இந்து சனாதன தர்மத்தையும், இந்து பண்பாட்டையும் உயர்த்தப் பணியாற்றுபவர்களை பாராட்டி மதிப்புச் செய்து வந்தது. அவ்வேளையில் உ.வே.சாவினை மதிப்புச் செய்வதற்காக அவரின் மாணவராக இருந்த வழக்கறிஞர் திரு.டி.வி.சுவாமிநாத சாஸ்திரியாரைத் தொடர்பு கொண்டு ‘‘திராவிட வித்யாபூஷணம்’’ என்ற பட்டத்தை 1917ஆம் ஆண்டு சனவரியில் அவரிடம் அளித்தது. சுவாமிநாத சாஸ்திரியே அந்தப் பட்டத்தினை உ.வே.சா-விடம் கொண்டு வந்து அளித்தார். அதனைக் காசி விசுவநாதருடைய திருவருள் என்று கருதியே உ.வே.சா. மனமுவந்து ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரைச் தமிழ்ச் சங்கத்தில் 1925-ஆம் ஆண்டு நடைப்பெற்ற விழாவில் உ.வே.சா.வின் தமிழ் பணியினைப் பாராட்டி மதிப்பு செய்த காஞ்சி காமகோடி பீட தலைவரான சங்கராச்சாரிய சுவாமிகளின் ‘‘தாஷிணாத்யகலாநிதி’’ (தெற்கத்திய கலைச் செல்வன்) என்ற பட்டத்தை அளித்து பெருமை செய்திருக்கிறார்கள்.

தமிழுக்கும் இலக்கியத்துக்கும் உ.வே.சா. ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழகம் ஆகஸ்ட் 3, 1992 அன்று மதிப்புறு முனைவர் பட்டமாகிய ‘‘டாக்டர்’’ (இலக்கியப் பேரறிஞர்-D.Litt.) பட்டம் அளித்தது, தமிழில் முதன் முதலில் மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றவர் இவரே என்பதும் இங்கு குறிப்பிடச் செய்யத் தகுந்தது.

தமிழ்த்தாத்தா என்ற பட்டம் உத்தமதானபுரம் வே.சாமிநாத ஐயர் அவர்களுக்கு கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி கொடுத்த பட்டம் பொருத்தமாய் அமைந்திருக்கிறது. இவர் பெற்ற அனைத்து பட்டங்களுடன் இவரது முழுப் பெயரும் ‘பிரம்மஸ்ரீ மகாமகோபாத்திய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் மகாவித்வான் டாக்டர் உத்தமதானபுரம் உ.வே.சாமிநாதையவர்கள்’’ என்று குறிப்பிடப்படுவதையும் நூல்களில் காணமுடிகிறது.

உ.வே.சாவைப் பாராட்டியவர்கள்

அரசராகிய பாஸ்கர சேதுபதி 1898ல் உ.வே.சாவின் பதிப்புப் பணியை பாராட்டி தம் ஜமீனினுள்ள கிராமத்தையே வழங்க விரும்பியுள்ளார். தனக்கு வரும் கல்லூரி ஆசிரியர் பதவி

தரும் ஊதியமே போதுமானது என்று கூறி அந்தப் பெருங்கொடையை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தஞ்சை மாநகரில் 1903-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி அன்று ஏழாவது எட்வர்டு மன்னர் முடிசூட்டு நிகழ்வு தொடர்பாக நடந்த விழாவில் உ.வே.சாவின் தமிழ் தொண்டைப் பாராட்டி துணையாட்சியர் ஒரு பாராட்டுச் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்பதும் அறிய முடிகிறது. அந்நாள் நாட்டை ஆண்ட ஆங்கிலேய அரசு 1906ஆம் ஆண்டு உ.வே.சாவின் சிறப்பான பணியினைப் பாராட்டி பட்டமும், ரூ.1000 பணமுடிப்பும் வழங்கி சிறப்பு செய்துள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது அவர் பெற்ற மகாமகோபாத்தியாய பட்டம் பெற்றமைக்காக 1906ஆம் ஆண்டு அக்கல்லூரியிலேயே பாராட்டு விழா நடைபெற்றது. அப்பாராட்டு விழாவில் பாரதியாரும் கலந்து கொண்டு உ.வே.சாவைப் பாராட்டி வாழ்த்துப்பாடலை அங்கேயே எழுதி பாடல் வாயிலாக பாராட்டியுள்ளார்.

“செம்பரிதி ஒளிபெற்றான் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்தது ஆங்கண்
உம்பரெல்லாம் இறவாமை பெற்றனரென்று
எவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் சீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கு
என்கொல் பேருவகை படைக்கின்றீரே?”

-சுப்பிரமணிய பாரதியார்.

1906ல் சென்னை வந்த வேல்ஸ் இளவரசரும் உ.வே.சாவை பாராட்டும் விதமாக தங்கத்தோடா அணிவித்து மதிப்பு செய்திருக்கிறார்.

1919ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி மகாகவி இரவிந்திரநாத் தாகூர் சென்னைக்கு வந்தார். உ.வே.சாவின் பதிப்புப் பணியை அறிந்து அவரது இல்லத்திற்கே சென்று பதிப்பித்த நூல்களைப் பார்வையிட்டுப் பாராட்டியுள்ளார்.

(வங்காளி மூலம்)

“ஆதிஜீகேர் ஆந்தாரே தாலபத்ரே ச்சிலோ
த்ராஷட தேசர் புராதன கீர்த்தி
ஸேஇ மஹத்நிதி, ஹே தேசிகோத்தம
தோமார் த்வாரா நாசி பாஹிரஹ்யில்?”

(தமிழாக்கம்)

ஆதி (முந்தைய) யுகத்து இருளில் பனையோலைச் சுவடிகளில்
இருந்தது திராவிட நாட்டின் புராதன (பழைய)
கீர்த்தி அந்தப் பெருநிதி பேராசானே
உன்னால் அன்றோ வெளிப்பட்டது?

-இரவீந்திரநாத் தாகூர்.

சுப்பிரமணிய பாரதியார், இரவீந்திரநாத் தாகூர் ஆகிய இரு மகாகவிகளும் உ.வே.சா. அவர்களை அகத்திய முனிவருக்கு ஒப்பானவர் என்று பாராட்டியமை குறிப்பாக அறிய முடிகிறது.

முடிவுரை

“தனிமனிதராய் இருந்து ஓர் இயக்கம் செய்ய வேண்டிய பணியினை நிறைவாக ஆற்றியவர் உ.வே.சா. என்றும் உ.வே.சா. மட்டும் தொடர்ந்து முயற்சி செய்யாமல் இருந்திருப்பாரேயானால் சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கக்கூடும்” என்று குறிப்பிட்டுள்ளார். கலைஞர் கருணாநிதி. மேலும் “தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை” என்பதற்கு ஏற்ப இம்மாபெரும் தொண்டு செய்த தமிழ்த் தாத்தனுக்கும் என்றும் இறப்பில்லை என்பதே உண்மை பொருளாகும்.



~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

39. குறள் வழியில் உ.வே.சா

ம. உமாமகேஸ்வரி, எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., எம்.ஃபில், பிஎச்.டி.,
தமிழ்த்துறைத்தலைவர்,
மகேந்திரா உலகப்பள்ளி, செங்கல்பட்டு.

முன்னுரை

தோன்றின் புகழோடு தோன்றுக அ∴திலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்ற குறளுக்கேற்ப இவ்வுலகில் தோன்றி, புகழ் பெற்றோர் பலர். அதுபோல, இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய உலகில் தமிழ் மொழிக்கு புது ஒளியைக் கொடுத்து புகழ் பெற்றவர்களில் ஒருவர்தான் நாம் அனைவராலும் தமிழ்த்தாத்தா என அழைக்கப்படும் உவே.சாமிநாதன் அவர்கள். பல காலமாக மங்கி மறைந்து கிடந்த பழைய தமிழ்ப் புதையல்களைத் தேடிக் கண்டெடுத்து, மீட்டு தமிழ் உலகிற்கு எடுத்துக் கொணர்ந்து, தமிழ்த் தாயைப் புத்தம் புது அணிகளால் அழகு படுத்திய பெருமை இவரையேச் சாரும்.

உவே.சாவின் குருபக்தி

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்குத் தக.

என்ற குறளுக்கேற்ப தாம் கற்றத் தமிழ் இலக்கியப் பண்புகளையும், தமது ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் புகழையும் தம் வாழ்நாளில் நிலைநாட்டச் செய்தார். சங்க இலக்கியங்களைப் பற்றி இன்று நம்மால் பேச முடிவதற்கு உவே.சா பெரும் காரணமாவார். சங்க கால மக்களின் வாழக்கை, பண்பாடு போன்றவற்றைதான் அறிந்ததோடு மட்டுமல்லாது, வருங்கால மக்களும் அறியும் பொருட்டு நமக்கு துல்லியமாக எடுத்தயம்பிய பெருமை இவருக்கு உண்டு. தமிழ் இலக்கியங்கள் என்றாலே நற்பண்புகளையும் அறச்செயல்களையும் போதிக்கும் நூல் என்பதை நாம் அறியும் வண்ணம் உ.வே.சா. முயற்சிகள் மற்றும் மனம் தளரா சேவை நம் கண்முன் தெரிகிறது.

உ.வே.சா.வின் தமிழ் ஆர்வம்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றவை யவை

என்றக் குறளுக்கேற்ப தீராத வறுமையில் அவர் குடும்பம் வாழ்ந்த போதும், பிழைப்பிற்காக ஊர் ஊராக அவர்கள் சென்ற போதும், ஒரு ஊரில் நிலையாகத் தங்குவதற்கு வசதியில்லாமல் அலைந்த போதும், தமிழைக் கற்பதே பெருஞ்செல்வமாகக் கருதி விடாமுயற்சியுடன் தமிழ்க் கற்றார். சிறு வயதில், யாராவது உ.வே.சாவிடம் ஆங்கிலம் இவ்வுலக வாழ்விற்கும் வடமொழி அவ்வுலக வாழ்விற்கு பயன்படும் என அறிவுறுத்தினால், என் அன்னைத் தமிழானது இவ்வுலகம்

மற்றும் அவ்வுலக வாழ்வு இரண்டிற்கும் இன்றியமையாதது என்று கூறுவாறாம். அவ்வாறு தன்னுடைய தமிழ் கற்கும் ஆர்வத்தை ஒரு போதும் மறவாதவர் உ.வே.சா அவர்கள்.

உ.வே.சாவின் கற்கும் ஆர்வம்

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

என்றக் குறளுக்கேற்ப சிறுவயதில் இருந்தே தமிழாசிரியர் எங்கு கிடைப்பாரோ என்று தேடித் தேடி, அதன் தொடர்ச்சியாக குடும்பம் முழுவதும் தமிழாசிரியர் இருக்கும் இடத்திற்கு குடி பெயர்ந்ததாம். படித்த புலவர்கள் யாரைப் பார்த்தாலும் இவரிடம் தமிழ்க் கற்றுக் கொள்ள முடியுமா என்றுதான் தம் உள்ளம் ஏங்கியதாக இவர் குறிப்பிட்டுள்ளார். “இன்று நான் சந்திக்கப் போகும் இவர்கள் பெரிய வித்துவான்களாக இருக்க வேண்டும். இன்று பல விசயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.“ என்று தினமும் ஆர்வமாக நாட்களை எதிர்பார்த்து இருந்ததாக உ.வே.சா. பதிவு செய்கிறார்.

உ.வே.சாவின் கற்றல்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

என்ற குறளுக்கேற்ப உ.வே.சா. தமது இளம் வயதில் தமது பாட்டானாரிடமும் ஓரிரண்டு திண்ணைப் பள்ளிகளிலும் கல்வி பயின்றுள்ளார். திண்ணைப் பள்ளிக் கூடங்களில் அரிச்சுவடி, எண்சுவடி முதியவற்றைக் கற்றுத் தேர்ந்துள்ளார். ஏட்டில் எழுதவும் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் காகிதம் இல்லை. எனவே மாணவர்கள் மணலில் எழுதிப் பழக வேண்டும். பின் எழுத்தாணியால் ஓலைச் சுவடியில் எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் அன்றையப் பள்ளிகள் எவ்வாறு செயல்பட்டன என்பதை நம்மால் தெளிவாக உணர முடிகிறது. குடும்பம் நடத்துவதற்கே சிரமப்பட்ட நிலையிலும் கற்பதில் தம் விடாமுயற்சியைக் கடைபிடித்தவர் நமது தமிழ்த்தாத்தா உ.வே.சா.

உ.வே.சாவின் பரந்த எண்ணம்

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

என்றக் குறளுக்கேற்ப தான் கற்ற தமிழ் நூல்களை, இந்த உலகில் உள்ள அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக உ.வே.சா பட்ட சிரமங்கள் ஏராளம். உவே.சாவின் தமிழ் ஆர்வத்தையும் தமிழ் புலமையையும் அறிந்த பின்னும், “இதெல்லாம் படித்து என்ன பயன்?“ என்று திருவாடுதுறை இராமசாமி முதலியார் கேட்டதை பெரிய அதிர்ச்சியுடன் பதிவு செய்கிறார் உ.வே.சா. முதலியார் அவர்களின் இந்தக் கேள்வி அவர் மனதில் பெரிய தாக்கத்தை

ஏற்படுத்தியது. தமிழ் இலக்கியங்களின் மேன்மையை தான் அறிந்தது போல் இந்த உலகமும் அறிய வேண்டும் என்பதற்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் செலவு செய்ய முடிவு செய்தார் உ.வே.சா.

உ.வே.சாவின் பணிவு

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

என்றக் குறளுக்கேற்ப தமிழ் நூல்கள் பலவற்றைப் படித்த திருப்தியில் உ.வே.சா இருந்த போது, சீவக சிந்தாமணி நூல் முழுமையும் படிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அப்போது, சிந்தாமணியை முழுவதுமாக படிக்கத் தொடங்கிய போது, அது சீவகனைப் பற்றிய காவியம் என்பது மட்டும் எனக்கு தெரிந்ததேயன்றி இன்ன வகையில் அது சிறப்புடையது என்பவற்றை நான் அறியேன். தமிழ் நூற்பரப்பை ஒருவாறு அறிந்துவிட்டதாக ஒரு நினைப்பு, அதன் முன் எனக்கு இருந்தது. நான் கண்ட நூற்பரப்பிற்கு புரம்பேயிருந்த சிந்தாமணி எனக்கு முதலில் பணிவை அறிவுறுத்தியது" என்று பதிவு செய்கிறார். அதன் பின்பு, உ.வே.சா. சிந்தாமணியை தீவிரமாக ஆராய்ச்சி செய்து, தான் அறிந்த சிந்தாமணியின் மேன்மையை உலக மக்களும் அறியும் வண்ணம் எடுத்தியம்பினார். இந்த நிகழ்வே, அவர் தமிழ் நூல்களைப் பதிப்பதற்கு ஆதாரமாகத திகழ்ந்தது எனலாம்.

உ.வே.சா.வின் அருமை செயல்

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

என்ற குறளுக்கேற்ப உ.வே.சா. உழைக்காமல் இருந்திருந்தால் தமிழ் உலகத்திற்கு சிலப்பதிகாரத்தைப் பற்றித் தெரியாமலேயே போயிருக்கும். அகநானூற்றிற்கும் புறநானூற்றிற்கும் வேறுபாடுகள் தெரிந்திருக்காது. மணிமேகலை அறிமுகம் இல்லாமல் போயிருக்கும். இவர் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அப்படியே அவைகளை பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து மறைந்து போன அடிகளையும் சொற்களையும் கண்டுபிடித்து முழுப்பொருள் விளங்கும்படி செய்தார். ஆசிரியர் குறிப்பு, நூல் குறிப்புப் போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கினார். இன்று இருக்கும் தமிழ் மொழியின் உயர்வு நிலைக்கு அவருடைய உழைப்பே மூலக்காரணமானது என்றால் அது மிகையாகாது.

உ.வே.சாவின் தளரா மனம்

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

என்றக் குறளுக்கேற்ப நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றி பதிப்பித்துத் தந்தவர் என்ற பெருமை பெற்ற உ.வே.சா. இதைச் செய்து முடிக்க பட்ட சிரமங்களோ ஏராளம். இந்த அரிய சேவையை அவர் செய்யும் போது அவருக்கு ஏற்பட்ட இன்னல்கள் பல. ஒரு கட்டத்தில் பதிப்பிக்கும் சேவையில் பொருளாதார தட்டுப்பாடு ஏற்பட்ட

போது தன்னுடைய சொத்துகளை விற்று பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். சிறுவயதில் இருந்தே தமிழ் கற்பதிலும் பல இன்னல்களை சந்தித்தவர் உ.வே.சா. வறுமை, இடம்பெயர்வு, ஒத்துழைப்பு இல்லாமை என்ற பல இன்னல்களையும் தாண்டி, மனம் தளராமல் பதிப்பித்தல் சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டவர் அவர்.

உ.வே.சாவின் நெடும்பயணம்

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

என்றக் குறளுக்கேற்ப அக்காலத்தில் பிரதிகளை அச்சில் பதிவு செய்வதற்கு முன்பு ஊர் ஊராகத் தேடி கிடைக்கும் நூல்களையெல்லாம் திரட்டி, அவைகள் அனைத்தையும் படித்து, ஆராய்ந்து, அவைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை கண்டறிந்து சரிசெய்து, சரியானதை கண்டறிந்து பதிப்பிக்க வேண்டும். சிதைந்த பகுதிகளின் முழுவடிவத்தையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லின் பொருள் முழுவதும் விளங்கும் வகையில் பதிப்பிக்க வேண்டும். இவ்வாறு பிரதிகளைத் தேடி தமிழகம் முழுவதும் அலைந்துள்ளார். அக்காலத்தில் இன்று உள்ளது போல எந்த வாகனமோ போக்குவரத்து வசதியோ இல்லை. ஆனாலும், நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்துள்ளார். உண்பதற்கும் தங்குதவற்கும் வசதியில்லாமல் சிரமப்பட்ட போதும், தம் கருமமே கண்ணாக தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியல் ஈடுபட்டுள்ளார். எனவேதான் இவரை, “பழந்தமிழ் இலக்கண இலக்கியச் சுவடிகளைத் தேடி “நள்ளிருளோ, கொள்ளு பகலோ, குறிக்கும் கடுமழையோ, அள்ளு பிணியோ, அவதியோ, உள்ளம் தடுக்கும் பகைகள் எது வரினும் தள்ளி அடுக்கும் தமிழ்ச்சுவடி தேடிக்கொடுக்கும் தமிழ்த்தாத்தா என்று தரணி புகழ்“ என்று ஒரு தமிழ் புலவர் இவரை வர்ணிக்கிறார்.

உ.வே.சாவின் அரும்பணி

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என்ற குறளுக்கேற்ப தன்னுடைய 84ஆம் அகவையில் இயற்கை எய்தும் வரையிலும் உ.வே.சாவின் அரும்பணி இடையறாது தொடர்ந்தது. தன்னுடைய வாழ்வே தமிழ் இலக்கியங்களை பதிப்பதற்காகவே இறைவன் தந்ததாகக் கருதி, தமிழ் பிரதிகளைத் தேடித்தேடி சேகரித்து, பகுத்து, தொகுத்து அச்சிலேற்றும் பணியைச் செய்தார். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளுக்கு நூல்வடிவம் தந்து அவற்றை அழிவில் இருந்து காத்தது மட்டுமின்றி அடுத்து தலைமுறையினர் அறியவும் செய்தார். வேறு எவராலும் செய்ய முடியாத இந்த அரும்பணியை உ.வே.சா. ஒருவரால் மட்டுமே செய்ய முடியும் என்பதும் நாம் அறிந்த மிகப்பெரிய உண்மை.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

40. தொண்டால் உயர்ந்த கலங்கரை - உ.வே.சா.

முனைவர் இதயகீதம் அ. இராமானுஜம்,
பொதுச் செயலாளர்,
அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம்.

முன்னுரை

உ.வே.சா. என்ற பெயரை உச்சரிக்கும் போதே தமிழ் கலங்கரையின் தீப ஒளி, திசையெல்லாம் மிளிர தொடங்கிவிடுகிறது. எளிமையான கிராமத்துச் சூழலில் பிறந்து வளர்ந்து இன்று தமிழுக்குத் தாத்தா என்ற நிலையை அடைவதற்கு எத்தகைய உழைப்பை நல்கியிருக்க வேண்டும் என்பதை ஆய்வு செய்யும்போது கண்கள் அகல விரிகிறது.

இளமையில் தமிழ் மேல் ஏற்பட்ட ஆர்வம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கொண்டு சேர்த்தது. அதன் விளைவாக இவரிடம் 5-ஆண்டு உ.வே.சா. தமிழ் கற்றார். தமிழில் 2-லட்சம் பாடல்களை எழுதிப் புலமையில் சிறந்தவர் என்று பெயர் எடுத்த மீனாட்சி சுந்தரம் அவர்களிடம் பாடம் படித்ததின் விளைவாக இவருக்குத் தமிழின் உயர்வும், பற்றும் ஏற்பட்டது.

இந்த வேளையில் இவருக்கு அறிவுத் தேடல் பிறந்ததன் விளைவாக ஓலைச் சுவடியில் ஒளிந்திருக்கும் நிலை தமிழ் இலக்கியங்களைத் தேடிப்பிடிக்கும் ஆர்வம் பிறந்தது. எந்த நேரமும் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும், தமிழ் புலவர்களை மட்டுமே சிந்திக்கும் எண்ணம் ஏற்பட்டதன் விளைவாக மறைந்த தமிழ்ப் பாடல்களை சேகரிக்கும் எண்ணமும், அதை வைத்திருக்கும் இடங்களையும், தேடிப்பிடிக்கத் தினமும் ஓடினார்.

குறிஞ்சிப்பாட்டு பெற்றவிதம்

குறிஞ்சிப்பாட்டு இவருக்கு ஓலைச்சுவடியாகக் கிடைக்கிறது. படியெடுத்த இவருக்கு ஒரு மூன்று பாடல்களின் பெயர்கள் இருக்கும் இடங்களில் ஓலைச்சுவடி நசுங்கிய நிலையில் தெளிவில்லாமல் இருக்கிறது. இந்தப் பூக்களின் பெயர்கள் தவறாக போய்விடக் கூடாது என்பதற்காக இந்த ஓலைச்சுவடியின் பிரதிகள் வேறு எங்கு இருக்கிறது என்று தேட ஆரம்பிக்கிறார். அந்த நேரத்தில் இவர் திருவாடுதுறை ஆதினத்தில் இருக்கிறார். இந்த ஓலைச் சுவடியின் இன்னொரு பிரதி தர்மபுரம் ஆதினத்தில் இருப்பதாகத் தகவல் கிடைக்கிறது.

ஆனால் தருமபுரம் ஆதினத்திற்கும், திருவாடுதுறை ஆதினத்திற்கும் விரிசல் ஏற்பட்டிருக்கின்ற நேரம் அது. இங்கு இருப்பவர்கள் அங்கிருப்பவர்களிடம் உறவு

வைத்துக் கொள்வதில்லை. அதைப்போலவே அங்கு இருக்கும் யாரும் இந்த மடத்தில் இருப்பவர்களிடம் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் வைத்துக்கொள்ளாத சூழ்நிலை ஏற்பட்ட காலம்.

தர்மபுரம் ஆதினத்தில் இருக்கிற உ.வே.சா. தமிழுக்காக என்ன வந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து திருவாடுதுறை மடத்திற்குச் செல்கிறார். மடத்தின் நிர்வாகியைப் பல்வேறு இடையூறுகளுக்கு இடையே சந்திக்க அனுமதி பெறுகிறார். அப்படிப் பெற்று, மடத்தின் நிர்வாகியைச் சந்திக்கச் சென்றபோது இவர் திருவாடுதுறை ஆதினத்திலிருந்து வந்தவர் என்பதை அறிந்த நிர்வாகி தான் அமர்ந்திருந்த சாய்வு நாற்காலியிலிருந்து எழாமலும், இவரைக் கண்டு கொள்ளாமலும் இருந்தார். இப்படிப் பலமணி நேரம் நின்ற நிலையிலேயே காத்துக்கொண்டிருந்த உ.வே.சா. வைப் பார்த்து மனம் இறங்கிய மட அதிபர் உனக்கு என்ன வேண்டும்? எனக் கேட்டார். உ.வே.சா. அவர்கள் மிகப் பணிவாக 99 வகைப் பூக்களில் எமக்குக் கிடைத்த ஓலைச் சுவடியில் மூன்று பூக்களின் பெயர்கள் தெளிவாகத் தெரியவில்லை. அதனுடைய இன்னொரு பிரதி உங்கள் மடத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நான் தவறாகப் படியெடுத்து விட்டால் தமிழுக்கு இழுக்கு வந்துவிடும் எனவே உங்களிடம் இருக்கும் பிரதியை தந்தால் நான் சரிபார்த்துவிட்டுத் தந்துவிடுகிறேன் என்று சொன்ன உ.வே.சா.வின் தமிழ் பற்றைக்கண்டு ஓலைச்சுவடி இருக்கும் அறைக்கு இவரைச் செல்ல அனுமதிக்கிறார்.

பலமணி நேரம் தேடியும் கிடைக்காத அந்த ஓலைச்சுவடி அன்று இரவு மறைந்த பின்னும் கைவிளக்கின் ஒளியில் தேடி அந்த மூன்று பெயர்களையும் சரிபார்க்கிறார். இந்த வரலாற்றுச் செய்தி இன்றைய தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்கும் ஒரு பாடமாக அமையும்.

சென்னை மாநிலக் கல்லூரியில் உ.வே.சா.

உ.வே.சா. சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெறுகிறார். எளிமையும், இளமையும் கலந்த உத்தமதானபுரத்தில் இருந்து வந்த இவரை கல்லூரியின் நிர்வாகத் துறை இவரால் பாடம் எடுக்க முடியுமா? என்ற சந்தேகக் கண்களோடு இவரை இவருக்குத் தெரியாமல் வேவு பார்த்தார்கள் என்பதை உ.வே.சா அவர்களே தன்னுடைய கட்டுரையில் குறிப்பிட்டு இருக்கிறார். தன்னுடைய அறிவுத் திறமையாலும், நுட்பத்தினாலும் இவருடைய புலமைத் திறன், கற்பிக்கும் ஆற்றலை அந்த நிர்வாகம் பின்னர் உணர்ந்து அவரைப் படிப்படியாக உயர்த்தி, தமிழ்த் துறையின் தலைவராக்குகிறது.

தமிழ் நாட்டிலேயே தான் பணியாற்றிய கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியருக்கு சிலை வைத்து மரியாதை செய்து இருப்பது உ.வே.சா.விற்கு மட்டும்தான் என்பது

அவருடைய தமிழ்ப் புலமைக்கும், அவர் செய்த அரிய தொண்டிற்கும் கிடைத்த பரிசு எனலாம்.

தமிழே உ.வே.சா.வின் உயிர் மூச்சு

உ.வே.சா.வின் வீட்டில் இவரை சமஸ்கிருதம் படிக்க வற்புறுத்துகின்றனர். ஆனால் உ.வே.சா. விற்கு, தமிழே என்னுடைய மூச்சு என்று தமிழ்ப் படிக்க ஓடியவர் என்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழைத் தனது உயிர் மூச்சாகக் கொண்ட, தமிழ்த் தாத்தா என அனைவராலும் போற்றியழைக்கப்பட்ட உ.வே. சாமிநாதய்யர். தமிழ் இலக்கியங்களை, அடுத்து வரும் தலைமுறை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பெரும் தொண்டினைச் செய்து, தமிழ் மொழி தலை நிமிர்ந்து வாழவும் செய்தார் என்பதை என்றும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். குறிப்பாகக் கூறினால். சாவின் விளிம்பிற்குச் சென்ற தமிழை, பிரதிபலன் எதுவும் எதிர்பாராத தனது கடின உழைப்பால் உயிர்ப்பித்தது உ.வே.சா. அவர்கள் ஓலைச் சுவடிகளைப் பல இடங்களிலிருந்து தேடியும், பொருள் கொடுத்துப் பெற்றுக் கொண்டும் மீட்டெடுத்த உ.வே.சா. அவர்களின் பல ஆண்டுகளின் உழைப்பாலும், சிறந்த புலமையாலும் பத்துப்பாட்டு,எட்டுத்தொகையில் ஐந்து நூல்கள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை போன்ற நூல்கள் பதிப்பிக்கப்பட்டன.

சங்க நூல்களை உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த பின் புராணங்களையும், அந்தாதி, உலா, பரணி, கோவை, தூது ஆகிய நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார். அவருக்குப் பிறகு பலர் ஓலைச்சுவடிகளைக் கண்டறிந்து, பெரும்பாலானவைகள் போலிகளாக இருந்தன என்பதை பதிவிட்டுள்ளனர். 1878லில் இருந்து தொடங்கிய அவரது இலக்கியப்பணி, 1942 வரை இருந்து, அவரது 82ஆவது வயதிலும் குறுந்தொகை நூலுக்கு உரையெழுதிப் பெருமை பெற்றார். தமிழை இறைவனாகவே எண்ணி வாழ்ந்தும், உரையாற்றியும் வந்த உ.வே.சா. அவர்களை, மகாத்மா காந்தியும், கவியரசர் ரவீந்திரநாத் தாகூரும் பாராட்டுகின்றார். இவரே அகத்தியன் என்று குறிப்பிடுவது, தமிழ்த்தாத்தாவின் புகழை இவ்வையகம் உள்ளவரை தமிழ்மக்கள் நினைவில் கொள்ளுமாறு செய்கிறது.

சிலப்பதிகாரத்தை 1889-ஆம் ஆண்டும், மணிமேகலையை 1898-ஆம் ஆண்டும் வெளியிட்டு, சமண நூலான சீவக சிந்தாமணியையும், பௌத்த நூலான மணிமேகலையையும் பதிப்பித்து, தனது சமயபேதமற்ற தன்மையை வெளிப்படுத்தினார் என்றால் அது மிகையல்ல!

சீவக சிந்தாமணியின் பதிப்பு

இன்றைக்கு ஐம்பெருங்காப்பியங்களைத் தமிழ்த்தாயின் அணிகலன்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறோம். ஆனால் அந்தக் காப்பியங்களை உ.வே.சா. அவர்கள் மீட்டெடுக்க பட்ட துயரங்கள் சொல்லிமாளாது. சீவக சிந்தாமணியின் மூல நூல் ஒரு சமணத் துறவியிடம் அடைக்கலமாக இருக்கிறது. அந்த ஓலைச் சுவடியைப் படித்தால்தான் சீவக சிந்தாமணியின் உண்மையானக் கதையை வெளிக்கொணர முடியும். சுத்தமான வேதியர் குடும்பத்தில் பிறந்த உ.வே.சா. இந்த ஓலைச்சுவடியைப் பெறுவதற்காக சமணத் துறவியின் குடில் வாசலில் பல நாட்கள் உணவு, உறக்கமின்றிக் காத்துக்கிடக்கிறார். பல நாட்கள் கடந்து சமண துறவியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கிறது. துறவியிடம் சீவகசிந்தாமணியை பிழையில்லாமல் கொண்டு வரவேண்டுமானால் உங்களிடம் உள்ள ஓலைச்சுவடிகள் சில நாட்கள் எனக்குத் தந்துவிட வேண்டும் என மன்றாடுகிறார்.

துறவியோ அப்படியானால் நான் சொல்வதை நீ கேட்க வேண்டும் என்ற வினாவைக் கேட்ட உ.வே.சா. சற்றும் தாமதிக்காமல் சரி என்கின்றார். சமணத் துறவி சொல்லுகின்றார் நீ சமணத்தைப் படிக்க வேண்டும், ஏனென்றால் உலகில் இருக்கிற மதங்களில் எல்லாம் உயர்வானது சமணம்தான் என்கின்றார். பல நாட்கள் அந்த மடத்திலே தங்கி, சமணம் கற்று, இன்று நாம் சீவகசிந்தாமணியை சிறந்த காப்பியம் என படித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதைப் பெறுவதற்காக உ.வே.சா. பட்ட துன்பங்களும், துயரங்களும் அடுத்த தலைமுறை உணர்ந்து படிக்கிறபோதுதான் அது உண்மையான படிப்பினையாக அமையும்.

உ.வே.சா. பணியாற்றிய இடங்கள்

உ.வே.சா.அவர்கள் கும்பகோணத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். ராஜா அண்ணாமலை செட்டியார் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் பணியாற்றி ஓலைச் சுவடிகளில் ஒளிந்து கிடந்த தமிழ் இலக்கியத்தை, கலங்கரை ஒளியாக மிளிரச் செய்தவர். கடைசி வரை தன்னுடைய குருநாதர் மகாவித்வான்மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சிறப்புகளையும், பெருமைகளையும் மாணவர்களுக்கு உணர்த்தினார்.அதைப்போலவே இவருக்கு சீடராகக் கிடைத்தவர் கி. வா. ஜகநாதன். அவர்தான் தமிழில் மிகவும் பழமையான கலைமகள் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருடைய ஆய்வியல் பார்வையையும், தமிழ்த் தொண்டையும் கண்டு கி.வா.ஜ. அவர்கள் உ.வே.சா. நமக்குக் கிடைத்தது தமிழ்ச் சமுதாயத்தின் வரம் என்கின்றார். இவர் தன்னுடைய சொத்துக்களை விற்று ஓலைச்சுவடியிலிருந்து 98 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல 3,000 அதிகமான ஓலைச்சுவடிகளைத் தன் கைவசம் வைத்துப் பாதுகாத்தவர் என்பது அடுத்த தலைமுறைக்கான ஆய்வு

குறிப்பாகும். சாதாரண இசைக் குடும்பத்தில் பிறந்து தமிழை தன் உயிர் மூச்சாக நினைத்து அதற்காகவே வாழ்க்கை முழுவதும் தியாகம் செய்த, உத்தமதானபுரம் தந்த உத்தமர் என்பதை அவருடைய சேவை நமக்குப் புலப்படுத்துகிறது.

நிறை உரை

1855-ஆம் ஆண்டு கும்பகோணம் உத்தமதானபுரத்தில் பிறந்த உ.வே.சாமிநாத அய்யர் 87 ஆண்டுகாலம் தமிழுக்கும், தமிழ் இலக்கியப் படைப்பிற்கும் வேராக இருந்து ஆற்றிய அரும்பணிகள் தமிழ் உள்ள அளவும் நின்று நிலைக்கும். அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் என்பதை உ.வே.சா. வைப் பற்றிய ஆய்வு நமக்கு உணர்த்துகிறது.



41. செம்மொழி காத்த உ.வே.சா.

திருமதி பவானி, எம்.ஏ., பி.எட்.,
தமிழ் ஆர்வலர்.

முன்னுரை

தமிழ்மொழி தொன்மையான, பழமையான இனிமையான மொழி. எளிதில் கற்கும் வகையில் அமைந்துள்ள மொழி. தமிழின் சிறப்பை உலகறியச் செய்தும் தமிழ் இலக்கியங்களை மீட்டும் கொடுத்தவர் உ.வே.சா. பல ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்துப் புத்தகங்களை அச்சில் கொண்டுவந்த மகான். அவர் இல்லையேல் தமிழில்லை. தமிழ் இல்லையேல் அவரில்லை. சங்க இலக்கியங்களைப் பதிப்பித்துத் தமிழ்த்தாத்தா என்று பட்டப்பெயர் பெற்றார். உ.வே.சா. ஆற்றிய தமிழ்ப்பணியின் சிறப்பைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உ.வே.சா. வின் பிறப்பு

உ.வே.சா. 19.2.1855 ஆம் ஆண்டு உத்தமதானபுரம் என்னும் ஊரில் இருக்கும் வேங்கடசுப்பு – சரஸ்வதி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் வேங்கடரமணன் என்று பெயர் வைத்தனர். உ.வே.சா.வின் குரு வித்துவான் மீனாட்சி சுந்தம்பிள்ளை அவர்கள் இவரது பெயரை மாற்றிச் சாமிநாதன் எனச் சூட்டி மகிழ்ந்தார். உ.வே.சா. அவர்களின் தந்தை தம் இசைத்திறமையால் ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தார். குடும்பம் நடத்துவதற்குப் போதிய வருமானம் இல்லாவிட்டாலும் மகனுக்கு நல்ல கல்வி தர ஆசைப்பட்டார். கல்வியும் கற்றுத் தந்தார். பிற ஆசிரியர்களிடம் கல்வி கற்க வைத்தார். உ.வே.சா. வும் கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் கல்வி கற்று உயர்ந்த நிலைக்கு வந்தார். அவருக்கு முன்பும் சரி பின்பும் சரி அவரளவுக்கு ஓலைச்சுவடிகளைச் சேகரித்து ஒருவரும் பதிப்பிக்கவில்லை. ஏட்டில் இருப்பதை அப்படியே மொழிபெயர்த்துக் காகிதத்தில் அச்சிடும் வேலை அன்று.

பதிப்புப் பணி

புத்தகப்பதிப்பு அவ்வளவு எளிதானதன்று. ஏட்டில் உள்ள பாடத்தில் பிழைகள் இருக்கும். பல இடங்களில் இன்னதென்றே ஊகிக்க முடியாத அளவுக்குச் சிதைவு உண்டாகியிருக்கும். அவற்றையெல்லாம் பல நூல் அறிவினாலும் இறைவன் அருளினாலும் இயற்கையான அறிவுத்திறமையாலும் ஆராய்ந்து செப்பம் செய்தார். உ.வே.சா. அவர்கள் திக்குத் தெரியாத காட்டில் நுழைந்து தாமே வழியமைத்து காட்டை நாடாக்கிய பெருந்தொண்டர். இவரது பதிப்பில் முகவுரை, ஆசிரியர் வரலாறு, நூல் பற்றிய குறிப்புகள், பிற செய்திகள் ஆகியன இருப்பதைக் குறிப்பிடலாம். எவ்வளவுதான் கவனமாக வாசித்தாலும் ஓலைச்சுவடியை அச்சு நூலாகப் பதிப்பித்தாலும் ஒரு சில பிழைகள் இருக்கும். சிலப்பதிகார முதல் பதிப்புக் கானல்வரியில் ***சேரல் மட வன்னம் சேரல் நடை ஒவ்வாய்*** என்ற வரி ***சொல் மடவன்னம் சொல் நடை ஒவ்வாய்*** என்றே இருந்தது. மறு பதிப்பில் இதனைத் திருத்தி வெளியிட்டார். சுவடி சேகரிக்கச் சென்ற இடத்தில் அவமானம் ஏற்படும்போது தமிழுக்காகத் தாங்கிக்கொண்டார். பழந்தமிழ் நூல்களைப்

பதிப்பித்தலே தம் வாழ்வின் குறிக்கோளாக எண்ணினார். உ.வே.சா. அவர்கள் தமிழ்த்தொண்டில் மதம் குறுக்கிடுவதை விரும்பவில்லை. சமண மதத்தைத் தெரிந்துகொண்டு சீவகசிந்தா மணியையும் பௌத்தமதத் தத்துவங்களை அறிந்துகொண்டு மணிமேகலையையும் பதிப்பித்துள்ளார்.

கல்விப்பணி

அரியலூர் சடகோப ஐயங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் ஆகியோரிடம் கல்வி பயின்றார். உ.வே.சா. வின் தந்தையார்க்குத் தம் குமாரரைச் சங்கீத வித்துவானாக ஆக்க வேண்டுமென ஆசைப்பட்டார். தன்மகன் தமிழில் ஆர்வம் இருப்பதை உணர்ந்து எங்கெங்கே தமிழ் வித்துவான்கள் இருக்கிறார்களோ அந்தந்த ஊர்களுக்குக் குடியேறித் தன் மகன் கல்வி பெறும்படி செய்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் பெருங்கவிஞராகவும் சிறந்த புலவராகவும் திகழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தம் மகனைச் சேர்த்துவிட்டார். அன்று முதல் அவரது மாணாக்கராக இருந்து தமிழ் கற்றார்.

அக்காலத்தில் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தியாகராசச் செட்டியார் அவர்கள் முயற்சியால் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். ஒருசில ஆண்டுகள் கழித்து கும்பகோணத்திலிருந்து மாற்றலாகி சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியில் அமர்ந்தார். இறுதியில் அங்கேயே ஓய்வுபெற்றார். இராஜா அண்ணாமலை செட்டியார் நிறுவிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியிலும் தலைவராக இருந்தார். தன் ஆசான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இறந்தபிறகு, தருமபுரம் ஆதீனத்தின் தொடர்பு இறுகலாக அமைந்தது. அதன்பின் ஆதீனகர்த்தராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் வலுவான பற்று இருந்தது. அதோடு மாணவர்களுக்குப் பாடம் சொல்லும் பணியையும் மேற்கொண்டார். இதனால் உ.வே.சா. வின் தமிழறிவு உரம் பெற்று வந்தது.

நன்றியுணர்வு

“நன்றி மறப்பது நன்றன்று” என்ற குறளுக்கேற்ப உ.வே.சா. அவர்கள் தமக்கு உதவி செய்தவர்களை மறக்காமல் வாழ்ந்தார். தன் குரு மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் கல்வி பயின்ற காலம் தொடங்கி 87 ஆம் வயதில் இறக்கும் வரை உ.வே.சா. மறக்கவில்லை. தம்முடைய சுயசரிதையைக் காட்டிலும் குருவின் வாழ்க்கை வரலாற்றை முதலில் எழுதினார். நூலில் குருவின் பெயரை எழுத அஞ்சி பிள்ளை என்றே குறிப்பிட்டுள்ளார். பலரின் வற்புறுத்தலால் தம் 80 வது வயதுக்குமேல் என் சரித்திரம் என்ற பெயரில் தன் வாழ்க்கையை எழுதினார். தியாகராசச் செட்டியாரின் பரிந்துரையில் கும்பகோணம் கல்லூரியில் பணி கிடைத்த போதும் அதை மறுத்தார். பின்பு செட்டியாரின் வற்புறுத்தலால் அப்பணியை ஏற்றுக்கொண்டார். தியாகராசச் செட்டியாரை மறக்காமல் தன் வீட்டிற்குத் தியாகராசர் விலாசம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

தம்முடைய வாழ்க்கையில் யாருடன் பழக நேர்ந்ததோ அவர்களது வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் சுவைபட எழுதினார். பேரறிஞர்கள் சிலரது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதி வெளியிட்டு நன்றி மறவாமல் வாழ்ந்தார்.

பாரதியாரும் உ.வே.சா. வும்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் இரண்டு பெரிய மலைகளைப்போல் இருந்து தமிழ்ப்பணி செய்தவர்கள் ***சுப்பிரமணி பாரதியாரும் டாக்டர் உ.வே.சா.*** அவர்களும் ஆவார்கள். மகாகவி பாரதியார் தம்முடைய புதிய கவிதைகளால் தமிழ்த்தாய்க்குப் புதிய அணிகலன்களைப் பூட்டினார். உ.வே.சா. அவர்களோ பலகாலமாக மங்கி மறைந்து கிடந்த பழைய ஓலைச்சுவடிகளை நூல்களாகப் பதிப்பித்து அழகு பார்த்தார். இருவரும் திருவல்லிக்கேணியில் வாழ்ந்தார்கள். பாரதியார் உ.வே.சா. மீது அதிகப்பற்றும் பாசமும் வைத்திருந்தார். தமிழ்மொழியை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் எனக் கனவு கண்டார். அந்தக் கனவை உ.வே.சா. நிறைவு செய்தார். உ.வே.சா. வைப் பற்றிப் பாரதியார்,

குடந்தை நகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவர் வாயில்
துதியறிவாய் எவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்

எனப் பாராட்டியுள்ளார். உ.வே.சா. வை ரவீந்திரநாத் தாகூரும் காந்தியடிகளும் சந்தித்துப் பேசினார்கள் என்றால் எத்தகு பெருமையுடனும் புகழுடனும் வாழ்ந்தார் என்பதை அறியலாம். ***“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்”*** என்ற தொடரை விளக்குவதற்கு உ.வே.சா. அவர்கள் இம்மண்ணுலகில் பிறந்தார்.

பத்துப்பாட்டு பதிப்பு

பத்துப்பாட்டு மூலப் பிரதியைப் பார்க்காத அவர் வித்துவான் பலரிடம் ஏடுகள் கிடைக்குமோ என விசாரித்துக் கொண்டிருந்தார். பொருள் உதவியும் தேவைப்பட்டது. பலரிடம் உதவியை நாடும்போது இவரது தந்தையார் மூலம் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய அம்பலவாண தேசிகர் அவர்கள் செய்தியை அறிந்து பண உதவி வழங்கினார். பத்துப்பாட்டு ஓலைச்சுவடிகள் முழுமையாகக் கிடைக்காத நிலையில் நெல்லை மாவட்டம் களக்காட்டில் உள்ள சைவ மடத்தில் பத்துப்பாட்டு மூலம் முழுவதும் கிடைத்தது. ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன். முன்பே கிடைத்திருந்தால் எவ்வளவு அனுகூலமாக இருந்திருக்கும் என மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இவர் ஸ்ரீ வைகுண்டத்தில் கிடைத்த முல்லைப்பாட்டுச் சுவடியையொட்டி இரவில் மலர்ந்த முல்லை என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். மேலும் மந்தவெளி சென்று அண்ணாசாமியின் மாப்பிள்ளையைச் சந்தித்தார். அவரிடம் பத்துப்பாட்டு உரை பிரதி ஒன்றும் இருந்தது. அவற்றையும் வேறுசில நூல்களையும் எடுத்துக்கொண்டார். பூண்டி அரங்கநாத முதலியார் முயற்சியால் பத்துப்பாட்டு அச்சிட நினைத்தார். பத்துப்பாட்டின் பெருமையை உணர்ந்த இராஜகோபாலச்சாரியார் அதிலுள்ள அரும்பதங்களையும் அருட்தொடர்களையும் தொகுத்து அகராதியாக வெளியிடலாம் என்று உ.வே.சா.விடம் கூறினார். அவரும் ஏற்றுக்கொண்டு அகராதியாகத் தொகுத்தார். பத்துப்பாட்டின் பதிப்பில் முகவுரையும் அப்பால் நூலின் மூலமும் நச்சினார்க்கினியருரையும் உரைச்சிறப்புப் பாயிரமும் அரும்பத விளக்கம் அருந்தொடர் விளக்கம் பிழைதிருத்தம் என்பனவும் இருந்தன. ஒவ்வொரு பாட்டின் வரலாற்றையும் ஏடுதேடிய விவரத்தையும் உதவி செய்தோர் பெயர்களையும் எழுதியுள்ளார். இறைவன் திருவருளால் 1889

ஆம் ஆண்டு பத்துப்பாட்டு அச்சிட்டு நிறைவேறியது. பத்துப்பாட்டு நூல்களால் பல சரித்திர செய்திகளும் பண்பாடுகளும் தெரிய வந்தன.

பதிப்பித்த நூல்கள்

பழந்தமிழ் ஓலைச்சுவடிகளை அச்சிடும் தொண்டைச் செய்தார். சேலம் இராமசாமி முதலியார் முயற்சியால் சிந்தாமணியை 1887 ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்தப் பதிப்பைக் கண்ட தமிழக மக்கள் மிகவும் ஆனந்தம் அடைந்து மகிழ்ந்தனர். அதன்பின் சிலப்பதிகாரம், புறாநனூறு, மணிமேகலை என்பன வெளிவந்தன. புறநானூறு கண்ட தமிழுலகம் ஒரு புதிய கண்டத்தைக் கண்டதுபோல் மகிழ்ச்சியடைந்தது. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை, பண்பாடு, போர்முறை ஆகியன பற்றிய ஆராய்ச்சிகளை எழுத அறிஞர்கள் முனைந்தனர். அவரது உழைப்பால் பத்துப்பாட்டும் காணமுடிந்தது. ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகியன மலர்ந்தன.

பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் ஆகிய இலக்கண இலக்கியங்கள் வெளிவந்தன. திருவிளையாடற்புராணம், திருக்காளத்தி புராணம், கோவை, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், இரட்டை மணிமாலை, அந்தாதி, குறவஞ்சி முதலிய பலவகைப் பிரபந்தங்களும் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டன. தம்முடைய ஆசிரியர் இயற்றிய பிரபந்தங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட்டார். உ.வே.சா.வின் பதிப்புகள் ஆசிரியரின் உதவிகள் இல்லாமல் பயிலும் வகையில் அமைந்தவை. உரைநடை எழுதும் ஆற்றலை உ.வே.சா. அவர்கள் தாம் பதிப்பித்த நூல்களின் பகுதியாக மணிமேகலை கதைச்சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச்சுருக்கம் என்பவற்றையும் எழுதியுள்ளார்.

அரிய பொருள்களைத் தேடுதல்

உ.வே.சா. அவர்கள் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் எனப் பல இலக்கியங்களைப் பதிப்பித்தவர். தாம் பதிப்பிக்கும் நூல்களில் இடம்பெறும் அரிய சொற்களின் பொருளை அறிய முற்பட்டார். மணிமேகலையில் ***பயற்றுத் தன்மை கெடாது கும்மாயம் இயற்றி*** என்ற சொல்லுக்குப் பொருள் விளங்கவில்லை. கும்பகோணம் சாரங்கப் பெருமாள் கோயிலுக்குப் பட்டாச்சாரி ஒருவரின் அழைப்பின்பேரில் சென்றார். அங்கு வழங்கிய பிரசாதத்திற்கு இப்பெயர் என்று பட்டாச்சாரியார் விளக்கம் அளித்தார். ***கும்மாயம் என்பது புழுக்கிய பச்சைப் பயிற்றோடு சருக்கரை முதலியன கலந்து*** ஆக்கப்படுவது ஒரு சிற்றுண்டி. இன்றும் விஷ்ணு ஆலயங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

பாஞ்சாலியைத் துச்சாதனன் இழுத்து வரும் காட்சியை, ***கைச்செண்டால் அவன் பைங்குழல்*** பற்றி என்று வில்லிபுத்தூர் ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார். இங்குச் செண்டு என்பதன் பொருள் பூச்செண்டா, பூப்பந்தா என்ற ஐயம் உ.வே.சா. விற்கு ஏற்பட்டது. மயிலாடுதுறைக்கு அருகில் இருக்கும் ஆறுபாதி என்ற கிராமத்திலுள்ள பெருமாள் சிலையின் கையில் ஒரு பிரம்பைப்போல் இருந்ததைக் கண்டார். பிரம்பின் தலைப்பகுதியில் இரண்டு வளைவுகள் இருந்தன. அது குறித்து விசாரித்தபோது தலைப்பகுதி வளைந்து பிரம்பு போன்று காட்சியளிக்கும் ஒரு கருவியின் பெயரே செண்டு என்று உ.வே.சா. அறிந்து கொண்டார். இக்கருவியின் துணையால்

பாஞ்சாலியின் கூந்தலைத் துச்சாதனன் பற்றி இழுத்துச் சென்றதாகக் குறிப்பிட்டது பொருத்தமானதுதான்.

முடிவுரை

உ.வே.சா. அவர்கள் பல சிறந்த பண்புள்ளவராக இருந்தார். இணையற்ற ஆசிரியர், புலமைப்பெருங்கடல், கவிஞர், சிறந்த எழுத்தாளர், அற்புதப் பதிப்பாசிரியர், பலவகை உருவங்களில் உலா வந்தவர். தமிழ்த்தாயின் தவப்புதல்வராகத் திகழ்ந்த உ.வே.சா. 1942 ஆம் ஆண்டு மக்களுக்கு ஆசி கூறிவிட்டு இறைவன் திருவடியை அடைந்தார். அவர் பெயர் கொண்ட நூல்நிலையம் பெசன்ட் நகரில் மிகச் சிறப்பாக செயல்படுகிறது. சென்னை மாநிலக் கல்லூரியில் அவரின் திருவுருவம் பெருங்கடலை நோக்கி நிற்கும் கோலத்தை இன்றும் கண்டு மகிழலாம்.



42. உ.வே.சா-வின் தமிழ்க்கோயிலின் பேரேடுகள்

ஆ. அல்பின் ஜோசப்,
தமிழ் ஆர்வலர்.

முன்னுரை

தமிழ் இலக்கியம் தமிழ்மொழி பெற்ற பெருஞ்செல்வமாகும். தொன்மை இலக்கியத்தின் சுவையை நமக்குக் காட்டி முதிராத இளமை எழிலுடன் திகழும் இவ்விலக்கிய களஞ்சியம், நமது மொழிக்கு என்றும் பெருமை. இவ்வலக்கியத்தின் மொழிச் செறிவிற்கும் வெளியீட்டு நுட்பத்திற்கும் காரணமான தமிழ் இலக்கியச் சிற்பிகள் இருவர். ஒருவர் அமரகவி சுப்பிரமணிய பாரதியார்: மற்றவர் மகாமகோபாத்தியாய உ.வே.சாமிநாதையர் அவர்கள். இவர் மறைந்து கிடந்த தமிழ் இலக்கிய ஏடுகளைத் தேடிக்கொணர்ந்து வெளியிட உதவிய தமிழ் இலக்கிய சிற்பி ஆவார். உறுதிப்பொருள் நான்கும் எவ்வாறு மனிதனை நன்னெறி படுத்துகின்றதோ, அவ்வாறே சுவடியை நன்னெறிபடுத்தி இலக்கியத்திற்கு உயிர்கொடுத்த மாமனிதன் உ.வே.சா.

தமிழகத்தின் விடிவெள்ளி

19-ம் நூற்றாண்டின் இறுதிக்காலம் அப்போது ஆங்கிலேயரின் ஆட்சி கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது, அவர் தம் ஆட்சியில் தமிழ்மொழி வளர்ச்சிபெறாத நிலை. இந்தியமொழி என்றால் அது சமஸ்கிருதம்தான், என்ற எண்ணம் ஆட்சியாளரிடம் வலுப்பெற்றிருந்த சூழ்நிலையில் ஒரு கதிரவன் தோன்றியது. அக்கதிரவன் தோற்றம் தமிழர் உள்ளத்தில் தேங்கி இருந்த இருளை மெல்லமெல்ல விலக்கியது. அந்த ஞாயிற்றை உலகிற்கு தந்து தமிழுக்குப் புத்துணர்வு தந்தவனான இறைவனைத் தமிழக மக்கள் போற்றி, வணங்கி நின்றனர்.

உத்தமதானபுரச் சிறப்பு

இந்த ஊர் ஒர் அரசரால் 48 அந்தணர்களுக்கு ***தானமாகக்*** கொடுக்கப்பட்ட நிலமானதால் இது ***உத்தமதானபுரம்*** எனப் பெயர் பெற்றிருந்தது. உ.வே.சா அவர்களைப் பெற்றதால் ***அத்தானம்*** மேலும் சிறப்புப் பெற்று விளங்கியது.

இளமைக்கல்வியும் தமிழ் விதை

ஐயரவர்கள் தம் பாட்டனார் வேங்கடாசல ஐயரிடத்தில் அரிச்சுவடியையும் ***உத்தமதானபுர*** நாராயண ஐயரிடத்தில் தமிழ்ப் பாடத்தினையும் பின் சாமிநாதய்யரிடம் ஏட்டிலும் எழுதக் கற்றுக் கொண்டார்.குன்னம்சிதம்பரப்பிள்ளையிடம் ***சிற்றிலக்கியத்தையும் திருவிளையாடல் புராணத்தையும்*** பாடக்கேட்டறிந்தார். அரியலூரில் சிறப்புற்று விளங்கிய சடகோப ஐயங்கார் என்பவரிடம் ***பாகவதம், கம்பராமாயணம்*** போன்ற நூல்களையும் கேட்டறிந்தார். இவ்வாறு தமிழ்ப்பாடம் கேட்டறிந்தே உ.வே.சா-விற்கு தமிழில் மிகுந்த ஈடுபாடு ஏற்படக் காரணமாயிற்று எனலாம். இதனை உ.வே.சாவே தன்னுடைய சுய சரிதையில்,

ஐயா, சடகோப ஐயங்காரிடம் நான் என்று மாணாக்கனாகப் புகுந்தேனோ அன்றே தமிழ்த்தாயின் அருட்பரப்பிற்குள் புகுந்தவனானேன். எனக்கு தமிழில் சுவை உண்டாகும்படி

கற்பித்த முதல்குரு அவரே! அந்த இளம்பருவத்தில் என் உள்ளத்தினுள் தமிழ் விதையை விழைத்தவர் அவர்.

என்று கூறுவதன் மூலம் ஐயர் தன் ஆசிரியர் மேல் எத்தகைய அன்பு வைத்திருக்கிறார் என்பதையும், ஆசிரியர் மேல் அன்புகொண்ட மாணவன் வாழ்வில் உயர்வு பெற்று உலகம் போற்றும் மாமனிதனாக வாழ்வான் என்பதற்கும் இவரே சான்று.

உ.வே.சா- வை உயர்த்திய ஏணிப்படிகள்

சாமிநாதையரின் தமிழ் ஆர்வத்தைக்கண்டு அவருக்குக் கற்பித்த ஆசிரியர்கள், அக்காலத்தில் பெரும்புலவராக விளங்கிய மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் சென்று கற்குமாறு அறிவுறுத்தினர். அவர் திருவாவடுதுறை அறப்பள்ளியைச் சார்ந்த தலைசிறந்த புலவர். ***செந்தமிழ்க்கடல்*** என அன்புடன் அழைக்கப்பட்டவர். செய்யுள் இயற்றி விளக்கம் தருவதில் புலமைப்பெற்றவர் என்பதை அறிந்த உ.வே.சா மகாவித்துவானிடம் படிக்க விரும்பினார். அவரது ஆசையைத் தந்தை வேங்கடசுப்பையர் அவர்களும் நிறைவேற்றினார். உ.வே.சா பிள்ளையவர்களின் மறைவிற்குப் பின் தமிழ்வித்துவானும், அறப்பள்ளியின் தலைவராக இருந்த சுப்பிரமணிய தேசிகரிடம் நான்கு ஆண்டுகள் தமிழ் நூல்களைக் கற்றறிந்தார். பிறருக்கு தமிழ்ப்பாடம் சொல்லித்தரும் திறமையும் பெற்றார்.

மாணவர் விரும்பும் ஆசிரியர் உ.வே.சா

தியாகராசச் செட்டியார் எனும் தமிழ் அறிஞர் கும்பகோணத்தில் உள்ள அரசினர் கல்லூரியில் பணிபுரிந்து வந்தார். இவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையைச் சந்திக்க வருவார். அதன் மூலம் ஐயருக்கும், பிள்ளைக்கும் நெருக்கம் ஏற்பட்டது. செட்டியார் தன் பணியிலிருந்து ஓய்வு பெறும் காலம் வந்தது. கல்லூரி முதல்வர் வேறு தமிழ் ஆசிரியரை நியமிக்கும் பொறுப்பை இவருக்குக் கொடுத்ததால், அப்பணிக்குத் தகுதியானவர் சாமிநாத ஐயர் என்பதை உணர்ந்த செட்டியார் அவரைப் பணியில் அமர்த்தினார்.

சாமிநாதையர் பணியில் சேர்ந்தபொழுது, அக்கல்லூரி மாணவர்களுக்குச் சிலப்பதிகாரத்தில் ***இந்திர விழாவெடுத்த காதை*** நடத்தப்படாமல் இருந்தது. இதனைச் சாமிநாதையர், துறைத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரிடம் கூற, அவர் மடத்தில் ஏட்டுப்பிரதி இருக்கிறது எடுத்துத் தெரிந்துகொள் என்றார். பின் அந்த ஏட்டுப்பிரதியை எடுத்து ஆய்ந்து கற்று மாணவர்களுக்கு எளிமையாக, ***செய்யுளின் நயங்களை விரிவாகவும், தெளிவாகவும் மாணவர்களுக்கு நன்கு புரியும்படி*** நடத்தினார். திறமையாகப் பாடம் நடத்தும் ஐயரைக்கண்டு மாணவர்கள் வியந்தனர், மனம் மகிழ்ந்தனர். மாணவரின் அன்பையும், பாராட்டுதலையும் பெற்ற உ.வே.சா அவர்கள், மாணவர் விரும்பும் சிறந்த ஆசிரியரானார்.

மூலச்சுவடியைத்தேடும் உ.வே.சா

ஒருசமயம் முன்சீப் ராமசாமி முதலியார் ஐயரை அருகில் அழைத்து அமரவைத்து, தாங்கள் யாரிடம் படித்தீர்கள்? என்ன நூல்களையெல்லாம் கற்றுக்கொண்டீர் என்று கேட்டார். தான் மீனாட்சிசுந்தரதிடம் படித்ததையும் படித்த நூலையும் கூறினார். அதற்கு ராமசாமி,

இவையெல்லாம் படித்து என்ன பயன்? இவற்றின் மூலத்தை படிக்கவில்லையே? என்று கூறியது கேட்ட உ.வே.சா-வுக்கு அப்பொழுதுதான், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை பாடமாக நடத்துகிறோம், அதன் மூலநூல்களைப் படிக்கவில்லையே! என்ற உண்மை புரிந்தது. எனவே அந்த மூலநூல்கள் எங்கிருந்தாலும் கண்டுபிடித்துக் கற்கவேண்டும் என நினைத்தார். அதிலிருந்து மூலநூல்களைத்தேட ஆரம்பித்தார்.

சுவடிகளைத் தேடும் காலங்களில் பலவிதமான துன்பங்களையும் இன்னல்களையும் அடைந்திருப்பார். பல இடங்களில் சுவடிக்கு உரியவர்களைத் தேடிசென்று அலைந்து கால்கள் சோர்ந்துப்போயிருப்பார். பலமுறை வரச்சொல்லி அலைக்கழிப்பவர்களும் வீட்டில் நூல்களை வைத்துக்கொண்டே கொடுக்காமலும் இருப்பவர்களும் உண்டு. இருப்பினும் நூல்களின் மூலத்தை தேடும் வேட்டையில் எவ்வித சோர்வும் இன்றி முனைப்புடன் ஈடுபட்டார்.

அந்நாளில் சீவகசிந்தாமணி ஓலைச்சுவடி வடிவில் சிலரிடம் மட்டுமே அரிதாக இருந்தது. பலர் தங்களிடம் இருந்த ஓலைச்சுவடிகளை மூட பக்தியின் காரணமாக ஆடிப்பெருக்கன்று நீரோட்டத்தில் கொண்டுபோய் விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இம் மதியற்ற செயலைப்பற்றி உ.வே.சா தன்னுடைய ***என் சரித்திரம்*** நூலில்,

ஆடிமாதம் 18-ம் தேதியில் பழஞ்சுவடிகளையெல்லாம் சேர்த்து ஒரு சப்பரத்தில் வைத்து மேளதாளங்களோடு இழுத்துச்சென்று ஆற்றிலோ குளத்திலோ விட்டுவிடுவார்கள்.

என்று ஐயவர்கள் மனம்வருந்தி எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு விட்டவை போக எஞ்சியிருந்த ஓலைச்சுவடிகளை இரவுபகல் பாராது அலைந்து, இடைவிடாது முயன்று பெற்று, அச்சேற்றிய பெருமை அவருக்கே உரியது.

தமிழ்க்கோயில்

ஏடுகளைத் தொகுப்பதையும் ஆராய்வதையும் பதிப்பித்தலையும் தவ வாழ்வாகக் கொண்டவர் பேராசிரியர் உ.வே.சா. அவர் சுவடிகளைச் சேமித்து வைத்த இடங்களைத் **தமிழ் கோயில்** என்றும், அங்குள்ள சுவடிகளை **விக்கிரகங்கள்** என்றும் அவற்றைப் போற்றி காத்து வரும் புலவர்களை **ஆழ்வார்கள் நாயன்மார்கள்** என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சான்றாண்மை வாய்ந்த ஐயர் அவர்கள் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

பதிப்புப்பணி

ஏட்டுச்சுவடியைப் பதிப்பது என்பது எளிதான செயலன்று, அவற்றைப் படிப்பதே மிகக்கடினம். ஏட்டுச்சுவடிகளில் ஒற்றுகளுக்குப் புள்ளியே இராது. பல சுவடிகள் கறையான்களால் சேதப்பட்டிருக்கும். அச்சுக்கலை முன்னேற்றம் பெற்ற இக்காலத்திலேயே வெளிவரும் நூல்களில் பல பிழைகளை காணமுடிகிறது எனில் ஏட்டுச்சுவடி வடிவிலுள்ள நூல்களில் எவ்வளவு பிழைகள் காணப்படும். அவற்றையெல்லாம் ஆராய்ந்து உண்மையான மூலப்பாடத்தைக் கண்டறிந்து பிழையின்றிப் பதிப்பது என்பது ஒரு பெரும் சாதனை. இப்பணி எவ்வளவு இடர்பாடு தருவது என்பதை தனது ***சிலப்பதிகார முகவுரையில்,***

மேற்கூறிய பழைய பிரதிகளுட் பல, இனி வழுப்பட வேண்டும் என்பதற்கிடமில்லாமல் பிழை பொதிந்து, அநேக வருடங்களாகத் தம்மைப் படிப்போரும் படிப்பிப்போரும் இல்லை என்பதையும் நூல்களைப் பெயர்த்தெழுதத் தொகுத்து வைத்தவையே விரதமாகக் கொண்ட சில புண்ணிய சாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் வெளிப்படுத்தின. ஓன்றோடொன்று ஒவ்வாது, பிறழ்ந்து, குறைவுற்று, பழுதுபட்டுப் பொருள் தொடர்பின்றிக் கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும் என்று ஐயர் குறிப்பிடுவதன் மூலம் உணரலாம்.

பழந்தமிழ் வெளியீட்டுக்குக் கால்கொண்டவர் ஆறுமுகநாவலர்: சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை: கூரைவேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாதையர்.
என்றுகூறியவர் தமிழ்த்தென்றல் தி.ரு.வி.க.

ஏட்டில் இருக்கிறதை அப்படியே பெயர்த்துக் காகிதத்தில் அச்சிடும் வேலை அன்று ஐயரவர்கள் செய்தது. புத்தகப் பதிப்பு அவ்வளவு எளிதாக இருந்திருந்தால் எத்தனையோ அறிஞர்கள் அதை முன்பே செய்து புகழ் பெற்றிருப்பார்கள். ஏட்டில் உள்ள பாடம் பிழைபட்டிருக்கும்: பல இடங்களில் இன்னதென்றே ஊகிக்கமுடியாத அளவிற்குச் சிதைவு உண்டாயிருக்கும். அவற்றை எல்லாம் பலநூல் அறிவினாலும், இயற்கையான அறிவுத் திறமையாலும், விடாமுயற்சியினாலும் திருவருளின் துணையாலும் ஆராய்ந்து செப்பம் செய்ய வேண்டும். ஐயரவர்கள் திக்குத்தெரியாத காட்டில் நுழைந்து தாமே வழியமைத்துக் காட்டை நாடாக்கிய பெருந்தொண்டர். அவர்களுடைய பதிப்பு என்றால் புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் போற்றிப் பாதுகாக்கிறார்கள். ஆசிரியர் உதவியின்றியே மாணவர்கள் பயிலும் வகையில் அமைந்தவை ஐயர் அவர்களின் பதிப்புகள்.

ஐயர் அவர்கள் பழுத்த சைவர், ஆழ்ந்த சைவப்பற்று உடையவர். அவர் பழகிய புலமைசான்ற பெருமக்கள் அத்துணைபேரும் பெரும்பாலும் அவ்வாறானவர்களாகவே இருப்பினும் எவ்வித சமயக்காழ்ப்பும் இல்லாமல் சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்ற சமணக் காப்பியங்களையும், மணிமேகலை போன்ற பௌத்தக் காப்பியங்களையும் எடுத்துக்கொண்டு அந்தந்த மதத்தாரும் வியக்கும்வண்ணம் நடுநிலையோடு பதிப்பித்திருப்பது வியப்பிற்குரிய செயலாகும்.

முடிவுரை


ஓலைச்சுவடிகளுக்குள் மறைந்து கிடந்த புராணங்களையும், காப்பியத்தையும் தேடிச் தூசி தட்டி அதை அச்சாக்கி புத்தகமாக அலங்கரித்து உலகறியச் செய்தவர் உ.வே.சா. அவர் தம் பெருமையை உலகறியும். இத்தகைய பெருந்தகையை பெற்ற உத்தமதானபுரம் சிறப்புப் பெற்றது போல் தமிழ்மொழியும் சிறப்புற்றது எனலாம்.

துணைநூற்கள்

1. ***தமிழ் வளர்த்த தமிழர்கள்***, திரு.தா ஸ்ரீனிவாசன், மகா பதிப்பகம்.
2. ***உ.வே.சா ஒரு தமிழ் வாழ்வு***, திரு.எஸ்.டி, காசிராசன், இ.ஆ.ப. உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.

3. ***உ.வே.சா. பதிப்புப்பணியும் பன்முக மாட்சியும்***, முனைவர் செ. இராசு, உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. ***தமிழ் வளர்த்த சான்றோர்கள்***, முனைவர் துரை,பட்டாபிராமன், 1999

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



43. உ.வே.சா. பதிப்பில் சிந்தாமணியும் சிந்தா மணியும்

முனைவர். அ. இலட்சுமி தத்தை,
உதவிப்பேராசிரியர். தமிழ்த்துறைத்தலைவர் (பொறுப்பு),
புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி.

தமிழுக்காகவே வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றித், தமிழை உலக மொழிகளிடையேயும் செம்மொழி நிலைக்கு உயர்த்தியும் நிலைபேறடையச் செய்தவர்களுள் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்கள் குறிப்பிடத்தவர்கள். ஐம்பெருங்காப்பியங்களில் மூன்றையும் சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டையும் எட்டுத்தொகையில் ஐந்தையும் ஒரே சுவடியைக் கொண்டு பெருங்கதையையும் சீரிய முறையில் ஆய்ந்து பதிப்பித்துத் தமிழ்ப்பதிப்பு வரலாற்றின் வழிகாட்டியாக இருந்தவர் இவர்.

உ.வே.சா அவர்களின் தமிழ்ப்பணியைப் பதிப்புப் பணி என்ற வளையத்திற்குள் மட்டும் வரையறை செய்துவிட முடியாது. அவர் பதிப்பித்த நூல்கள் 74, எழுதிய வெளியிட்டஉரைநடை நூல்கள் 18, அவரது காலத்திற்குப் பின் வெளியிடப்பட்ட நூல்கள் மூன்று. உ.வே.சா அவர்கள் தனது பதிப்புப் பணியினை மூலப்பாடத் திறனாய்வு முறையிலும் நூலைப் பதிப்பித்தல் முறையிலும் முன்னெடுத்துள்ளார். சீவக சிந்தாமணியை உ.வே.சா அவர்கள் பதிப்பித்த ஆய்வு வரலாற்றை மையமாக வைத்து இக்கட்டுரை ஒரு மீள்வாசிப்பினைத் தர எத்தனிக்கின்றது.

பதிப்பின் தோற்றம்

அவருடைய நட்பினால் என் வாழ்க்கையில் ஒரு புதுத்துறை தோன்றியது. தமிழிலக்கியத்தின் விரிவைஅறிய முடிந்தது. பிரபந்தங்களிலும் புராணங்களிலும் தமிழின்பம் கண்டு மகிழ்வதோடு நில்லாமல் பழமையும் பெருமதிப்பும் உடைய தண்டமிழ் நூல்களில் பொதிந்து கிடக்கும் இந்தமிழ் இயற்கையின்பத்தை நான் மகிழ்வதோடு பிறரும் அறிந்து இன்புறச் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது.” (பக்:326) என்பது உ.வே.சா அவர்களின் கூற்று.

இதெல்லாம் படித்து என்ன பிரயோசனம்?
சரி, அவ்வளவு தானே? போன்ற கேள்விகள் சேலம் இராமசாமி முதலியார் அவர்களால் உ.வே.சாவிடம் கேட்கப்பட்ட கேள்விகள்.

இந்தக் கேள்விகள் தமிழ்த்தாத்தாவை மாற்றுச்சிந்தனைவாதியாகக் கட்டமைத்தன. மூலப்பிரதிகளை எடுத்துச் சீரமைத்து உரைகளோடு பதிப்பிக்கத் தூண்டுகோலாய; அமைந்த கேள்விகள் இவைகள். பழையத் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடவும் உலகம் போற்றும் தமிழுலக நாயகராக வீற்றிருக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்திய மிக முக்கிய நபர் சேலம் இராமசாமி முதலியார் என்பதை நாம் உணரமுடிகின்றது.

சிந்தாமணியின் பெருமையை நீங்கள் இப்போது நன்றாக உணர்ந்திருப்பீர்கள். இந்த அருமையான காவியம் படிப்பாரற்று வீணாகப் போகாமல் நீங்கள் பாதுகாக்க வேண்டும். இன்னும் சில பிரதிகளைச் சம்பாதித்து நீங்களே அச்சிட்டு வெளிபடுத்த வேண்டும். அதைப் போன்ற உபகாரம் வேறொன்றும் இல்லை”(பக்;343) என்று இராமசாமி முதலியார், தன்னிடம் கூறியதாகப் பதிவுசெய்கின்றார் உ.வே.சா. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் நூலான திருக்குடந்தைப் புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்ட உ.வே.சா அவர்கள், இவ்வெளியீடு தான் பதிப்பித்த இரண்டாவது வெளியீடு என்கின்றார்.

அப்புராணப் பதிப்பில் அச்சுத்தாள்களைத் திருத்தும் முறையை நான் தெரிந்து கொண்டேன். நான் சிந்தாமணியைப் பரிசோதித்துப் பதிப்பிக்க வேண்டுமென்ற சங்கற்பம் செய்துகொண்டிருந்தேன். நன்கு நிறைவேற வேண்டும் என்ற கவலை. முதலில் புராணத்தைப் பதிப்பித்துப் பின் சிந்தாமணியைத் தொடங்குவதை நல்ல அறிகுறியாகவே நான் கருதுகின்றேன்."(பக்:347) எனக் கூறுகின்றார்.

சீவகசிந்தமணியை உ.வே.சா அவர்கள் தனியே தன் கைப்பட இரண்டு முறை குறிப்புப் புத்தகங்களில் முழுவதையும் எழுதிவைத்துக் கொண்டுள்ளார். மீண்டும் மீண்டும் படிக்க, படிக்க உரையில் மூழ்கியமை, புதுமைச் சுவை, பிற்கால நூல்களில் சிந்தாமணியின் தாக்கம், காவிய மரபு பின்பற்றியமை என சிந்தாமணியின் பல்வகை சிறப்புகளில் தான் மூழ்கியதாகப் பதிவிடுகின்றார். உ.வே.சா அவர்கள் பதிப்புத்துறையுள் ஆழங்கால் பட்டமைக்குச் சிந்தாமணியே தூண்டுகோலாய் அமைந்தது எனலாம்.

உரை உணர்த்திய ஆராய்ச்சி

சீவக சிந்தாமணிக்கு உரை எழுதியவர் உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர். பாடம் சொல்ல தொடங்கிய உ.வே.சா அவர்கள் "அதனுடைய போக்கிலே உள்ள கம்பீரம், சொல்லாட்சிச் சிறப்பும் என் மனதைச் கவர்ந்தன" என்கின்றார். இக்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியர் உரை மகுடம் மட்டுமின்றி தமிழுலகிற்குப் பேறு எனலாம். உ.வே.சாவிற்கு நச்சினார்க்கினியர் உரை மேலும் பல ஆராய்ச்சி சிந்தனைகளை வளர்த்தது என்பது மிகையில்லை. இலக்கிய ஆராய்ச்சியையும் உரைஆராய்ச்சியையும் ஒருங்கே கற்றார் உவேசா அவர்கள்.

உரையில் உ.வே.சா அவர்களுக்கு இரண்டு விடயங்களில் மட்டுமே சிறிது தொய்வு மனம் தோன்றுவதாகப் பதிவுடுகின்றார். (1) ஒருசில சொற்களுக்குப் பல பாடல்களுக்கு முன்னோ பின்னோ இணைத்துப் பொருள் வழங்குவது. (2) ஒரு நூற்செய்யுட் பகுதியை மேற்கோள் காட்டுமிடத்து அந்த நூற்பெயரைச் சொல்வதில்லை, "என்றார் பிறரும்" என்று எழுதிவிடுவதாகக் குறிப்பிடுகின்றார்.

அவர் மேற்கோளாகக் காட்டும் உதாரணங்களோ நான் படித்த நூல்களிலே இல்லாதன.அவர் காட்டும் உதாரணங்களின் தொகுதியே ஒரு தனி உலகமாக இருக்கும்; என்ற மலைப்பைத் தோற்றுவித்ததாகக் கூறுகின்றார். "நூற்பெயரையாவது இந்த மனிதர் சொல்லித் தொலைக்கக;கூடாதா?" என்று அடிக்கடி வருத்தம் உண்டாகுமாம்.

ஆனாலும் நச்சினார்க்கினியரின் அரிய உரைத்திறனைப் பெருமைப்படுத்தாமல் இருக்கமுடியாது. சுருக்கமாக விஷயத்தை விளக்கிவிட்டு எது நுணுக்கமான விஷயமோ அதற்கு அழகாகக் குறிப்பும் எழுதுகிறார். அவர் எழுதும் பதசாரங்கள் மிக்க சுவையுடையனவாம். அவர் அறிந்த நூல்களின் பரப்பு ஒரு பெரும் கடலென்றே சொல்லவேண்டுமாம். இவ்வாறு உரையாசிரியரின் சிறப்பையும் எடுத்தோதுகின்றார் உ வே சா.

சிந்தாமணி செய்யுட் பாடலுக்கு உரை எழுதும் போது பல செய்யுட் சூத்திரங்களையும் செய்யுட் பாடல்களையும் பாடல்வரிகளையும் இணைத்து உரை வழங்கியிருக்கின்றார் உரையாசிரியர். இது வாசிப்பாளனுக்குப் பரந்த இலக்கிய அறிவைத் தூண்டியது எனலாம். இந்த அடிப்படையிலே பதிப்பிக்க முனைந்த உவேசா அவர்களுக்கு உரையில் கூறப்பட்டுள்ள பாடல்களின் மூலத்தைத் தேட வேண்டும் என்ற எண்ணமும் ஆராய்ச்சிப; போக்கும் உதித்தது.

தொல்காப்பியச் சூத்திரங்களை மாத்திரம் தெரிந்துகொண்டேன். திருக்கோவையார் திருக்குறள் என சில செய்யுட் பகுதிகள் தெரிந்தன. மற்ற மேற்கோள்களைப் படித்தபோது கண்ணைக் கட்டிக் காட்டில; விட்டதாக இருந்தது. சிந்தாமணியைப் போலத் தமிழ்நாட்டில் வழங்காத வேறு நூல்கள் என்ன என்ன உள்ளன என்ற ஆராய்ச்சியில் என் மனம் சென்றது."(பக்:347)

பிரதிகளைப் பகிர்ந்தவர்கள்

சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்கும் முயற்சியில் முழுவதுமாகக் கவனம் செலுத்தியதின் விளைவு, பற்பல பிரதிகள் தனது குருவருளாலும் அயராமுயற்சியாலும் கிடைத்ததாகப் பதிவிடுகின்றார்.

1. திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீலஸ்ரீசுப்பிரமணிய தேசிகமூர்த்தி அவர்கள் தந்த பிரதி.
2. ஆதீனத்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தந்த பிரதி.
3. திரிசிரபுரம் சி.தியாகராச செட்டியார் அவர்கள் தந்த பிரதி.
4. யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் தந்த பிரதி.
5. சென்னை மழவை மகாலிங்கையரவர்கள் தந்த பிரதி.
6. அஷ்டாவதானம் சபாபதி முதலியார் அவர்கள் தந்த பிரதி.
7. .தி.க.சுப்புராய செட்டியார் அவர்கள் தந்த பிரதி.
8. திரு.சின்னசாமி பிள்ளை அவர்கள் தந்த பிரதி.
9. சேலம் இராமசாமி முதலியார் அவர்கள் தந்த பிரதி.
10. உடையூர் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தந்த பிரதி.
11. திருநெல்வேலி சாலிவாடீசுவர ஓதுவார் அவர்கள் தந்த பிரதி.
12. ஈஸ்வரமூர்த்திக் கவிராயர் அவர்கள் தந்த பிரதி.
13. தூத்துக்குடி குமாரசாமி பிள்ளை அவர்கள் தந்த பிரதி.
14. சிதம்பரம் தருமலிங்க செட்டியார் அவர்கள் தந்த பிரதி.
15. தஞ்சை மருதமுத்து உபாத்தியாயர் அவர்கள் தந்த பிரதி.
16. விருஷபதாச முதலியார் அவர்கள் தந்த பிரதி.
17. கூடலூர் விசயபால நயினார் அவர்கள் தந்த பிரதி.
18. வீடுர் சந்திரநாத செட்டியார் அவர்கள் தந்த பிரதி.

இப்படி உவேசா அவர்களின் சுவடித் தேடும் யாத்திரை மிக முக்கிய இடம்பெறுகின்றது. பிரதிகளைச் சம்பிரதாயங்கள் என்ற பெயரில் வழங்க மறுத்துப் பின் வழங்கி உவேசாவிற்கு உதவிய பலர் உண்டு. இவரது சுவடித்தேடுதல் வேட்டையினால் இன்றையத் தமிழுலகிற்குப் பல அரிய நூல்கள் கிடைத்தன என்பதே உச்சம்.

உரைக் காட்டும் இலக்கியங்கள்

உவேசா அவர்கள் சிந்தாமணி மட்டுமல்லாது செம்மொழி இலக்கியங்கள் பலவற்றையும் பதிப்பித்ததே அவரைத் தமிழ்த்தாத்தா என்ற உயரத்தில் நிறுத்தியது என்பர். இங்கு ஒரு முதன்மையான விடயம் செம்மொழி இலக்கியங்களைப் பதிப்பித்து வெளிக்கொணர வழிவகுத்தது சீவக சிந்தமணி ஆராய்ச்சிப் பதிப்பு என்பது மிகையல்ல.

சீவகசிந்தாமணியை மாத்திரம் படித்து ஆராய்வதனால் அந்த நூலைப் பதிப்பிக்க இயலாதென்றும், மற்றப் பழைய நூல்களயும் படித்துத் தெரிந்து கொண்டால் தான் சிந்தாமணியின் பொருள் விளக்கமாகுமென்றும் நான் உணர்ந்தேன்."(பக்:349)

சிந்தாமணியின் உரையில் மேற்கோள்களாக இடம்பெற்றுள்ள செய்யுட்களின் மூலம் பல இலக்கியங்கள் வெளிவந்தன. மேற்கோள் பாடலின் முழு நூலையும் தேடும் ஆர்வமும் தோன்றியது. மேற்கோள் பாடல்வரிகளைத் தனியாக எழுதிவைத்துத் தேடியதாக உ.வே.சா அவர்கள் குறிப்பிடுகின்றார். "சிந்தாமணி உரையில் காணப்பட்ட மேற்கோள்களைத் தனியே எழுதி வைத்துக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்து வருவேன். அதனால் அவை மனப் பாடமாகவே இருந்தன. அவற்றில் சில அந்தப் பழைய ஏடுகளில் காணப்பட்டன. அவற்றைக் கண்டபோது பெரிய புதையல் கிடைத்ததுப் போன்ற மகிழ்ச்சி எனக்கு உண்டானது" (பக்:350) என்கிறார் உவேசா அவர்கள்.

தொல்காப்பியம், திருக்கோவையார், திருக்குறள், அகநானூறு போன்ற பல நூல்களின் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ளமையை உணர்ந்ததன் வெளிப்பாடே. ”எல்லாவற்றையும் ஒருவகையாகத் தெரிந்து கொண்ட பிறகே சிந்தாமணியை அச்சிட்த் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.” (பக்:351) என்ற கூற்று ஐயர் அவர்களின் ஈடுபாட்டையும் பிற இலக்கியங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற எத்தனிப்பையும் உணர்த்திநிற்கின்றது.

சிந்தாமணியும் சிந்தா மணியும்

சிந்தாமணி ஆராய்ச்சிப் பதிப்புப் பணியின் ஊடாகக் கிடைத்த அனுபவத்தால் மேற்கோள் நூல்களைத் தேட முயன்றார் உ.வே.சா அவர்கள். எந்தச் செய்திக்காக இந்த மேற்கோள், எந்த நூலிலிருந்து இந்த மேற்கோள் என்ற ஐயப்பாடே இவரைப் பழைய நூல்களைத் தேடும் முயற்சிக்கு இட்டுச்சென்றது. தொல்காப்பியம் தொடங்கிப் பல நூல்களின் மேற்கோள்களைக் காண்கிறார். திருவாவடுதுறைப் புத்தகச் சாலையில் தேடிப் பெற்ற நூல்சுவடிகள் பற்பல. எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள் என எண்ணற்ற நூல்கள் கிடைத்தன.

”படித்தால் எளிதில் விளங்ககூடிய நூலகளாக அவை தோன்றவில்லை. அவற்றில் உள்ளது வேறு ஒரு தனிப் பாஷைப் போலவே இருந்தது. ஆனாலும் நான் விடவில்லை. படித்துப் பார்த்தேன். தொல்காப்பிய உரைகளில் வரும் பல செய்யுட்கள் அவற்றில் இருந்தன. இந்த நூல் தொகுதியே ஒரு தனிப் பிரபஞ்சம் என்ற எண்ணம் எனக்கு வரவர வலிவடைந்தது” (பக்:350) என்கிறார் உ.வே.சா அவர்கள்.

“சிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டதைப் படித்த என் நண்பர்கள் என்னைப் பாராட்டினர். அதனால், பண்டைத் தமிழ் நூல்களையும் ஐம்பெருங்காப்பியங்களுள; சிலப்பதிகாரத்தையும் பதிப்பிக்கும் முயற்சியை மேலும் செய்துவரவேண்டுமென;ற எண்ணம் வலியுறத் தொடங்கியது.” (பக்:396)

இவ்வாறு பல நூல்களைப் பதிப்பிக்க அடிநாதமாக இருந்தது சீவக சிந்தாமணியே எனல் பொருந்தும். சீவக சிந்தாமணிக்கு உரைவகுத்த உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியர் தந்த எடுத்துக்காட்டு அல்லது மேற்கோள் பாடல்களே பழைய இலக்கியங்களைப் பறைசாற்றின உ.வே.சா அவர்களுக்கு. தமிழுலகின் தொன்மையையும் செழுமையையும் நமக்கு அடையாளப்படுத்தி, உச்சிமேற்புலவரால் உரை செய்யப்பட்ட சிந்தாமணி, என்றென்றும் தமிழன்னைக்கும் தமிழர்களுக்கும் சிந்தா மணி என்பதை இக்கட்டுரை விவரித்துள்ளது.

<u>குறிப்பு நூல்கள்</u>

1. சீவகசிந்தாமணி : ஏழாம் பதிப்பு. ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு.
2. என் சரித்திரம் : டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம். சென்னை.
3. செந்தமிழின் சீவகசிந்தாமணி என்னும் செம்மொழிக்காப்பியம்: ஜைன இளைஞர் மன்றம், சென்னை.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

44. பதிப்புத் துறைத்தந்தை உ.வே.சாமிநாதையர்

திருமதி. நந்தினி, எம்.எஸ்.ஸி., எம்.ஃபில்.,
உதவிப்பேராசிரியர், கணிதத்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.

பிறப்பு : பிப்ரவரி 19,1855
ஊர் : உத்தமதானபுரம், தஞ்சாவூர்
இறப்பு : ஏப்ரல் 28, 1942
பணி : பதிப்பாளர்

அறியப்படுவது : அழிநிலை நூல்களைப் பதிப்பித்தமை

முன்னுரை

உ.வே.சாமிநாதையர் உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் மகன் சாமிநாதன் சுருக்கமாக உ.வே.சா. இவர் சிறப்பாக தமிழ்த்தாத்தா என அறியப்படுகிறார். இவர் ஒரு தமிழறிஞர். அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் புதுப்பித்தவர். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டு புரிந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். தமது அச்சுப் பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மை, மற்றும் செழுமையை அறியச் செய்தவர். இவர் 90-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப்பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார்.

பிறப்பு மற்றும் கல்வி

சாமிநாதன் பிப்ரவரி 19, 1855-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் - சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். உ.வே.சா தனது தொடக்கத் தமிழ் கல்வியையும், இசைக் கல்வியையும் சொந்த ஊரில் நாகப்பட்டினம் மாவட்டம் திருவாடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ்பெற்ற மகாவித்துவான் என்று அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு காலம் பயின்று தமிழறிஞர் ஆனார். தொடக்கத்தில் கும்பகோணத்திலிருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியில் இருந்த சாமிநாதன், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்தார்.

உ.வே.சா வாழ்க்கையின் சிறப்பு

உ.வே.சா என்றழைக்கப்படும் உ.வே.சாமிநாதஐயர், உழைத்திராவிட்டால் தமிழுலகிற்கு சிலப்பதிகாரம் பற்றித் தெரிந்திருக்க இயலாது. அகநானூற்றுக்கும் புறநானூற்றுக்கும் வேறுபாடு தெரியாமற் போயிருக்கும். மணிமேகலை மண்ணோடு மறைந்து போயிருக்கும். இப்படி நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து மீட்டு பதிப்பித்து உயிர்ப்பித்தவர் என்னும் பெருமை இவரைச் சாரும். மேலும், தன்னுடைய பல சொத்துக்களையும் விற்று பல தமிழ் இலக்கிய

நூல்களைப் பதிப்பித்தார். இத்தகைய அரிய சேவைக்காக இவர் கொண்ட சீரிய முயற்சிகள் தாராளம், பட்ட சிரமங்கள் ஏராளம். இருந்தும் மனம் தளராது இச்சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி துல்லியமாக அறிந்து கொள்ள இவருடைய உழைப்பு பெரிதும் உதவியது. இவர் ஏட்டுச் சுவடிகளைப் பார்த்து அப்படியே அவைகளை பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து மறைந்துவிட்ட அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும்படி செய்தார். அவர் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர் மறைந்த காலத்தில் உயர்ந்து நின்ற தமிழின் நிலைக்கும் பெரிய வேறுபாடுள்ளது.

சீவக சிந்தாமணியைக் கற்றுக் கொடுக்க முயன்றபோது ஏட்டுச்சுவடியிலிருந்த நூலை மிகுந்த சிரமத்திற்கிடையில் கற்றுப் பாடம் சொல்லிக் கொடுத்ததால் இந்த நூலில் உள்ள செய்திகளை உணர்ந்தவர், இந்த நூலை 1887-ம் ஆண்டு முதன் முதலாக வெளியிட்டார். தமிழர்கள் அளித்த நல்லூக்கம் இப்பணியை அவர் தொடர்ந்து செய்ய காரணமாயிற்று. இவருடைய வாழ்க்கை வரலாறு தமிழ்ப்பால் அன்பு கொண்ட அனைவரும் போற்றும் ஒரு கருத்துக்கருவூலமாக இருக்கின்றது.

சிறுவயதில் இவரிடம் யாராவது ஆங்கிலம் இவ்வுலக வாழ்விற்கும், வடமொழி அவ்வுலக வாழ்விற்கும் பயன்படும் என அறிவுறுத்தினால், என் அன்னை தமிழானது இவ்வுலகம் மற்றும் அவ்வுலக வாழ்வு இரண்டிற்கும் இன்றியமையாதது எனக் கூறனார்.

இயற்றிய நூல்கள்

இவர் பல செய்யுள்களையும், நூல்களையும் இயற்றியுள்ளார். தந்தையாரின் வறுமையைக் கண்டு ஒரு பெரிய மனிதரிடம் சென்று நெல்வேண்டுமென்று இயற்றிய செய்யுள்தான் அவரின் முதல் செய்யுள் கலைமகள் துதி, திருலோகமாலை, ஆனந்தவல்லியம்மை, பஞ்சரத்தினம் முதலியன மற்ற நூல்களாகும்.

உ.வே.சா பதிபித்த முதல் புத்தகம்

பாண்டி நாட்டில் செவந்திபுரத்தில் வேணுவளிங்கத் தம்பிரான் கட்டிய மடாலயத்திற்கு சுப்பிரமணி தேசிக விலாசம் என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித்து பல தமிழ்ப்புலவர்கள் பாடலியற்றியிருந்தனர். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா 8 பாடல்கள் இயற்றினார். வேறு சில பாடல்களும் சேர்த்து திருநெல்வேலி முத்தமிழாகரமென்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன்முதலாக புதுப்பித்தார்.

அச்சு பதித்த நூல்களின் பட்டியல்

சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூதுநூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள்,

2 மும்மணிக்கோவை நூல்கள், 2 இரட்டை மணிமாலை நூல்கள், அங்கையற்கண்ணி மாலை, இதர சிற்றிலக்கியங்கள்.

தன் வரலாறு

உ.வே.சாமிநாதையர் தனது வரலாற்றை ***"என் சரிதம்"*** எனும் தலைப்பில் ஆனந்தவிகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக எழுதி வந்தார். இது 1950 ஆம் ஆண்டில் தனிப் புத்தக வடிவம் பெற்றது.

பேச்சுத் திறன்

உ.வே.சா கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமை உடையவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா ஆற்றிய சொற்பொழிவே 'சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்' எனும் நூலாக வெளியிடப்பட்டது.

பட்டங்கள்

உ.வே.சா தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் அளித்தது. இது தவிர மகாமகபாத்தியாய மற்றும் தக்ஷிண கலாநிதி எனும் பட்டமும் பெற்றுள்ளார். இந்திய அரசு பிப்ரவரி 18, 2006ம் ஆண்டு இவரது நினைவு அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது.

நினைவு இல்லம்

உத்தமதானபுரத்தில் உ.வே.சா வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. 1942-ல் இவர் பெயரால் சென்னை வசந்த நகரில் டாக்டர். உ.வே.சா நூல்நிலையம் அமைக்கப்பட்டு இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

உ.வே.சா விருது

உ.வே.சா விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில் ஒன்றாகும். 2010-ம் ஆண்டு முதல் இந்தவிருது உ.வே.சாமிநாதையர் நினைவாக வழங்கப்படுகிறது. கல்வெட்டுகள், அகழ்வாய்வுகள், ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துப்படிகள், கிடைத்தற்கரிய நூல்கள் முதலியவற்றை அரும்பெரும் முயற்சிகளால் கண்டறிந்தும், வெளிக்கொணர்ந்தும் தமிழுக்கு வளம் சேர்க்கும் பணிகளை மேற்கொள்ளும் தமிழறிஞர்களின் சேவைகளைப் பாராட்டும் வழதமாக இந்த விருது அளிக்கப்படுகிறது.


இந்த விருதுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் 8 கிராம் அளவிலான தங்கப் பதக்கமும், தகுதிச் சான்றும் அளித்து சிறப்பிக்கப்படுகின்றனர்.

முடிவுரை

உ.வே.சா அவர்கள் ஆற்றிய பணிகளைக் கண்டு பலரும் பாராட்டி மகிழ்ந்தனர். இவர் தமிழ்த்தொண்டு புரிய ஆர்வம் கொண்டு அழிந்து கொண்டிருந்த ஓலைச் சுவடிகளைத் திரட்டி ஆராய்ந்து உயிர் கொடுத்தார். தனது விடா முயற்சியால் பதிப்புப் பணியில் முன்னோடியாகத்

திகழ்ந்த இவரை இவ்வுலகம் இருக்கும் வரை மறக்காமல் இருக்கும் தமிழுக்கே, தன் வாழ்க்கையை அர்ப்பணித்த செம்மல் எனப் போற்றிப் பாராட்டி மகிழ்வோம்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



45. பன்முகப் பார்வையில் தமிழ்த்தாத்தா உ.வே.சா.

திரு வே. எழிலரசு, எம்.ஏ.,
தமிழ் ஆர்வலர்.

பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயில்
துதியறிவாய்! அவர் நெஞ்சின் வாழ்தடதறிவாய்!
இறப்பின்றி துலங்குவாயே!

-மகாகவி பாரதியார்

1906-ம் ஆண்டு உ.வே.சாமிநாதையருக்கு மஹா மஹோபாத்தியாய பட்டம் கொடுத்தபோது, மகாகவி பாரதியார் தமிழ்த்தாத்தாவை புகழ்ந்தும் வாழ்த்தியும் எழுதிய பாடல் மேற்கண்ட பாடல்.

இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சியும் புலமையும் பெற்றிருந்த உ.வே.சா இசையிலும் புலமை பெற்றிருந்தார். உரைநடை எழுதுவதில் தெளிவும் வல்லமையும் கொண்டிருந்த உ.வே.சா மணிமேகலை, சிலப்பதிகாரம் காவியங்களுக்கு கதைச்சுருக்கம் எழுதினார். புத்தர் சரித்திரம், உதயணன் கதை, ஆகிய நூல்களையும் எழுதினார். உ.வே.சா தன்னுடைய ஆசிரியராயிருந்த மீனாட்சி பிள்ளையின் வரலாற்றை எழுதினார்.

பழந்தமிழ் நூல்களை பதிப்பித்து வெளியிட்ட ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை ஆகியோருக்கு பிறகு சுவடிகளை தேடித்தேடிப் பயணித்து நூல்களை பதிப்பித்தவர் உ.வே.சா.

எந்த புதிய துறைகளைப் பற்றியும் எழுதும் போதும் - அதன் ஆழ்விரிவுகளைக் கற்றுத் தேர்வது ஆய்வாளர்களுக்கான அடிப்படைப் பண்பு. உ.வே.சாமிநாதய்யர் இயல்பிலேயே இத்தகு பண்பு நலன்களைக் கொண்டிருந்தார். வைதீக குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவருக்குச் சமண மதம் பற்றிய நுட்பங்களும், சடங்குகளின் அர்த்தச் செறிவும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. உ.வே.சா. சீவகசிந்தாமணிக்கு உரை எழுதும்போது, இலக்கண இலக்கிய அறிவில் போதுமான ஞானம் பெற்றிருந்தாலும், சமண மத நூல்களை பயின்றார். அத்தோடு நில்லாது சமணப் பெரியார்களைத் தேடிச் சென்று அவர்களோடு உரையாடி, தன்னை முழுவதும் சமண அறிவு கொண்டவராக வளர்த்துக் கொண்டு அதன் பின்பே சீவகசிந்தாமணிக்கு உரை எழுதினார். இவர் முதன் முதலில் உரை எழுதினார். இவர் முதன் முதலில் உரை எழுதி பதிப்பித்த படைப்பு என்ற பெருமை ‘சீவக சிந்தாமணிக்கு’ கிடைக்கிறது.

உ.வே.சா தொடர்ந்து தமிழ் இலக்கியப் பனுவல்களை ஆராய்கின்ற வேளைகளில், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் ஆகிய உரையாசிரியர்களின் தெளிவுரைகளிலும் விளக்க உரைகளிலும் குறிப்பிடப்படும் சங்கப் பாடல்களைத் தேடிப் பயணிக்கும் வழக்கத்தை கைகொண்டார். அப்படித் தேடும்போது பத்துப்பாட்டுச் சுவடிகள் கிடைக்கின்றன. ஆனால் ஓலைச் சுவடிகளில் உள்ள பாடல்கள் அரைகுறையாக இருக்கின்றன. சிதிலமடைந்த சுவடிகளிலிருந்து பாடல்கள் முழுவதுமாக கண்டெழுத முடியவில்லை. செல்லரித்த சுவடிகளிலிருந்து முடிந்தவரை பாடல்களைப்

பெயர்த்தெழுதி விட்டு கண்டு அறிய முடியாத பாடலின் மிச்ச சொச்ச வரிகளுக்காக மீண்டும் மீண்டும் கிராமம் கிராமமாகப் பயணித்தார். எவர் வீட்டில் பழைய ஓலைச்சுவடிகள் இருக்கிறது எனக் கேள்விப்பட்டாலும் சிரமம் பாராது, தூரம் நோக்காது, தொல்லை கருதாது, பயணித்துச் சுவடிகளைக் கண்டடைந்து அந்த படைப்புகளின் முழுமையான வடிவம் கிடைக்க வேண்டுமென்று ஓயாது உழைத்தார். இப்படித்தான் பத்துப்பாட்டு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய சங்க கால பனுவல்களைப் கண்டடைந்து பதிப்பித்தார்.

சான்றுக்கு ஒரு தகவலைப் பார்க்கலாம். சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, என்று பிரித்தனர் அறிஞர்.

திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு. மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்துப் படைப்புகளும் பத்துப்பாட்டில் அடங்கும். இந்த இரண்டு வகைமையும் பதினெண் மேற்கணக்கு நூல்களில் அடங்கும். இந்தப் படைப்புகளில் குறிஞ்சிப்பாட்டு பொறிக்கப்பட்ட ஓலைச்சுவடிகளை உ.வே.சா கண்டடைகிறார்.

குறிஞ்சிப்பாட்டு அதன் பாடுபொருளால் மட்டுமல்லாது பாடுவதற்குக் காரணமாய் அமைந்த நிகழ்வினாலும் தமிழ்மொழியின் உயர் பெருமைக்கு நற்சான்றாய் விளங்குகிறது.

வடமொழியை நன்று கற்றுத் தேர்ந்த இசைக்கலையில் வல்லவரான பிரகத்தன் என்னும் ஆரிய மன்னனுக்கு மாண்புமிக்க கவித்துவ செறிவுமிக்க தமிழின் பெருமையை உணர்த்தவும், தமிழைக் கற்பிக்கவும் கபிலரால் பாடப்பட்டது குறிஞ்சிப்பாட்டு.

இந்தக் குறிஞ்சிப்பாட்டில் மலைவளம், காடுவளம், குறிஞ்சி நிலமக்களின் வாழ்வொழுக்கம், ஆகியவைகளை பாடுகின்ற கபிலர் 99 பூக்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். உ.வே.சா அவர்களுக்குக் கிடைத்த சுவடியில் 96 பூக்களின் பெயர்கள்தான் இருக்கின்றன. சுவடியினைச் செல்லரித்திருந்தால், மூன்று பூக்களின் பெயர்களை உறுதிபடுத்த முடியவில்லை. மற்றெல்லா பிரதிகளையும் ஒப்பு நோக்குகிறார். எல்லாவற்றிலும் அந்த மூன்று பூக்களின் பெயர்களை விட்டு விட்டே பதிவு செய்திருக்கிறார்கள். உ.வே.சா கபிலரின் அந்தத் தொலைந்து போன மூன்று பூக்களைத் தேடத் தொடங்குகிறார். அவர் திருவாடுதுறை ஆதினத்தின் ஆதரவைப் பெற்றவர், ஆனால் தர்மபுரம் ஆதினத்தில் உள்ள சுவடிகளைத் தேடிப் பயணிக்கிறார். ஆதினங்களின் அனுமதியைப் பெற்றுத் தர்மபுர ஆதினத்தில் உள்ள குறிஞ்சிப் பாட்டின் சுவடிகளை இரவு முழுக்க தேடிப் படித்து அந்த விடுபட்ட மூன்று பூக்களின் பெயர்கள் தேமா, மணிச்சிகை, உந்துள் என்று கண்டுபிடித்து அதைத் தனது பதிப்பில் சேர்க்கிறார். எந்தப் படைப்பையும் தெளிவாகவும், முழுமையாகவும் பதிப்பிக்க வேண்டுமென்ற பதிப்பு அறம் அவரை வாழ்நாள் முழுக்க இயக்கியிருக்கிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணிக்கு உரையும் பதிப்பும் காண உழைத்தபோது சமண மத அறநூல்களைக் கற்றதும், சமணப் பெரியார்களின் அறிவுரைகளைப் பெற்றதும் போலவே, மற்றொரு காப்பியமான மணிமேகலையைப் பதிப்பிக்கும்போது, அவற்றில் உள்ள பௌத்த சமயக் கருத்துக்களில் தெளிவு பெறுவதற்காக மாநிலக் கல்லூரி பேராசிரியரும், பௌத்த அறிஞருமான திரு.அரங்காச்சாரியர் அவர்களைச் சந்தித்துத் தெளிவுப் பெற்ற பின்பே

மணிமேகலையைப் பதிப்பித்தார். உ.வே.சா தாம் பதிப்பிக்கும் நூல்களுக்கு எழுதும் முகவுரையில் படைப்பின் முழு சாரத்தையும் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதும் கலையில் நிபுணராக இருந்தார். அதே போல பாடல்களுக்கான உரைகளின் முடிவில் பாடிய புலவரின் பெயர், பாட்டுடைத் தலைவரின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். இது அவரின் காலத்தில் பதிப்புலகின் மாபெரும் புதுமை.

கல்லூரிப் பேராசிரியராக மாணவர்களுக்குப் போதிக்கும் கலையில்
தன்னிகரற்ற பேராசன்;
வாழும் காலத்தில் வெளிவந்த பருவ இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள்
எழுதும் எழுத்தாளர்,
இலக்கிய கூட்டங்களில" பங்கேற்று, கேட்டார் பிணிக்க,
கேளாரும் வேட்ப, சொற்பொழிவாற்றும் இலக்கியப்
பேச்சாளர் (இவரின் பேருரை சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது) பாடல்கள் புனைந்து எழுதும் தேர்ந்த படைப்பாளர், இலக்கிய, இலக்கணப் பயிற்சிகளில் தேர்ந்த அறிஞர், பழந்தமிழ் படைப்புகளுக்கு சிறப்பான உரைகளை எழுதிய உரையாசிரியர்.

தமிழ்ச்சுவடிகளைத் தேடி நாடுகள், நகரங்கள், கிராமங்கள் தோறும் சுற்றியலைந்த இலட்சியப் பயணி, கண்டடைந்த ஓலைச் சுவடிகளைத் தலைமேல் சுமந்து வந்த கடின உழைப்பாளி, சைவம், வைணவம், சாக்தம், சமணம், பௌத்தம் போன்ற பெருமதங்களையும் சிறு தெய்வ வழிபாட்டு முறைகளையும் கற்றறிந்த சமய அறிஞர்.

தமிழுலகம் கண்ட, காணாத படைப்புகளைப் பதிப்பித்த படைப்புச் செம்மல், வாழ்க்கை வரலாறுகளை எழுதிய வரலாற்று ஆசிரியர்.

டாக்டர் உ.வே.சா அவர்களின் 'என் சரித்திரம்' - அவர்களின் வாழ்வு நிகழ்வுகளை - கூறுகிறது. ஊர்கள், அவர் பழகிய மனிதர்கள், அவர்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், விழாக்கள் என அனைத்தையும் பேசுகிறது எனவே 'என் சரித்திரம்' நூலை உ.வே.சா. வாழ்க்கை சரித்திரம் என மட்டும் கொள்ளாமல் தமிழகத்தின் சரித்திரமாகவே கொள்ள வேண்டும்.

மேலும் அவர் பதிப்பித்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சங்க இலக்கிய நூல்களின் பதிப்பில் படைப்பாளர்களின் வரலாற்றையும் எழுதியுள்ளார்.

இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், திருத்தக்கத்தேவர், மற்றும் சங்கப் பாடல்களைப் புனைந்த புலவர்களின் வரலாறுகளை எழுதும் போது, முன்னோர் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்த ஆதாரங்களையும் பாடல்களின் வரிகளுக்கிடையே பொதிந்துள்ள வரலாற்றுச் சுவடுகளையும் தரவுகளாகப் பயன்படுத்தியதோடு, மக்களிடையே வழங்கி வந்த கர்ண பரம்பரை கதைகளையும் கருத்தில் கொண்டு எழுதினார். இது மேற்கத்திய நாடுகளிலுள்ள வரலாற்றாசிரியர்கள் பின்னாளில் பயன்படுத்திய வரலாற்று எழுத்து முறையாகும்.

எனவே உ.வே.சா அவர்களைச் சிறந்த வரலாற்று ஆசிரியர் பட்டியலிலும் நாம் இணைத்துப் பெருமிதம் கொள்வோம்.

என் சரித்திரம் நூலின் விரிவும், ஆய்வு நோக்கும், அனுபவ தற்பார்வைகளும், தரவுகளும் மிகப்பெரும் அறிஞர் பெருமக்களால் வியந்து பாராட்டியுரைக்கப்பட்டுள்ளன, எனினும் அந்த நூலுக்கு எதிர் விமர்சனம் ஒன்றும் நவீன எழுத்தாளர் அம்பை அவர்களால் பதிவிடப்பட்டுள்ளது.

உ.வே.சா 'என் சரித்திரம் நூலில்' அவரின் மனைவி பற்றி எதையும் குறிப்பிடவில்லை. இது மாபெரும் அலட்சியம். அக வாழ்வின் முக்கிய "சாராம்சம்" விடுபடலை ஏற்றுக் கொள்ள முடியாது என பெண்ணியப் பார்வையில் குறிப்பிடும் அம்பையின் கருத்து உற்று நோக்கத்தக்கது.

1855-ம் ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் தேதி பிறந்து, 1942-ம் ஆண்டு ஏப்ரல் 28 அன்று மறைகிறார் உ.வே.சா. ஆக என்பத்தேழு ஆண்டுகள் நெடிய வாழ்வு, ஊர் ஊராக ஏடு தேடியலைந்த அந்த பெருமகனுக்கு அவரின் பெருமாட்டி எப்படியெல்லாம் சேவை செய்திருப்பார் அதற்கான "நன்றி கூரலும், நினைவு போற்றலும்" வேண்டாமா என்ற அம்பையின் கேள்வி புறக்கணிக்க முடியாதது.

உ.வே.சா. அப்படியொன்றும் பிற்போக்குவாதியல்ல என்பதற்குச் சான்றாக அவரின் வாழ்க்கையே துவக்கமாக இருக்கிறது. ஆகம விதிகளின்படி ஏடுகளை, நெய்யில் தோய்த்து வேள்வியில் ஆகுதி செய்து விட்டோம் என்று ஒரு நம்பிக்கையாளர் சொன்னபோது, "அய்யா அப்படி ஆகமம் சொல்கிறது என்றால் அந்த ஆகமத்தையல்லவா முதலில் ஆகுதி செய்ய வேண்டும் எனக் கேட்ட புரட்சியாளராயிற்றே உ.வே.சா".

சரித்திர சான்றுகளைச் சேகரித்தளித்த ஆவணக் காப்பாளர், இசைப்புலமைக் கொண்ட இனிய கலைஞர், இப்படித் தமிழ்த்தாத்தா, பதிப்புச் செம்மல் உத்தமதானபுரம் சாமி நாதைய்யர் அவர்களின் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம், அதனால்தான் அவரை மகாகவி பாரதியார்,

செம்பரிதி ஒளி பெற்றான் பைந்நரவு
சுவை பெற்றுத் திகழ்ந்தது ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்று
எவரே கொல் உவத்தல் செய்வார்?
கும்ப முனி யெனத் தோன்றும் சாமி நா
தப்புலவன் குறைவில்கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென் கொல்
பேருவகை படைக்கின்றீரே

எனப் பாடினார்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

46.தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் சுயசரிதை : ஓர் ஆய்வு

புலவர் ப. கனரத்தினம், எம்.ஏ., பி.எட்., (த.ஆ.ப.நி) ,
டாக்டர். இராதாகிருட்டிணன் விருதாளர்.

முன்னுரை

'நடை என்பது ஓர் ஆசிரியரின் மேற்சட்டை போன்றது அன்று. உடம்பின் தோல் போன்றது.' என்பார். கார்னலல். இன்று சங்ககால இலக்கியங்களும், தலபுராணங்களும், பாமர மக்களையும், சென்று அடைந்திருக்கிறது என்றால் அது தமிழறிஞர் உ.வே.சா. அவர்களையேச் சாரும். மிகச்சிறந்த பதிப்பாசிரியராக விளங்கிய உ.வே.சா அவர்கள் நல்ல உரைநடை ஆசிரியராகவும் விளங்கினர்.

> ***"குடந்தை நகர்க் கலைஞர் கோவே***
> ***காலமெல்லாம் புலவர் வாயில்***
> ***துதி அறிவாய் எவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்***
> ***சிறப்பின்றித் துலங்கு வாயே".***

என்று தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களை பாரதியார் தம் கவிதை வரிகளால் பாராட்டியுள்ளார். சீரிய பணியாற்றி "மகா மகோபாத்தியாய" என்ற பட்டம் பெற்ற உ.வே.சா. அவர்கள் தம் உழைப்பாலும் தமிழ் மீது கொண்ட பற்றாலும் இடைவிடாத முயற்சியாலும் அவர் ஆற்றிய பணிகளைத் தம் சுயசரிதையில் வெளிப்படுத்தியுள்ளார். சுயசரிதை வாயிலாக உ.வே.சா. அவர்களின் வரலாற்றையும், அவர் ஆற்றிய தமிழ் பணிகளையும், அவருடைய படைப்புகளையும் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பிறப்பும், கல்வியும்

சற்றேறக்குறைய 200 வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூர் சமஸ்தானத்தை ஆண்ட அரசர், ஏகாதசி விரதம் மறந்து உணவு உண்ட தோசம் நீங்க ஓர் அக்கிரகார பிரதிஷ்டை செய்து 48 வீடுகளைக் கட்டி 48 பிராமணர்களுக்கு வீடுகளையும், நிலத்தையும் தானமாகக் கொடுத்தார். இப்படி உத்தமமான தானப் பொருளாக ஏற்பட்ட ஊரே உத்தமதானபுரம் ஆகும் என்று தன் சுயசரிதையில் உ.வே.சா. அவர்கள் குறிப்பிடுகின்றார். அவ்வூரில் ஆனந்த வருடம், மாசி மாதம், 9-ந் தேதி, திங்கட்கிழமை (19.02.1855) இரவு வேங்கடசுப்பையா, சரஸ்வதி அம்பாள் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவரது தந்தை ஓர் இசைக் கலைஞர். தம் தந்தையிடமும், பாட்டனாரிடமும், நாராயண ஐய்யர் என்பவரிடமும், தொடக்கக் கல்வியினைக் கற்றார். தந்தையாரின் பாடல்களைக் கேட்டுக் கேட்டு இசைஞானமும் சேர்ந்தே வளர்ந்தது.

> ***"தீயினில் முழுகினார் திருநாளைப் போவார்***
> ***தீயினில் முழுகினார்".***

எனும் பாடலைப் பாடி தந்தையிடம் பாராட்டுப் பெற்றவர். அரியலூர் சடகோபையங்காரிடம் சங்கீதத்தையும், தமிழையும் ஒருங்கே கற்றார். உ.வே.சாவிற்கு தமிழ் விதையை விதைத்தவர் அவரே. குடும்ப வழக்குப்படி அவருக்கு 7-ஆம் பிராயத்தில் உபநயனம் செய்வித்து ‘வேங்கட ராம சர்சர்மன்’ என்ற நாம கரணம் செய்யப்பட்டது என்று குறிப்பிடுகிறார். அவருடைய 14-ம் வயதில் கணபதி ஐய்யரின் மகளான 8 வயது நிரம்பிய மதுராம்பிகையை மணம் முடித்து வைத்தனர். 17-ம் அகவையில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதினத்தில் தமிழ் கற்றார். பின்னர் மகா வித்துவான் தமிழறிஞர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டுகள் பயின்று தமிழறிஞர் ஆனார்.

உ.வே.சா. அவர்களின் தமிழார்வம்

திருவாவடுதுறையில் பிள்ளை அவர்களிடம் குமரசாமி தம்பிரானும் சவேரிநாத பிள்ளையும், வேறு சிலரும் உ.வே.சாவோடு சேர்ந்து பாடம் கற்கத் தொடங்கினார்கள். கம்பராமாயண பாடத்தில் தினந்தோறும் 100 அல்லது 150 செய்யுட்களைப் படித்தனர். பிள்ளை அவர்கள் தளர்ந்த நிலையிலும் உருகி உருகி பாடல்களை நடத்துவதைக் கண்டு மனம் தளரும். தமிழ் ஆர்வம் உள்ள உ.வே.சா. ஒருநாள் மாயூரம் கடைவீதியில் கம்பராமாயணம் ஏழு காண்டங்களையும் ஒருவன் விற்றுக் கொண்டிருந்தான். இரவல் வாங்கிதானேப் படிக்கிறோம், வாங்குவோம் என்று எண்ணிய உ.வே.சா விலைக் கேட்டபோது ஏழு ரூபாய் என்று சொல்ல பத்திரமாக வைத்துக் கொள், பணத்தோடு வருகின்றேன் என்று கூறி மாயூரத்திலிருந்து திருவாவடுதுறைக்கு ஓட்டமும், நடையுமாகச் சென்று சிறிய தகப்பனாரிடம் ஏழு ரூபாய் பெற்று கம்பராமாயணத்தை வாங்கினார். அந்த நூலை ஆசிரியரிடம் கொடுத்து அவர் கையால் வாங்கிக் கொண்டார். ஆசிரியர் நீ புகழுடைய வேண்டும் என்று வாழ்த்தினார். இப்படி ஒவ்வொரு நூலையும் தேடித் தேடிப்படிப்பதை அவர் சுயசரிதைத்தில் காணலாம்.

ஆசிரியர் தகுதி ஆய்வில் வெற்றி

கும்பகோணம் தியாகராச செட்டியாரிடம் சென்ற உ.வே.சாவை செட்டியார் ஒற்றை மாட்டுவண்டியில் தன்னிடம் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை ஏற்றிக் கொண்டு சாதுசேஷை ஐய்யர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு மேசை மேல் தாம் எடுத்து வந்த கந்தபுராணம், கம்பராமாயணம், பாரதம், நைடதம், முதலிய பல காவியங்களும், பல பிரபந்தங்களும், புராணங்களும், நன்னூல் முதலிய இலக்கண நூல்களையும் பரப்பி வைத்தார். சேஷை ஐய்யர், ஆர்.வி.சீனிவாச ஐய்யர் முதலான பலர் தமிழறிஞர்களிடம் நீங்கள் அனைவரும் இங்கு இருக்கின்ற எந்த நூல்களை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு உ.வே.சா. அவர்களை சோதித்துப் பார்க்கலாம் என்று உரைத்தார். அனைவரும் ஆளுக்கொரு நூல்களை எடுத்து கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். அனைத்திற்கும் உ.வே.சா. நிறுத்தி நிதானமாக அந்தந்த ராகத்தோடு பொருள் விளங்கும்படி ஒவ்வொருவருக்கும் பதில் உரைத்தார்.

செட்டியார் அவர்கள் உ.வே.சா. நூதனமான பாடல்களை இயற்றும் பழக்கம் உடையவர் என்று சொன்னார். சீனிவாச ஐய்யர் உடனே 'மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் நீங்கள் முதலில் படித்தவர்கள், நான் பின்பு படித்தவன். இதனால் ஜேஷ்ட கனிஷ்ட முறைகளும் இருவருக்கும் உண்டு. இந்த முறையால் நீங்கள் இதுவரை பார்த்து வந்த வேலையை எனக்கு செய்விக்க வேண்டும்'. இந்த கருத்தை வைத்து 5 நிமிடங்களில் அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று இயற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னார். அனைவர் கண்களும் உ.வே.சா. அவர்களையே நோக்கின.4 நிமிடங்கள்கடந்தபின்பு 5-வது நிமிடம்

"வாய்ந்தபுகழ் படைத்திலங்கு மீனாட்சி
சுந்தரநா வலவன் பாலே
ஓய்ந்தமிழ் ஆய்ந்த முறைக் கியைவுறநீ
இதுகாறும் இனிதீன் மேய
ஆய்ந்தவள நகர்க்குடந்தைக் காலேஜில்
நின்னிடம் எற்களித்தல் நன்றே
வேய்ந்தமிழ் முதற்புலமைத் தியாகரா
சப்பெயர்கொள் மேன்மை யோனே."

என்று கூறி முடித்தார். செட்டியார் குதித்து எழுந்து "என் வயிற்றில் பாலை வார்த்தீர் ஐயா" என்று பாராட்டினார். அனைவரும் 'சபாஷ்' என்று கைத்தட்டினர். இன்று ஆசிரியர்களின் தகுதி என்பது ஒரு காவியத்தில் ஒரு காதை, ஒரு காதையில் சில பாடல்களையே வினாவிற்கேற்ற விடைக்காகவும், மதிப்பெண்களுக்காகவே கற்று வருகின்ற சூழ்நிலையையே நாம் காணமுடிகிறது. ஆனால் அன்றோ ஒவ்வொரு காவியத்தையும் மனப்பாடம் செய்து பொருள் விளங்கும் வண்ணம், பயிலும் முறை இருந்தது தெரிகிறது. அதனால் தமிழறிஞர்கள் பாடல்களை இயற்றும் திறன் பெற்றிருந்தார்கள் என்பது திண்ணம்.

சிந்தாமணி ஆய்வு

சேலம் இராமசுவாமி முதலியார் கும்பகோணத்திற்கு முனிசிபாக மாற்றப்பட்டிருந்தார். அவர் இளமையிலேயே பேரறிவு படைத்து விளங்கினார். தமிழிலும், சங்கீதத்திலும், வடமொழியிலும் பழக்கம் உடையவர். உ.வே.சா அவரோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. முதலியார் அவர்களிடம் தான் படித்து உணர்ந்த புத்தகங்களின் வரிசையை கூற தொடங்கினார். "குடந்தையந்தாதி, புறைசையந்தாதி, புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி, அழகரந்ததாதி, கம்பரந்தாதி, முல்லையந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை..." கலம்பகஙக்ளில் இருபது, கோவைகளில் பதினைந்து, பிள்ளைத் தமிழ்களில் முப்பது, உலாக்களில் இருபது, தூதுகள் இப்படியே பிரபந்தங்களை அடுக்கினேன். அவர் முகத்தில் கடுகளவு வியப்புக்கூடத் தோன்றவில்லை. மேலும்,

"திருவிளையாடற் புராணம், திருநாகைக்காரோணப் புராணம், மாயூரப் புராணம், கந்த புராணம், பெரிய புராணம், குற்றாலப் புராணம், நைடதம், பிரபுலிங்க லீலை, சிவஞான போதம்,

சிவஞான சித்தியார் உரை.., கம்பராமாயணம் இரண்டு மூன்று முறை படித்திருக்கிறேன். பிள்ளை அவர்களிடம் சில காண்டங்களையம் பாடம் கேட்டிருக்கிறேன்" என்று கூறினேன். சரி அவ்வளவுதானே என்று கூறிவிட்டு சீவகசிநதாமணி படித்திருக்கிறீர்க்ளா, மணிமேகலை படித்திருக்கிறீர்களா? சிலப்பதிகாரம் படித்திருக்கிறீர்களா என்று கேட்டர். நீங்கள் சொன்ன நூல்களை கண்ணால் கூட பார்ததில்லை, கிடைத்தால் படித்து அறிந்து கொள்வேன் என்று கூறினார். அன்று சீவகசிந்தாமணி ஆய்வை தொடங்கி வைத்தார் முதலியார்.


"மூவா முதலா உலகம்மொரு மேத்தத்
தாவாத இன்பத் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ வைன்சேவடி சேர்து மன்றே".

என்பது சிந்தாமணியில் உள்ள முதல் பாட்டு. இந்த சீவகசிந்தாமணியை பல அறிஞர்களை நாடி பல காத தூரம் பயணித்து இந்த நூலை அச்சியில் ஏற்ற அவர்ப்பட்டப்பாடு சுயசரிதைத்தில் காணலாம். "ஓர் மதத்திற்கே உரியது மற்றவர்கள் கண்ணில் படக்கூடாது என்றும் மூடிவைத்திருந்தனர் சிலர். ஜைனர்களுக்குத்தான் கொடுப்பேன் என்று, மற்றவர்களுக்குத் தரமாட்டேன் என்று விரோதம் பாராட்டியவர்கள் சிலர். இருப்பினும் சிந்தாமணி யென்னும் காவியச் சோலையில் நான் சஞ்சாரம் செய்கையில் நேர்ந்த கலக்கங்களும் இடர்ப்பாடுகளும் தடைகளும் மயக்கங்களும் நாளடைவில் இறைவனருளால் சிறிது சிறிதாகத் தெளியலாயின. பதிப்பிக்கலாமென்ற எனது சங்கற்பம் நிறைவேறுமென்னும் நம்பிக்கை ஏற்பட்டது. பலரிடம் பொருள் உதவிப் பெற்று சீவகசிந்தாமணியின் மூலமும், உரையும் வெளியிட்டார். "சைவ மடமாகிய இந்த இடத்தில் ஜைன நூலுக்கு சிறப்பு தருவது நியாயம் அன்று சாமிநாத ஐய்யர் இந்த மடத்திற்கு வேண்டியவராக இருந்தும், உமாபதித சிவச்சாரியார் "பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி" என்று சொல்லியிருக்கும் ஜைன நூல் அச்சிட்டது தவறு" என்று பலர் கண்டித்தனர். இருப்பினும் தமிழ் ஆர்வத்தால் இதை தொடர்ந்து ஐம்பெரும் காப்பியங்கள், பத்துப்பாட்டு போன்றவைகளைப் பதிப்பிக்க முனைந்தார்.

முடிவுரை

பலரும் மறந்து அழிந்துபோகும் நிலையிலிருந்த பண்டைதமிழ் இலக்கியங்கள் பலவற்றை தேடி அச்சிட்டு பதிப்பித்தவர் தமிழுக்கு தொண்டாற்றியவர் உ.வே.சா ஆவார். அவர் ஆற்றிய பணியினைப் பாராட்டி மார்ச் 21 1932 அன்று சென்னை பல்கலைக்கழகம் "மதிப்புறு முனைவர்" என்ற பட்டம் வழங்கியது. இது தவிர "மகாமகோபாத்தியாய" மற்றும் "தக்ஷின கலாநிதி" என்ற பட்டமும் பெற்றுள்ளார். 1936-ல் அவருடைய 80-வது அகவையினை தமிழ் மக்களே கொண்டாடினர். அஞ்சல் தலை வெளியிட்டது. சீவகசிந்தாமணி பதிப்பித்த காலத்தில் ஒரு ஜைனப் பெண்மணி அவரை "பவ்ய ஜீவன்" என்று அழைத்தார். "பௌத்த சமயப் பிரபந்தப் பரிவர்த்தனாசாரியார்" என்ற பட்டமும் அவருக்கு கிடைத்தது.

இவரை பற்றி பல முனைவர்கள் ஆய்வினை மேற்க்கொண்டு வருகின்றனர். ஆய்வாளர் வேங்கடாஜலபதி “உ.வே.சா கடிதங்களை தொகுத்து” வெளியிட்டுள்ளார். ஆய்வாளர் சரவணன் “சாமிநாதம்” என்ற நூலை எழுதியுள்ளார். ஆய்வாளர் கிருஷ்ணவேல் “உ.வே.சா. தமிழ்த்தாத்தாவா” என்ற நூலை எழுதியுள்ளார். ஆறுமுகநாவலர்தான் அடித்தளமிட்டார். சீ.வை.தாமேதரம் பிள்ளை அவர்களை எழுப்பினார். உ.வே.சா கூரை வேய்ந்தார் என திரு.வி.க குறிப்பிடுகின்றார். இவ்வாறு பல தடைகளைத் தாண்டி 96 இலக்கியங்களை பதிப்பித்த பெருமை உ.வே.சா. அவர்களையேச் சாரும். உயிர் வாழ்வதற்காகவும் தமிழ் ஆர்வத்தால் இலக்கியங்களை பதிப்பதற்காகவும், அவர்பட்ட இன்னல்களையும் இடர்பாடுகளையும் சுயசரிதையை படித்து உணரலாம். 1942-ல் இவர் பெயரால் சென்னை பெசனட் நகரில் டாக்டர்.உ.வே.சா நூல் நிலையம் இன்று வரை செயல்பட்டு வருகின்றது. உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. இத்தனை சிறப்புகளும் அவர் ஆற்றிய தொண்டுக்கு கிடைத்த மிகப் பெரும் பேறு.



~(😉)~(😉)~(😉)~(😉)~(😉)~

47.உ.வே.சா அவர்களின் பதிப்பு நெறி

நிலவளம் கு. கதிரவன்

ன்னுரை

மலையானால் என்ன? காடானால் என்ன? வயலானால் என்ன? கடலானால் என்ன? நிலத்தின் இயல்பில் என்ன இருக்கிறது? அங்குச் செயல் திறம் மிக்க மக்கள் தோன்றியுள்ளனரா? அந்நிலம் உயர் நிலம். உயிர் நிலம். என ஔவையார் பாடினார். அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் உ..வே.சாமிநாத ஐயர் அவர்கள். தமிழர்களின் கல்வி கலாச்சாரம், இலக்கியம் யாவும் மக்கள் அறிய முடியா வண்ணம் ஓலைச் சுவடிகளில் ஒளிந்திருந்த காலத்தில், அவற்றையெல்லாம் மீட்க களப்பணியாற்றி, வெளிக் கொணர்த்தி தமிழின் தொன்மை வரலாற்றை உலகிற்கு கொடையாக வழங்கியவர்.

சாமிநாத ஐயர் தமிழிலே பிறந்தார். தமிழிலே வளர்ந்தார். தமிழிலே வாழ்ந்தார். அவர் பிறப்பும் தமிழ். வளர்ப்பும் தமிழ். வாழ்வும் தமிழ். அவர் மனமொழி மெய்களெல்லாம் தமிழே என்பதுபோல் தவ வாழ்வு வாழ்ந்தவர்.

இசையாளர், பலமொழி பேசுபவர், எழுத்தாளர், உரையாளர், ஆய்வாளர், பதிப்பாளர் என பன்முக ஆளுமையான உ.வே.சா அவர்களின் பதிப்பு நெறியைப் பற்றி இக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

பதிப்பின் மீதான ஆர்வம்

உ.வே.சா அவர்கள் 19.02.1855-ஆம் ஆண்டு பிறந்தார். தனது ஐந்தாம் அகவை முதல் எண்பத்து ஏழாம் வயது வரை கற்றதும், ஆய்ந்ததும் தமிழ். இவரது தமிழார்வத்துக்கு முதல் ஆசிரியர் சடகோபர். இவர் சொல்வார்,'' கம்பத்தை வைத்துக் கொண்டாவது பாடஞ் சொல்ல வேண்டும். கேட்பவனை மாத்திரம் உத்தேசித்துச் சொல்லக் கூடாது. பாடஞ் சொல்வதனால் உண்டாகும் லாபம் நம்முடையது. பாடம் சொல்லச் சொல்ல நம் அறிவு உரம் பெறும்''. அதுபோல் சாமிநாத ஐயர் அவர்களும் தமிழ் நூல்களை மேலும் மேலும் கற்கவும் முனைந்தார். கற்பிக்காதபோது எழுத முனைந்தார். இதன் விளைவாக பதிப்பித்து வெளியிடும் ஆர்வம் உருப் பெற்றது.

பழந்தமிழ் வெளியீட்டுக்கு கால் கொண்டவர் ஆறுமுக நாவலர். சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை. கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர். இதற்காக ஏராளமான ஓலைச் சுவடிகளை வாசித்தார். அதனை தொகுத்தார். ஆராய்ந்தார். அதன் பின்னர் பதிப்பித்தார்.

உ.வே.சா அவர்களின் பதிப்புத் திறன்

டாக்டர் உ.வே.சா தனது இருபத்து மூன்றாவது வயதிலேயே முதல் பதிப்பை பதிப்பித்தார். 1878-ஆம் ஆண்டு வெளியிட்ட கொலு மண்டபம் என்னும் வேணு வனலிங்க விலாசச் சிறப்பு என்பது அந்த நூலின் பெயராகும். ஒரு நூலைப் பதிப்பிக்கும் முன்பு நன்கு ஆழமாகப் படித்தார். அந் நூலுக்குத் தொடர்பான செய்திகள் எவையெவை என ஆராய்ந்தார்.

அந் நூலின் பிரதிகள் எவரிடமெல்லாம் இருக்கக் கூடும் எனச் சிந்தித்தார். அவர்களிடம் பிரதிகளைப் பெறும் முறைகளையும் எண்ணினார். நூலின் கருத்து விளக்கம் பெறுவதற்கு தொடர்பான நூல்களை ஆராயும் போக்கினையும் கொண்டிருந்தார். பல வகை அகராதிகளையும் முதற் கண்ணே தொகுத்துக் கொண்டார். தாம் பதிப்பித்த நூல்களுக்கு அரும்பத முதலியவற்றின் அகராதி, விசேடச் செய்திகள் அகராதி, சிறந்த பாடற் பகுதி அகராதி, விளங்கா மேற்கோள் அகராதி முதலிய பல அகராதிகளை தொகுத்தார். பதிப்பிக்க இருந்த நூல்களுக்கும் இவ்வாறு அகராதியைத் தொகுத்திருந்தார்.

ஓலைச் சுவடிகளில் ஒற்றெழுத்தின் மேல், புள்ளி வைத்து எழுத முடியாத நிலையிருந்தது. அதனால் பொருள் பொதிந்த நிறுத்தப் பொருள் குறித்த குறியீடுகளைச் சுவடிகளில் பயன்படுத்தும் வழக்கம் இல்லாமலிருந்தது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், விவிலிய நூலினை மொழி பெயர்த்தபோது அக் குறி வகைகளைப் பின்பற்றியமையால் ஏற்பட்ட பயன்களை அறிந்த உ.வே.சா, தம் நூல்களிலும் ஏற்ற இடங்களில் காற்புள்ளி, வளைவுக் குறிகள், வியப்புக் குறி, வினாக் குறி, ஒற்றுப் புள்ளி போன்றவற்றை எளிதில் பொருள் விளங்கப் பயன்படுத்தும் சிந்தனையைக் கொண்டார்.

அதேபோல் பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து ஒரு நூலை அச்சிட்டு வெளியிடும்போது உ.வே.சா நன்கு சிந்தித்துப் பின்னரே பதிப்பித்துள்ளார். ஏட்டுச் சுவடியில் தவறாகப் பிரதி செய்யப்பட்டிருந்தாலும், உள்ளவாரே பதிப்பித்தார். ஏட்டுச் சுவடியில் ஆதாரமின்றித் தாமே திருத்தும் எண்ணம் கொண்டவர் அல்ல உ.வே.சா என்பதையே இது காட்டுகிறது.

உ.வே.சா அவர்களின் பதிப்புக் கொள்கை

பதிப்புப் பணியின் இரு அடிப்படை நிலைகளான மூல பாடத் திறனாய்வு, நூலைப் பதிப்பித்தல் என்ற இரு அடிப்படை நிலைகளைப் பின் பற்றியவர் ஐயர் அவர்கள். சிற்றிலக்கிய நூல்களையே அதிகம் கற்றதினாலும், கற்பித்ததினாலும், சிற்றிலக்கிய வகைமைகளையே அதிகமாக பதிப்பித்தார். கோவை வகைகள், உலாக்கள், அந்தாதிகள், புராணங்கள், பரணிகள், தொடர்ந்து சங்க இலக்கியப் பதிப்புகள், சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், பெருங்கதை போன்ற காப்பியங்களை பதிப்பித்து வெளியிட்டார்.

உ.வே.சா அவர்கள் எந்த நூலை எடுத்துக் கொண்டாலும், அந்த நூல் பிரதிகள் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவையும் தேடித் தொகுத்ததை அவர் மரபாகவே கொண்டிருந்தார். இதற்காக ஏடு தேடி தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சுவடிகள் உள்ள இல்லத்தில் தேவையான பிரதிகளை கேட்டு வாங்கி சேகரித்து வைத்தார். சீவக சிந்தாமணி நூலிற்காக ஏடு தேடிச் செல்லும்போது சைவ – சமண பேத அவமானங்களைக் கூட சந்தித்துள்ளார். மேலும் சேகரித்த நுல்களைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்வதில் முனைப்பாக இருப்பார். ஏடு தேடிச் செல்லும்போது பல பிரதிகளை தொகுத்தாலும், அவற்றில் ஒன்றை ஆதாரப் பிரதியாக்கிக் கொள்வது ஐயர் அவர்களின் வழக்கம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் சிலப்பதிகாரம், மணிமேகலைக்கு "மிதிலைப்பட்டி பிரதியை" வைத்துக் கொண்டார்.

உ.வே.சா அவர்களின் பதிப்பு நெறிகள்

பதிப்பு நெறிமுறைகளான நூல் நெறி, தேர்வு நெறி, நூலாக்க நெறி, பின் அடைவு நெறி, முன் அடைவு நெறி, வெளி அடைவு நெறி, அச்சு நெறி, கட்டு நெறி, பயன் நெறி, போன்ற நெறிமுறைகளை வழுவாது பின்பற்றியவர் உ.வே.சா ஐயர் அவர்கள். பழைய உரையாசிரியர்கள் தம் உரையில் மேற்கோள் காட்டிய நூல், நூலின் பகுதி, பாடல் முதலான வரும் இடங்களை தவறாமல் குறிப்பிடுவார். காரணம் மேற்கோள் காட்டி விளக்குவது பயனுள்ள ஆய்வாகும். ஓப்பிலக்கியத் துறை வளரவும் இது வழி காட்டும். சங்க இலக்கிய நூல்களை பதிப்பித்தபோது மேலும் செம்மைப்படுத்தும் முகமாக, ஒரு நூலுக்கும் பிற நூல்களிலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் பகுதிகளை ஆங்காங்குக் குறிப்பதே வழக்கம். சாமிநாதன் அவர்களும் முதலில் அவ்வாறே செய்து வந்தார். ஆனால் புறநானூற்றுப் பதிப்பின்போது, அப் புறநானூற்றுப் பாடல்கள் எங்கெங்கு, யாரால் எடுத்தாளப்பட்டுள்ளனவென்று குறிக்கும் சிறப்பியல்பைப் புகுத்தினார். பிறறிடம் காணாத சிறப்பு இதுவாகும். அது போலவே ஒரு நூலைப் பிறர் உரையுடன் பதிப்பிக்கும்போது, ஒரு நூலின் உரையில் காணப்படும் மேற்கோள்களை இடஞ் சுட்டி விளக்குவதோடு அந் நூலின் பாடல்களும், பாடற் பகுதிகளும் பிற உரைகளில் எடுத்தாளப்பட்டிருத்தலையும், இடஞ்சுட்டித் தொகுக்கும் இரு முனை விளக்கங்களும் அவரது சிந்தனைத் திறத்தைக் காட்டுவதாகும். இதுவே பிற பதிப்பாளரிடமிருந்து வேறுபட்டுச் சிறப்பாக விளங்க வேண்டும் என்னும் இச் சிந்தனை தமிழ் ஆய்வுக்குப் புதிய பரப்பை ஏற்படுத்தித் தந்தது எனலாம்.

உ.வே.சா அவர்கள் பிரதிகளில் இல்லாதவற்றை ஊகித்து நிரப்பும் வழக்கம் கொண்டவரில்லை. உள்ளதை உள்ளவாரே பதிப்பதை கொள்கையாகக் கொண்டவர். தனது சீவக சிந்தாமணி முகவுரையில், ‘‘புராதன தமிழ் நூல்களும், உரைகளும் பண்டை வடிவங் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைச் சுட்டியும், உள்ளவற்றை மாற்றியும், குறைத்தும் மனம் போனவாறு அஞ்சாது பதிப்பித்தேனல்லேன். ஒருவாறு பொருள் கொண்டு பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யானாக ஒன்றுஞ் செய்திலேன்’’ என விவரமாக எடுத்துரைத்துள்ளார்.

பிழை, பொருத்தமற்ற அல்லது மறுத்தற்கிடமான பகுதிகள் ஏட்டில் இருப்பின் அதனை மாற்றாது ஏட்டில் உள்ளவாறே பதிப்பிக்கும் நெறிமுறையை கையாண்டவர். அதே போன்று ஒரு பதிப்பில் பிழை புகுந்துவிட்டால் அதனை நேர்மையுடன் ஏற்று மறு பதிப்பில் திருத்திக் கொள்வார். முதல் பதிப்பை விட சுவை தேவைப்படின், இரண்டாம் பதிப்பின்போது சுவை கூட்டியும், திருத்தியும் பல மாற்றங்களைச் செய்வது ஐயர் அவர்களின் இயல்பாகும். ‘‘புறப்பொருள் வெண்பாமாலை’’ நூலின் இரண்டாம் பதிப்பின் முகவுரை மாற்றம் பற்றி அவர் கூறும்போது, ‘‘இப்பதிப்பில், அத்திருத்தங்கள் ஆங்காங்கு அமைக்கப் பெற்றும், முற்பதிப்பில் வேறு வேறாக இருந்த அரும்பத அகராதி முதலியவை ஒருங்கே தொகுக்கப் பெற்றும், முதற்பதிப்பில் சேர்க்கப் பெறாதனவும், மூலம், உரை இரண்டிலும் உள்ளனவாய்த் தமிழ் நூல்களில் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவுமாகிய பற்பல அரும்பதங்கள், பற்பல விஷயங்கள்,

இன்பம் விளைவிக்கும் அநேக தொடர் மொழிகள், பல உவமைகள் ஆகிய இவைகள் நூதனமாகச் சேர்க்கப் பெற்றும் உள்ளன'' என்று குறித்துள்ளார்.

மேலும் தனக்குத் தெரியாதவற்றை நேர்மையுடன் தெரியாது என ஒப்புக் கொள்ளும் பண்பு மிக்கவர் சாமிநாதையர் அவர்கள். ''மான்விடு துதுவிற்குக்'' குறிப்புரை எழுதும்போது, ''இதனுள் வந்துள்ள மான்றேயம், புல்வாய்மாது முதலியவற்றைப் பற்றிய செய்திகள் விளங்காமையால் குறிப்புரை எழுதக் கூடவில்லை. நாளடைவில் விளங்குமென்றெண்ணுகின்றேன்'' என்று எழுதித் தூய சிந்தனையைப் புலப்படுத்தியவர்.

உ.வே.சா அவர்கள் பழைய நூல் உரைகள் குறித்து பெரும் மதிப்பும், தாமாக உரை எழுதும் வன்மை பெற்றிருந்தும், தன்னடக்கம் காரணமாக தன் நிறை காணாது குறையையே எண்ணும் தகைமையாளர். சங்க இலக்கியங்களைப் பதிப்பிக்கத் தொடங்கியவர்கள், மூலத்தோடு சொந்தமாக எழுதிய உரையைப் பதிப்பித்தனர். ஆனால் உ.வே.சா அவர்கள் பழைய உரைகளோடு பெரும்பாலும் சங்க இலக்கியத்தைப் பதிப்பித்தார். ஐங்குறுநூற்றின் இரண்டாம் பதிப்பில் பழைய உரை குறித்தும் தமது முயற்சி குறித்தும் குறிப்பிடும்போது, ''பழைய உரையில்லாத செய்யுள்களுக்கு உள்ளுரையுவமம் முதலியவற்றைப் புலப்படுத்தி ஏதோ ஒரு வகையாக உரை எழுதி இத்துடன் பதிப்பிக்கலாம் என்ற விருப்பம் சில சமயம் எனக்கு நிகழ்ந்ததுண்டு. நிகழ்ந்தும் இந் நூலையும், இவ்வுரையையும் உற்று நோக்க அவ்விருப்பம் அடியோடே மாறிவிட்டது. இந் நூல் முழுமைக்கும் நான் எழுதி வைத்த அரும்பதவுரையை இத்துடன் பதியாமைக்கு காரணம் இதுவே'' என குறிப்பிட்டுள்ளார்.

உ.வே.சா அவர்களின் பதிப்பு நெறி மூலம் அறிந்து கொண்ட முடிவுகள்

- உ.வே.சா அவர்கள் மூன்று வகைகளாக பதிப்பு நெறிகளை கையாண்டுள்ளார். பழைய உரைகளோடு குறிப்புகளை பதிப்பிப்பது, புதிய உரையோடு பதிப்பிப்பது, உரையில்லாமல் மூலம் மட்டுமே பதிப்பிப்பது.
- உ.வே.சா அவர்களைப் பொறுத்த அளவில் நூலின் அடுத்த என்பது திருந்திய பதிப்பு. பதிப்புக் கலையின் நுட்பங்கள் முன்னைப் பதிப்பிலும் செறிவுற்று அமையும் பதிப்பு நெறிமுறைகளைக் கையாண்டுள்ளார்.
- நூல்களுக்கு உரையெழுதாமல் வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கொள்ளும் கால கட்டம் இருந்த நாள் முதல், பல முறை வாய்மொழி வழியாக வழங்கி வந்த உரைகளே பிற்காலத்தில் உரைகளாக எழுந்துள்ளது.
- உ.வே.சா அவர்கள் தமது பதிப்புகளில் பதவுரை, முடிவு, கருத்து, விசேட உரை என நான்கு பகுதிகளாக வகைப்படுத்தித் தந்துள்ளார்.
- உ.வே.சா அவர்களின் பதிப்பு நெறிமுறைகளை ஆராயும்போது, சிறந்த பதிபபாசிரியராகத் திகழ, சிறந்த மொழிப் புலமையாளராக இருத்தல், பதிப்பிடும் நூலுக்குரிய துறையறிவு மிக்கோராக இருத்தல், பதிப்புத் துறையில் பட்டறிவுடையவராக இருத்தல், மற்றும் காலந் தவறாத கடைப்பிடியுடையவராக இருத்தல் வேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்ப சிறந்த பதிப்பாளராகத் திகழ்ந்துள்ளார்.
- ''திருவாவடுதுறைக் கோவை'' என்னும் சிற்றிலக்கிய நூலை பதிப்பிக்கும்போது மேற்கோள் நூல்களாக அறுபது நூல்களை பயன்படுத்தியுள்ளார். ஒரு சிற்றிலக்கிய நூலுக்கே இவ்வளவு நூல்களைப் பயன்படுத்தத் துணை நின்ற அவரது சிந்தனையாற்றல் வியப்பைத் தருகிறது.

- ஒரு நூலை முழுமையாக அறிந்து கொள்ள முகவுரை உதவ வேண்டும் என்னும் நோக்கம் உள்ளவர் உ.வே.சா அவர்கள். அதன்படியே நூலின் இயல்புக்கு முகவுரை எழுதும் போக்கினையும் மாற்றிக் கொண்டவர். இது அவர் பதிப்பித்த நூல்களுக்கு விரிவையும், ஆய்வு நோக்கையும் தந்தது.
- உ.வே.சா அவர்கள் பதிப்பிக்கும் நூல்களுக்கு இறைவணக்கப் பாடல் அமைப்பதை முகவரியில் வழக்கமாக்கியிருந்தார். தென்றல்விடு தூது நூலுக்குப் பொருத்தமாகத் தேவாரப் பாடலை அமைத்தார். தமிழ்விடு தூதுக்கு "திருவாலவாய்த் திருத்தாண்டகம்" அமைத்தார்.
- ஒரு நூலை பதிப்பிக்கும் முன்னர், அந் நூல் எச்சமயம் சார்ந்ததோ,அச்சமய பின்னனியிலேயே அறிந்து கொண்டு நூலைப் பதிப்பித்துள்ளார். சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்க ஐயர் அவர்கள் உழைத்த உழைப்பின் மூலம் இதை அறிந்துகொள்ள முடிகிறது.
- ஏட்டுச் சுவடியிலிருந்து இலக்கியத்தையோ, இலக்கணத்தையோ பதிப்பிக்கும்போது எழும் சிக்கல்களுள் ஒன்று பாடவேறுபாடு. டாக்டர் உ.வே.சா அவர்களின் பதிப்புகளில் அமைந்த பன்முகச் சிறப்புகளில் அவர் அனைத்துப் பாட வேறுபாடுகளையும் சுட்டுவதும், அவை தம்மில் உரிய பாடத்தை உரிய காரணங்களால் தேர்வு செய்வதும் மிக முதன்மை வாய்ந்த ஒன்றாகும் என்பதை அறிந்திருந்தது புலப்படுகிறது.
- உ.வே.சா அவர்களின் பதிப்பில் சிறப்புரைக்கு தம் உழைப்பை நல்கியுள்ளதைக் காண முடிகிறது. குறிப்புரைகள் வழியே சிறந்த பதிப்பாசிரியராக அமையும் வண்ணம் உழைத்துள்ளார். உ.வே.சா அவர்களின் பன் நூல் அறிவும், மிகச் சிறந்த நினைவாற்றலும், அறிவியல் ஒழுங்கு நியதியோடு கூடிய ஆரா்ய்ச்சித் திறனும் இக் குறிப்புரைகளால் வெளிப்படுகிறது.
- உலக வழக்கில் பயின்று வரும் சொற்களையும் சொற்றொடர்களையும் வரிசைப்படுத்தியும், தமிழ்நாட்டு வட்டார வழக்குகளை ஆவணப் படுத்தியும், இலக்கிய மொழி நடை ஆய்வுக்கும், மொழியியலின் பிற துறை ஆய்வுக்கும், கால ஆய்வுக்கும் பயன்படும் பெரும் பேற்றினை செய்துள்ளார் உ.வே.சா அவர்கள்.

முடிவுரை

ஏடு தேடி அலைந்த ஊர் எத்தனை? எழுதியாய்ந்த குறிப்புரை எத்தனை? என்பதுபோல் தமது இறுதிக் காலம் வரை தமிழ்த் தொண்டே தமது மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் உ.வே.சா அவர்கள். அவரது அயராத உழைப்பும், எழுத்தும், பேச்சும், ஆய்வுத் திறமும் என்றும் நமக்கு வழி காட்டிக் கொண்டிருக்கும். பாரதியார் கூறுவது போல்,

பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெல்லாம புலவோர் வாயில்
துதியறிவாய், அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றி துலங்கு வாயே


என்பதே நமது பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

துணை நின்ற நூல்கள்

1. உ.வே.சா ஒரு தமிழ் வாழ்வு – திரு.எஸ்.பி.காசிராசன்., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113
2. டாக்டர் உ.வே.சா சங்க இலக்கியப் பதிப்புகள் - டாக்டர்.குளோறியாசுந்தரமதி - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113
3. உ.வே.சா காப்பியப் பதிப்புகள் - முனைவர் திரு.இரா.காசிராசன்., - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113

4. பதிப்பு நெறிமுறைகள் - பதிப்பாசிரியர் பேராசிரியர் மு.சதாசிவம்., - சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.
5. என் சரித்திரம் - டாக்டர்.உ.வே.சாமிநாதையர் – தமிழிணையப் பல்கலைக் கழகம், சென்னை.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~



48. வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப வாழ்ந்த வள்ளல் உ.வே.சா.

முனைவர் வே. கல்பனா, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
சென்னை – 600 028.சென்னை – 600 028

தமிழ்த்தாத்தா என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் உ.வே சாமிநாத ஐயர், தோன்றியிருக்காவிட்டால் தமிழுலகிற்கு சிலப்பதிகாரத்தைப் பற்றித் தெரியாமலே போயிருக்கும். அகநானூற்றிற்கும் புறநானூற்றிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு மறைந்திருக்கும் இப்படி நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றி பதிப்பித்து நமக்குத் தந்தவர் உ.வே.சா. மேலும், தன்னுடைய சொத்துக்களை கூட விற்று, பல தமிழ் இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார், இந்த தழிழ்த்தாயின் தலைமகன் இத்தகைய அரிய சேவைக்காக செய்த சீரிய முயற்சிகள் தாராளம், பட்ட சிரமங்களோ ஏராளம் இருந்தும், மனம் தளராது இச்சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்ட அவருடைய வாழ்க்கையை வள்ளுவரின் குறள் நெறியுடன் வாழ்ந்துள்ளார் என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"

இக்குறளின் கருத்திற்கு ஏற்ப பிப்ரவரி19, 1855 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் உத்தமதானபுரம் எனும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் - சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார்.

குடும்பச் சூழல்

குடுபத்தின் வறுமையும் கடன் தொல்லையும் உ.வே.சாவை மிகவும் வாட்டியது. சிறிது காலம் தம் தந்தையுடன் புராண விரிவுரை நடத்தி கடனை அடைக்கலாம் என்ற தந்தையின் கருத்துக்கிணங்க இருவரும் விரிவுரை நடத்தி பொருள் ஈட்டத் தொடங்கினர். இவர்களின் விரிவுரைக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. இது நடந்தது 1874 ஆம் வருடம். உ.வே.சா 19 வயது ஆனவர். இக்காலத்தில் தம் ஆசிரியரிடம் தமிழ் கேட்க முடியவில்லையே என்ற ஏக்கம் இவரிடம் நீங்காமலிருந்தது.

இதற்கிடையே ஆசிரியர் பிள்ளையவர்கள் இயற்கை எய்தினார். அது சமயம் உ.வே.சா அவர்களும் உடனிருந்துள்ளார். ஆசிரியரை இழந்த உ.வே.சா மீளாத துயரத்தில் ஆழ்ந்தார். உ.வே.சா திருவாடுதுறையில் தங்கி பாடம் கேட்டுவந்தார். உ.வே.சா மீது நல்லெண்ணம் கொண்ட ஆதினம் தேசிகர் அங்கேயே வீடுகட்டிக் கொடுப்பதாகவும் பெற்றோர்களையும் மடத்திற்கே வந்து விடும்படியும் கேட்டுக்கொண்டதற்கிணங்க குடும்த்துடன் மடத்திற்கே வந்து விட்டார்கள். மடத்தில் இருக்கும் பொழுது பல பெரும் தமிழ்ப்புலவர்களைக் கண்டு கலந்துரையாடும் வாய்ப்பு கிட்டியது. வேதநாயகம்பிள்ளை, சந்திரசேகர கவிராஜபண்டிதர், திரிசிரிபுரம் கோவிந்தபிள்ளை, ராவ்பகதூர்

திரு பட்டாபிராம் பிள்ளை ஆகியோரும் அடங்குவர். அவர்களும் தேசிகருடன் மற்ற மாவட்டங்களுக்குச் சென்று அங்கும் பலரை அறிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

தியாகராச செட்டியார் பணி, உ.வே.சாவுக்கு வழங்கிய தருணம்

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
ஆதனை அவன்கண் விடல்"

என்னும் வள்ளுவரின் நெறிக்கு ஏற்ப தியாகராச செட்டியார் அவர்கள் ஆசிரியர் பணியை உ.வோ.சாவிற்று முன்வந்து வழங்கிய தருணம்.

உ.வே.சா திருவாடுதுறையில் தங்கியிருந்த பொழுது தாமும் விரும்பிய நூல்களைக் கற்றுக்கொண்டு மாணவர்களுக்கும் நூல்களைக் கற்பித்து வந்தார்.

செய்யுள் இயற்றுவதிலும் பயிற்சி செய்து தமது திறமையை வளர்த்துக் கொண்டார். திருவாடுதுறை ஆதினத்தின் ஆதரவில் தாம் நல்ல முறையில் வாழ முடியும் என்ற நம்பிக்கை உவேசாவிற்கு இருந்தது. அப்பொழுது 1880 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதி உ.வே.சா வாழ்வில் மிகப்பெரிய திருப்பம் நிகழ்ந்தது. தியாகராச செட்டியார் அவர்கள் கும்பகோணம் கல்லூரியில் தமது வேலையை விட்டுவிட முடிவு செய்துவிட்டதாகவும், அந்த வேலைக்கு உவேசாவைப் பரிந்துரைத்துள்ளதாகவும் ஆதினம் சுப்பிரமணிய தேசிகரிடம் கூறினார். திகைப்படைந்த தேசிகர் உவேசாவை அனுப்பும் எண்ணமில்லை என்று மறுத்து விட்டார். ஆனால் செட்டியார் அவர்கள் ஒரு நாள் மடத்திலேயே தங்கி ஐயரவர்களின் எதிர்காலம் கருதி அவரை அனுப்ப வேண்டும் என்று உருக்கமாக வேண்டினார். உவேசாவிடம் கல்லூரி வேலையில் மேன்மையையும் இங்கு வருடம் முழுவதும் உழைத்தாலும், கிடைக்காத ஊதியம் அங்கு மாதம்தோறும் நிலையாக வருமென்றும் எடுத்துக் கூறினர். ஆனால் உ.வே.சா பணம் பதவியைப் பொருட்படுத்தாமல், மடத்தில் எல்லா வசதிகளையும் சன்னிதானம் பார்த்துக் கொள்கிறது. 'திருவாடுதுறை மடத்தின் அன்னம் என் உடம்பில் எவ்வளவு ஊறியுள்ளது என்பதை செட்டியார் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை' என்று பதிவு செய்கிறார். பணம் பதவிக்கு ஆசைப்படாமல் திருவாடுதுறை மடம் காட்டிய ஆதரவிற்கு நன்றி பாராட்ட வேண்டும் என்ற உணர்வு உவேசாவிடம் இயற்கையாகவே இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். கல்லூரிப்பணி உ.வே.சாவின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தாலும் மடத்தில் மற்றவர்கள் செலுத்திய அன்பும், தேசிகரின் ஆதரவும் உவேசாவின் உயிரோடு இணைந்து நின்றது. செட்டியார் கூறியதைக் கேட்ட உவேசா சன்னிதானம் இசைவு தெரிவித்தால் செல்வது என்று முடிவு செய்தார். செட்டியாரின் விடாமுயற்சி பலித்தது. உ.வே.சாவால் மடத்திற்கு மிகுந்த நன்மை இருந்தாலும் அவரின் எதிர்காலத்தை மனதில் கொண்டு சுப்பிரமணிதேசிகர் அவரை மடத்திலிருந்து அனுப்ப இசைவு தெரிவித்தார்கள்.

"***தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது"

என்னும் வள்ளவரின் நெறிக்கு ஏற்ப ஆசிரியர் பணியினைச் சிறப்பாக ஆற்றிய வள்ளல்.

சான்றோர் நட்பு

வேதநாயகம்பிள்ளை, சந்திரசேகர கவிராஜ பண்டிதர், திரிசிரபுரம் கோவிந்த பிள்ளை, ராவ்பகதூர், திரு பட்டபிராம் பிள்ளை ஆகிய சான்றோர்களுடன் சேர்ந்து பல மாவட்டங்களுக்குச் சென்று அங்குப் பலரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

"உவப்ப தலைக்குடி உள்ளம் பிரிதால் அனைத்தே
புலவர் தொழில்"

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப பல சான்றோருடன் கலந்து தமிழ்த் தொண்டினைச் சிறப்புற செய்தவர் உ.வே.சா.

உ.வே.சா அவர்களின் பதிப்பும் படைப்பும்

சங்க இலக்கியங்களைப் பற்றி இன்று நம்மால் பேச முடிகிறது என்றால் அதற்கு உ.வே.சா காரணமானவார். சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு, போன்றவற்றைப் பற்றி இன்று நமக்கு துல்லியமாகத் தெரிகிறது என்றால் உ.வே.சா தான் காரணம் இவ்விலக்கியங்கள் இல்லாத தமிழையும் தமிழிலக்கியத்தையும் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.

உ.வே.சா பல செய்யுள்களையும் நூல்களையும் இயற்றியுள்ளார். தந்தையாரின் வறுமையைக் கண்டு, ஒரு பெரியமனிதரிடம் சென்று நெல் வேண்டுமென்று இயற்றிய செய்யுள் தான் அவரின் முதல் செய்யுள். கலைமகள்துதி, திருலோகமாலை, ஆனந்தவல்லியம்மை, பஞ்சரத்தினம் முதலியன மற்ற நூல்களாகும்.

"பிறப்புஒக்கும் எல்லா எயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்னும் குறள் நெறிக்கு ஏற்ப செய்யும் தொழிலில் சிறப்பும் பயனும் அறிந்து, இவர் ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அப்படியே அவைகளை பதிப்பித்தல் மட்டும் செய்யவில்லை. சிதைந்து மறைந்து விட்ட அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும் படி செய்தார். ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கி, இந்த நூல்களை குறித்த முழு புரிதலுக்கும் வழி வகுத்தார். அவர் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர் மறைந்த காலத்தில் உயர்ந்து நின்ற தமிழின் நிலைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு போன்றதாகும்.

பாண்டிய நாட்டில் செவந்திபுரத்தில் வேணுவனலிங்கத் தம்பிரான் கட்டிய மடாலயத்திற்கு 'சுப்பிரமணிய தேசிக விலாசம்' என்று பெயர். இவ்வழகிய மடாலயத்தைச் சிறப்பித:து பல தமிழ்ப் புலவர்கள் பாடலியற்றிருந்தனர். இப்படி 86 பாடல்கள் இருந்தன. உ.வே.சா 8 பாடல்கள் இயற்றினார். வேறு சில பாடல்களும் சேர்த்து திருநெல்வேலி முத்தமிழாகரமென்னும் அச்சுக்கூடத்தில் இப்பாடல் திரட்டை முதன் முதலாக ஐயரவர்கள் பதிப்பித்தார்.

சீவகசிந்தமாணியைக் கற்றுக் கொடுக்க முயன்ற போது ஏட்டுச்சுவடியிலிருந்து நூலை மிகுந்த சிரமத்திற்கிடையில் கற்று பாடம் சொல்லிக் கொடுத்தார். இந்த நூலில் உள்ள செய்திகளை உணர்ந்தவர். இந்த நூலை 1887 ஆம் ஆண்டு முதன் முதலாக வெளியிட்டார்.

தமிழர்கள் அளித்த நல்லூக்கம் இப்பணியை அவர் தொடர்ந்து செய்ய காரணமாயிற்று. இவருடைய வாழக்கை வரலாறு தமிழ்பால் அன்பு கொண்ட அனைவரும் போற்றும் ஒரு புதையல்.

1874 ஆம் ஆண்டு நீலி இரட்டை மணிமாலை, 1878 ஆம் ஆண்டு வேணுவனலிங்க விலாசச் சிறப்பு, 1883 ஆம் ஆண்டு திருக்குடந்தைப் புராணம், 1885 ஆம் ஆண்டு மத்தியார்ச்சுன மான்மியம், 1887 ஆம் ஆண்டு சீவக சிந்தாமணி, 1888 ஆம் ஆண்டு கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூது, திருமயிலைத் திரிபந்தாதி, 1889 ஆம் ஆண்டு பத்துப் பாட்டு மூலமும் உரையும், 1891ஆம் ஆண்டு தண்டபாணி விருத்தம், 1892ஆம் ஆண்டு புறநானூறு, 1895 ஆம் ஆண்டு புறப்பொருள் வெண்பா மாலை, 1898ஆம் ஆண்டு புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம், 1898ஆம் ஆண்டு, மணிமேகலை, மணிமேகலைக் கதைச் சுருக்கம், 1903ஆம் ஆண்டு, ஐங்குநுறுாறு, சீகாழிக் கோவை, திருவாவடுதுறைக் கோவை, வீரவனப் புராணம், 1904 ஆம் ஆண்டு சூரைமாநகரப் புராணம், திருக்காளத்தி நாதருலா, திருப்பூவண நாதருலா, பதிற்றுப்பத்து, 1905 ஆம் ஆண்டு திருவாரூர்த் தியாகராச லீலை, திருவாரூருலா, 1906ஆம் ஆண்டு திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 1907ஆம் ஆண்டு தனியூர்ப் புராணம், தேவையுலா, மண்ணிப்படிப்பரைப் புராணம், 1908ஆம் ஆண்டு திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், 1910ஆம் ஆண்டு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட:டு 1912ஆம் ஆண்டு திருக்காளத்திப் புராணம், 1914ஆம் ஆண்டு திருத்தணிக்கைத் திருவிருத்தம், 1918ஆம் ஆண்டு பரிபாடல், 1924ஆம் ஆண்டு உதயணன் சரித்திரச் சுருக்கம், பெருங்கதை, 1925ஆம் ஆண்டு நன்னூல் மயிலை நாதருரை, நன்னூல் சங்கர நமச்சிவாயருரை, 1928ஆம் ஆண்டு சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், 1930ஆம் ஆண்டு தக்கயாகப் பரணி, தமிழ்விடு தூது, 1931ஆம் ஆண்டு, பத்துப் பாட்டு மூலம், மதுரைச் சொக்கநாதர் உலா, 1932 கடம்பர் கோயிலுலா, களக்காட்டு சத்தியவாகீசர் இரட்டை மணிமாலை, சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், பத்மகிரி நாதர் தென்றல் விடு தூது, பழனி பிள்ளைத்தமிழ், மதுரைச் சொக்கநாதர் மும்மணிக் கோவை, வலிவல மும்மணிக்கோவை, 1933ஆம் ஆண்டு சங்கரலிங்க உலா, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, பாசவதைப் பரணி, மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் (பகுதி –1), 1934ஆம் ஆண்டு சங்கர நயினார் கோயிலந்தாதி, மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் (பகுதி – 2), விளத்தொட்டிப் புராணம், 1935 ஆம் ஆண்டு ஆற்றூர்ப் புராணம், உதயண குமார காவியம், கலைசைக் கோவை, திரு இலஞ்சி முருகன் உலா, பழமலைக் கோவை, பழனி இரட்டைமணி மாலை, 1936ஆம் ஆண்டு இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை, கனம் கிருஷ்ணயைர், கோபால கிருஷ்ண பாரதியார், திருநீலகண்டனார் சரித்திரம், திருமயிலை யமக அகந்தாதி, திருவள்ளுவரும் திருக்குறளும், நான் கண்டது கேட்டதும், புதியதும் பழையதும், புறநானூறு மூலம், பெருங்கதை மூலம், மகாவைத்தியநாதையைர், மான் விடு தூது, 1937 குறுந்தொகை, சிராமலைக் கோவை, தமிழ்நெறி விளக்கம:, திருவாரூர்க் கோவை, நல்லுரைக் கோவை பகுதி – 1, நல்லுரைக் கோவை பகுதி – 2, நினைவு மஞ்சரி பகுதி – 1, 1938 ஆம் ஆண்டு அழகர் கிள்ளை விடு தூது, சிவசிவ வெண்பா, திருக்கழுக்குன்றத்துலா, திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை, திருமலையாண்டவர் குறவஞ்சி, நல்லுரைக் கோவை பகுதி – 3, 1939ஆம் ஆண்டு, குமர

குரபர சுவாமிகள் பிரந்தத் திரட்டு, தணிகாசல புராணம், நல்லுரைக் கோவை பகுதி – 4, புகையிலை விடு தூது, மகரநெடுங் குழைக்காதர் பாமாலை, 1940 ஆம் ஆண்டு கபாலீசுவரர் பஞ்சரத்தினம், திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, வில்லைப் புராணம், 1941ஆம் ஆண்டு செவ்வைச் சூடுவார் பாகவதம், 1942ஆம் ஆண்டு நினைவு மஞ்சரி பகுதி – 2, வித்துவான் தியாகராச செட்டியார் என்பன.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவரின் நெறிக்கெற்ப, வாழ்ந்த அன்னல் பிறர் போற்றும் படி வாழ்ந்து ஏப்ரல் - 28 1942 ஆம் ஆண்டு மண்ணைவிட்டு மறைந்தார்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்று போற்றும் வகையில் தமிழும், தமிழ் இனமும் இருக்கும் காலம் வரை வாழ்ந்து கொண்டே இருக்கும் வள்ளல் உ.வே.சா.

அவர் படைத்து, பதிப்பித்த நூல்களை வாசித்து, வளரும் தலைமுறைக்கு வழிக்காட்டியாக வாழ்வதே அவர் தொண்டுக்கு நம் செய்யும் சிறிய தொண்டு. அதுவே நாம் அவருக்கு கொடுக்கும் இன்பம்.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

பதிப்பித்த நூல்களின் அகரவரிசை

1. அழகர் கிள்ளை விடு தூது 1938
2. ஆற்றூர்ப் புராணம் 1935
3. இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை 1936
4. இலந்தை நகர் தண்டபாணி விருத்தம்
5. உதயண குமார காவியம் 1935
6. உதயணன் சரித்திரச் சுருக்கம் 1924
7. ஐங்குறு நூறு 1903
8. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது 1888
9. கடம்பர் கோயிலுலா 1932
10. கபாலீசுவரர் பஞ்சரத்தினம் 1940
11. கலைசைக் கோவை 1935
12. களக்காட்டுச் சத்தியவாகீசர் இரட்டை மணி மாலை 1935
13. கனம் கிருஷ்ணையர் 1936
14. குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு 1939
15. குறுந்தொகை 1937
16. கோபால கிருஷ்ண பாரதியார் 1936
17. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் 1929
18. சங்கர நயினார் கோயிலந்தாதி 1934
19. சங்கரலிங்க உலா 1933
20. சிராமலைக் கோவை 1937
21. சிலப்பதிகாரம் 1892
22. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் 1932
23. சிவசிவ வெண்பா 1938
24. சீகாழிக் கோவை 1903
25. சீவக சிந்தாமணி 1887
26. சூரைமாநகர்ப் புராணம் 1904
27. செவ்வைச் சூடுவார் பாகவதம் 1941
28. தக்கயாகப்பரணி 1930
29. தண்டபாணி விருத்தம் 1891
30. தணிகாசலபுராணம் 1939
31. தமிழ்நெறி விளக்கம் 1937
32. தமிழ் விடுதூது 1930



33. தனியூர்ப் புராணம் 1907
34. திரு இலஞ்சி முருகன் உலா 1935
35. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா 1933
36. திருக்கழுக்குன்றத்துலா 1938
37. திருக்காளத்தி நாதர் இட்டகாமிய மாலை 1938
38. திருக்காளத்தி நாதருலா 1904
39. திருக்காளத்திப் புராணம் 1912
40. திருக்குடந்தைப் புராணம் 1883
41. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா 1940
42. திருத்தணிகைத் திருவிருத்தம் 1914
43. திரு நீலகண்ட நாயனார் சரித்திரம் 1936
44. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் 1908
45. திருப்பூவண நாதருலா 1904
46. திருப்பெருந்துறைப் புராணம் 1892



47. திருமயிலைக் கபாலீசர் பஞ்சரத்தினம் 1932
48. திருமயிலைத் திரிபந்தாதி 1888
49. திருமயிலை யமக அந்தாதி 1936
50. திருமலையாண்டவர் குறவஞ்சி 1938
51. திருவள்ளுவரும் திருக்குறளும் 1936
52. திருவாரூர்க் கோவை 1937
53. திருவாரூர்த் தியாகராச லீலை 1905
54. திருவாரூருலா 1905
55. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 1906
56. திருவாவடு துறைக் கோவை 1903
57. தேவையுலா 1907
58. நல்லுரைக் கோவை பகுதி 1 1937
59. நல்லுரைக் கோவை பகுதி 2. 1937
60. நல்லுரைக் கோவை பகுதி 3. 1938
61. நல்லுரைக் கோவை பகுதி 4. 1939
62. நன்னூல் சங்கர நமச்சிவாயருரை 1925
63. நன்னூல் மயிலைநாதருரை 1918
64. நான் கண்டதும் கேட்டதும் 1936
65. நினைவு மஞ்சரி பகுதி – 1 1940
66. நினைவு மஞ்சரி பகுதி – 2 1942
67. நீலி இரட்டை மணிமாலை 1874
68. பத்துப்பாட்டு மூலம் 1931

69. பத்துப்பாட்டு மூலமும் உரையும் 1889
70. பத்மகிரி நாதர் தென்றல் விடு தூது 1932
71. பதிற்றுப் பத்து 1904
72. பரிபாடல் 1918
73. பழமலைக் கோவை 1935
74. பழனி இரட்டைமணிமாலை 1935
75. பழனிப் பிள்ளைத் தமிழ் 1932
76. பாசவதைப் பரணி 1933
77. புகையிலை விடு தூது 1939
78. புத்த சரித்திரம்,பௌத்ததருமம்,பௌத்த சங்கம் 1898
79. புதியதும் பழையதும்1936
80. புறநானூறு1894
81. புறநானூறு மூலம் 1936
82. புறப்பொருள் வெண்பா மாலை 1895



83. பெருங்கதை 1924
84. பெருங்கதை மூலம் 1936
85. மகரநெடுங் குழைக்காதர் பாமாலை 1939
86. மகாவைத்திய நாதையர் 1936
87. மண்ணிப்படிக்கரைப் புராணம் 1907
88. மணிமேகலை 1898
89. மணிமேகலைக் கதைச் சுருக்கம் 1898
90. மத்தியார்ஜ்ஜு ன மான்மியம் 1885
91. மதுரைச் சொக்கநாதர் மும்மணிக் கோவை 1932
92. மதுரைச் சொக்கநாதருலா 1931
93. மான் விடு தூது 1936
94. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – பகுதி 1. 1933
95. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – பகுதி 2. 1934
96. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு 1910
97. வலிவல மும்மணிக் கோவை 1934
98. வித்துவான் தியாகராச செட்டியார் 1942
99. வில்லைப் புராணம் 1940
100. விளத்தொட்டிப் புராணம் 1934
101. வீரவனப் புராணம் 1903
102. வேணுவனலிங்க விலாசச் சிறப்பு 1878

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

ஐயரவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

கி.வா. ஜகந்நாதன்

இந்த நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் இரண்டு பெரிய மலைகளைப் போன்ற பெரியவர்கள் தமிழ்மொழிக்குப் புதிய ஒளியைக்கொடுத்தார்கள். ஒருவர் ஸ்ரீசுப்பிரமணிய பாரதியார். மற்றொருவர் ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள். கவிஞர் பாரதியார் தம்முடைய புதிய கவிகளால் தமிழ்த்தாய்க்குப் புதிய அணிகளைப் பூட்டினார். ஐயரவர்களோ, பல காலமாக மங்கி மறைந்து கிடந்த பழைய அணிகளை மீட்டும் எடுத்துக் கொணர்ந்து துலக்கி மெருகூட்டிப் பூட்டி அழகு பார்த்தார்கள்.

தமிழ்த் தாத்தா என்று தமிழ்க் குழந்தைகளால் அன்புடன் போற்றப்பெறும் ஐயரவர்கள் உண்மையில் சென்ற நூற்றாண்டிலேயே தம்முடைய அரும்பெருந் தொண்டைத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் 1855-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி தோன்றினார்கள். அவர்கள் தோன்றிய காலத்தில் இருந்த தமிழின் நிலைக்கும் அவர்கள் மறைந்த காலத்தில் (ஏப்ரல், 1942) தமிழ் உயர்ந்து நின்ற நிலைக்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. அவர்கள் 1887-ஆம் ஆண்டில் சீவகசிந்தாமணியை அச்சிட்டு வெளியிட்டார்கள். அது முதல் இறுதிக் காலம் வரையில் தமிழ்த்தாயின் அணிகளை ஒவ்வொன்றாகப் புதுப்பிக்கும் அற்புதமான தொண்டில் தம் காலம் முழுவதையும் அவர்கள் செலவிட்டார்கள்,

அவர்கள் தோன்றிய காலத்தில் பெரும் புலவர்களும் சங்க நூல்கள் என்று பெயரளவிலே தெரிந்து கொண்டிருந்தார்களே ஒழிய அவை இன்னவை என்பது அவர்களுக்குத் தெரியாது. கோவலன் கதை என்ற ஒரு நாடோடிக் கதையையும் அதில் வரும் கண்ணகியையும் மாதவியையும் அறிவார்களேயன்றிச் சிலப்பதிகாரத்தையும் அதில் உள்ள பாத்திரங்களையும் அறியமாட்டார்கள். அகநானூறு, புறநானூறு என்ற இரண்டுக்கும் உள்ள வேறுபாடு இன்னதென்று தெரியாது, மணிமேகலை எந்தச் சமயத்தைப் பற்றிய நூல் என்பதும் தெரியாது.

இன்றோ பள்ளிக்கூடத்திற் பயிலும் மூன்றாம் வகுப்பு மாணவனுக்கும் பாரியைப்பற்றிய வரலாறு தெரியும். சேரன் செங்குட்டுவனுடைய வெற்றியைப் பற்றி மேல் வகுப்பு மாணாக்கர்கள் படிக்கிறார்கள். பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் புறநானூறு, குறுந்தொகை பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களிலுள்ள பகுதிகளைப் பாடமாக வாசிக்கிறார்கள் பிள்ளைகள்.

பல ஆண்டுகளுக்கு முன் திராவிட மொழிகளின் அமைப்பைப் பற்றிக் கால்டுவெல் என்ற ஆங்கிலேயர் அழகான நூல் ஒன்று எழுதினார். "திராவிட மொழிகளின் ஒப்பியல்" (Comparative Phonology of Dravidian Languages) *என்பது அந்து நூலின் பெயர். அதை இன்றும் சிறந்த நூலாகப் புலவர்கள் கொண்டாடுகிறார்கள். அதை எழுதினவருக்கே எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகியவை கிடைக்கவில்லை. அந் நூல்களின் அமைப்பை அவர் அறியார். இன்றோ சங்ககாலத் தமிழரைப் பற்றியும், நூல்களைப் பற்றியும் பல பல நூல்கள் வந்திருக்கின்றன, பல வகையான ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று சங்க காலத்தைப் போற்றிப் பாராட்டிப் பெருமிதத்துடன் பேசுகிறோம். தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் மரபு என்று நமக்குரிய தனிச் சிறப்பைப் பல மேடைகளில் புலவர் பெருமக்கள் பேசுகிறார்கள்ளூ எழுதுகிறார்கள். பாரத நாட்டில் உயிருடன் வழங்கி வரும் மொழிகள் யாவற்றிலும் பழையது. இலக்கிய வளம் பொருந்தியது, இலக்கண வரம்புடையது, எதையும் வழங்கத்தக்க சொல்வளமுடையது என்றெல்லாம் மற்றவர்களும் ஒப்புக்கொள்ளும் நிலை தமிழுக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ்த் தாத்தாவின்*

அரும்பெருந் தொண்டே இத்தனை உயர்வுக்கும் மூலகாரணம் என்பதைத் தமிழ்ப் புலவர்கள் அறிவார்கள். தமிழ் வரலாற்றில் ஐயரவர்களுக்கு என்று ஒரு தனிப் பகுதி இருக்கும் என்பதில் சந்தேகமேஇல்லை.

ஐயரவர்களுடைய ஊர் தஞ்சை ஜில்லாவில் உள்ள உத்தமதானபுரம் என்ற சிறிய கிராமம். சங்கீத வித்துவானகிய ஸ்ரீ வேங்கட சுப்பையருக்கும் ஸ்ரீமதி சரசுவதியம்மாளுக்கும் புத்திரராக ஐயரவர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய தந்தையார் பல இடங்களுக்குச் சென்று தம்முடைய இசைத் திறமையைக் காட்டி ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தார்கள். குறிப்பிட்ட வேலையும் குறிப்பிட்ட சம்பளமும் இல்லாவிட்டாலும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் அன்பும் கலையபிமானமும் அவரைப் போன்ற கலைஞர்களைப் பாதுகாத்து வந்தன. அங்கங்கே இருந்த செல்வர்களும் ஜமீன்தார்களும் அவருக்குச் சிறப்புச் செய்து, வாழ்க்கையைச் சுவையுடையதாக்கினார்கள். இந்தச் சூழ்நிலையில் ஐயரவர்கள் வளர்ந்து வந்தார்கள். தந்தையாரிடமும் சில திண்ணைப் பள்ளிக் கூடத்து ஆசிரியர்களிடமும் இப்பேரறிஞர் இளமையில் கல்வி பயின்றார். அக்காலத்தில் சில நூல்களையே கற்றிருந்தாலும், அவற்றைத் திருத்தமாகப் பயின்று மற்றவர்களுக்கும் தெளிவாகப் பாடம் சொல்லும் சிறிய புலவர்கள் அங்கங்கே இருந்தார்கள்.

அத்தகையவர்களாகிய அரியலூர்ச் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் முதலியவர்களிடம் ஐயரவர்கள் சில நூல்களைக் கற்றார்கள். ஐயரவர்களுடைய தந்தையாருக்குத் தம் குமாரரைப் பெரிய சங்கீத வித்துவானாக ஆக்க வேண்டுமென்ற ஆசையே முதலில் எழுந்தது. ஆனால் இவர்களுக்குத் தமிழில் உண்டான பெரும் பசியைக் கண்ட போது அந்தத் துறையில் இவர்களை ஈடுபடுத்துவதுதான் தம்முடைய கடமை என்பதை அவர் உணர்ந்தார். அதனால் எங்கெங்கே தமிழ் நூல்களைப் பாடம் சொல்லுகிறவர்கள் இருக்கிறார்களோ, அந்த அந்த ஊர்களுக்கெல்லாம் குடியேறித் தம்முடைய குமாரர் தமிழ்க் கல்வி பெறும்படி செய்து வந்தார். அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் பெருங் கவிஞராகவும் சிறந்த புலவராகவும் திகழ்ந்த மாகவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. அவர் பல மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவருகிறார் என்ற செய்தி ஐயரவர்களின் தந்தையார் காதில் விழுந்தது. "நம் பிள்ளையையும் அந்த மகாவித்துவானிடம் சேர்த்து விட வேண்டும்" என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று.

1870-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐயரவர்கள் வாழ்க்கையின் இரண்டாம் பகுதி தொடங்கியது. மாயூரத்தில் இருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் இவர்கள் மாணாக்கராகச் சேர்ந்தார்கள். அதுமுதல் அந்தத் தமிழ்க் கடலின் மறைவு வரையில் (1-2-1876) உடனிருந்து பலவகையான தமிழ் நூல்களைக் கற்றார்கள். அப்புலவர்பிரான் அவ்வப்போது இயற்றிவந்த நூல்களை எழுதுவதும் திருவாவடுதுறை மடத்தின் ஆதீனகர்த்தர்களாக இருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் பழகுவதும், அந்த மடத்துக்கு வரும் தமிழ்ப் புலவர்களிடத்திலும் வடமொழி வாணரிடத்திலும் சங்கீத வித்துவான்களிடத்திலும் நெருங்கிப் பழகுவதும் போன்ற செயல்களால் இவர்களுக்கிடைத்த அநுபவம் வேறு யாருக்கும் கிடைத்தற்கு அரிது. அத்தகைய அநுபவத்தினால் ஐயரவர்கள் பெற்ற பயன் மிக அதிகம். எந்தப் பொருளானாலும், எத்தகைய மனிதரானாலும், எந்த விதமான நிகழ்ச்சியானாலும் கூர்ந்து உணரும் இயல்பு ஐயரவர்களிடம் சிறந்திருந்தது.

அதனால் அக்காலத்தில் அவர்கள் கண்டவையும் கேட்டவையும் அப்படியப்படியே இவர்களுடைய இளநெஞ்சில் நன்றாகப் பதிந்தன. பேரிய ஆதீனத்தின் தொடர்பால் பலவகை மக்களின் பழக்கம் இவர்களுக்கு ஏற்பட்டது. பெரும்புலவருடைய தொடர்பால் பல நூல்களில் அறிவு உண்டாயிற்று. பல கலைஞருடைய நட்பினால் பல துறையிலும் அறிவு சிறந்தது. வெவ்வேறு ஊர்களுக்குத் தம்முடைய ஆசிரியருடன் செல்ல வேண்டியிருந்தமையால் பல தலங்களைப்பற்றிய செய்திகளும் அங்கங்குள்ள பெரிய மனிதர்களின் பழக்கமும் ஐயரவர்களுக்குக் கிடைத்தன.

பிள்ளையவர்கள் மறைவுக்குப்பின்பு திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு ஐயரவர்களுக்குப் பின்னும் இறுகலாக அமைந்தது. அதற்கு முன் பிள்ளையவர்கள் மூலமாக ஆதீனத்தின் தொடர்பு இருந்துவந்தது. அதற்குப் பின் ஆதினகர்த்தராகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடமே பாடம் கேட்கப் புகுந்தார்கள் ஐயரவர்கள். அதோடு மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் பணியையும் மேற்கொண்டார்கள். இதனால் இவர்களுடைய தமிழறிவு உரம் பெற்று வந்தது. அக்காலத்தில் கும்பகோணம் அரசாங்கக் காலேஜில் தியாகராச செட்டியார் என்ற பெரும்புலவர் தமிழாசிரியராக இருந்தார். அவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் படித்தவர். அவர் ஓய்வு பெறவேண்டிய காலம் வந்தபோது அவர் தம்முடைய இடத்தில் ஐயரவர்களை நியமிக்கும்படி செய்தார். 1880-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி முதல் ஐயரவர்கள் கல்லூரித் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கினார்கள்.

நிறைந்த தமிழ்ப் புலமை, எதையும் சுவையாக எடுத்து விளக்கும் ஆற்றல், இசைப்பயிற்சி, அன்பு முதலிய இயல்புகளை இவர்கள் சிறப்பாகப் பெற்றிருந்தமையால் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளத்தை எளிதில் கவர்ந்தார்கள். ஆங்கில மோகம் உச்சநிலையில் இருந்த காலம் அது. ஆங்கிலமும் பிறபாடங்களும் கற்பிக்கும் பேராசிரியர்களிடம் மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்ல மதிப்பு இருந்து வந்தது. இங்கிலீஷ்காரர்கள் சிலர் அந்தப் பாடங்களைக் கற்பித்து வந்தார்கள். அதனாலும் அவற்றிற்கும் அவற்றைக் கற்பிப்பவர்களுக்கும் மதிப்பு உயர்ந்திருந்தது. தமிழாசிரியர்களுக்கு அத்தகைய மதிப்பு இல்லை. அவர்களுக்குக் கிடைத்த ஊதியமும் மிகக் குறைவு. கல்லூரிச் சேவகனுக்கு அடுத்தபடி சம்பளம் வாங்கினவர் தமிழாசிரியரே.

இத்தகைய நிலையில் ஐயரவர்கள் மாணாக்கர்களின் உள்ளத்தைப் பிணித்ததோடு மற்ற ஆசிரியர்களுக்குச் சமமான மதிப்பையும் பெற்றார்கள். ஆங்கிலம் சிறிதும் அறியாவிட்டாலும், ஆண்டில் இளைஞராக இருந்தாலும், அவர்களுடைய புலமையும், பண்பும் மாணாக்கர்களும் ஆசிரியர்களும் பிறரும் இவர்களைச் சிறந்தவர்களாக மதிப்பதற்குரிய காரணங்களாக இருந்தன. காலேஜில் ஆசிரியராகப் புகுந்த ஆண்டிலேயே (அக்டோபர் மாதம்) ஐயரவர்களுக்கும் கும்பகோணத்தில் ஜில்லா முன்சீபாக இருந்த சேலம் இராமசுவாமி முதலியாரவர்களுக்கும் பழக்கம் உண்டாயிற்று.

அந்தப் பழக்கமே ஐயரவர்கள் பிறந்ததன் பயனைத் தமிழுலகத்துக்குக் கிடைக்கும்படி செய்யக் காரணமாயிற்று. முதலியார் சிந்தாமணியைப் பாடம் சொல்லும்படி ஐயரவர்களிடம் கேட்டுக்கொண்டார். அதனை முன்பு பாடம் கேட்டறியாதவர்கள் இவர்கள்ளூ அந்த நூலைப் பார்த்தது கூட இல்லை. ஆயினும் தைரியமாகப் பாடம் சொல்லப் புகுந்தார்கள். ஏட்டுச் சுவடியை வைத்துக் கொண்டு பாடம் சொன்னார்கள்.

சிந்தாமணியில் ஆழ்ந்தார்கள். தாம் அதுகாறும் படித்த நூல் குவியல்களால் அறியவொண்ணாத பலவற்றை அதில் கண்டார்கள். அது ஜைனசமய நூலாதலால் பல செய்திகள் ஐயரவர்களுக்கு விளங்கவில்லை. அவற்றை யெல்லாம் ஜைனர்களிடம் சென்று கேட்டு அறிந்தார்கள். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையைப் படித்தார்கள். அவருடைய உரைப்போக்கும் அதனிடையே அவர் காட்டியிருக்கும் மேற்கோள்களும் ஏதோ ஒரு புதிய பிரபஞ்சத்தையே அவர்கள் அகக்கண்முன் தோற்றுவித்தன. தமிழ் மக்கள் செய்த தவத்தின் பயனாக இவர்களுக்குச் சிந்தாமணியைப் பதிப்பிக்கவேண்டும். என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆராய்ச்சி நடைபெற்றது. மேட்டுமடையில் நீர் பாய்வதுபோன்ற வேதனையைப் பல சமயத்தில் அவர்கள் அடைந்தார்கள். ஆனாலும் விடாப்பிடியாக முயன்று, 1887-ஆம் ஆண்டு சிந்தாமணியை வெளியிட்டார்கள். அந்தப் பதிப்பைக் கண்ட தமிழ் நாட்டினர் மிகவும் ஆனந்தமடைந்து களிக்கூத்தாடினர். அது முதல் ஐயரவர்கள் பழைய நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

சிந்தாமணிக்குப்பின் பத்துப்பாட்டு வெளியாயிற்று. அதன்பின் சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை என்பவை வந்தன. புறநானூறு கண்ட தமிழுலகம் ஏதோ ஒரு

புதிய கண்டத்தைக்கண்டு பிடித்ததுபோன்ற மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அடைந்தது. ஆராய்ச்சிக்காரர்களுடைய மூளை வேலை செய்யத் தொடங்கியது. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைப்பற்றிய ஆராய்ச்சிகளை அறிஞர்கள் எழுதத் தொடங்கினார்கள். இவ்வாறு ஐயரவர்கள் பழந்தமிழ் நூல்களை அச்சிடும் தொண்டை விடாது செய்து வந்தார்கள். ஐம்பெருங் காப்பியங்கள் என்று சேர்த்துச் சொல்லும் நூல்களில் கிடைத்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்ற மூன்றையும் அவர்கள் வெளியிட்டார்கள். பத்துப்பாட்டை அவர்களுடைய உழைப்பால் தமிழுலகம் காண முடிந்தது. எட்டுத்தொகைகளில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன மலர்ந்தன.

பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை என்னும் இலக்கிய இலக்கணங்கள் வெளிவந்தன. இவற்றையன்றித் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் திருக்காளத்திப் புராணம் முதலிய பல புராணங்களும், கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், இரட்டை மணிமாலை, அந்தாதி, குறவஞ்சி முதலிய பலவகைப் பிரபந்தங்களும் குறிப்புரைகளுடன் வெளிவந்தன. தம்முடைய ஆசிரியர் இயற்றிய பிரபந்தங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட்டார்கள்.

ஏட்டில் இருக்கிறதை அப்படியே பெயர்த்துக் காகிதத்தில் அச்சிடும் வேலை அன்று, ஐயரவர்கள் செய்தது. புத்தகப் பதிப்பு அவ்வளவு எளிதாக இருந்தால் எத்தனையோ அறிஞர்கள் அதை முன்பே செய்து புகழ் பெற்றிருப்பார்கள். ஏட்டில் உள்ள பாடம் பிழைபட்டிருக்கும்ஞு பல இடங்களில் இன்னதென்றே ஊகிக்க முடியாத அளவுக்குச் சிதைவு உண்டாகியிருக்கும். அவற்றையெல்லாம் பல நூல் அறிவினாலும் இயற்கையான அறிவுத்திறமையாலும் விடாமுயற்சியினாலும் திருவருளின் துணையாலும் ஆராய்ந்து செப்பம் செய்யவேண்டும். ஐயரவர்கள் திக்குத் தெரியாத காட்டில் நுழைந்துதாமே வழியமைத்துக் காடு நாடாக்கிய பெருந்தொண்டர். அவர்களுடையபதிப்பு என்றாலே தமிழ்ப் புலவர்களும் ஆராய்ச்சியாளரும் போற்றிப்பாதுகாக்கிறார்கள். ஒவ்வொரு நூலிலும் முன்னே உள்ள முகவுரையும், ஆசிரியர் வரலாறும், நூலைப்பற்றிய குறிப்புக்களும், பிற செய்திகளும் மிகமிக அற்புதமானவை. விளக்கங்களும் பல நூல்களிலிருந்து எடுத்த ஒப்புமைப் பகுதிகளும் காட்சி தரும். அவை ஐயரவர்களுடைய பரந்த நூற்புலமைக்குச் சான்றாக விளங்கும். இறுதியில் நூலில் கண்ட சொற்களுக்கும் பொருள்களுக்கும் அகராதி இருக்கும். ஆசிரியரின் உதவியின்றியே பயிலும் வகையில் அமைந்தவை ஐயரவர்களின் பதிப்புக்கள்.

இந்த முறையில் கண்ணாடிபோல் மேல் நாட்டாரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலமே அறியாத ஒரு தமிழ்ப் பண்டிதர் புதிதாக இத்துறையில் புகுந்து சாதித்தார் என்று சொன்னால் அது அதிசயமான செயல் அல்லவா?

முன்னுரை முதலியவற்றை எழுதி உரைநடை எழுதும் ஆற்றலைச் சிறிய அளவிலே வெளிப்படுத்திய ஐயரவர்கள், தாம் பதிப்பித்த நூல்களின் அங்கமாக மணிமேகலைக் கதைச் சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச் சுருக்கம் என்பவற்றை எழுதியளித்தார்கள்.

கும்பகோணம் கல்லூரியிலிருந்து சென்னைக் கல்லூரிக்குத் தமிழாசிரியராக 1903-ஆம் ஆண்டு வந்தார்கள். அப்பால் அந்தப் பதவியிலிருந்து 1919-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்கள். கல்லூரி ஆசிரியர் என்ற அலுவலிலிருந்து ஓய்வு பெற்றார்களேயன்றி மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியத் தொண்டிலிருந்தோ, நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியத் தொண்டிலிருந்தோ, அவர்கள் ஓய்வு பெறவில்லை.

உண்மையில் அவ்வேலைகள் பின்னும் பன்மடங்கு பெருகின. கல்லூரியில் வேலையாக இருந்தபோதே வீட்டில் தனியே இவர்களிடம் பலர் பாடம் கேட்டார்கள். மகாபாரதப் பதிப்பாசிரியராகிய மகாமகோபாத்தியாய ம.வீ. இராமாநுஜாசாரியார், திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபராக விளங்கிய சொக்கலிங்கத் தம்பிரான் முதலிய பலர் இவ்வகையில் பாடம் கேட்டவர்கள். இவர்களிடம் இருந்து ஆராய்ச்சி முறையைக் கற்றுக்

கொண்டு தாமே நூல்களை வெளியிட்டவர்கள் சிலர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இ.வை. அனந்தராமையர் முதலியவர்கள் இத்தகைய வரிசையில் இருந்தவர்கள். இவர்கள் ஏடு தேடி ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்ட நூல்களைப் படித்து அந்த முறையையும் அறிந்த சில புலவர்கள் பழந்தமிழ் நூல்களைத் தாமே வெளியிடும் முயற்சியில்ஈடுபட்டார்கள்.

1924 முதல் 1927 வரையில் ஐயரவர்கள் ராஜா அண்ணாமலை செட்டியாரவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதோடு தம்முடைய அனுபவங்களை எளிய இனிய உரைநடையில் எழுதத் தொடங்கினார்கள். இந்தத் துறையில் ஐயரவர்கள் தொண்டாற்றப் புகுந்தபோது பெரியவர்களும், சிறுவர்களும், ஆடவரும், பெண்டிரும், புலவர்களும் பிறரும் ஒருங்கே இவர்கள் எழுத்தைப் படித்து இன்புற்றார்கள். பத்திரிகைகளில் இவர்கள் கட்டுரைகள் வெளியாயின. மாதந்தோறும் முதலில் ஐயரவர்களின் கட்டுரை ஒன்றைத் தாங்கிச் சிறப்படைந்தது கலைமகள். தமிழ் நாட்டுப்

பத்திரிகைகளின் மலர்கள் ஐயரவர்களின் கட்டுரைகளோடு மலர்ந்தன. தம்முடைய ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றை வெளியிட வேண்டும் என்னும் நெடு நாள் ஆர்வத்தால் அவர்கள் பல செய்திகளைத் தொகுத்து வைத்திருந்தார்கள். அவற்றைக் கொண்டு மிகவிரிவாக அச்சரித்திரத்தை இரண்டு பாகங்களாக எழுதி முடித்தார்கள். தம்முடைய வாழ்க்கையில் எந்தப் பெரியார்களோடு பழக நேர்ந்ததோ அவர்களைப் பற்றிய வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் சுவை ததும்ப எழுதினார்கள். தியாகராச செட்டியார் சரித்திரம் கோபாலகிருஷ்ண பாரதியார் சரித்திரம், மகா வைத்தியநாதையர் சரித்திரம், கனம் கிருஷ்ணையர் வரலாறு என்பன இவர்களுடைய அன்பையும் எழுதும் ஆற்றலையும் நன்றியறிவையும் விளக்குகின்றன. சிலருடைய வரலாற்றைச் சுருக்கமாக எழுதினார்கள்ளூ இந்த வகையில் பூண்டி அரங்கநாத முதலியார், மணி ஐயர், வி.கிருஷ்ணசாமி ஐயர், திவான் சேஷையா சாஸ்திரிகள் முதலியவர்களைப் பற்றிய கட்டுரைகள் வெளியாயின.

இவர்களுடைய பெருமையைத் தமிழுலகம், மெல்ல மெல்ல உணரலாயிற்று. அரசாங்கத்தார், 1906-ஆம் ஆண்டு "மகாமகோபாத்தியாயர்" என்ற பட்டத்தை அளித்தார்கள். 1917-ஆம் ஆண்டு பாரத தர்ம மண்டலத்தார், "திராவிட வித்தியா பூஷணம்" என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள். 1925-ஆம் ஆண்டு காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள், "தக்ஷிணாத்திய கலா நிதி" என்ற பட்டத்தை அருளினார்கள். இவர்கள், சென்னை, மைசூர், ஆந்திரா, காசி முதலிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் பல வகையில் கலந்து தொண்டாற்றினார்கள். 1932-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் "டாக்டர்" பட்டம் அளித்தார்கள்.

1935-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ஆம் தேதி ஐயரவர்கள் 80- ஆண்டுகள் நிறைந்து விளங்கினார்கள். அவர்களுடைய சதாபிஷேக விழாவைத் தமிழுலகம் முழுவதும் கொண்டாடியது. சென்னையில் பல்கலைக் கழக மண்டபத்தில் இவ்விழா மிகமிகச் சிறப்பாக நடைபெற்றது. பழுத்த பருவத்திலும் ஐயரவர்கள் தமிழ்த் தொண்டு வீறு கொண்டு நடைபெற்றது. குறுந்தொகையை விரிவான உரையுடன் பதிப்பித்தார்கள். சிவக்கொழுந்து தேசிகர், குமரகுருபரர் என்னும் புலவர்களின் பிரபந்தத் திரட்டுகள் குறிப்புடன் வெளியாயின. தமிழன்பர்களின் விருப்பப்படி ஆனந்த விகடனில் வாரந்தோறும் தம்முடைய வரலாற்றை "என் சரித்திரம்" என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார்கள். 1940-ஆம் ஆண்டு ஜனவரியில் தொடங்கிய அது 122 அத்தியாயங்களோடு சுயசரித்திரமாக வரும் நிலை பெற்றது.

1942-ஆம் ஆண்டு உலகப் பெரும்போர் நிகழ்ந்தபோது ஐயரவர்கள் தம் குடும்பத்துடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார்கள். ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி அந்தத்தலத்தில்

தமிழ்த் தாயின் தவப்புதல்வராகிய ஐயரவர்கள், தாம் பிறந்த காலத்தில் கண்ட நிலையை மாற்றித் தமிழ் மக்களைப் பழந்தமிழ்ச் செல்வத்துக்கு உரிமையுடையவர்களாக ஆக்கி, ஆசி கூறிவிட்டு இறைவன் திருவடியை அடைந்தார்கள். 1948 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆறாம் தேதி சென்னை அரசினர் கல்லூரியில் ஐயரவர்களுடைய முழு உருவச் சிலையொன்றை நிறுவினார்கள். தமிழ்க் கடலின் விரிவை மீட்டும் தமிழுலகத்துக்குக் காட்டிய ஐயரவர்களின் திருவுருவம் பெருங் கடலை நோக்கி நிற்கும் கோலத்தை இன்றும் கண்டு மகிழலாம்.

1955-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ஆம் தேதி ஐயரவர்கள் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடைந்தன. அதனை, அவர்கள் பெயர் கொண்ட நூல் நிலையம் மிகச் சிறப்பாகக் கொண்டாடிற்று. ஐயரவர்களுடைய குணநலங்கள் பல சிறந்த பண்பு உள்ளவர்கள் இவர்கள். இணையற்ற ஆசிரியர். பலவகை மாணாக்கர்களுடைய உள்ளம் அறிந்து தக்கவண்ணம் பாடம் சொல்வதில் வல்லவர்கள். புலமைப் பெருங்கடல், கவிஞர், சிறந்த எழுத்தாளர். முன்னும் பின்னும் கண்டறியாத அற்புதப் பதிப்பாசிரியர். சுப்பிரமணிய பாரதியார் தாம் பாடிய பாட்டில் **"கும்பமுனி எனத்தோன்றும் சாமிநாதப் புலவன்"** என்று ஐயரவர்களைச் சிறப்பிக்கிறார்.

"பொதியமலைப் பிறந்த தமிழ் வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே"

என்று அவர் பாடியிருப்பதற்குமேல் நாம் என்ன சொல்ல முடியும்?

(😊)(😊)(😊)(😊)(😊)



மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின்

வாழ்க்கை நிகழ்ச்சிகள்

19 – 2 – 1855 திங்கட்கிழமை,தஞ்சை மாவட்டத்திலுள்ள சூரிய மூலை என்னும் ஊரில் பிறந்தார்.


1861 அரியிலூர் சடகோப ஐயங்காரிடம் பாடங் கேட்கத் தொடங்கியது.

1862 உபநயனம் – பெயர்: வேங்கடராமன்.

16 – 6 – 1868 திருமணம் – மனைவி மதுராம்பாள்.

1869 செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் யாருப்பருங்கலக்காரிகை பாடம் கேட்டது.

1871 மாயூரத்தில் திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் மாணவனாகச் சேர்ந்தது. ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரைச் சந்தித்தது. ஆசிரியர் இட்ட பெயர் சாமிநாதன். திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்,வித்துவான் தியாகராச செட்டியார் இவர்களுடைய தொடர்பும்,ஆதரவும்.



1872 ஆசிரியருடன் திருவாவடுதுறை சென்றது.

1873 உத்தமதானபுரத்தில் கவி இயற்றியது. ஆவுடையார் கோயிலில் புராணப் பிரசங்கம்

1874 செங்கணத்தில் முதன்முதல் நூல் இயற்ற ஆரம்பித்தல் – நூலின் பெயர் ''நீலி இரட்டை மணிமாலை'. திருவிளையாடற் புராணப் பிரசங்கம்.

31 – 1 – 1876 ஆசிரியர் மறைவு. வேதநாயகம் பிள்ளை சந்திப்பு. திருவாவடுதுறை மடத்தில் ஆசிரியராகவும், மாணாக்கராகவும் பணியாற்றல்.

1877 ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை ஐயரவர்களின் தந்தையார் கண்டு உரையாடியது. ஐயரவர்கள் வசிப்பதற்குத் தேசிகர் இல்லம் அமைத்துக் கொடுத்தது. மாத வேதனம் அளித்தமை.

1878 மதுரை,திருநெல்வேலிப் பயணம் ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஐயரவர்களுக்குச் சன்மானம் அளித்தது.

1880 வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் விடா முயற்சியால், கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக வேலை பெற்றது. சேலம் இராமசாமி முதலியார் சந்திப்பு. சீவகசிந்தாமணி பதிப்பு ஆரம்பம், ஜைன நண்பர்கள் தொடர்பு.

1883 திருக்குடந்தைப் புராணப் பதிப்பு,

1884 பரம்பரைச் சொத்தாகிய நிலத்தை ஒற்றியிலிருந்து மீட்டது. முதற் தடவை சென்னை வருகை.

1885 மகாமகம். திருவாவடுதுறை மகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஐயரவர்கள் தந்தையாருக்கும் ஐயரவர்களுக்கும் பீதாம்பரம் அளித்ததுடன் ஐயரவர்கள் குமாரர் கலியாணசுந்தரையருக்கும் சந்திரஹாரம் என்னும் பொன்னாபரணம் அளித்தது.

1887 சீவகசிந்தாமணி பதிப்பித்து முடிந்து, தமிழுலகில் உலாவ ஆரம்பித்தது.

1888 திருவாவடுதுறை மகாசந்நிதானம் பரிபூரணம் எய்தியது. தியாகராச செட்டியார் மறைவு. நெல்லை மாவட்டத்தில் ஏடுதேடத் தொடங்கியது.

1889 பத்துப்பாட்டு அச்சிட்டு நிறைவேறியது. சிலப்பதிகாரப் பதிப்பு ஆரம்பம். சென்னைக்கு வந்து பூண்டி

அரங்கநாத முதலியார் இயற்றிய ‘‘கச்சிக்கலம்பகம்’ அரங்கேற்றத்தில் கலந்து கொண்டது.

1891 சீவகசிந்தாமணி புத்தகத்தைக் கண்டு பாரிஸ் பேராசிரியர் ஜூலியோன் வின்ஸோன் அவர்கள் பாராட்டி எழுதியது. குமாரனுக்கு உபநயனம்.

1892 சேலம் இராமசாமி முதலியார் மறைவு. சிலப்பதிகாரம் பதிப்பித்து முடிந்தது. பாஸ்கர சேதுபதி அவர்களின் அழைப்பின் பேரில் இராமநாதபுரம் சென்று நவராத்திரி விழாவில் கலந்து கொண்டது.

7 – 10 – 1893 தந்தையார் மறைவு

10 – 12 – 1893 பூண்டி அரங்கநாத முதலியார் மறைவு

27 – 1 – 1893 மகாவைத்தியநாதையர் நிரியாணம்

1894 புறநானூறு பதிப்பு. பாண்டித்துரைத் தேவர் சந்திப்பு. கும்பகோணத்தில் வீடு வாங்கியது. புறப்பொருள் வெண்பாமாலை பதிப்பு.

1895 ஜி. யு. போப் அவர்களுடன் கடிதத் தொடர்பு

1898 மணிமேகலை பதிப்பு நிறைவேறியது.

1903 சென்னை மாநிலக் கல்லூரிக்குக் குடந்தையிலிருந்து மாற்றப் பெற்றது.

1 – 1 – 1906 ‘‘மகாமகோபாத்தியாய’’ பட்டம் பெற்றது. கல்வி இலாகா ரூ. 1000 வழங்கியது. சென்னை கவர்னர் லார்டு கார்மிகேல் பிரபுவோடு சம்பாஷித்துப் பாராட்டப் பெற்றது. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணப் பதிப்பு நிறைவேறியது.

1909 சென்னையில் வீடு வாங்கி ‘‘தியாகராச விலாசம்’ என்று பெயரிட்டது.

12 – 12 – 1911 ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவினையொட்டி ரூ. 100.00 காரனேஷன் பென்ஷன் ஆண்டுக்கொருமுறை வழங்கப் பெற்றது.

24 – 1 – 1912 கவர்னர் துரை தமிழ் வகுப்பிற்கு வந்து 1 மணி நேரம் இருந்தது. தமிழ்ச் சுவடிகளைக் காட்டி வாழ்த்துப்பா அளித்தது.

1916 மைசூர் யூனிவர்ஸிடியில் திராவிடியன் போர்டில் மெம்பராக நியமனம்.

31 – 1 – 1917 காசி பாரத தர்ம மகாமண்டலத்தாரால் ‘‘திராவிட வித்யா பூஷணம்’’ பட்டம் பெற்றது.

1 – 3 – 1917 காசி சர்வகலாசாலையில் போர்டு மெம்பர் பரீக்ஷகர் நியமனம்.

8 – 5 – 1917 மனைவியார் வியோகம்.

1 – 4 – 1919 வேலையிலிருந்து ஓய்வு பெற்றது. (39 வருட உழைப்புக்குப் பின்) . டாக்டர் ரவீந்திரநாத தாகூர் வீட்டிற்கு வந்து அளவளாவியது.

13 – 1 – 1922 மேன்மைதங்கிய வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தபோது ‘‘கில்லத்து’’ப் பெற்றது.

12 – 2 – 1924 பெருங்கதை பதிப்புப் பூர்த்தி

1924 – 27 சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரிப் பிரின்ஸ்பாலாகப் பதவி ஏற்றுப் பல நன்மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லியது.

1925 காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களால் ‘‘தக்ஷிணாத்ய கலாநிதி’’ என்ற பட்டம் சூட்டப் பெற்றது.

1927 சென்னை, சர்வகலாசாலையின் ஆதரவில் ‘‘சங்க காலத்தமிழும் பிற்காலத் தமிழும் என்ற தலைப்பில் 10 தினங்கள் சொற்பொழிவு ஆற்றியது.

21 – 3 – 1932 சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் ‘‘டாக்டர்’’ பட்டம் அளிக்கப்பெற்றது.

1932 தமிழன்பர் மகாநாட்டு வரவேற்புத் தலைவராக இருந்தது.

4 – 3 – 1933 ஆந்திர யூனிவர்ஸிடி தமிழ் போர்டில் மெம்பர் ஸ்தானத்தை ஒப்புக்கொண்டது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தை எழுதி வெளியிட்டது.

1935 எண்பதாவது ஆண்டு நிறைவு விழா நாடு முழுவதும் கொண்டாடப் பெற்றமை.

1937 குறுந்தொகைப் பதிப்பு.

16 – 1 – 1937 குடந்தை,கோபாலராவ் நூல் நிலையத்தில் ஐயரவர்கள் படத் திறப்பு

6 – 2 – 1937 சநாதன தர்ம மகா நாட்டில் கலந்து கொண்டது.

27 – 3 – 1937 பாரதீய ஸாஹித்ய பரிஷத் – மகாத்மா காந்தி தலைமை வரவேற்புரை நிகழ்த்தியது. மகாத்மா காந்தியுடன் உரையாடல்.

11 – 1 – 1938 சென்னையில் வைஸ்ராய் நடத்திய விருந்தில் கலந்து கொண்டது.

15 – 3 – 1938 ஆக்ஸ்போர்டு ஸம்ஸ்கிருத ஆசிரியர் பிரசங்கத்திற்குச் சென்றது. மணிமேகலையைப் பற்றிப் பாராட்டிப் பேசினார்கள்.

1 – 8 – 1939 கொப்பனாப்பட்டிக் கல்லூரித் திறப்பு விழாவில் முன்னுரை

25 – 11 – 1939 செவ்வைச்சூடுவார் பாகவதம் குறிப்புரை எழுத ஆரம்பித்தது.

28 – 11 – 1939 டி. கே. ஸி. அவர்களும்,கல்கி அவர்களும் வீட்டிற்கு வந்து உறவாடினர்.

7 – 12 – 1939 ஹிந்து பத்திரிகை வைரவிழா வாழ்த்து

15 – 12 – 1939 கல்கி அவர்களிடம் ஆனந்த விகடன் பத்திரிகையில் வெளியிட "சுயசரிதம்" முதல் அத்தியாயம் எழுதிக் கொடுத்தது.

12 – 6 – 1940 கூத்தனூர் கலைமகள் விஷயமாகப் பாடல்கள் எழுதி அனுப்பினமை.

5 – 8 – 1941 தமிழிசையைப் பற்றி டைகர் வரதாசாரியாருக்கு அபிப்பிராயத்தை எழுதியனுப்பியது.

29 – 9 – 1941 திருச்சி ரேடியோவில் "எதுதமிழ்" என்பது பற்றி ஒரு பேச்சு.

7 – 12 – 1941 கனகாபிஷேகம் – கொள்ளுப் பேரனால்

13 – 1 – 1942 இரவு மெத்தைப் படியில் தவறி விழுந்தது.

29 – 1 – 1942 டாக்டர் திருமூர்த்தி அவர்கள் வந்து பார்த்து,அவரது ஆலோசனையின் படி சிவராம கிருஷ்ணையரைக் கொண்டு நிழற்படம் எடுக்கப்பட்டது.

12 – 2 – 1942 திருக்கழுக்குன்றம் சென்றது.

27 – 4 – 1942 மாலை குளிர் ஜுரம் கண்டது.

28 – 4 – 1942 மாலை 3 – 35க்கு இறைவனடி சேர்ந்தது.

5 – 7 – 1943 "டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்" தொடக்க விழா. திருமதி. ருக்மிணி அருண்டேல் அவர்கள் ஆதரவில்

1948 உருவச்சிலை. மாநிலக் கல்லூரியில் திறக்க பெற்றது.

1955 நூற்றாண்டுவிழா.

~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~(😉) ~

The Life of U. V. Swaminatha Iyer

Tamil Literature, Researcher

Parents: Venkatasubramanian(Musician), Saraswathi ammal.

19 February 1855,
Sooriyamoolai, Thanjavur, Tamilnadu.



Learned the Tamil literature and grammar as a devoted student from Mahavidvan Meenakshi Sundaram Pillai.

(age 14)
He was married at the age of 14.

16 February 1880
Joined as the head of the Tamil Department at the Government Arts College.

1919
Retired from active teaching.

Published more than 100 books (minor poems, lyrics, puranas and devotional works).

1924 - 1927
Worked as the Principal of the Meenakshi Tamil College in Annamalai University, Chidambaram.

1926
Met the poet Rabindranath Tagore.

1940-1942
Published his autobiography "En Saritham" through Ananda Vikatan (magazine).

- He was called as Tamil Thatha (Grandfather of Tamil).
- 1906 - Got The honorary doctoral degree (D.Litt.) by University of Madras.
- 18 February 2006 - A special postage stamp was released after him.

1887 - Seevagasinthamani.
1889 - Pattup pāṭṭu mūlamum uraiyum
1897 - Purananuru
1898 - Manimeagalai
1905 - Tiruvarurula

1906 - Mahamahopathiyaya Award – “Greatest of Greatest Teachers”.
1925 - Dakshinathya Kalanidhi.
1932 - An honorary PhD Award from Madras University.

28 April 1942
Died due to illness in Tirukalukundram, Madras Presidency.

https://wikivisually.com/wiki/U._V._Swaminatha_Iyer
https://www.quora.com/What-is-your-review-of-U-V-Swaminatha-Iyer-Tamil-Thatha



Please SCAN to read

"என் சரித்திரம்"





9 789388 568166

